Saidai Duraisamy's

**Manidhanaeyam Free IAS Academy**

(Run by Manidha Naeyam Charitable Trust)

28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).

Mail Address: manidhanaeyam@gmail.com

**Website: www.mntfreeias.com**



# TNPSC குரூப் II & IIA

# கட்டாய தமிழ்மொழி தகுதி தாள்

**DATE OF MAINS WRITTEN EXAM : 25-02-2023**

**(பிரதான எழுத்துத் தேர்வு நாள்)**

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- |
| பாடத்திட்டம் | 1 - 8 |
| 1.தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தல் | 9 - 64 |
| 2.ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல் | 65 - 113 |
| 3.சுருக்கி வரைதல் | 114 - 131 |
| 4.பொருள் உணர்திறன் | 132 - 148 |
| 5.சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் | 149 - 211 |
| 6.திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல் | 212 - 235 |
| 7.கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்து) | 236 - 255 |
| 8.தமிழ் மொழி அறிவு | 256 - 282 |

# கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்
## (பத்தாம் வகுப்புத் தரம் - விரிந்துரைக்கும் வகை)

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண் | குறைந்தபட்ச மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. மொழிபெயர்த்தல்<br>(அ) தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தல்<br>(ஆ) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்<br>2. சுருக்கி வரைதல்<br>3. பொருள் உணர்திறன்<br>4. சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல்<br>5. திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்<br>6. கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்து)<br>7. தமிழ் மொழி அறிவு | 3 மணி நேரம் | 100 | 40 |

### பாடத் திட்டம்

1. தற்கால நிகழ்வுகள்
2. சமுதாயப் பிரச்சினைகள்
3. சுற்றுச்சூழல் தொடர்பான தலைப்புகள்
4. இந்தியப் பொருளாதாரம் தொடர்பான தலைப்புகள்
5. அறிவியலும் தொழில்நுட்பமும்
6. கலையும் பண்பாடும்

7. பகுத்தறிவு இயக்கங்கள் - திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம்.

8. இக்காலத் தமிழ்மொழி - கணிணித் தமிழ், வழக்கு மன்றத் தமிழ், அலுவலக மொழியாகத் தமிழ், புதிய வகைமைகள்.

9. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தமிழக அரசின் நலத்திட்டங்கள் (பெண்கள் விவசாயிகள்...), சமூக நலத்திட்டங்களை நடைமுறைபடுத்துதலில் சமூக சீர்த்திருத்த இயக்கங்களின் பங்கு - இட ஒதுக்கீடும் அதன் பயன்களும் - தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு.

10. சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக. பொருள் வேறுபாடு அறிதல். பிரித்தெழுதுக. எதிர்ச்சொல், எதிர்மறை வாக்கியம், பிழையை நீக்கி எழுதுக.

11. திருக்குறளிலிருந்து கீழ்க்காணும் தலைப்புகள் தொடர்பாக கட்டுரை எழுதுதல். அ)

மதச் சார்பற்ற தனித் தன்மையுள்ள இலக்கியம்.

ஆ) அன்றாட வாழ்வியேலாடு தொடர்புத் தன்மை.

இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்.

ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதேநயம் முதலானைவ,

உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு. ஊ)

திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்.

# TNPSC மாதிரி வினாத்தாள்

## தமிழ் / TAMIL

பத்தாம் வகுப்புத தரம்

கால அளவு மூன்று மணி நேரம்
**Time Allowed: Three Hours**

மொத்த மதிப்பெண்கள்: 100
**Maximum Marks: 100**

### வினாக்களுக்கான விதிமுறைகள்

வினாக்களுக்க ு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப்படிக்கவும்:

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் தமிழில் (தமிழ் எழுத்தில்) மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா - விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

**Please read each of the following ins tructions carefully before attempting ques tions:**

- All ques tions are to be attempted.
- The number of marks carried by a question / part is indicated against it.
- Answers mus t be written in **TAMIL (Tamil Script)** unless otherwise directed in the question.
- Word limit in ques tions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.

- Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

**கேள்வி எண் 1: 15 மதிப்பெண்கள்**

பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக.

1. மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் திருக்குறள் என்பதை சான்று தந்து விளக்குக.

2. திருக்குறளின் கருத்துகள் அன்றாட வாழ்விற்கு எவ்வாறு துணைபுரிகிறது?

3. சமத்துவம் பற்றிய வள்ளுவச் சிந்தனையை விளக்குக.

4. இன்றைய சமூக அரசியல் பொருளாதார நிகழ்விற்கு திருக்குறள் எங்ஙனம் உதவுகிறது? சான்றுடன் விளக்குக.

5. திருக்குறள் ஓர் அறநூல் - சான்று தந்து விளக்குக?

**கேள்வி எண். 2: 10 மதிப்பெண்கள்**

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக.

தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்கள் பண்பாடு ஆகும். தமிழ் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மேலசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது தமிழ் கலாச்சாரம். மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புற கலை, தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, உடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள் ஆகியவை அறிவியல் வெளிப்படுத்துகிறது. மற்றும் தொழில்நுட்பம், தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும் தமிழர் மரபுகள், வரலாறு விழுமியங்கள், கலைகள் ஊடாகவும் சமூகம், பொருளாதாரம், அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டு கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே ஆகும்.

தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சியானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது. மற்றொன்று, உலகளாவிய ஒருமைப்பியல்புகளோடு பொருத்தக்கூடியது. அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூறிய "புறக்கூறுகள்" பண்பாடு சார்ந்தும், அவற்றின் "அகக்கூறுகள்" உலகளாவிய ஒருமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும்.

பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, முன்னது "அகக்கூறு" பின்னது "புறக்கூறு". நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது.

பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது. தமிழர் பண்பாடு இதுவல்ல என்று தெளிவாக வையறுப்பது கடினமாகினும் ஒரு அறிவுசார் மதிப்பீடு செய்ய முடியும். எடுத்துக்காட்டாக யூத சமயமோ, சீக்கிய சமயமோ தமிழர் பண்பாட்டு வட்டத்துக்குள் வரமாட்டா. மாறாக, சைவ சமயத்துக்குத் தமிழர் பண்பாட்டுடன் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு.

**கேள்விகள்: 5x2 = 10 மதிப்பெண்கள்**

1) சமயத்துடனான தமிழர் பண்பாட்டின் தொடர்புகள் யாவை?

2) தமிழ்ப் பண்பாட்டின் ஐமப்பொழுங்கின் அம்சங்கள் யாவை?

3) திருந்திய ஒழுக்கம், திருந்திய வாழ்க்கை எது?

4) தமிழ் கலாச்சாரம் பரவியுள்ள நாடுகள் யாவை?

5) தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் யாவை?

**கேள்வி எண். 3: 10 மதிப்பெண்கள்**

கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தைலப்புத் ேதைவயில்லை.

செவ்வாய் கிரகத்தில் தற்போது திரவ நீர் இருப்பது தெரியவந்துள்ளது. அங்கு காணப்பட்டைவ முதலில் தொலை தூரத் தகவல்கள் என கணித்தார்கள். செவ்வாய் கிரக தென் துருவப் பிரேதசங்களில் காணப்பட்ட இந்தத் திரவ நீருக்கு "தென் துருவ அடுக்கு படிமம்" என்றும் பெயரிடப்பட்டிருந்தது.

இதன் மூலம் இந்த மேற்பரப்பில் காணப்படும் திரவம் போன்ற நீர் உண்மையில் ஏரிகளாக இருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2018-ஆம் ஆண்டில் இரண்டு ஆராய்ச்சி குழுக்கள் மார்ஸ் எக்ஸ்பிரஸ் சுற்றுப்பாதையில் இருந்த தரவுகைளப் பயன்படுத்தி ஆச்சரியமான கண்டுபிடிப்பை அறிவித்தனர்.

இந்த சிவப்பு கிரகம் தென் துருவத்திலிருந்து தொலை உணர் கருவியின் தகவல்கைள உறுதிப்படுத்துகின்றன. இந்த உறுதியின் மூலம், கிரகத்தின் மேற்பரப்பில் ஒரு திரவ நிலையில் ஏரியின் மேற்பரப்பு இருப்பதாக வெளிப்படுத்துகின்றன.

இருப்பினும், ஹரிசோனா மாநிலப் பல்கைலக்கழக விஞ்ஞானிகள் குழு மார்ஸ் எக்ஸ்பிரஸ் தரைவ தீவிரமான ஆய்வுக்கு உட்படுத்தினர். இந்த பரந்த தொகுப்பின் ஆய்வு தென் துருவத்தைச் சுற்றி, ஒேர மாதிரியான பன்னிரெண்டு அளவு கணக்கான தொலை உணர் தகவல்கைளக் கண்டறிந்தது.

"ஏேதனும் ஒரு பொருள் ஊடாகத் தொலை உணர் பயணிக்கும் போது, அதன் ஆற்றைல இழக்கின்றது. எனேவ, அதன் ஆழமான பரப்பிலிருந்து ேமேல வரும் தகவல்கள் மேற்பரப்பில் இருந்து வரும் தகவல்கைளவிட ஒளிர்வு குறைவாக இருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"நிலத்தடியில் இருந்து வரும் தகவல்கள் வழக்கத்துக்கு மாறாக ஒளிர்வுடன் இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. இந்த ஒளிர்வு தகவலுக்கு, திரவ நீர் தான் காரணம். ஏனென்றால் தொலை உணர்வில் திரவம் கூடுதல் ஒளிர்வுடன் காணப்பட்டது என்று இந்த இரண்டு ஆய்வுகளின் முடிவுகள் தெரிவித்தன" என்றும் கூறினார்.

"இந்த தூரத் தகவல்கள் திரவ நீரா அல்லது வேறு என்னெவன்று எங்களால உறுதியாகக் கூற முடியவில்லை. ஆனால், முதலில் கண்டறியப்பட்டதை விட, தற்போது மேலும் பரவலாகக் காணபடுகிறது" என்று ஜெட் ப்ரோ பல்ஷன் ஆய்வகத்திலிருந்து ஜெஃப்ரிப்ளாட் கூறினார்.

செவ்வாய் கிரகத்தின் தென் துருவம் முழுவதும் திரவ நீர் இருக்கலாம் அல்லது இந்த தூரத் தகவல்கள் வேறு எதையோ தெரிவிக்கின்றன என்று ப்ளாட் தெரிவித்தார்.

**கேள்வி எண் 4: 10 மதிப்பெண்கள்**

பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல். (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)

பொங்கல் - தை மாதம் - போகிப் பண்டிகை - திருநாள் - கதிரவனுக்கு நன்றி - உழவர் - ஏறுதழுவல் - காணும் பொங்கல் - உறவுகள் - சுற்றுலா.

**கேள்வி எண் 5: 10 மதிப்பெண்கள்**

பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

விண்வெளி சுற்றுலாவில் பங்கேற்கும் முதல் இந்தியர் என்று பெருமையைப் பெறுபவர் சந்தோஷ் ஜார்ஜ் குளங்கரா. கேரளத்தின் புகழ் பெற்ற ஊடகர். சந்தோஷ் இதுவரை 130 நாடுகள் சுற்றிவந்துள்ளார்.

2022-இல் ரிச்சர்ட் பிரான்ஸன் ஏற்பாடு செய்யும் விண்வெளி சுற்றுலாவில் சந்தோஷ் இடம் பெறுகிறார். 2005-இல் விண்வெளி சுற்றுலா பயணம் குறித்த அறிவிப்பு வெளியானதும், சந்தோஷ் சுற்றுலா ஏற்பாடு செய்யும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார். பல கட்ட ஆலோசனைகளுக்குப் பிறகு சந்தோஷ் விண்வெளி சுற்றுலா 2022-இல் பயணத்திற்குத் தேர்தெடுக்கப்பட்டார். தற்போது சந்தோஷிற்கு 49 வயதாகிறது. விண்வெளிக்குச் செல்லத் தேவையான "ஜி டாலரன்ஸ்" பயிற்சியும் சந்தோஷ் பெற்றுள்ளார்.

"இந்தப் பயிற்சியில் உடலின் எடை எட்டு மடங்கு கூடும். இந்தப் பயிற்சி மிகக் கடுமையானது. அதுபோல விண்வெளியில் புவிஈர்ப்பு சக்தி இல்லாததால் உடல் எடை குறைந்து விண்வெளியில் நீந்தலாம். இன்னும் சில மாதங்களில் எனது விண்வெளி பயணம் நனவாகும்" என்கிறார் சந்தோஷ் ஜார்ஜ் குளங்கரா.

அமெரிக்காவின் வர்ஜின் கேலக்டிக் நிறுவனத்தின் வி.எஸ்.எஸ்.யூனிட்டி விண்கலம் மூலம் விண்வெளிக்கு முதல் பயணம் 2021-ஆம் ஆண்டு ஜூலை 11-ல் நனவானது. நியூ மெக்சிகோவிலிருந்து தொடங்கிய இந்த வெள்ளோட்டப் பயணத்தில் வர்ஜின் கேலக்டிக் நிறுவனர் ரிச்சர்டு பிரான்சன், இந்திய வம்சாவளி பெண்சிரிஷா பந்த்லா (வயது 34) உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் பங்கு கொண்டனர்.

**<u>கேள்வி எண் 6: 10 மதிப்பெண்கள்</u>**

**பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க.**

The earliest civilizations developed between 4000 and 3000 BCE, when the rise of Agriculture and trade allowed people to have surplus food and economic stability. Many people no longer had to practice farming, allowing a diverse array of professions and interests to flourish in a relatively confined area.

Civilizations first appeared in Mesopotamia (what is now Iraq) and later in Egypt. Civilizations thrived in the Indus Valley by about 2500 BCE, in China by about 1500 BCE and in Central America (What is now Mexico) by about 1200 BCE. Civilizations ultimately developed on every continent except Antarctica.

**Urban Areas:**

Large population centres, or urban areas (1) Allow Civilization to develop, although people who live outside these urban centers are still part of that region's civilization. Rural residents of civilizations may include farmers, fishers and traders who regularly sell their goods and services to urban residents.

The huge urban center of Teotihuacan, in modern day Mexico for example had as many as 200,000 residents between 300 and 600 habitations. The development of the Teotihuacan civilization was made possible in party by the rich.

**<u>கேள்வி எண் 7: 15 மதிப்பெண்கள்</u>**

**அலுவலகக் கடிதம்:**

**தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்தினை ஏற்று ஆட்சிமொழி முனைப்புத் திட்டத்தை விரிவுப்படுத்தும் பொருட்டு, தைலைமச் செயலகத் துறைகளிலும் அரசுசார்பு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கூட்டுறவு இைணயங்கள் போன்ற ைஅனத்திலும் தமிழ்த் திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்திட ைஅனத்து மாவட்ட ஆட்சித் தைலவர்கள் மற்றும் ைஅனத்துத் துறைத் தைலவர்களுக்கு ைஆண பிறப்பிக்கப்படும் வைகயில் அறிக்கை ஒன்றை எழுதிடுக.**

**<u>கேள்வி எண் 8: 20 மதிப்பெண்கள்</u>**

**(அ) கீழ்க்காணும் சொற்கைள உமது சொந்த வாக்கியத்தில் ைஅமத்து எழுதுக.**

1. **நாகரிகம்**
2. **மானம்**
3. **விளையாட்டு**
4. **விருந்தோம்பல்**

**(ஆ) பின்வரும் இைணச் சொற்கைளப் பயன்படுத்தி ஒேர தொடர் ைஅமக்க.**

1. கைல - கைள
2. தைழ - தைல
3. வைல - வைள
4. கரி - கறி

(இ)பிரித்தெழுதுக.

1. ஐம்பெருங்காப்பியம்
2. திருவாலங்காடு
3. சங்கத் தமிழ்
4. நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்

(ஈ) எதிர்மைற வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. மதியம் கடுமையாக மைழ பெய்தது.
2. நான் நேற்று தேர்வு எழுதினேன்.
3. குழாயில் நீர் வரவில்லை.
4. வகுப்பைற மிகவும் சுத்தமாக இருந்தது. (உ)

பிழை நீக்கி எழுதுக.

1. திருவள்ளுவர் திருக்குைரல இயற்றினார்.
2. இயழ், இைச, நாடகம் ஆகியைவ முத்தமிழ் ஆகும்.
3. இைறயாண்மை என்பது மன்னனுக்கோ அல்லது அரசுக்கோ உரியது அல்ல.
4. நாகரிகம் என்பது சமூக வாழ்க்கை முறை அல்லது வலர்ச்சியான மேம்பட்ட நிலை.

# (அ) தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தல்

TNPSC மாதிரி வினா

விண்வெளி சுற்றுலாவில் பங்கேற்கும் முதல் இந்தியர் என்று பெருமையைப் பெறுபவர் சந்தோஷ் ஜார்ஜ் குளங்கரா. கேரளத்தின் புகழ் பெற்ற ஊடகர். சந்தோஷ் இதுவரை 130 நாடுகள் சுற்றிவந்துள்ளார்.

2022–இல் ரிச்சர்ட் பிரான்ஸன் ஏற்பாடு செய்யும் விண்வெளி சுற்றுலாவில் சந்தோஷ் இடம் பெறுகிறார். 2005–இல் விண்வெளி சுற்றுலா பயணம் குறித்த அறிவிப்பு வெளியானதும், சந்தோஷ் சுற்றுலா ஏற்பாடு செய்யும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார். பல கட்ட ஆலோசனைகளுக்குப் பிறகு சந்தோஷ் விண்வெளி சுற்றுலா 2022–இல் பயணத்திற்குத் தேர்தெடுக்கப்பட்டார். தற்போது சந்தோஷிற்கு 49 வயதாகிறது. விண்வெளிக்குச் செல்லத் தேவையான "ஜி டாலரன்ஸ்" பயிற்சியும் சந்தோஷ் பெற்றுள்ளார்.

"இந்தப் பயிற்சியில் உடலின் எடை எட்டு மடங்கு கூடும். இந்தப் பயிற்சி மிகக் கடுமையானது. அதுபோல விண்வெளியில் புவிஈர்ப்பு சக்தி இல்லாததால் உடல் எடை குறைந்து விண்வெளியில் நீந்தலாம். இன்னும் சில மாதங்களில் எனது விண்வெளி பயணம் நனவாகும்" என்கிறார் சந்தோஷ் ஜார்ஜ் குளங்கரா.

அமெரிக்காவின் வர்ஜின் கேலக்டிக் நிறுவனத்தின் வி.எஸ்.எஸ்.யூனிட்டி விண்கலம் மூலம் விண்வெளிக்கு முதல் பயணம் 2021–ஆம் ஆண்டு ஜூலை 11–ல் நனவானது. நியூ மெக்சிகோவிலிருந்து தொடங்கிய இந்த வெள்ளோட்டப் பயணத்தில் வர்ஜின் கேலக்டிக் நிறுவனர் ரிச்சர்டு பிரான்சன், இந்திய வம்சாவளி பெண்சிரிஷா பந்த்லா (வயது 34) உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் பங்கு கொண்டனர்.

## விடை

Santosh George Kulangara is proud to be the first Indian to participate in space tourism. Renowned media personality of Kerala. Santosh has toured 130 countries so far.

In 2022, Santosh will be featured in a space tour organized by Richard Branson. Following the announcement of space travel in 2005, Santosh contacted the Tourism Organizing Company. After several rounds of consultations, Santosh was selected for space travel in 2022. Santosh is now 49 years old. Santosh has also received the "G Tolerance" training required to go into space.

"In this exercise the body weight may increase eightfold. This exercise is very rigorous. Similarly, due to the lack of gravity in space, the body can lose weight and swim in space. In a few months, my space journey will be a reality, "said Santosh George Kulangara.

The first voyage into space by the Virgin Galactic VSS Unity spacecraft of the United States in 2021. Realized on July 11th. Starting from New Mexico, the five-member crew, including Richard Branson, founder of Virgin Galactic, and Pennsirisha Bandla (age 34) of Indian descent, took part in the preview.

பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

## பயிற்சி – 1

## தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்

### பூம்புகார்

"பண்டைய தமிழகத்தின் மிகப் பழமையான நகரங்களுள் பூம்புகாரும் ஒன்று. காப்பிய மாந்தர்களான கோவலனும், கண்ணகியும் இந்த ஊரில்தான் பிறந்தார்கள். பூம்புகார் புகழ்பெற்று விளங்கிய துறைமுக நகரமும் கூட. ஒவ்வொரு நாடும் தனது தேவைக்குப் போக எஞ்சிய பொருள்களை அண்டைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், தங்கள் நாடுகளில் பற்றாக்குறையாக உள்ள பொருள்களைப் பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் வேண்டியிருந்தது. இதற்காகக் கடல்வழி வணிகம் அதிகரித்த போது, துறைமுகங்கள் உருவாகின. அத்தகைய துறைமுகங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றுதான் பூம்புகார் துறைமுகம் ஆகும். இது வங்காள விரிகுடா கடலின் கரையில் அமைந்துள்ளது. இது காவிரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் தற்போதைய மயிலாடுதுறை அருகே உள்ளது.

### பூம்புகார் துறைமுகம்

இந்த நகரத்துக்குப் புகார், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெயர்களும் உண்டு. சங்க காலச் சோழ அரசின் துறைமுகம் பூம்புகார். பூம்புகார் துறைமுகத்தில் சீரும், சிறப்புமாக நடந்த வணிகம் குறித்து சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலையிலிருந்தும், இரட்டைக் காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

இவற்றில் குறிப்பாக, சிலப்பதிகாரம் பூம்புகாரின் சிறப்பைப் பேசுகின்றது. சிலப்பதிகார நாயகி கண்ணகியின் தந்தை மாநாய்கன். மாநாய்கன் என்றால் பெருங்கடல் வணிகன் என்று பொருள். நாயகன் கோவலனின் தந்தை மாசாத்துவன். மாசாத்துவன் என்றால் பெருவணிகன் என்று பொருள். இதிலிருந்து பெருவணிகர்களும் பெருங்கடல் வணிகர்களும் நிறைந்த பகுதியாக பூம்புகார் விளங்கியது தெளிவாகிறது.

இங்கு வணிகம் செய்ய கிரேக்கம், ரோம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்த வண்ணம் இருந்துள்ளனர். தொடர் வணிகத்தின் காரணமாக இவர்களில் பலர் பூம்புகார் நகரிலேயே வசித்திருக்கின்றனர். ஆகவே, இங்கு வெளிநாட்டவர் குடியிருப்புகளும் தோன்றின. எனவே இங்கு பல்வேறு மொழிகளும் பேசப்பட்டன. கப்பலில் இருந்து சரக்குகளை இறக்கி வைக்கவும், ஏற்றவும் சில மாதங்கள் ஆகும் என்பதால் அயல்நாட்டு வணிகர்கள் இங்குள்ள மக்களுடன் உரையாடவும், உறவாடவும் வாய்ப்புகள் உருவாயின. பூம்புகார் மக்கள் வெளிநாட்டவர் மொழிகளைக் கற்றறிந்தனர். அயல்நாட்டவரும் தமிழ் மொழியைக் கற்றனர். இதனால் பண்ட மாற்றங்களோடு கூடவே மொழி மாற்றமும் ஏற்பட்டது. இதன் விளைவாகச் சிந்தனைப் பரிமாற்றமும் பண்பாட்டுக் கலப்பும் நிகழ்ந்தன.

பூம்புகார் நகரத்து வணிகர்கள் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள். மிகச் சரியான விலைக்கே பொருள்களை விற்றனர். கூடுதலான விலைக்கு பொருளை விற்பது தவறான செயல் என்று அவர்கள் கருதினர் என்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

பட்டினப்பாலை ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கி.மு (பொ.ஆ.மு) 2-ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர். இதிலிருந்தே புகார் நகரின் தொன்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

"கடல் வழியாகக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. கருமிளகு தரைவழித் தடங்கள் வழியே இறக்குமதி ஆனது. வடமலையிலிருந்து தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது. அது மெருகூட்டப்பட்டு மீண்டும் அயல்நாட்டுக்கு ஏற்றுமதியானது.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சந்தனமும், தென்கடல் பகுதியிலிருந்து முத்தும், கிழக்குப் பகுதியிலிருந்து பவளமும், ஈழத்திலிருந்து உணவுப்பொருள்களும் இறக்குமதியாகின.

பூம்புகார் மற்ற நகரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் கட்டமைக்கப்பட்டிருந்தது. வீடுகள் ஒழுங்கான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. அகன்ற, நேரான தெருக்களைக் கொண்டதாக புகார் நகரம் விளங்கியது.

இங்கு கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. பூம்புகார் நகர வாழ்வினைச் சிலப்பதிகாரத்தின் புகார் காண்டத்தினை வாசித்தும் பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களை வாசித்தும் அறியலாம்

கி.பி (பொ.ஆ). 200 வரை சிறப்புற்றுத் திகழ்ந்த புகார் நகரம் கடற்கோள் அல்லது கடற்சீற்றங்களால் அழிந்து போயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அதன் சான்றுகளைப் பூம்புகார் நகரில் இன்றும் காணலாம்.

# விடை

## Ancient Cities of Tamilagam

### Poompuhar

Poompuhar is one of the oldest towns in ancient Tamilagam. This is the place where well known characters of Silapathikaram, Kovalan and Kannagi lived. It was also a port town along the Bay of Bengal. The ports were established for facilitating maritime trade. Even in times past, countries began to export their surplus products and import the scarce commodities by sea. Poompuhar is one such historic port that emerged in the wake of increasing maritime trade. It is a coastal town near the present-day Mayiladuthurai and is located where the river Cauvery drains into the sea.

### Poompuhar Port

Poompuhar was also known by names such as Puhar and Kaveripoompattinam. It served as the port of the early Chola kingdom. One of the popular Sangam Literature, *Pattinappaalai* and Tamil epics, *Silappathikaram* and *Manimegalai*, have references to the brisk sea-borne trade that took place in the port city, Puhar.

*Silappathikaram*, in particular, speaks about the greatness of Poompuhar. The lead female character of *Silappathikaram* is Kannagi. Her father is Maanaigan. Sea traders are known by the name Maanaigan. The male character Kovalan's father is Maasathuvan. Massathuvan means a big trader. It is clear from the text that Poompuhar was a place where big traders and sea traders had settled down.

Numerous merchants from foreign countries such as Greece and Rome landed at Poompuhar. Due to busy and continuous trade, many of them stayed on indefinitely in Poompuhar. There are evidences of foreigner's settlements in the town. People speaking many languages inhabited Poompuhar in its glorious days. As loading and unloading of ships took some months, the foreign traders began to interact with the local people during that period. This enabled the natives to learn foreign languages for communication. Similarly, the foreigners also learnt Tamil to communicate with the natives. This contact facilitated not only exchange of goods but also languages and ideas resulting in cultural blending.

The traders of Poompuhar were known for their honesty and integrity. They sold goods at legitimate prices. *Pattinappaalai* states that "selling any commodity at a higher price was considered bad".

The author of *Pattinappaalai*, Kadiyalur Uruttirangannanar, belonged to 2nd century BC(BCE). This is indicative of Puhar's antiquity. Horses were imported by sea. Pepper was procured through the land route. Gold that came from Vadamalai was polished and exported to the overseas countries. Sandal from Western Ghats, pearls from southern sea, corals from eastern sea and food items from Eelam were imported.

Poompuhar had been built differently from other towns. Each social group had a separate settlement. Streets were broad and straight, dotted with well-designed houses. There was also a dockyard.

We can learn about the life of the people of Puhar by reading Pattinappaalai and "Puhar Kandam" of *Silappathikaram*.

Puhar was a busy port upto 200 AD(CE). It might have been either washed away by sea or destroyed by big shore waves. The remains of that destruction can still be seen in the present Poompuhar town.

## பயிற்சி – 2

### மதுரை

**இந்தியாவில் உள்ள மிகப் பழமையான நகரங்களில் மதுரையும் ஒன்று. சங்கம் வளர்த்த நகரம் என்று பெயர் பெற்றுள்ளதில் இருந்தே இதன் தொன்மையைப் புரிந்து கொள்ளலாம்.**

**பண்டைய காலத்தில் மதுரையை முறையே பாண்டியர்களும், சோழர்களும், களப்பிரர்களும் ஆட்சி செய்தனர். இடைக்காலத்தில் பிற்காலச் சோழர்களும், பிற்காலப் பாண்டியர்களும், அவர்களைத் தொடர்ந்து நாயக்கர்களும் ஆட்சி புரிந்தனர். இதன் விளைவாகப் பண்பாட்டுக் கலப்பு நிகழ்ந்தது. வணிகம்**

செழித்தது. இதற்கான சான்றுகள் மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.

சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்த பெருமை மதுரைக்கு உண்டு. கடைச்சங்க காலத்தில் தமிழ்ப் பணி செய்த புலவர்கள் 49 பேர்.

கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்த தொண்டியில் இருந்து மதுரைக்கு அகில், சந்தனம் போன்ற நறுமணப் பொருள்கள் கொண்டு வரப்பட்டன. பண்டைய இஸ்ரேல் அரசர் சாலமோன் முத்துக்களை உவரி என்னுமிடத்திலிருந்து இறக்குமதி செய்தார். பாண்டியர் துறைமுகமான கொற்கைக்கு அருகில் உவரி உள்ளது. ரோமானிய நாணயங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை மதுரையில் இருந்துள்ளது. பிறநாட்டு நாணயங்களும் மதுரையில் அச்சடிக்கப்பட்டது, மதுரையின் புகழுக்கு ஒரு சான்று ஆகும்.

புகழ்பெற்ற கிரேக்க வரலாற்றாசிரியர் மெகஸ்தனிசின் குறிப்புகளில் மதுரையைப் பற்றிய தகவல்கள் உண்டு. மௌரிய வம்ச அரசனான சந்திர குப்தரின் அமைச்சரான சாணக்கியர் மதுரையைப் பற்றித் தனது அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை நகரைச் சுற்றிலும் இருந்த அகழியில் யானைகள்கூடச் செல்லும் அளவுக்கு அகலமான சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு மதுரை பண்டைய காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தது.

## விடை

Madurai

Madurai has been one of the oldest cities in India. Its antiquity can be understood from the sobriquet “Sangam Valartha Nagaram” it has earned.

Pandyas, the Cholas and later the Kalabras ruled Madurai in the ancient period. During medieval times, later Cholas and later Pandyas followed by the Nayaks ruled this historic town. This has resulted in cultural blending. Trade flourished and evidence for this has been unearthed in archaeological excavation done in Keezhadi near Madurai.

Madurai is proudly associated with tamil sangam (academies), which worked for the promotion of Tamil language.
Forty-nine poets were associated with the last Sangam. Ahil, fragrant wood, was brought from Port Thondi to Madurai. King Solomon of ancient Israel imported pearls from Uvari near the Pandyan port, Korkai.

A mint of Roman coins was present at Madurai. The coins of other countries were also minted at Madurai, which is a proof for the glory of Madurai.

The fame of Madurai is attested by the accounts of the Greek historian Megasthanese. Chanakya, Chandragupta’s minister, makes a mention of Madurai in his book, Arthasastra.

In the moat around the town, tunnels had been constructed in such a way that even elephants could comfortably enter.

## பயிற்சி – 3

### காஞ்சி

**கல்வி கற்பதற்கான இடத்தினைப் பள்ளி என்று அழைக்கிறோம் அல்லவா? இப்பள்ளிகள் காஞ்சி நகரில் தான் முதன்முதலில் ஏராளமாக அமைக்கப்பட்டன. சமணர் அமைத்த பள்ளிகளில் சமண மாணவர்களும், புத்த விகாரங்களில் புத்த மாணவர்களும் பயின்றனர். நாளந்தாப் பல்கலைக்கழகத்தில் பயின்ற சீனப்**

பயணி யுவான் சுவாங் கூடுதல் படிப்புக்காகக் காஞ்சியில் இருந்த கடிகைக்கு வந்திருக்கிறார்.

"நகரங்களில் சிறந்தது காஞ்சி" என்று கவிஞர் காளிதாசர் கூறுகிறார். "கல்வியில் கரையிலாத காஞ்சி" என்று நாயன்மார்களுள் முதன்மையானவரான திருநாவுக்கரசர் காஞ்சி நகரைப் புகழ்ந்துள்ளார். புத்தகயா, சாஞ்சி போன்ற ஏழு இந்தியப் புனிதத் தலங்களுள் காஞ்சியும் ஒன்று என சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

தொண்டை நாட்டில் உள்ள மிகப் பழமையான நகரம் காஞ்சியாகும். தர்மபாலர், ஜோதிபாலர், சுமதி, போதிதர்மர் போன்ற சான்றோர்கள் காஞ்சியில் பிறந்து வாழ்ந்தவர்கள். இச்செய்திகள் மூலம் காஞ்சியின் கல்விச் சிறப்பை அறியலாம்.

காஞ்சி, "கோயில்களின் நகரம்" என்று அழைக்கப்படுகிறது. இங்கு உள்ள கைலாசநாதர் கோவில் புகழ்பெற்றது. பிற்காலப் பல்லவ மன்னன் இராஜசிம்மன் இந்த கற்கோவிலைக் கட்டினார். பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோவில்களும் கட்டப்பட்டன. பௌத்தத் துறவியான மணிமேகலை தனது இறுதிக் காலத்தைக் காஞ்சியில் கழித்தார் என்பது இதன் சிறப்புக்கு இன்னொரு சான்று ஆகும்.

வேளாண்மைச் சமூகத்தில் நீர் மேலாண்மைக்கு முதன்மையான இடம் உண்டு. காஞ்சி நகரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான ஏரிகள் வெட்டப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டது; இந்த ஏரிகள் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. இன்றும் காஞ்சிபுரம் 'ஏரிகளின் மாவட்டம்' என்று அழைக்கப்படுவதை நாம் அறிவோம். கரிகாற் சோழர்களால் கட்டப்பட்ட கல்லணை, காஞ்சிபுரத்தைச் சுற்றிலும் உள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்கள் மூலம் தமிழர்களின் நீர் மேலாண்மைத் திறனை அறிந்து கொள்கிறோம்.

## விடை

Kanchi

A place of learning is called school. Several schools were established in great numbers for the first time in Kancheepuram. Jains studied in Jainapalli, and Buddhists studied in Viharas.

The greatness of Kanchi as an educational centre can be understood from the fact that the Chinese traveller Hieun Tsang who studied at Nalanda University visited Kanchi 'Kadigai' to pursue his further studies.

Poet Kalidasa says, "Kanchi is the best of the towns". Tamil poet saint Thirunavukarasar praises Kanchi as "Kalviyil Karaiillatha Kanchi".

Hieun Tsang remarked that Kanchi can be counted as one among the seven sacred places like Bodh Gaya and Sanchi. Kanchi is the oldest town in Thondai Nadu. Scholars like Dharmabalar, Jothibalar, Sumathi and Bodhi Dharmar were born in Kanchi.

Kanchi is also known as the temples city. The famous temple of great architectural beauty, Kailasanathar temple, was built by later Pallava king Rajasimha at Kanchi. During the Pallava period, a large number of cave temples were built. The Buddhist monk Manimegalai spent the last part of her life at Kanchi speaks highly of that town.

Water management played an important role in the agrarian society of those times. Hundreds of lakes were created for storing water around the town of Kanchi. These lakes were well connected with canals. During the later period, Kanchi came to be known as the district of lakes. Water management skills of the ancient Tamils can be understood from the construction of Kallanai in the Chola country and the lakes and canals in Kanchi.

# பகுத்தறிவு இயக்கங்கள் – திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம் சார்ந்த மொழிப் பெயர்ப்புகள்

## பயிற்சி – 4

## மறுமலர்ச்சி

மறுமலர்ச்சியானது ஒரு கருத்தியல் பண்பாட்டு நிகழ்வாகும். அது நவீனம், பகுத்தறிவு, சமூகத்தின் முற்போக்கான இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. திறனாய்வுச் சிந்தனை அதன் வேர்களில் உள்ளது. மானுடப் பகுத்தறிவுடைமையையும் சமத்துவத்தையும் மையமாகக் கொண்ட ஒரு தத்துவ மரபாக இருப்பது அதன் சிறப்பியல்பாகும். மனிதநேயமும், மனிதர்களுக்கு அவர்களின் கண்ணியத்தை மறுக்கிற அடிப்படைவாத மத நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்குவதும், மறுமலர்ச்சியின் அகத்தூண்டுதல்களாகும். மனிதநேயம் எனும் இச்சித்தாந்தம், சமூக வாழ்வு மற்றும் அறிவு ஆகிய துறைகளோடு மொழி, இலக்கியம், தத்துவம், இசை, ஓவியம், கட்டடக்கலை இன்னபிற போன்ற அனைத்துத் துறைகளிலும் படைப்பாற்றலைத் தூண்டி எழுப்பியது.

## தமிழ் மறுமலர்ச்சி

காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக் கண்டத்தின் சமூகப் - பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட

மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச்சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## விடை

Renaissance

Renaissance is an ideological and cultural phenomenon. It is closely tied to modernity, rationalism and the progressive movement of the society. Critical thinking is at its root. A new philosophical tradition centring around human rationality and equality is its characteristic. The basic inspiration of renaissance is humanism and questioning the fundamentalist religious practices that denied humans their dignity. This ideology of humanism stimulated creative energy in all spheres of social life and knowledge such as language, literature, philosophy, music, painting, architecture, etc.

Tamil Renaissance

The cultural hegemony of colonialism and the rise of humanism brought several changes in the socio-cultural life of the Indian subcontinent. Modern Tamil Nadu too experienced such a historical transition. Tamil language and culture played a significant role in their identity construction. The rationalistic thoughts and the introduction of printing press underpinned the process of Tamil renaissance. Although religious literature was taken up predominantly for publication in the early years after the advent of printing technology, things began to change gradually. Works that can be described as secular were taken up for publishing.

## பயிற்சி –5

சாதி – மதம் பெயரால் நீண்டகாலமாகப் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் பெரும் தடையாகிவிடுகிறது. உதாரணமாக, நாட்டில் பல பகுதிகளில், பெண்களின் நிலை கவலை தருவதாகவே உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே பெண்களின் நிலை உள்ளது. இவ்வாறு நடத்தப்படுவதுதான் எங்களது பண்பாடு என சொல்லத் தொடங்கினால், அதன் விளைவுகள் பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியவை. அதாவது, ஏற்றத்தாழ்வுதான் எங்களது பண்பாடு என்று சொன்னால், அல்லது பாகுபாடுதான் எங்கள் பண்பாடு என்றால் அது சமத்துவத்திற்கான நமது பயணம்.

## பொருளாதார சமத்துவம்

ஒரு சமூகத்தில் தனி நபர்களிடம் நிலவும் சொத்து மதிப்பு, வருமானம் குறித்த ஏற்றத்தாழ்வுகளை வைத்து, அந்த சமூகத்தில் பொருளாதார சமத்துவம் இருக்கிறதா என்பதை ஓரளவிற்கு நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியும். அல்லது பணம் படைத்தவர்களுக்கும் ஏழைமக்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளி அந்த சமூகத்தின் பொருளாதார நிலையினை நமக்குத் தெளிவுபடுத்தும். நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் எண்ணிக்கையினை வைத்து சில தீர்மானமான முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும் – இது பரவலாக பின்பற்றக்கூடிய வழிமுறை.

ஆனால், சில பாகுபாடுகள் பண்பாட்டு ரீதியாக நியாயப்படுத்தப்படும் போதுதான், பிரச்சினை பெரிதாகிறது. இத்தகைய பின்னடைவுகளை மக்கள் கவனத்துக்குக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் காலத்தின் தேவைக்கேற்ப சீர்திருத்தவாதிகள் ஈடுபட்டனர்.

"மனிதனை மனிதனாகக் கருதமுடியாமல், அவரது சாதியை மட்டுமே வைத்து எடைபோட முயலும் சிந்தனை காட்டுமிராண்டித்தனமானது" என்று வலியுறுத்திய தந்தை பெரியார், பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் என்ற பெயரில் சமத்துவத்தை மறுக்கும் அத்தனை அம்சங்களையும் கடுமையாக நிராகரித்தார். பெண்களை அடிமைப்படுத்த நாம் உருவாக்கி வைத்திருக்கும் அத்தனை சமூக அமைப்புகளையும் வன்மையாகக் கண்டிக்கும் பெரியார், சாதி, மத, பாலின பேதமற்ற சமூகமே உயரிய சமூகம் என்று அறிவித்தார். மொழி மேல் வெறியும், தங்களது பண்பாடு மேல் தீவிர பற்றும் கொண்டுள்ள நபர்களால் நவீன சமூகத்தை உருவாக்க முடியாது என்று திட்டவட்டமாக வாதாடினார். இவ்வாறு சமத்துவதின் பல்வேறு பரிமாணங்களை நமக்கு பலரும் முன்வைத்துள்ளனர்.

## விடை

Economic equality can be identified by individual's income and the value of property, he possess in a society. Otherwise, the gap between rich people community and poor may indicate the status of economic equality. Further, by calculating number of people under poverty line, we may draw strong inferences and resolutions. This kind of identification is widespread among all the nations. But certain discriminations on the basis of culture and historical cum habitual practices, may create precarious issues in the concerned society. Radical reformers during different phases of history, has made wide awareness about these untoward and unethical happenings to the people.

"Humans respected on the basis of caste which he belongs to, is barbarian and anti-human thinking", exclaimed E.V.Ramaswamy alias Periyar in Tamilnadu. He out-rightly condemned the cultural practices, habitual follow-ups and other so called values which refutes equality in all its aspects. Periyar also was against "Patriarchal Chauvinism" which subjugated women all along the history.

# பயிற்சி – 6

## மறைமலை அடிகள்

மறைமலை அடிகள் தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவும் கருதப்படுகின்றார். சங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். அவர் இளைஞராக இருந்த போது சித்தாந்த
தீபிகா எனும் பத்திரிகையில் பணிபுரிந்தார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் மீது பற்றுக்கொண்டார். அவருடைய ஆசிரியர்களான பி. சுந்தரனார், சோமசுந்தர நாயகர் ஆகிய இருவரும் அவருடைய வாழ்க்கையில் முக்கியச் செல்வாக்கு செலுத்தியோராவர்.

## தனித்தமிழ் இயக்கம்

தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலை அடிகள் ஊக்குவித்தார். இவ்வியக்கம் தமிழ்ப் பண்பாட்டின் மீது குறிப்பாக தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் மொழியின் மீது செல்வாக்குச் செலுத்தும் வேற்று மொழி வார்த்தைகளை அடையாளங்கண்டு அவற்றை அகற்றுகின்ற செயல்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொடங்கப்பட்டிருந்தாலும் தனித் தமிழ் இயக்கம் தொடங்கியது 1916 எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார். வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில்

மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார். அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிகை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் என்று பெயரிடப்பட்டது. இவ்வியக்கம் தமிழ் சமுதாயத்திலிருந்த இந்தி, சமஸ்கிருதம் மற்றும் பிராமண மேலாதிக்கத்தை விமர்சித்தது. தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ் சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார். இவ்வியக்கம் பிற்காலத்தில் தமிழ் சமூகத்திலிருந்த பிராமணிய மற்றும் சமஸ்கிருத மரபுகளை எதிர்கொண்ட சமூக இயக்கங்களுக்கு வழிவகுத்தது.

## விடை

Maraimalai Adigal

Maraimalai Adigal is considered the father of Tamil linguistic purism and the founder of Tani Tamil Iyakkam (Pure Tamil Movement). He wrote commentaries on the Sangam texts, Pattinappalai and Mullaipattu. As a young man, he worked in a journal, Siddhanta Deepika. Later he served as a Tamil teacher in the Madras Christian College for many years. He was inclined towards non-Brahmin movement. His teachers such as P. Sundaram Pillai and SomasundaraNayagar were key influences in his life.

Pure Tamil Movement (Tani Tamil Iyakkam)

Maraimalai Adigal promoted the use of pure Tamil words and removal of the Sanskrit influences from Tamil language. The movement made a great impact on Tamil culture especially in language and literature. The beginnings of the movement are usually dated to 1916 even though the process of identifying influence of foreign words in Tamil and eliminating them can be dated much earlier to the late nineteenth century. His daughter, Neelambikai, played an important role in its foundation. He changed his own name, Vedachalam and took on the pure Tamil name of Maraimalai Adigal. His journal Jnanasagaram was renamed Arivukkadal and his institution, SamarasaSanmarga Sangam, was re-christened as PotuNilaikKalakam. The movement was critical of Hindi, Sanskrit and the Brahminical hegemony in Tamil society. Neelambikai compiled a dictionary that

provided pure Tamil equivalents to Sanskrit words that had crept into Tamil vocabulary. This movement paved the way for later social movements that countered Brahminical and the Sanskrit tradition in Tamil society.

## பயிற்சி – 7

## திராவிட இயக்கத்தின் எழுச்சி

இந்தியாவில் பிராமணர்கள் தங்களது பிறப்பின் அடிப்படையில் சிறந்த சமூக அந்தஸ்தை அனுபவித்தனர் மேலும் மிகப்பெரும் சமூக முன்னுரிமைகளையும் பெற்றிருந்தனர். சென்னை மாகாணத்தில் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசியல், கல்வி மற்றும் அரசாங்க வேலைவாய்ப்புகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்தினர். 1911ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாகாண மக்கள் தொகையில் பிராமணர்களின் எண்ணிக்கை 3 விழுக்காட்டிற்கு சற்றே அதிகமாயும் பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 90 விழுக்காடெனவும் காட்டியது. மேலும் 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த பிராமணர் எண்ணிக்கை 4074 ஆகவும் அதே பிராமணமரல்லாதோரின் எண்ணிகை 1035 ஆகவும் இருந்தது. அன்று எவ்வாறு மக்கள் தொகை வகைப்படுத்தப்பட்டிருந்ததோ அதனடிப்படையில் ஏனைய குழுக்களைச் சார்ந்த 306 இந்தியக் கிறித்தவர்களையும் 69 முகமதியர்களையும் 225 ஐரோப்பிய மற்றும் யூரேசியர்களையும் உள்ளடக்கியிருந்தது.

இத்தகைய சூழலில் திராவிட இயக்கம் பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உதயமானது. 1909இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1912இல்

டாக்டர் சி. நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார் இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்று மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது. பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது அவர்களைக் கற்கவைப்பது ஆகியவற்றோடு அவர்களது குறைபாடுகள் குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது. இதே சமயத்தில் நடேசனார் தங்கும் விடுதி வசதியில்லாததால் பிராமணரல்லாத மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதால் அதைச் சரிசெய்யும் வகையில் திருவல்லிக்கேணியில் (சென்னை) ஜூலை 1916இல் திராவிடர் இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார். மேலும் பிராமணர் அல்லாத மாணவர்களின் நலன் கருதி இவ்வில்லம் ஒரு இலக்கிய அமைப்பையும் கொண்டிருந்தது.

## விடை

Rise of the Dravidian Movement

In India, Brahmins enjoyed a high social status, based on their birth, and held great social privileges. In Madras Presidency, Brahmins dominated all the fields of society, especially politics, education and job opportunities in the government. The 1911 census showed that Brahmins were slightly over 3 per cent of Madras Presidency's population, and non-Brahmins 90 per cent. Yet in the ten years from 1901 to 1911 Madras University turned out 4,074 Brahmin graduates compared with only 1,035 non-Brahmin graduates. Numbers for other groups, based on how the population came to be classified then, included Indian Christian306, Mohammedan69 and European and Eurasian 225.

In this context, the Dravidian movement emerged as a defence of the non-Brahmin castes against the Brahmin dominance. An organization called The Madras Non-Brahmin Association was founded in 1909 to help the non-Brahmin students. In 1912 C. Natesan Mudaliar, a medical doctor, founded the Madras United League, later renamed as Madras Dravidar Sangam to support Dravidian uplift. The organization focused on educating and supporting non-Brahmin graduates and conducting regular meetings to share their grievances. Meanwhile, Natesan founded a hostel, the Dravidian Home, at Triplicane

(Madras) in July 1916 to address the lack of hostels for the non-Brahmin students which hindered their educational development. In addition, the home had a literary society for the benefit of non-Brahmin students.

## பயிற்சி – 8

## தென்னிந்திய நல உரிமைச்சங்கம் (நீதிக்கட்சி)

முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நிலையில் ஆங்கில அரசாங்கம் போருக்குப் பின்னர் இந்தியாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் பிராமணர்களின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்யும் என அஞ்சிய கல்வி கற்ற பிராமணர் அல்லாதவர்கள் தங்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டிக் கொள்ள முடிவு செய்தனர். 1916 நவம்பர் 20இல் டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர். இதே சமயம் 1916 டிசம்பரில், விக்டோரியா பொது அரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிராமணரல்லாத சமூகங்களின் கருத்துக்களைத் தெளிவுபடக்கூறியது. மேலும் சென்னை மாகாணத்தின் பிராமணரல்லாதோர்களின் பொதுவான நிலையை அளவீடு செய்தது.

இவ்வமைப்பு தொடங்கி வெளியிட்ட மூன்று செய்தித்தாள்களாவன; கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிகைகளை வெளியிட்டது.

மாகாண அரசுகளில் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்த பின்னர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல்

தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920–1923 மற்றும் 1923–1926 ஆகிய ஆண்டுகளில் அரசமைத்தது. காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது. 1937 தேர்தல்களில், முதன்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.

## திட்டங்களும் செயல்பாடுகளும்

நீதிக்கட்சியே நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கிற்று. நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென இடத்தை உருவாக்கியது. தமிழ்நாட்டினுடைய சமூகநீதி மரபுத்தொடர்ச்சியானது தனது இருப்புக்கு, நீதிக்கட்சி உருவாகி வளர்ந்து ஆட்சியிலிருந்த ஆண்டுகளுக்குக் கடமைப்பட்டுள்ளது.

சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக் கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர். ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன. நீதிக்கட்சியின் கீழிருந்த சட்டமன்றம்தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921இல் அங்கீகரித்தது.

இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுத்தியதால் 1926இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.

பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது. சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன. நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது. இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.

இவைகள் தவிர சமய நிறுவனங்களை சீர்திருத்துவதிலும் நீதிக்கட்சி கவனம் செலுத்தியது. தமிழ்நாடு பெரும் எண்ணிக்கையிலான கோவில்களைக் கொண்டுள்ளது, அவை பெரும் செல்வவளத்தைப் பெற்றிருந்தன. பொதுவாக இச்சொத்துக்கள் அனைத்தும் சமூகத்தின் உயர்சாதியினரின் முற்றுரிமையில் சுரண்டப்பட்டன. மேலும் இது பொதுச்சொத்துக்கள் தவறாக நிர்வகிக்கப்படுவதற்கு வழி கோலியது. நீதிக்கட்சி 1926இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

# விடை

South Indian Liberal Federation (Justice Party)

As World War I was in progress the British government was considering the introduction of representative institutions for Indians after the War. Fearing that such political reforms would further strengthen the political power of Brahmins, educated non-Brahmins decided to organize themselves politically. On 20 November 1916 around 30 prominent non-Brahmin leaders including Dr. Natesa Mudaliyar, Sir Pitti Theyagarayar, T.M. Nair and Alamelu Mangai Thayarammal came together to form the South Indian Liberation Federation (SILF). In the meantime, at a meeting held in the Victoria Public Hall the Non-Brahmin Manifesto was released in December 1916 to articulate the voice of the non-Brahmin communities and surveyed the general condition of the non-Brahmins in Madras Presidency.

The association started publishing three newspapers: Dravidianin Tamil, Justice in English and purchased the Andhra Prakasika in Telugu, to propagate the ideals of the Party.

The first election, under the Montagu-Chelmsford Reforms, was held in 1920 after the introduction of the Dyarchy form of government in the provinces. The Justice Party won the election and formed the first-ever Indian cabinet in Madras. A. Subburayalu became the Chief Minister of the Madras Presidency and the party formed the government during1920–1923 and 1923–1926. In the context of Congress Party boycotting the legislature, the Justice Party continued to remain in office till 1937 elections were held under the Government of India Act, 1935. In the 1937elections the Indian National Congress contested the Assembly elections for the first time and trounced the Justice Party.

Programme and its activities

The Justice Party is the fountainhead of the non-Brahmin movement in the country. The Justice Party government widened education and employment opportunities for the majority of the population and created space for them in the political sphere. Tamil Nadu's legacy of social justice owes its existence to the formative years of Justice Party in power.

The Justicites removed the legal hindrances restricting inter-caste marriages and broke the barriers that prevented Adi Dravidars from the use of public wells and tanks. The

Justice Party government ordered that public schools accommodate the children of the Adi Dravidars. Hostels were established for the students belonging to this social group in 1923. In the meantime, the Madras legislature under the Justice Party government was the first to approve participation of women in the electoral politics in 1921. This resolution created space for woman and thus facilitated Muthulakshmi Reddi to become the first woman legislator in India in 1926.

The Justice Party worked towards legislating provisions for communal representation – reservations for various communities. Two Communal Government Orders (16 September 1921 and 15 August 1922) were passed to ensure equitable distribution in appointments among various castes and communities as a part of achieving social justice. The Justice Party rule established the Staff Selection Board in 1924 for the selection of government officials and encouraged all the communities to share the administrative powers. In 1929, the Government of British India adopted the pattern and established the Public Service Commission.

The Justice Party further concentrated on reforms in the religious institutions. Tamil Nadu has a large number of temples and these commanded huge resources. In general, the resources were monopolized and exploited by the dominant caste in the society and led to mismanagement of public resources. The Justice Party introduced the Hindu Religious Endowment (HRE) Act in 1926 and enabled any individual, irrespective of their caste affiliation, to become member of the temple committee and govern the resources of the religious institutions.

## பயிற்சி – 9

## சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கம் அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது. சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் மீது அக்கறை கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையும் அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற

பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது. பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு இயக்கம் நடத்திய சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.

இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது. சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது 'இனம்' ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.

சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது. இந்து சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைகிறார்கள் என்று கருதியது. முஸ்லிம் உயர்குடியினர் தமிழ்நாட்டு முஸ்லிம்களை திராவிடர்களாகவே கருதினர். இருந்தபோதிலும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில

பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்யத் தயங்கவில்லை. இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா, ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

## விடை

Self-Respect Movement

The Self Respect movement, while critiquing the then prevailing social, political and economic relations, introduced a programme of non-Brahmin uplift in Tamil Nadu. The movement was concerned with the marginalized sections of the society and criticized Brahmanism and the cultural hegemony of the Brahmin. It advocated a casteless society devoid of rituals and differences based on birth. The movement declared rationality and self-respect as the birthright of all human beings and held these as more important than self-rule. The movement declared illiteracy as a source for women's subordination and promoted compulsory elementary education for all. It campaigned for the empowerment of women and questioned the superstitious beliefs in the society.

The movement demanded women's emancipation, deplored superstition, and emphasized rationality. Its features included iconoclastic displays such as the public burning of Hindu scriptures and 'reform wedding' or 'self-respect marriage. Race was central to Self-Respect rhetoric, which argued that the non-Brahmin Dravidian people had been systematically subjugated by Aryan-Brahmins over the course of their long history.

The Self-Respect Movement championed not only the causes of the non-brahmin Hindus, but also that of the Muslims. The Self-Respect Movement extolled the lofty principles of Islam such as equality and brotherhood. They exhorted the Muslims to admit into their fold the depressed sections of the Hindu society, in order that they might enjoy the equality and brotherhood of Islam. Muslim elite considered the Tamil Muslims as Dravidians. Yet Periyar did not hesitate to attack certain customs like wearing of purdah by Muslim women. He wanted the Dravidian Muslims to follow Mustapha Kemal Pasha of Turkey and Amanullah of Afghanistan who initiated reforms in the Islamic society.

## பயிற்சி – 10

## பெரியார் ஈ.வெ.ரா

பெரியார் ஈ.வெ.ராமசாமி (1879–1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார். இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர், சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவார். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளைஞராக இருந்தபோது ஒருமுறை வீட்டைவிட்டு வெளியேறிய அவர் பல மாதங்கள் வாரணாசியிலும் ஏனைய சமயம் சார்ந்த மையங்களிலும் தங்கியிருந்தார். வைதீக இந்து சமயத்துடன் ஏற்பட்ட நேரடி அனுபவங்கள் இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்தன. வீடு திரும்பிய அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனித்து வந்தார். அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கின. ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918–1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.

1917 க்குப் பின்னர் பிராமணரல்லாத நீதிக் கட்சியின் எழுச்சிக்குப் பின்னர் சி. ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி. வரதராஜுலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1920–1922) ஆதரவாகத் தான் வகித்துவந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார். லாபம் தரும் தனது வணிகத்தைக் கைவிட்டு செயலார்வமிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆனார். காதிக்கு துணைநின்ற அவர் தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார். மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது தோப்பிலிருந்த 500 தென்னை

மரங்களை வெட்டினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை வைக்கம் வீரர் எனப் பாராட்டினர். இதே சமயத்தில் சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே. சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது. இதனைப் பெரியார் கண்டித்து எதிர்த்த பின்னரும், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்தார்.

சட்டசபை போன்ற பிரதிநித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார். இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்ற முயற்சி செய்து தோல்வியடைந்தார். இது போன்ற பிரச்சனைகளால் 1925இல்

காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடிஅரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும். பிராமணரல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களை அது வெளிக்கொணர்ந்தது. ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

## விடை

Periyar E.V.R.

Periyar E.V. Ramasamy (1879–1973) was the founder of the Self-Respect Movement. Born to a wealthy businessman in Erode, Venkatappa Naicker and Chinna Thayammal. Though possessing little formal education, he engaged in critical discussions with scholars, who used to be patronized by his devout father. As a young man, he once ran away from home and spent many months in Varanasi and other religious centres. The firsthand experience of orthodox Hindu religion led to his disillusionment with religion. On his return, he took care of his family business for some years. His selfless public service and forthrightness made him a popular personality. He held different official positions of the town that included the Chairman of Erode Municipal Council (1917–1920).

In the context of the rise of the non-Brahmin Justice party after 1917, the Congress inducted non-Brahmin leaders such as Periyar and P. Varadharajulu Naidu, at the initiative of C. Rajagopalachari. Periyar resigned all the government positions to support the Non-

Cooperation Movement (1920–1922). He gave up his profitable business and became the active member of the Congress. He promoted khadi (indigenous cotton clothes) and sold it on the streets of Tamil Nadu. He cut down 500 coconut trees in his farm to support the campaign for prohibition. He held the positions of President and Secretary of the Tamil Nadu Congress Committee.

Periyar as president of the Tamil Nadu Congress Committee proposed a resolution regarding the rights of "Untouchables" to temple entry. In the name of "caste dharma" the "lower caste" people were denied access to the temples and the streets surrounding the temple. In Vaikom (a town in the then Princely State of Travancore and in present day Kerala), people protested against this practice. After the local leaders were arrested Periyar led the Temple Entry Movement and was imprisoned. People hailed him VaikomVirar (Hero of Vaikom). In the meantime, he was disturbed by the caste-based discrimination in the dining hall of at the Cheranmadevi Gurukulam (school), which was run by V.V.S. Aiyar (a Congress leader) with the financial support of the Tamil Nadu Congress Committee. Periyar was disappointed when despite his objections and protests against this discrimination the Congress continued to support the iniquitous practice in the Gurukulam.

Periyar was keen on the introduction of reservation in representative bodies such as the legislative council for non-Brahmins. He wanted to pass the resolution in the annual conference of the Tamil Nadu Congress Committee in 1925 at its Kanchipuram session but in vain. The Congress's inability in addressing these concerns made him quit the Congress in 1925. Following his disillusionment with the Indian National Congress, Periyar started the Self-Respect movement in 1925, with the determination that there ought to be 'no god; no religion; no Gandhi; no Congress; and no Brahmins'.

Periyar understood the relevance of mass communication in spreading rationalist thought. He started a number of newspapers and journals such as Kudi Arasu (Democracy) (1925), Revolt (1928), Puratchi (Revolution) (1933), Paguththarivu (Rationalism) (1935) and Viduthalai (Liberation) (1936). Kudi Arasu was as the official newspaper of the Self-Respect Movement. It brought out the multiple voices and ideas of Non-Brahmins, women and religious minorities. Usually, Periyar wrote a column and expressed his opinion on social issues in each of its issues. He frequently wrote columns under the pseudonym of Chitraputtiran.

# பயிற்சி –11

## பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு

தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் வலியுறுத்தினார். பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறுவகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்தாக அவர் கூறினார். அம்முறை சுற்றுச்சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினார். வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைபாட்டை மேற்கொள்ள வைத்தது.

## சமயம் குறித்து பெரியார்

முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த நடைமுறைகளான, நம்பிக்கை பண்பாடு, மரபு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார் நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன் வைத்தார். சமயத்தின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டுமென்றார். "சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள்" என உறுதிபடக் கூறினார். பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தான் நிறுவிய சிந்தனையாளர்கள் அல்லது பகுத்தறிவாளர்கள் அமைப்புகள் மூலமாக மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் செலவழித்தார். கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர்

ஆகலாம் என அவர் வாதிட்டார். பிராமண அர்ச்சகர்களையும் வேதச் சடங்குகளையும் புறக்கணிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

## விடை

Periyar's Anti-Hindi Stance

Periyar emphasised that the caste system in south India is linked with the arrival of Brahmins from the North. Ancient Tamil society, he said, had a different stratification based on tinais (regions), determined by natural surroundings and the means of livelihood or occupation of the people. Anti-north Indian campaigns had made Periyar to take and anti-Hindi stand. 'I oppose Hindi as a foreign language. It introduces foreign ideas. It makes us slaves', stated Peiryar in 1948, when the then Education Minister, Avinashinlingam, wanted to re-introduce Hindi as a compulsory subject in schools.

Periyar on Religion

Periyar's experiences taught him that it was necessary to eradicate religion in order to impart progress and justice. Periyar advocated atheism as a mode of critique to deconstruct the established practices of faith, culture and custom. Periyar wanted religion to be replaced by rationalism. 'Religion means you accept superstitious beliefs', he asserted. Periyar spent his entire life campaigning against superstitions through Thinkers or Rationalists Forums he had formed. Periyar objected to the hereditary priesthood in temples. He argued that eligible individuals, who have a proper religious knowledge, should become priests rather than being based on caste. He encouraged the people to boycott the Brahmin priests and their Vedic rituals. He advocated inter-caste and Self-Respect Marriages devoid of any such rituals.

## பயிற்சி –12

## பெரியார், ஒரு பெண்ணியவாதி

பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையானாள்? என்பதாகும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார். சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார். குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.

1989இல் தமிழக அரசு, மாற்றங்களை விரும்பிய சீர்த்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது. முன்மாதிரியாக அமைந்த

இந்தச்சட்டம் தேசிய அளவிலும் இது போன்ற சட்டங்கள் இயற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

## விடை

Periyar, a Feminist

Periyar was critical of patriarchy. He condemned child-marriage and the devadasi system (institution of temple girls). Right from 1929, when the Self-respect conference began to voice its concern over the plight of women, Periyar had been emphasising on women's right to divorce and property. Periyar objected to terms like "giving in marriage". This, he said, treats woman as a thing. He wants it substituted by "valkaitunai,"(help-mate) a word for marriage taken from the Tirukkural. Peiyar's most important work on this subject is Why the Woman is Enslaved?

Periyar believed that property rights for women would provide them a social status and protection. He welcomed equal rights for males and females in property, guardianship and adoption. He was a strong champion of birth control and contraception, and said that motherhood was a burden to women.

In 1989, Government of Tamil Nadu fulfilled the dream of radical reformers by the introduction of the Hindu Succession Tamil Nadu Amendment Act of 1989, which ensured the equal rights to ancestral property for women in inheritance. This Act became a trendsetter and led to similar legislation at the national level.

## பயிற்சி –13

## இரட்டைமலை சீனிவாசன்

இரட்டைமலை சீனிவாசன் (1859–1945) தாத்தா எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சாதிப்படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காக

ராவ்சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களால் அவர் சிறப்புச் செய்யப்பட்டார். அவரது சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் 1939இல் வெளியிடப்பட்டது. இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.

தீண்டாமையின் கொடுமைகளை அனுபவித்த இரட்டைமலை சீனிவாசன் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். 1893இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார். ஒடுக்கப்பட்ட மக்களோடு தொடர்புடைய கேள்விகள், பிரச்சனைகள் குறித்து இந்திய தேசியக் காங்கிரஸ் மற்றும் நீதிக்கட்சி தலைவர்களுடன் தொடர்ந்து விவாதித்தார். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளைச் சந்தித்த இரட்டைமலை சீனிவாசன் அவருடன் நெருக்கமானார். 1923இல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரான அவர் நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினை ஏற்படுத்தி ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.

B.R. அம்பேத்காரின் நெருக்கமானவரான அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற்ற முதல், இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டு சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களுக்காகக் குரல் கொடுத்தார். 1932இல் செய்துகொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.

## விடை

Rettaimalai Srinivasan

Rettaimalai Srinivasan, popularly known as Grandpa (Thatha), was born in 1860 at Kanchipuram. He fought for social justice, equality and civil rights of the marginalized in the caste order. He was honoured with such titles as Rao Sahib (1926), Rao Bahadur (1930) and Divan Bahadur (1936) for his selfless social services. His autobiography, JeeviyaSarithaSurukkam (A Brief Autobiography), published in 1939, is one of the earliest autobiographies. Rettaimalai Srinivasan who had experienced the horrors of untouchability worked for the progress of the deprived castes. He founded the Adi Dravida Mahajana Sabha in 1893 and published a newspaper, Paraiyan, to highlight the problems of the oppressed people. He served as president of the Schedule Castes' Federation and the Madras Provincial Depressed Classes' Federation. He constantly engaged in discussions with leaders of the Indian National Congress and the Justice Party on questions involving the deprived castes. Rettaimalai Srinivasan met Gandhi in South Africa and was closely associated with him. He became a member of the Madras Legislative Council in 1923 and influenced the Justice Party to take affirmative action to safeguard the interests the depressed and deprived sections of the society.

A close associate of Dr B.R. Ambedkar, he participated in the first and second Round Table Conferences held in London (1930 and 1931) and voiced the opinions of the marginalized sections of the society. He was a signatory to the Poona Pact of 1932.

### பயிற்சி –14

### மயிலை சின்னதம்பி ராஜா

மயிலை சின்னதம்பி ராஜா மக்களால் எம்.சி. ராஜா என அழைக்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்களில் முக்கியமானவர். ஒரு ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கிய அவர் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான பல்வேறு பாடப்புத்தகங்களை எழுதினார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவராவார். சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு

தேர்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவார் (1920–1926). சென்னை சட்ட சபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவராகச் செயல்பட்டார்.

பின்னாளில் அவர் நீதிக்கட்சியிலிருந்து விலகினார். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோரிய அவர் பொது நீர்நிலைகள், பாதைகள் முதல் இடுகாடுகள் வரைப் பயன்படுத்தும் உரிமை ஒடுக்கப்பட்ட பிரவுகளைச் சேர்ந்தோருக்கும் வேண்டுமெனக் கோரி பல பொதுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தினார். மேலும் ஆதிதிராவிடர், ஆதிஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார். 1928இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார். தொடக்கத்தில் தனித் தேர்தல் தொகுதி வேண்டுமெனக் கோரிய அவர் பூனா உடன்படிக்கைக்குப் பின்னர் அந்நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு கூட்டுத்தொகுதி முறையை ஆதரித்தார்.

## விடை

M.C. Rajah

Mylai Chinnathambi Raja, popularly known as M.C. Rajah, was one of the prominent leaders from the “depressed class”. Raja started his career as a teacher and wrote different textbooks for schools and colleges. He was one of the founding members of the South Indian Liberal Federation (Justice Party). He became the first elected Legislative Council Member (1920–26) from the depressed class in Madras province. He functioned as the Deputy Leader of Justice Party in the Madras Legislative Council.

Later, he left the Justice Party. M.C. Rajah demanded abolition of untouchability and organized a number of political meetings and conferences for the “untouchable castes” to have access to public wells and pathways to burial grounds. In addition, he advocated the terms, Adi-Dravida and Adi-Andhra for the depressed class people. In 1928, he founded All India Depressed Classes Association and was its long time leader. Raja had

earlier called for separate electorate; but after the Poona Pact, he supported the idea of joint electorates. M.C. Rajah passed away in 1943.

## பயிற்சி –15

## தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்

இந்தியாவில் தொழில்கள் வளர முதல் உலகப்போர் (1914–1918) உத்வேகம் அளித்தது. போர்க்காலத்தேவைகளை நிறைவு செய்துவந்த இத்தொழிற்சாலைகள் மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்தன. போர் முடிவடைந்ததால் போர்காலத் தேவைகளும் குறைந்தன. எனவே, அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆட்குறைப்பு செய்யப்பட்டன. இத்துடன் ஏற்பட்ட விலைவாசி ஏற்றமும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்து சக்தியாக அமைந்தன. அணி திரட்டப்பட்டத் தொழிலாளர்களின் பலத்தை உணர்ந்திருந்த தேசியவாதிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்கத் தொடங்கினர். சென்னை மாகாணத்தில் பி.பி. வாடியா, ம. சிங்காரவேலர், திரு.வி. கல்யாணசுந்தரம் போன்றவர்கள் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்முயற்சி மேற்கொண்டனர். 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் பம்பாயில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் குறித்து பிரதிநிதிகள் விவாதித்தனர். தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு, வேலையில்லாதவர்களுக்கென ஒரு பதிவேட்டைப் பராமரித்தல், உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு, காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை மற்றும் உடல்நலக் காப்பீடு ஆகியவை இவற்றில் அடங்கும். இவைகளைத் தவிர தொழில் முதலாளிகளுக்கு சட்டமன்றத்தில்

பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பது போல தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமெனப் பிரதிநிதிகள் கோரினர்.

சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ம. சிங்காரவேலர் (1860–1946) ஆவார். சென்னையில் பிறந்த அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். இளமைக் காலத்தில் பௌத்தத்தைப் பரிந்துரை செய்தார். அவர் தமிழ், ஆங்கிலம், உருது, இந்தி, ஜெர்மன், பிரெஞ்ச் மற்றும் ரஷ்யன் என பலமொழிகள் அறிந்திருந்ததோடு காரல் மார்க்ஸ், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஆகியோரின் கருத்துக்களைத் தமிழில் வடித்தவர். 1923இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவரும் அவரே. அவர் இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவராக இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளைப் வெளிப்படுத்துவதற்காக தொழிலாளன் என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். பெரியாரோடும் சுயமரியாதை இயக்கத்தோடும் நெருக்கமாக இருந்தார்.

## விடை

Labour Movements in Tamil Nadu

The First World War (1914–18) provided stimulus to industrial growth in India. These industries, catering to the war time needs, had employed a huge number of workers. At the end of the War there were retrenchments across the industries, as the war time requirements receded. Combined with high prices, this gave a momentum to the labour movement. The nationalists realising the value of organized labour power began to support the cause of labour. B.P. Wadia, M. Singaravelar, Thiru. Vi. Kalyanasundaram and

others initiated the formation of labour unions in the Madras Presidency. In 1918, India's first organized trade union, the Madras Labour Union, was formed.

The first All India Trade Union Conference (AITUC) was held on 31 October 1920 in Bombay. The delegates discussed several resolutions. These included a demand for protection from police interference in labour disputes, the maintenance of an unemployment register, restriction on exporting foodstuffs, compensation for injuries, and health insurance. In addition, the delegates demanded that Indian workers be given some representation in the government, just as employers had representatives on legislative councils.

M. Singaravelar (1860–1946), was a pioneer in the labour movement activities in the Madras presidency. He was born in Madras and graduated from the Presidency College, University of Madras. He advocated Buddhism in his early life. He knew many languages, including Tamil, English, Urdu, Hindi, German, French and Russian and wrote about the ideas of Karl Marx, Charles Darwin, Herbert Spencer and Albert Einstein in Tamil. He organized the first ever celebration of May Day in 1923 and he was one of the early leaders of the Communist Party of India. He published a Tamil newspaper, Worker (Thozhilalan) to address the problems of the working class. He was closely associated with Periyar and the Self-Respect Movement to fight against the inequality based on caste.

## பயிற்சி –16

## இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம்

பொதுவாக, மொழி என்பது அடையாளத்தின் வலிமையான குறியீடாகும், மேலும் இது ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் உணர்வுகளுடன் இயைந்து நிற்பது. தமிழ்மொழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனது மேன்மையை மீட்டுப் பெற்றது. மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்த்தன. திராவிட உணர்வுக்கு இட்டுச் சென்ற தமிழ் மறுமலர்ச்சி நவீனத் தமிழ் மொழியின்

வளர்ச்சியிலும் அதன் கலை வடிவங்களுடைய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்தது. ஆகம கோவில்களில் செய்யப்படும் சடங்குகள் தமிழில் செய்யப்படுவதில்லை. இசை நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்கள் ஓரளவிலான இடத்தையே பெற்றிருந்தன. ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார். 1912இல் தஞ்சாவூர் 'சங்கீத வித்யா மகாஜன சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது. இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது. தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இந்தி கட்டாயமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது தமிழ்மொழிக்கும், பண்பாட்டிற்குமான அச்சுறுத்தலாகவே கருதப்பட்டது. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்தார். இது சென்னை மாகாணத்தில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது. தமிழுக்கு மேலாக இந்தியை அறிமுகம் செய்வது திராவிடர்களுக்கான வேலைவாய்ப்புகளை மறுப்பதாக அமையுமென பெரியார் அறிவித்தார். இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக் காட்டினார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் போராட்டத்தை பிராமணியத்திற்கும் தமிழின் மீதான சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திற்கும் எதிரான கருத்தியல் போராகவே கருதினர். பிராமணியத் தத்துவத்தைப் பரப்புவதற்கும் அதன்மூலம் சாதிப்படிநிலைகளையும், பாலின சமத்துவமின்மையையும் பாதுகாப்பதற்குமான வாகனமே சமஸ்கிருதம் என அவர்கள் கருதினர். போராட்டத்தின்போது

பெருவாரியான மக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களும், பேரணிகளும், உண்ணாவிரதங்களும் அரங்கேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்போராட்டங்களில் பங்கேற்றனர்.

## விடை

Language Agitation before Indian Independence

In general, language is considered as a dominant symbol of identity and it is associated with culture and sentiments of any society. Tamil regained its prominence in the latter half of the nineteenth and early twentieth century. Maraimalai Adigal's Pure Tamil Movement, the language reforms of Periyar and Tamil Isai Movement helped to galvanize the Tamil language. Tamil renaissance that led the Dravidian consciousness made a great intervention in the development of modern Tamil language and its art forms. Agamic temples did not permit the performance of rituals in Tamil. Tamil songs had a marginal place in musical concerts. Abraham Pandithar systematically studied the history of Tamil music and attempted to reconstruct ancient Tamil musical system. He founded the Tanjore SangithaVidyaMahajana Sangam in 1912 and it became the kernel of the Tamil Isai Movement (Tamil Music Movement). The movement gave importance to the singing of Tamil compositions in music concerts. The first Tamil Isai Conference was held in 1943, to discuss the status of Tamil music.

The implementation of Hindi as a compulsory language in Tamil Nadu, at various points of time, was seen as a threat to Tamil language and culture. C. Rajagopalachari, the Premier of Madras Presidency, introduced Hindi as a compulsory subject schools. This created a stiff opposition in Madras province. Periyar declared that the introduction of Hindi over Tamil would deny the Dravidians of their job opportunities. Maraimalai Adigal pointed out that the Tamil language would suffer with the introduction of Hindi. They opposed the cultural homogenisation with Hindi in Tamil Nadu. The anti-Hindi campaigners considered it an ideological battle against Brahmanism and the hegemony of Sanskrit over Tamil. They saw Sanskrit as a vehicle for propagation of Brahmanical ideology, thereby preserving the caste hierarchies and gender inequalities. The agitation was marked by massive protest meetings, demonstrations, and hunger fasts. Tens of thousands of people took part in the agitation.

## பயிற்சி –17

## பெண்கள் இயக்கங்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப்பெற்றன. அவைகளுள் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம் அகில இந்தியப் பெண்கள் மாநாடு ஆகியவை முக்கியமானவையாகும். இந்தியப் பெண்கள் சங்கம் என்பது 1917இல் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப்பெற்றது. இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் துண்டுப்பிரசுரங்களையும் செய்தி மடல்களையும் வெளியிட்டன. இதே சமயத்தில் இந்தியப் பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக 1927இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது. மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.

பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தோர், பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பணியாற்றினர். தங்களுடைய கருத்துகளைப் பங்கிட்டு கொள்வதற்கான ஒரு இடத்தை பெண்களுக்கு இவ்வியக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வியக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய பெண்கள் பலர் இருந்தனர். முத்துலட்சுமி அம்மையார்,

நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது அவ்வாறு அர்ப்பணிக்கப்பட்டோர் தேவதாசி என்று அறியப்பட்டனர். கடவுளுக்குச் செய்யப்படும் சேவை எனும் நோக்கில் அமைந்திருந்தாலும் நாளடைவில் இம்முறை பெரும் ஒழுக்கக்கேட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது. இத்தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார். 'மதராஸ் (அர்பணிப்பைத் தடுத்தல்) தேவதாசி சட்டம் 1947' எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.

## விடை

Women’s Movements

There were several streams of women’s movements and organizations established in the early twentieth century to address the question of women empowerment in Madras Presidency. Women’s India Association (WIA) and All India Women’s Conference (AIWC) are the important among them in Tamil Nadu. WIA was started in 1917 by Annie Besant, Dorothy Jinarajadasa and Margaret Cousins at Adyar, Madras. The Association published pamphlets and bulletins in different languages to detail the problems of personal hygiene, marriage laws, voting rights, child care and women’s role in the public. In the meantime, WIA formed the All India Women’s Conference (AIWC) in 1927 to address the problem of women’s education and recommended that the government implement various policies for the uplift of women.

Women's liberation was one of the important objectives of the Self-Respect Movement. Self-respecters led by Periyar E.V.R. worked for gender equality and gender sensitization of the society. The Movement provided a space for women to share their ideas. There were several women activists in the movement. MuthulakshmiReddi, Nagammai, Kannamma, Nilavathi, MuvalurRamamirtham, RukmaniAmmal, AlarmelmangaiyathThayammal, Nilambikai, and Sivakami Chidambaranar are prominent among them.

There was a custom of dedicating young girls to the Hindu temples as a servant of God, known as devadasi. Though intended as a service to god it soon got corrupted leading to extensive immorality and abuse of the women. Muthulakshmi Reddi, the first woman doctor in India (1912) was in the forefront of the campaign pressing for a legislation to abolish this devadasi system. The Madras Devadasis (Prevention of Dedication) Act1947 was enacted by the government.

## பயிற்சி –18

## பிராமணர் அல்லாதோர் இயக்கம்

சென்னை மாகாணத்தில் கல்வி வேகமாக வளர்ந்தது. கல்வியறிவு பெற்ற பிராமணர் அல்லாதோரின் எண்ணிக்கை அதிகமானது. தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபடவைத்தது. பிராமணர்களின் மேலாதிக்கத்தில் இருந்த அரசுப் பணிகளிலும், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதித்துவத்திலும், அரசு வாய்ப்புகளில் நிலவும் சமநிலையற்ற தன்மையும் சாதியப் பாகுபாடும் இருப்பது குறித்து அவர்கள் பிரச்சனைகளைக் கிளப்பினர். மேலும் காங்கிரசிலும் பிராமணர்களே மிகப்பெரும் எண்ணிக்கையில் இருந்தனர்.

### தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்

பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர். 1912இல்

சென்னை திராவிடர் கழகம் உருவாக்கப் பெற்றது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்கமிக்க வகையில் பங்காற்றினார். 1916 ஜூன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக 'திராவிடர் சங்க தங்கும் விடுதி'யை நிறுவினார். மேலும் இக்காலப் பகுதியைச் சேர்ந்த இரு முக்கிய பிராமணர் அல்லாதோரின் தலைவர்களான T.M. நாயர், P. தியாகராயர் ஆகிய இருவரிடையே நிலவிய கருத்து வேற்றுமையை சரிசெய்து இணக்கத்தை ஏற்படுத்தினார். இவ்விருவருமே தொடக்கத்தில் காங்கிரசில் அங்கம் வகித்தவர்களே. காங்கிரஸ் அமைப்பினுள் பிராமணரல்லாதவர்கள் எவ்வாறு ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதைப் பார்த்துத் தெளிவுபெற்றவர்களாவர். 1916 நவம்பர் 20இல் P. தியாகராயர், T.M. நாயர், C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொதுஅரங்கில் கூடினர். பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்கள் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர். விரைவில் இவ்வமைப்பு நடத்திய ஆங்கில நாளிதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) என அழைக்கப்படலாயிற்று. அமைப்புக்கான கிளைகளை உருவாக்கும் முகமாக மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி பல மாநாடுகளை நடத்தியது.

## இடஒதுக்கீட்டுக்கான கோரிக்கை

நீதிக்கட்சி தனது நோக்கங்களை கோடிட்டுக் காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை வெளியிட்டது அவை: அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் இடஒதுக்கீடு என்பனவாகும். இவ்வமைப்பு தன்னாட்சி

இயக்கத்தைப் பிராமணர்களின் இயக்கம் என எதிர்த்தது. தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கக் கூடுமென அஞ்சியது. இது காங்கிரசையும் பிராமணர்களின் கட்சியென விமர்சித்தது. பாராளுமன்ற அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து 1917இல் மாண்டேகுவின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்தன. நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநிதித்துவத்தைக் கோரியது (சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவினர்களுக்கும் பிரதிநிதித்துவம்). சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரித்தது. ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியுமென நீதிக்கட்சி நம்பியது. 1919ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லாதோர்களுக்குத் தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது. இந்நடவடிக்கையைக் காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்தது ஆனால் நீதிக்கட்சியால் இது வரவேற்கப்பட்டது.

## விடை

Non-Brahmin Movement

There was rapid growth in education in the Madras Presidency. There was an increase in the number of educated non-Brahmins. Intense political and social activity the educated non-Brahmins. They raised the issue of caste discrimination and unequal opportunities in government employment and representation in elected bodies, which were dominated by Brahmins. Further, the Congress was also overwhelmingly composed of Brahmins.

The South Indian Liberal Federation

The non-Brahmins organised themselves into political organisations to protect their interests. In 1912 the Madras Dravidian Association was founded. C. Natesanar played an active role as its secretary. In June 1916 he established the Dravidian Association Hostel for non-Brahmin students. He also played a key role in bridging the differences between two leading non-Brahmin leaders of the time, Dr. T.M. Nair and P. Thyagarayar. Both of

them were earlier part of the Congress and were disillusioned by how non-Brahmins were sidelined in the organisation. On 20 November 1916 a meeting of about thirty non-Brahmins was held under the leadership of P. Thyagarayar, Dr. T.M. Nair and C. Natesanar at Victoria Public Hall in Chennai. The South Indian Liberal Federation (SILF) was founded to promote the interests of the non-Brahmins. They also launched three newspapers: Justice in English, Dravidian in Tamil and Andhra Prakasika in Telugu. Soon the SILF began to be popularly known as Justice Party after its English daily. The Justice Party also held several conferences throughout the Presidency to set up branches.

Demand for Reservation

The Non-Brahmin Manifesto was released outlining its objectives viz., reservation of jobs for non-Brahmins in government service, and seats in representative bodies. It opposed the Home Rule Movement as a movement of Brahmins and feared that Home Rule might give them more power. It also criticised the Congress as a party of the Brahmins. Montagu's announcement of political reforms in the Parliament in 1917 intensified political discussions in Tamil Nadu. The Justice Party demanded communal representation (i.e. representation for various communities in society). The Madras Government was also supportive of the Justice Party as the latter believed that English rule was conducive for the development of the non-Brahmins. The Act of 1919 provided reservation of seats to non-Brahmins, a move criticised by the Congress but welcomed by the Justice Party.

# சமூக நீதி மற்றும் இடஒதுக்கீடு சார்ந்த மொழி பெயர்ப்புகள்

## பயிற்சி –19

## சமூக நீதி

சமூகம் உருவாக்கும் எதிர்மறை மதிப்பீடுகள் சமத்துவமின்மையை, ஏற்றத்தாழ்வை உருவாக்குகிறது. சமூக அதிகாரத்தைக் கைக்கொள்வதில் ஏற்படும் போட்டிகளே ஒடுக்குமுறைகள் தோன்றிடக் காரணங்களாகும். தங்களுக்கென உருவாக்கிக் கொண்ட இயல்பான அடையாளக் கூறுகளைத் தற்காத்துக் கொள்வதற்கு அதிகார அமைப்புகளைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணுகின்றனர். 'பன்மைத்துவ'மான சமூக அமைப்பில் தனித்த ஒரு குழுவினர் மட்டும் சமூகமேலாதிக்கம் பெற்றவர்களாக உருவெடுப்பது அநீதியான போக்காகும்.

சமூகமேலாதிக்க உணர்வினைப் பெற்ற இன, மத, மொழி, சாதி மற்றும் பண்பாட்டுக் குழுவினர் மற்ற குழுவினரின் சமூக உரிமைகளைப் பறித்தெடுக்க முயலும்போது அல்லது தடுக்கும்போது சமூகப் பகை முரண்கள் உருவாகின்றன. தங்கள் மீதான மேலாதிக்கத்தை மறுத்துத் தங்களுக்கு உரிய உரிமைகளைச் சமமாகப் பெற்றிட நடத்துகிற போராட்ட உணர்வினையே சமூக நீதி என்கிறோம்.

### சமூகப்படிநிலைகளின் பின்புலம்

இந்தியாவில், புராதன காலத்து மரபுசார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்படிநிலை, மேல்-கீழ் என்னும் பாகுபாட்டைக் கொண்டிருக்கின்றது. வருண படிநிலை அமைப்பு 'சதுர் வருண அமைப்பு' (நான்கு வருண அமைப்பு – அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது. பிறப்பின் அடிப்படையில் பேணப்படும் இப் பாகுபாடு, தலைமுறைகளாகத் தொடர்வதால் சமூகத்தில் ஆழமான ஏற்றத்தாழ்வுகள் உருவாயின.

## விடை

Social Justice

The negative values which are made by the society results in inequality and cleavation among people. Social power is the dominant phenomenon which leads to cut-throat competition and ends in absolute control of the subjects. It is in order to protect the social identity, the dominant communities endeavor to capture the power sector. Among different communities in a plural society, dominance of a single group is considered as unfair and unjust. The dominant groups activate racial, religious, caste, lingual and cultural feelings and intend to misuse the social rights of other groups that may end in permanent hostility between different groups. The struggle that is undertaken by the weaker groups in order to react for establishing equal society is known to be Social Justice.

Background of Social Hierarchy

The ancient Indian civilization had evolved with the "Varnashrama Dharma" which kick-started the principle of hierarchy i.e. Upper and Lower strata. The Varna system is also called as "Four Varna System" by which people were divided as Brahmins, Kshatriyas, Vysyas and Shudras.

Those sections who have been beyond these Varna classification were categories as scheduled castes and scheduled tribes. During the colonial period these depressed communities were classified as panchamas who were victims of untouchability. This division on the basis of birth has been inculcated and socialized along different phases of civilization from which inequalities surfaced in the society.

## பயிற்சி – 20

## சமத்துவம் நிலவ சமூக நீதி அவசியம்

சமத்துவம் வேண்டும் என்று அனைவருமே ஏற்றுக்கொள்ளும் அதே நேரம், ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் நம்மை நிலைகுலைய வைக்கின்றன. வசதிகளில், வாய்ப்புகளில், பணிச் சூழலில் என்று பல தளங்களில் நிலவும் சமத்துவமின்மை பற்றி நாம் என்ன சொல்லப்போகிறோம்.? இது போன்ற

ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் நமது வாழ்வில் தவிர்க்கமுடியாத மற்றும் நிரந்தரமான அம்சங்கள் என்று கருதமுடியுமா? இவ்வாறு வாய்ப்புகள் இன்றித் தவிக்கும் மக்கள் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்ய நாம் கூடுதலாக என்ன செய்ய வேண்டும்? இது போன்ற சமத்துவமின்மைக்கு நமது சமூகத்தில் நிலவும் பண்பாட்டு மதிப்பீடுகள் எந்த அளவிற்கு காரணமாக இருக்கின்றன? இது மாதிரியான கேள்விகள் பல ஆண்டுகளாகவே நம் நாட்டினரை மட்டுமல்ல உலகெங்கிலும் பெரும் அதிர்வுகளை உருவாக்கி வந்திருக்கின்றன. அதனால்தான், சமத்துவம் என்பது சமூக, அரசியல் கோட்பாட்டில் முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. முதலில், சமத்துவம் என்ற கோட்பாடு எதை சுட்டிக்காட்டுகிறது? நாம் அனைவரும் சமம் என்றால் அதன் உண்மையான பொருள் என்ன? சமத்துவத்தை உறுதிசெய்வது எப்படி? அவ்வாறு உறுதி செய்வதன் வழியாக நாம் சாதிக்க நினைப்பது என்ன? வருமானத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை மட்டுமே நாம் சரிசெய்ய நினைக்கிறோமா? எந்த மாதிரியான சமத்துவத்தை நாம் நிலைநாட்ட முயல்கிறோம்? நாம் எத்தனிக்கும் சமத்துவம் யாருக்கானது?

## சிறப்பு முன்னுரிமைக்கான தேவைகள்

சமூக அடையாளங்களை முன்னிறுத்தி ஒருவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது அநீதி; அதுவே சமத்துவமின்மையை உருவாக வழிகோலுகிறது. இனம், மொழி, சாதி, பாலினம், மதம் போன்ற வேறுபாடுகள் இருந்தாலும், மனிதர்கள் அனைவரும் தங்களது தனித்துவமான திறமையினை முன்னெடுத்துச் சென்று வாழ்வில் வெற்றி பெற வாய்ப்புகள் சம அளவில் வழங்கப்பட வேண்டும்.

சமூக, அரசியல் கோட்பாடுகளில், மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது இயற்கையாகவே மனிதர்களிடம் நிலவும் வேறுபாடுகளுக்கும் சமூக, கலாச்சார ரீதியாக இருக்கும் பாகுபாடுகளுக்குமான வேறுபாடு போல, தனிநபர் விருப்பங்கள்,

திறமைகள் இயல்பானவை, தனித்துவமானவை. ஒருவருக்கான அங்கீகாரமும், மதிப்பும் தனி நபர்களின் சாதனைகள், தனி நபரின் திறமைக்குமாக இருக்கவேண்டும்; ஆனால், ஒரு சமூகம் உருவாக்கி வைத்திருக்கும் கலாச்சார, அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் செயற்கையானவை. இவற்றை பாகுபாடுகள் எனலாம்.

மக்களாட்சி நிலவும் நாடுகளில் அரசியல் சமத்துவத்தை எளிதாகப் புரிந்துகொள்ளமுடியும். மக்களாட்சி அரசுகள் தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான குடியுரிமையை வழங்கி வருகின்றன. குடியுரிமை என்பது வாக்குரிமை, கருத்துரிமை, இணைந்து செயல்படும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, வழிபாட்டுரிமை என பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இவை அனைத்துமே மக்களாட்சி சிறப்பாகச் செயல்பட அவசியமாகும். அப்போதுதான், குடிமக்கள் அனைவரின் பங்களிப்புடன் அரசு செயல்படமுடியும். மேலும், அரசமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சட்ட உரிமைகளையும் வழங்கியுள்ளது. மக்களாட்சி நிலவும் பல நாடுகளில் குடியுரிமை உறுதி செய்யப்பட்டு இருந்தாலும், சமத்துவமின்மையும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவத்தான் செய்கின்றன.

## விடை

Equality is essential for Social Justice

People accept equality as an essential phenomenon but still inequality and discrimination are serving as distributing factors. Inequality prevails in almost all spheres like opportunities, comforts and working atmosphere. This kind of inequality and discrimination are permanent and unavoidable in our life, is it so? What we are going to do for the people, who do not have opportunities to work for the development of our nation? How far cultural values are responsible for this kind of inequality.

This is not only happening in India, but also at global level which creates stir in the minds of the people. It is for this reason, social equality stood in primary place in the Socio-political principles. Equality as a principle indicates what? What do you mean by “equal society”. How do we assure equality? With that assurance, what we are going to achieve?

Do we try to resolve inequality only in our income? What type of equality has to be established? To whom we have to provide equality?

Need of special privileges

We give our voice for justice. We have to understand the reasons. If opportunity is denied along with social identity, that is absolute injustice in a society. This creates inequality among the people. Regardless of caste, gender, religion and other differences, people should be provided with appropriate opportunities to prove their talent and capacities in the individual life. In socio- political theories, the distinction between the difference among individual and socio-cultural differences exiting among them is considered as an important aspect. Individuals should receive respect and reputation on the basis of their achievements and talents. It should not be on the basis of social identities. Inequalities and discriminatory practices which prevail in the society are artificial and are known as prejudices.

## பயிற்சி – 21

## நியாயமான விநியோகம்

சமூகத்தில் அனைவருக்கும் செல்வம், வாய்ப்பு போன்றவை சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். நியாயமாக வளங்களை அனைவருக்கும் வழங்குவதற்கு சட்டம் வழிசெய்கின்றன. சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகள் வளங்களை விநியோகிப்பதை கண்காணிக்க வேண்டும். நம்மை போன்ற நாடுகளில் சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகள் நன்கு ஊன்றியுள்ளது. சமூகத்தின் அனைத்து பிரிவிற்கும் சுதந்திரம், வாய்ப்பு, செல்வம் மற்றும் சுய கௌரவத்தின் அடிப்படைகள் போன்றவை, சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம்பெறக்கூடாது.

சட்டமானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கு முன்னரே, மக்கள் சில அடிப்படை சமத்துவங்களை பெற்று வாழ்வில் தனது நோக்கங்களை தொடர தேவையான சூழ்நிலைகள் அமைய வேண்டும். அரசும், சட்டமியற்றும்

அமைப்புகளும் தீண்டாமை மற்றும் பிறசாதி பாகுபாடு நடவடிக்கை அகற்றி சமூகத்தில் நீதியை முறைப்படுத்துகின்றது.

சமூகத்தில் சமத்துவத்தை உருவாக்குவதும் அதை அனைவருக்கும் உறுதிப்படுத்துவதும் அரசமைப்பின் தலையாய கடமையாகும்.

வரலாற்றுரீதியாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகவும், தார்மீகரீதியாகவும் உரிமை கிடைக்க அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும். சமத்துவத்தை உருவாக்குவதில் பரந்த மனப்பான்மை என்றும் தொண்டு எனவும் அரசாங்கம் நினைக்கக் கூடாது. சமுதாயத்தில் சமூக நீதியை நிலைநாட்ட மக்களை மாறுபட்ட விதத்தில் நடத்துவது அரசின் கடமையாகும், மேலும் நலிவடைந்த பிரிவினரின் அடிப்படை உரிமையாகவும், இதனைக்கொண்டு சட்டரீதியாகவும் அரசமைப்பில் தீர்வு காண முடியும். நலிவடைந்த பிரிவினருக்கு சம வாய்ப்பும் வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஏற்படுத்துவதில் அரசு முக்கிய பங்காற்றுகிறது. அரசு வேலைவாய்ப்பிலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதிலும் நவீன கல்வி முக்கிய பங்காற்றுகிறது. இதனை நிலைநிறுத்துவதற்கு சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தவும், சமவாய்ப்பினை ஏற்படுத்துவதும் அரசமைப்பின் முக்கிய நோக்கமாகவும் அங்கமாகவும் இருக்கின்றது.

## விடை

Just Distribution

Governments can and will enact laws to facilitate the just distribution of resources to individuals with in a society. Laws simply pave the way for the fair distribution of resources. Law enforcing agencies may have to monitor the process of the distribution itself.

A country like ours where socio-cultural inequalities are well entrenched, a law for fair distribution will not automatically ensure just distribution of resources. Governments will have to ensure a level playing field in order to establish Justice. In other words, before the law brings us together, people should enjoy some basic equality of life conditions and

opportunities. This attempt to create a level playing field must be seen as a necessary condition for each person to pursue his/her objectives in life. Since our constitution has abolished untouchability and other caste based discriminatory practices, both the State and the legislature would have to ensure the creation of such a level playing field. Thus, the government which swears in the name of protecting our constitution has the obligation of ensuring one of the finest promises of our constitution itself – bringing in equality to our society. Therefore, it is legal, constitutional and moral on the part of the government to create a level playing ground for all its citizens especially those who have been historically denied basic rights.

This level playing field or what we popularly call 'equal opportunity' must not be treated either as charity or as philanthropic gesture of the government. It is the obligation on the part of the government to treat people differently in order to ensure Justice; more importantly it is a fundamental right enshrined in the constitution for disadvantaged people to seek legal, constitutional remedy. Similarly, level playing ground is aimed at creating equal opportunity only in education and employment opportunities for the disadvantaged communities. In many realms of our everyday lives, there is virtually no demand from the marginalized sections to provide a level playing ground.

This clearly conveys the meaning of what is the aim of providing equal opportunity. When modern education becomes the most significant resource and employment in government sector remains a major source of livelihood, the concept of level playing ground or equal opportunity was advocated and subsequently this idea became an integral part of our constitutional apparatus.

There are several opinions in this regard. How should we distribute the resources and ensure equal opportunity/fair access to education and jobs to all especially to the disadvantaged groups. Many especially people from the so called upper echelon of the society tend to think of treating people differently in order to ensure just distribution effectively amounts to discrimination. This opinion slowly and steadily invokes strong passion and at times results in violence too. The fear of losing educational and employment opportunities among the privileged communities was steadily growing as the government planned to 'reserve' seats for people from marginalized and underprivileged communities as part of its equal opportunity plan.

# (ஆ) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்

**TNPSC மாதிரி வினா**

The earliest civilizations developed between 4000 and 3000 BCE, when the rise of Agriculture and trade allowed people to have surplus food and economic stability. Many people no longer had to practice farming, allowing a diverse array of professions and interests to flourish in a relatively confined area.

Civilizations first appeared in Mesopotamia (what is now Iraq) and later in Egypt. Civilizations thrived in the Indus Valley by about 2500 BCE, in China by about 1500 BCE and in Central America (What is now Mexico) by about 1200 BCE. Civilizations ultimately developed on every continent except Antarctica.

Urban Areas:

Large population centres, or urban areas (1) Allow Civilization to develop, although people who live outside these urban centers are still part of that region's civilization. Rural residents of civilizations may include farmers, fishers and traders who regularly sell their goods and services to urban residents.

The huge urban center of Teotihuacan, in modern day Mexico for example had as many as 200,000 residents between 300 and 600 habitations. The development of the Teotihuacan civilization was made possible in party by the rich.

**விடை**

**ஆரம்பகால நாகரிகங்கள் கிமு 4000 மற்றும் 3000 க்கு இடையில் வளர்ந்தன, அப்போது விவசாயம் மற்றும் வர்த்தகத்தின் எழுச்சி மக்கள் உபரி உணவு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை அனுமதித்தது. பல மக்கள் இனி விவசாயம் செய்ய வேண்டியதில்லை, இது ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்ட பகுதியில் பலவிதமான தொழில்கள் மற்றும் ஆர்வங்கள் வளர அனுமதிக்கிறது.**

**நாகரிகங்கள் முதலில் மெசபடோமியாவிலும் (தற்போதைய ஈராக்) பின்னர் எகிப்திலும் தோன்றின. நாகரிகங்கள் சிந்து சமவெளியில் கிமு 2500, சீனாவில் கிமு 1500 மற்றும் மத்திய அமெரிக்காவில் (தற்போதைய மெக்சிகோ) கிமு 1200**

இல் வளர்ந்தன. அண்டார்டிகாவைத் தவிர அனைத்து கண்டங்களிலும் நாகரிகங்கள் இறுதியில் வளர்ந்தன.

நகரப் பகுதிகள்:

பெரிய மக்கள்தொகை மையங்கள், அல்லது நகர்ப்புறப் பகுதிகள் (1) நாகரீகத்தை வளர அனுமதியுங்கள், இருப்பினும் இந்த நகர்ப்புற மையங்களுக்கு வெளியே வாழும் மக்கள் இன்னும் அந்த பிராந்தியத்தின் நாகரீகத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். நாகரிகங்களின் கிராமப்புற குடியிருப்பாளர்களில் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் வணிகர்கள் ஆகியோர் அடங்குவர், அவர்கள் தங்கள் பொருட்களையும் சேவைகளையும் தொடர்ந்து நகர்ப்புற மக்களுக்கு விற்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, நவீன மெக்சிகோவில் உள்ள தியோதிஹுவாகனின் பெரிய நகர்ப்புற மையத்தில் 300 முதல் 600 குடியிருப்புகளுக்கு இடையில் 200,000 குடியிருப்பாளர்கள் இருந்தனர். தியோதிஹுகான் நாகரிகத்தின் வளர்ச்சி பணக்காரர்களால் கட்சியில் சாத்தியமானது.

## பயிற்சி – 1

Status in Madras Presidency

During the same period, Chennai presidency came under the direct rule of British Empire. Laws like 'Ryotwari' were made. Moreover, tax collecting system was introduced. Further, military forces were also instigated. In 1835, English was declared as official and administrative language in India. Indians were appointed in the British Indian military forces. Majority of the people who joined in military were non-Brahmins and deprived communities.

Although colonial British regime appointed Indians in military forces, it hesitated to permit Indian languages in the educational institutions. This untoward situation remained same until the end of the 19th century. People who are fluent in English were appointed in these services. Apart from the Europeans, Anglo- Indians and Brahmins were appointed in all government services.

Due to the establishment of 'Jamindari' and 'Ryotwari' system in the initial part of 19th century, 'Landlords', 'Zamindars' and other dominant groups spearheaded in entire India. All the above said are "Caste Hindus". "Caste Hindus" domination in all villages greatly affected the villages and particularly, the downtrodden communities were kept aside from the lands in all villages of India.

In this connection, a British officer 'Francis Ellis' was appointed to submit the status report regarding 'Ryotwari System'. In similar way, another officer, 'Thomas Munro' also submitted a report related to the 'Ryotwari System'. According to the reports, 'Lands which were tilled by lower strata people, were illegally occupied and acquired by 'Zamindars' and 'Landlords' and thus caused quality-less farming and low level of yields. It is also reported that Land Income Tax was also affected due to this acquisition. Moreover, the deprived and downtrodden communities were checked-out of their lands and also their children denied admissions in the schools and other educational institutions.

In 1854, court delivered direction that there may not be any restriction to admit children who belongs to lower caste groups. The Caste Hindus and other dominant communities, however, didn't obey the judgment of the court proceedings. In 1865, Secretary of state for India in British Parliament ordered for admission of children who belong to lower caste groups but the condition remains unchanged.

## விடை

### சென்னை மாகாணத்தில் சமூகநீதி

அன்றைய சென்னை மாகாணத்தில் இங்கிலாந்து அரசின் நேரடி நிர்வாகம் விரிவடைந்தது. ரயத்துவாரி போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன. வரி வசூல் செய்யும் நிர்வாக அமைப்புகள் உருவாயின. சென்னையில் ராணுவ அமைப்புகள் உருவாயின. 1835 இல் இந்தியா முழுவதும் அரசு நிர்வாக மொழியாக ஆங்கிலம் மட்டுமே பின்பற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய ராணுவத்தில் இந்தியர்கள் சேர்க்கப்பட்டனர். பெரும்பாலும் பிராமணரல்லாதவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரே ராணுவத்தில் சேர்ந்தனர். ராணுவத்தில் அனைவரையும் சேர்த்துக்கொண்ட காலனி அரசு

பள்ளிகளில் இந்திய மொழிகளை அனுமதிக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இந்நிலை நீடித்தது.

நவீன கல்விமுறையின் கீழ் ஆங்கிலம் கற்றவர்கள் இப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். ஐரோப்பியர்கள் தவிர இந்திய – ஆங்கிலேயர்கள், பிராமணர்கள் ஆகியோரே அரசு பணிகளில் நிறைந்திருந்தனர். இதேபோல, 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜமீன்தாரி, ராயத்துவாரி முறைகள் அமலாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜமீன்தார்கள், மிராசுதாரர்கள், நிலச்சுவாந்தார்கள் உருவாயினர். இவர்கள் அனைவரும் உயர்சாதியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இது கிராம நில உறவுகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து ரயத்துவாரி முறை மீது ஆய்வு செய்யுமாறு அன்றைய ஆங்கிலேய அதிகாரி பிரான்ஸிஸ் எல்லீஸ் பணிக்கப்பட்டார். இதேபோல் தாமஸ் மன்றோ எனும் அதிகாரியும் ராயத்துவாரி முறை மீது ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தார்.

அவர்கள் அறிக்கைகளில் 'காலம் காலமாக நிலத்துடன் தொடர்பு கொண்டிருந்த மக்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு மேல்தட்டு வகுப்புகளைச் சேர்ந்த ஜமீன்தார்கள், மிராசுதாரர்களிடம் நிலம் அளிக்கப்பட்டதால் வேளாண்மையின் தரமும் விளைச்சலும் குறைந்துவிட்டதாகவும் இதனால் நில வரி வருவாய் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தனர். மேலும், ஏராளமான நிலங்களை தரிசாகப் போட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கோரினர்.

இவ்வாறு காலனிஆட்சியில் நிலங்களில் இருந்து விரட்டப்பட்டு கல்வியும் மறுக்கப்பட்ட நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் குழந்தைகள் பள்ளிகளில் சேர்வதை உயர் வகுப்பார் எதிர்த்து தடுத்தனர். பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படுவதைத் தடுக்கக்கூடாது என்று 1854 இல் நீதிமன்றம்

ஆணையிட்டது. நீதிமன்ற ஆணைகளுக்கும் உயர்வகுப்பார் பணியவில்லை. 1865 இல் இங்கிலாந்தில் உள்ள இந்தியாவுக்கான அமைச்சரே ஆணையிட்டார். அப்போதும் நிலைமையில் மாற்றமில்லை.

இவ்வாறு, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனி ஆட்சியின் கீழ் சமூகம், பொருளாதாரம், அதிகாரம், வேலை வாய்ப்புகள் ஆகிய துறைகளில் ஒருபக்கம் பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்திய நிலையில் சமூகத்தில் பெரும்பான்மையாக இருந்த பிராமணரல்லாதவர்கள், சிறுபான்மை மதத்தினர் மிகுதியாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இக் காலகட்டத்தில் தொடங்கப்பட்ட பள்ளிகள் மூலம் நவீன கல்விகற்ற பிராமணரல்லாத வகுப்பினர் சிறுபான்மை மதத்தினர் மத்தியில் இது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. தங்களுக்கும் அரசுப்பணிகளில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கோரினர்.

## பயிற்சி –2

First Communal Representation Order

During the rule of Justice Party in Chennai Presidency, the demand for communal representation reflected in vigorous manner. The prolonged struggle for communal representation by Justice Party and wide support from the people propelled the central government to make resolution in this regard in 1921. This resolution, later on was called as Communal Representation Decree.

It is the red lettered day in Indian history, lower caste groups, who were suppressed and deprived of Social and Economical condition for many centuries had fullest confidence to lead their life with self-respect and dignity by this decree.

A resolution was submitted by Munusamy the member of legislative assembly in Chennai. The Resolution reads; "Non-Brahmins with minimum educational qualification should be provided with employment opportunity. Non-Brahmins specifically, Christians, Muslims and lower caste groups to be appointed in all government services. For this, a permanent order should be legalized. If salary is

above Rs.100, this order should be implemented for 7years until it reaches 75% of the population". With regard to this resolution, R.K.Shanmugam stated that "If this historical and land mark resolution is implemented, the future generation may really appreciate our truthful efforts towards emancipation". In supporting this view, Dr.C.Natesan voiced that "If fair representation is not provided for our people, we will not pay taxes".

Periyar, EV.Ramaswamy, a staunch supporter of congress party also eulogized the ideas of Justice Party, he expressed the same demand in Congress Party. In 1925, during the Kanchipuram Congress Party Conference, Periyar passed a resolution regarding communal representation in education and employment. Periyar came out of congress party, since his resolution was rejected by the high command. In 1928, during the leadership of R.Muthiah, (Justice Party), Communal representation was passed and implemented in all the government departments.

## விடை

### முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை

சென்னை மாகாண சட்டமன்றத்தில் நீதிக்கட்சி ஆட்சியில் அமர்ந்ததைத் தொடர்ந்து இக் கோரிக்கைகள் சட்டமன்றத்திலும் எதிரொலித்தன. தொடர்ந்து நீதிக்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகள் மட்டுமல்லாமல் இவற்றுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக அரசு அனுமதி அளித்ததன் பேரில் அரசு பணியிடங்களில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு அளித்து 1921 இல் தீர்மானம் நிறைவேறியது. இது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை என்று அழைக்கப்படுகிறது.

இந்திய வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகும். காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வந்த பிரிவினர்கள் தாங்களும் சமூக, பொருளாதார இழிவுகளில் இருந்து விடுதலை பெற்று சுயமரியாதையுடனும் சமத்துவத்துடனும் எதிர்காலத்தில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை அளித்தது.

"எல்லா அரசு பணிகளிலும் பிராமணர் அல்லாதவர்களை அவர்களுக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி இருந்தாலே போதும் என்று கருதி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என அனைவரும் அரசுப்பணிகளில் அமர்த்தப் படவேண்டும். இதற்கான ஒரு நிலையான ஆணை வெளியிட வேண்டும். நூறுரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகமாக இருந்தால் 75% அளவு மக்களை அது அடையும்வரை ஏழாண்டுகாலம் வரை அமலில் இருக்கும் வண்ணமும் இவ்வாணை அமலில் இருக்க வேண்டும்" எனும் தீர்மானத்தினை சட்டசபையின் உறுப்பினரான முனுசாமி கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய சர். ஆர். கே. சண்முகம் "இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நாம் நிறைவேற்றினால் நம் எதிர்கால சந்ததி நம்மையெல்லாம் நமது நாட்டுக்கு உரிமை வாங்கித் தந்தவரென்றே கொண்டாடும்" என்று குறிப்பிட்டார். அத்தீர்மானத்தை வழிமொழிந்த டாக்டர் சி. நடேசனார் 'எங்கள் மக்களுக்கு வேலைகளில் சரியான பிரிதிநிதித்துவம் தரப்படாவிட்டால், நாங்கள் வரி கொடுக்க மாட்டோம்' என்று பேசினார்.

காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக இயங்கி வந்த தந்தை பெரியார், ஜஸ்டிஸ் கட்சியினரின் கருத்துக்களை ஆதரித்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரிக்கையை எழுப்பினார். 1925ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அரசு கல்வி, வேலைவாய்ப்புகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரும் தீர்மானத்தை பெரியார் கொண்டுவந்தார். இதற்கு காங்கிரஸ் தலைமை அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து அவர் காங்கிரஸில் இருந்து வெளியேறினார்.

1928 வாக்கில் இரா. முத்தையா அவர்களின் தலைமையில் நீதிக்கட்சி செயல்பட்டபோது அரசின் எல்லாத்துறைகளிலும், பணிநியமனங்கள்

முறைப்படுத்தப்பட்டு அரசாணையின் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நிரந்தரமாக்கப்பட்டது.

## பயிற்சி –3

First Amendment

In the aftermath of the effective implementation of Indian Constitution, in 1951, Mr. Senbagarajan filed a suit in the High Court; related to the denial of Medical Seats. He also mentioned that, communal representation is the reason for the denial of his seat. The High Court gave its Verdict that Communal representation decree is against the constitution and to be abandoned. In addition to that, Supreme Court also sided with the same Verdict. Reservation Policy on the basis of caste was abandoned due to the Verdict.

State wide protests erupted in Tamilnadu against the Verdict. E. V. Ramasamy, demanded for an amendment in the constitution. It is due to efforts of Periyar, Tamilnadu congress committee President Kamaraj, Prime Minister Jawarharlal Nehru and Ambedkar, an amendment was made related with the extension of Reservation Policy. This was the first Amendment in the Indian Constitution. Due to this, backward and other communities retained the opportunity of reservation.

According to articles 15 and 16 of Indian Constitution, "Socially and economically backward people can be provided with special privileges". This provision made Nehru to come with First Amendment in the Indian Constitution.

Accordingly, sub-sections 15 (4) and 16 (4) were included in the constitution.After the Amendment, from 1951 onwards Backward Communities receive 25% and Lower Caste 16% respectively due to reservation policy.

### விடை

**முதல் சட்டத்திருத்தம்**

இந்தியா சுதந்திரம் அடைந்து இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் அதில் குறிப்பிடப்பட்டிருந்த சட்டப்பிரிவுகளைக் காட்டி, தமிழகத்தில் வகுப்புவாரி

ஆணை பின்பற்றப்படுவதால், மருத்துவக் கல்லூரியில் தனக்கு இடம் கிடைக்கவில்லை எனக்கூறி செண்பகம் துரைராஜன் என்பவர் 1951ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்தார்.

இவ்வழக்கினை விசாரித்து தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம் தமிழகத்தில் பின்பற்றப்படும் வகுப்புவாரி ஆணையானது அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றமும் அத் தீர்ப்பினை உறுதி செய்தது. எனவே தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த வகுப்புவாரி (இடஒதுக்கீடு) முறை ரத்து செய்யப்பட்டது.

வகுப்புவாரிமுறை ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தமிழகத்தில் போராட்டங்கள் எழுந்தன. எனவே, தந்தை பெரியார் உடனடியாக அரசமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். தமிழகத்தில் தந்தை பெரியார், தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த கு. காமராஜ், பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திய அரசமைப்புச் சட்ட சிற்பி டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் முயற்சியால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் திருத்தம் ஆகும். இதன்மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மீண்டும் இடஒதுக்கீடு பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.

அரசமைப்புச் சட்டம், பிரிவு 15 மற்றும் 16 ஆகிய பிரிவுகள் "சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின் தங்கியவர்களுக்குச் சில சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகள் வழங்கலாம்" என அரசுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் பிரதமர் நேரு முதலாவது சட்டத் திருத்தத்தினை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார். அத் திருத்தத்தின்படி அரசமைப்புச் சட்ட பிரிவுகள் 15 (4) & 16(4) என்னும் உட்பிரிவுகள் இணைக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டத்

திருத்தத்திற்குப் பின் தமிழ்நாட்டில் 1951 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோருக்கு 25%, தாழ்த்தப்பட்டோருக்கு 16% என இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தபட்டது.

## பயிற்சி –4

Expansion of Reservation

Under the Chief Ministership of M.Karunanidhi, a commission was constituted under the Chairmanship of Sattanathan to take into account on the welfare of backward community. It is on the basis of the recommendations of Sattanathan commission, backward community got 31% and SC/ST received 18% as reservation in 1971.

In 1979, Social Welfare Department of Tamilnadu Government issued an order (MS No.1156, Dated 02.02.1979). According to this order, annual family income of backward community was fixed as Rs.9,000/-. Later on, that order was repealed. A new order was issued, in which reservation for backward community was increased from 31% to 50% and for SC/ST it is 18%. To sum-up, 68% reservation came into effect in Tamilnadu.

In continuum with this, in 1989, another suit filed in Supreme Court with regard to allotment of separate reservation for Scheduled tribe (ST) community. In this case, Supreme Court of India delivered the verdict by which, backward community, most backward, scheduled caste and scheduled tribes received 30%, 20%, 18% and 1% respectively. The entire reservation was changed combinedly and 69% came into effect in Tamilnadu.

### விடை

### இட ஒதுக்கீடு விரிவாக்கம்

மு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்து ஆராய்ந்திட சட்டநாதன் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப் பட்டது. அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டு

பிற்படுத்தப்பட்டோருக்கு 31%, தாழ்த்தப்பட்டோருக்கு 18% என இட ஒதுக்கீட்டு வரம்பு மாற்றியமைக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில அரசின் சமூக நலத்துறை அரசாணை (G.O. Ms.No. 1156, 02.02.1979) ஒன்றினைப் பிறப்பித்தது. அவ்வாணையின்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின், குடும்ப ஆண்டு வருமானம் ₹ 9000 நிர்ணயிக்கப்பட்டது. பின் அந்த அரசாணை திரும்பப் பெறப்பட்டு புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்புதிய ஆணையின் படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டு வரம்பு 31% லிருந்து 50% ஆக உயர்த்தப்பட்டது. எனவே, அன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50%, தாழ்த்தப்பட்டவர்கள் & பழங்குடியினருக்கு 18% என்று மொத்த இடஒதுக்கீடு 68% நடைமுறைக்கு வந்தது.

1989 ஆம்ஆண்டு பழங்குடியினருக்குத் தனியிட ஒதுக்கீடு கோரி தொடரப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30%, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20%, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18%, பழங்குடியினருக்கு 1% என இடஒதுக்கீட்டு வரம்புகள் மாற்றியமைக்கப்பட்டு இடஒதுக்கீடு 69% என நடைமுறைக்கு வந்தது.

## பயிற்சி –5

Reservation in Central Government: Mandal Commission

The central government under the Prime Ministership of V.P.Singh consented with the recommendations of Mandal Commission. The Government issued an order which confirmed 27% reservation for Backward Community in Central Government Services.

In opposing this order, Indira Sawhney, filed a suit stating the order breaches the constitutional provisions. She also added that reservation policy overrides the principle “All are equal before Law”. Supreme Court delivered a clear verdict that 27%

for backward community in Central government services can be legalized. Further it states, “the reservation should not reach beyond 50%”.

The Supreme court of India fixed 50% as ceiling for reservation policy, whereas it was not mentioned in the constitution. Moreover, the highest ceiling of 50% can also be discharged.

Thus the Judgment says

“Although 50% is the ceiling fixed for the reservation in central government services, it may be changed, taking into account the diversified communities and abnormal situations of this nation”.

“People who are distant, those who could not mingle with the mainstream society or without opportunity, unique in culture may be exempted from this ceiling fixed by the Supreme Court. 50% of the ceiling may be exempted, said the same judges who delivered the famous verdict in this sensitive case.

That said, a member of consumer trust, K.N. Vijayan from Tamilnadu filed a suit stating, 69% reservation in Tamilnadu is given against the Supreme Court Verdict. Supreme Court, however, in its Verdict mentioned that Engineering and Medical Colleges should not be provided reservation more than 50%. It also issued Interim prohibition for the reservation.

## விடை

### மத்திய அரசின் இட ஒதுக்கீடு: மண்டல் ஆணையம்

வி.பி. சிங் ஆட்சியின் போது மண்டல்ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். அதன் அடிப்படையில் மத்தியஅரசின் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதனை எதிர்த்து, இந்திரா சகானி இடஒதுக்கீட்டு முறையானது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும், அரசமைப்புச் சட்ட விதிகளை மீறும் வகையில் அமைந்துள்ளது. எனவே, இடஒதுக்கீட்டு முறையினை ரத்து செய்திட வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தார்.

அவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் வி.பி.சிங் தலைமையிலான அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கிய 27 சதவீதம் இடஒதுக்கீடு செல்லும் என்று தீர்ப்பளித்தது. மேலும், இடஒதுக்கீட்டின் அளவு 50 சதவீதத்திற்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும், தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது. அரசியல் சட்டத்தில் உச்ச வரம்பு குறித்துக் குறிப்பிடப்படாத நிலையில் உச்சநீதிமன்றம் 50 சதவீதம் என்று உச்சவரம்பினை நிர்ணயித்தது. எனினும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் ஒரு பகுதியில் உச்சவரம்பிற்கும் விலக்கு உண்டு என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"உச்சநீதிமன்றத்தில் மண்டல் ஆணைய உத்தரவு பற்றிய தீர்ப்பில்" 50% என்பது விதியாக இருந்த போதிலும் கூட பலதரப்பட்ட மக்கள் பல்வேறு வகையில் பரந்துப்பட்ட இந்நாட்டில் வேரூன்றி உள்ள சில அசாதாரணமான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது நமது வாதமல்ல. நாட்டின் தொலை தூரத்தில் உள்ள பகுதிகளிலோ அல்லது தள்ளியிருக்கும் பரப்புகளிலோ வாழ்வதன் மூலம் தேசிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வாய்ப்பற்ற மக்களுக்கு அவர்களுக்கே உரியதனித்தன்மை காரணமாக அவர்களுக்கு வேறுவகையில், விதிகளிலிருந்து விலக்கு என்பது மிகவும் அவசியமாகும்". 50% இட ஒதுக்கீட்டிற்கு விலக்கு உண்டு எனத் தீர்ப்பளித்த நீதிபதிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர், என்பதை மேற்கண்டத் தீர்ப்பின் ஒருபகுதி உறுதி செய்துள்ளது. எனினும் தமிழகத்தில் நடைமுறையிலிருந்த 69% இடஒதுக்கீடு, உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என்றும் அதனை ரத்து செய்திட வேண்டுமென்றும் நுகர்வோர் அமைப்பின் அறக்கட்டளை உறுப்பினரான கே.என்.விஜயன் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் 50%மேல் இடஒதுக்கீடு அளிக்க உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்தது.

## பயிற்சி –6

It was similar with the untoward happenings during 1951, which prompted the state government under J.Jayalalitha who passed a bill in the state assembly by citing the reference from directive principles of state policy (Article 31(c)).

The bill on 30.12.1993 was given consent by the President of India on 19.07.1994 by which 69% reservation received fullest legal protection. To avert further filing of suit against Tamilnadu Government, it endeavored to incorporate reservation policy in IXth schedule of the Indian Constitution.

Parliament passed the 76th Amendment in which reservation policy of Tamilnadu Government was incorporated in IXth schedule of Indian Constitution. Further it came into retrospective effect from November 16, 1992.

Reservation for different communities is a temporary effort to get place in power sector. To attain social change and social ideals, caste hierarchy has to be demolished and eternal equality to be established. One among the means to attain permanent equality is "Inter-Caste Marriages". Marriages happening within caste may further strengthen caste system and serve as an obstacle for the equal society. Casteless marriages and lateral cum ideal thinking are the best contrivances for making radical social change.

## விடை

1951 ஆம் ஆண்டு எழுந்ததைப் போன்ற சட்ட நெருக்கடிகள் எழுந்ததால் அரசியல் சட்டத்தில் உள்ள மாநில அரசுகளுக்கான அதிகார வரம்பு என்னும் வாய்ப்பினைப் பயன்படுத்தி அப்போதைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அரசியல் சட்ட பிரிவு 31(C) –யினைப் பயன்படுத்தித் தனிச்சட்ட மசோதா ஒன்றினை 30.12.1993 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றியது. அதன்பின் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட 69% இடஒதுக்கீடு குறித்த தமிழ்நாடு அரசின் தனிச்சட்டமசோதாவிற்கு 19.07.1994 அன்று அன்றைய குடியரசுத் தலைவர் ஒப்புதல்

அளித்ததால் தமிழகத்தில் பின்பற்றப்படும் 69% இடஒதுக்கீடு உரியசட்டப் பாதுகாப்பினைப் பெற்றுவிட்டது.

தமிழக அரசின் இச்சட்டத்தினை எதிர்த்தும் வழக்குத்தொடரும் சூழலைத் தவிர்க்க இந்திய அரசமைப்புச் சட்டத்தின் IX ஆவது அட்டவணையில் சேர்க்க தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்தது. நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பெற்ற 76-வது அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசின் இடஒதுக்கீட்டுச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் IX ஆவது அட்டவணையில் இணைக்கப்பெற்றது. அத்துடன், 1992 நவம்பர் 16ஆம்தேதி முதல் இச்சட்டம் முன்தேதியிட்டு நடைமுறைக்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இடஒதுக்கீட்டு முறை என்பது அரசு அதிகாரங்களைப் பெறுவதற்கான தற்காலிக முயற்சியே ஆகும். சமூக மாற்றம் நிகழ்ந்திடவும், உண்மையான சமூக நன்மதிப்பு உருவாகிடவும், சாதிய அடுக்கு முறைகள் ஒழிந்து சமத்துவம் பிறந்திட வேண்டும். அத்தகைய சமத்துவம் பிறப்பதற்கான வழிமுறைகளுள் ஒன்று 'சாதிக்கலப்புத் திருமணங்களாகும்'. சாதிகளுக்குள்ளேயே நடைபெறும் திருமணங்களே சாதிக்கட்டமைப்பை வலிமைப்படுத்தி வருவதுடன் சமத்துவம் உருவாவதற்கானத் தடைக்கல்லாகவும் இருக்கின்றன. எனவே "சாதிமறுப்புத் திருமணங்களும்" முற்போக்கான உயர் எண்ணங்களுமே உண்மையான சமூகமாற்றத்தை முன்னெடுக்கும் கருவிகளாகும்.

## பயிற்சி –7

Backward classes Commission

According to article 340 of Indian Constitution, President of India can appoint backward classes commission to identify socially and educationally backward groups and also to submit recommendation related to their standards and states.

Hitherto, the Indian government has constituted the backward classes commission.

Kaka Kalelkar Commission

Kaka Kalelkar Commission was the first one constituted in 29.01.1953. There were 11 members including the Chairman Jawaharlal Nehru who tabled the report submitted by this commission in the Parliament. But the report was not adopted.

Mandal Commission

Central Government under the Prime Minister-ship of Morarji Desai constituted Subindeswari Prasad Mandal Commission on 20.12.1978. This is the second such Commission established for the backward community. S.S.Gill was appointed as the Secretary of this Commission.

It is in order to identify the condition of backward community; a group was constituted under the leadership of B.B.Mandal in 1978. The group travelled all over the nation. This Commission on the basis of 11 basic reasons identified 3743 castes which comes under backward community. Castes were identified on the ground of peoples' status in education and society.

Mandal has written in the preface of the report which reads, "Madras is a pioneer state in communal representation. It has given representation for backward classes". We may infer that Tamilnadu is the birth place for Social Justice and serve as a great pioneer for all other states.

52% of the backward communities in India has to be provided with 27% reservation, remarked Mandal Report. This reservation was implemented by V.P.Singh Government on 13.08.1990 in all Government (Central) Services. Due to this order, backward communities who are backward in social and educational sectors entered into central services.

## விடை

### பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திய அரசியல் சட்டப் பிரிவு 340 இன்படி "சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்" எவை என அடையாளம் கண்டிடவும் மற்றும் அவர்களின் நிலை குறித்து ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகளை வழங்கவும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைத்திடவும் குடியரசுத்தலைவருக்கு

அதிகாரம் அளிக்கிறது. அதனடிப்படையில் இந்திய அரசு பின்வரும் இரண்டு பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களை இதுவரை அமைத்துள்ளது.

## திரு. காகா கலேல்கர் ஆணையம்

காகா கலேல்கர் ஆணையம் என்றழைக்கப்படுகிற முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 29.01.1953 அன்று அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தில் காகா கலேல்கர் உட்பட 11 பேர் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவின் அறிக்கையினை அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

## மண்டல் ஆணையம்

பிரதமர் மொரார்ஜிதேசாய் தலைமையிலான மத்திய அரசு பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் கமிஷன் என்றழைக்கப்படுகிற மண்டல் ஆணையத்தினை 1979 ஆம் ஆண்டு அமைத்தது. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையமாகும். இவ்வாணையத்தின் செயலராக எஸ்.எஸ்.கில் செயல்பட்டார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறித்து ஆய்வு செய்திட 1979 ஆம் ஆண்டு பி.பி. மண்டல் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பெற்றது. அக்குழு இந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இவ்வாணையம் 11 காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் 3743 சாதிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாக உள்ளன என அடையாளம் கண்டது.

மண்டல் தன் அறிக்கையின் முகப்புரையில் "வகுப்பு வாரி பிரதிநிதித் துவத்திற்கு மெட்ராஸ் முன்னோடியாக இருப்பதுடன் அம்மாநிலமே பிற்படுத்தப்பட்ட வகுப்பார்களுக்கு பிரதிநிதித் துவத்தை வழங்கியுள்ளது" என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் தமிழ்நாடு சமூகநீதியின் பிறப்பிடமாகவும் முகவரி ஆகவும் இருப்பதை அறியலாம்.

மக்கள்தொகையில் 52% உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பார்க்கு மத்தியஅரசுப் பணிகளில் 27% வழங்கிட மண்டல் ஆணையம் பரிந்துரைத்தது. இவ்வாணையத்தின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 13.08.1990 ஆம் ஆண்டு பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு மத்திய அரசுப் பணிகளில் மட்டும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு 27% இடஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்தது. இவ்வாணை 13.08.90 ஆம் தேதி முதல் அமல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசுப் பணிகளில் சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மத்திய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## பயிற்சி –8

Promoting Social Justice

In order to achieve social justice, it is often suggested that reservation policy is an important tool. We must realize that reservation in education and in jobs is one of the methods to achieve 'Social Justice' and not the only method. Social Justice must necessarily premise upon the idea of egalitarian philosophy that no one is inferior or superior to anyone by birth.

Those who have been benefitted extensively by the philosophy of ascriptive status (status based on birth) must realize that such status cannot be part of a modern world; to be a modern person what is more important is to have the consciousness of being equal to everybody around us. Unfortunately 'modern' is being equated with latest electronic items and luxury items we possess. Having latest gadgets will not make us modern. For India to become a modern nation, this radical transformation is required more than anything. That is why the social justice is organically embedded in the idea of modern India.

## விடை

**சமூக நீதியை மேம்படுத்துதல்**

சமூக நீதியை ஏற்படுத்துவதில் இட ஒதுக்கீடு முக்கியமான கருவியாக உள்ளது, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டு முறை சமூக நீதியை நிலைநாட்டுகிறது என்பதை உணரவேண்டும். பிறப்பின் அடிப்படையில் யாவரும் யாருக்கும் உயர்ந்தவர் மற்றும் தாழ்ந்தவரும் இல்லை என்பன சமதர்ம தத்துவத்தின் அடிப்படையாகவும் சமூக நீதிக்கு இன்றியமையாத ஒன்றாகவும் கருதப்படுகின்றன. தன் பிறப்பின் அடிப்படையில் பயன்பெறுபவர்கள் அது இந்த நவீன உலகத்திற்கு பொருந்தாது என உணரவேண்டும். சமூகத்தில் உள்ள அனைவருடனும் உணர்வுபூர்வமாகவும், சமத்துவத்துடன் இருப்பதே நவீன மனிதனாக இருப்பதற்கு அவசியமாகும். சமீப காலத்தில் சொத்துக்கள் மற்றும் ஆடம்பர பொருள்களை கொண்டும் ஒருவரை மதிப்பிடும் போக்கு அதிகரித்து வருவது வருத்தம் அளிக்கக்கூடிய ஒன்றாகும். சமீபகால நோக்கங்கள் நம்மை நவீனமாக்குகின்றன. நவீன இந்தியாவை உருவாக்க அனைத்து துறைகளிலும் முழுமையான மாற்றம் தேவை. ஆகையால்தான் நவீன இந்தியா எனும் கருத்தாக்கம் சமூகநீதியை இயற்கையாகவே உள்ளடக்கியதாக இருக்கிறது.

## பயிற்சி –9

Madras Presidency politics in the early part of 20th century was dominated by the "Brahmin – non – Brahmin conflicts". Scholars and political thinkers believed that understanding the conflicts between these two groups, (the Brahmins and non – Brahmins), is necessary to understand the South Indian Politics and society.

Madras Presidency

Simultaneously a few members of Non-Brahmin caste groups sought employment in industries, commercial enterprises etc., Significant but a portion of non-Brahmin caste groups migrated from rural areas to urban pockets of the Presidency and wanted to ascertain their identity as 'Dravidian' and 'Tamils' and gradually challenged the monopoly of powers and privileges enjoyed by the Brahmins in politics, administration and society.

The word 'Dravidian' was used by scholars and non – Tamils to identify non-Aryan Tamil speaking people. At the same time Brahmins were identified as "Aryans" and the custodians of Sanskrit civilisation where as non-Brahmins were considered as "Dravidians" and the custodians of Tamil language, culture and civilisation.

## விடை

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சென்னை மாகாணத்தின் அரசியலானது பிராமணர் –பிராமணரல்லாதோரின் மோதல் தொடர்பான ஆதிக்கம் கொண்டதாக இருந்தது. அறிஞர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் இந்த பிராமணர் – பிராமணரல்லாதோர் என்ற இரு பிரிவினரிடையே உள்ள மோதல்கள் பற்றி புரிந்து கொள்வது என்பதுதான் தென்னிந்தியாவின் அரசியல் மற்றும் சமூக வாழ்வை புரிந்து கொள்வதற்கு அவசியமானது என்று நம்பினார்கள்.

## சென்னை மாகாணம்

அதே நேரத்தில், சில பிராமணரல்லாத சாதி குழுக்களின் உறுப்பினர்கள் தொழிற்துறை வாணிபம் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை கோரினர். கணிசமான அளவிற்கு, பிராமணரல்லாத சாதிபிரிவினர்கள் கிராமப் புறங்களில் இருந்து மாகாணத்தின் நகர்புறத்திற்கு புலம்பெயர்ந்தனர்,

அவர்கள் தங்களின் அடையாளத்தை உறுதி செய்ய விரும்பினார்கள் மற்றும் படிப்படியாக சமூகத்தில், அரசியலில், நிர்வாகத்தில் பிராமணர்கள் அனுபவித்த ஏகபோக அதிகாரம் மற்றும் தனி உரிமை சலுகைகளை சவாலாக நின்று எதிர்த்தனர்.

"திராவிடன்" என்ற வார்த்தை, அறிஞர்கள் மற்றும் தமிழரல்லாதோர்/ஆரியரல்லாத தமிழ் பேசுவோரை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் பிராமணர்கள் "ஆரியர்கள்" எனவும் வடமொழி நாகரிகத்தின் பாதுகாவலர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் பிராமணரல்லாதோர் "திராவிடர்கள்"எனவும்

அவர்கள் தமிழ்மொழி, பண்பாடு மற்றும் நாகரீகத்தின் பாதுகாவலர் எனவும் கருதப்பட்டனர்.

## பயிற்சி –10

Emergence of Dravidian Movement

In order to protect and promote the Tamil identity, culture, socio-political and economic interest of non-Brahmins, a movement called 'Dravidian Movement' was started in Madras Presidency by a group of non – Brahmins.

Dravidian and Non-Brahmin Identity

In 1801 Madras Presidency was formed by the colonial regime as a multilingual province (Tamils, Telegus, Malayalees, Kannadigas and Tulus). India's diversity could be noticed in the political developments of the Madras Presidency. In Bengal and in the rest of North India a Sanskrit and Vedic centered Indian culture was projected, besides an Indo-Aryan or Indo-German group of languages were acknowledged. Non-Vedic, Non-Sanskrit cultures were not recognized. The deciphering of Brahmi script in 1837 by James Principe and researches on south Indian languages (Ellis in 1816 and Caldwell in 1856) came to establish that Indian culture was not homogeneous; and there existed a (Non-Aryans) group of languages and countries.

Buddhist and Dravidian traditions also existed in India. In the south, especially in the multi-lingual Madras Presidency, theories on Dravidian group of languages and Dravidian cultural heritage led to assertion of Dravidian identity among the Non-Brahmin.

Two factors (1) Brahmins claiming superiority over Non-Brahmins and (2) Brahmins monopolizing educational and employment opportunities transformed the Dravidian identity into Non-Brahmin identity. (In Maharashtra too Mahatma Jyotiba Rao Phule launched a Non-Brahmin movement on similar lines). in the middle of 19th century Dravidian also indicated the Non-Brahmins in south India.

The Non-Brahmins of the Madras Presidency had a grievance that the emerging nationalist leaders paid no heed to non-brahmin issues. In 1852 Gajulu Lakshmi Narasu Chetty expressed this grievance, seceded from British Indian Association and floated his own organization named Madras Native Association. In the post-mutiny period, the non-brahmin leaders undertook social reforms rather than political

reforms. After the introduction of Minto-Morley reforms in 1909 the non-brahmin leaders of Madras Presidency began to protest the inadequate representations to them in education and employment.

Sir Alexander Gordon Cardew, a member of Governor's Executive Council submitted statistical details (1913) to prove that the Brahmins who formed only three percent of the population cornered most of the opportunities.

## விடை

## திராவிட இயக்கத்தின் தோற்றம்

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோரின் தமிழ் அடையாளம், சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாப்பிற்காக ஓர் பிராமணரல்லாத குழுவால் துவங்கப்பட்டதே "திராவிட இயக்கமாகும்."

## திராவிடர்கள் மற்றும் பிராமணரல்லாதோர்

1801 ஆம் ஆண்டு பன்மொழி கொண்ட சென்னை மாகாணமானது (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் துலு) காலனிய ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இந்தியாவினுடைய பன்மைத் தன்மையை சென்னை மாகாணத்தின் அரசியல் வளர்ச்சியில் காணமுடியும். வங்காளத்திலும், வடஇந்தியாவின் பிற பகுகளிலும் சமஸ்கிருதம் மற்றும் வேதங்களை மையப்படுத்திய இந்திய பண்பாடு முன் எடுக்கப்பட்டது. இவற்றோடு இந்தோ–ஆரிய (அ) இந்தோ– ஜெர்மன் மொழிக் குடும்பம் அங்கீகரிக்கப்பட்டது. வேதமல்லாத, சமஸ்கிருதம் அல்லாத பண்பாடு அங்கீகரிக்கப்படவில்லை.

1837 ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்சிபே மற்றும் இதர ஆய்வாளர்களால் பிராமண மூல ஆவணங்கள் மற்றும் தென்னிந்திய மொழிகளின் மீதான ஆய்வுகள் (எல்ஸிஸ் 1816 மற்றும் கால்டுவெல்– 1856) போன்றவைகள் இந்திய கலாச்சாரம் என்பது ஒரே

மாதிரியானத் தன்மையைக் கொண்டது அல்ல என்றும், புத்த, திராவிட மரபுகள் கூட இந்தியாவில் இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது. தென்னிந்தியாவில், குறிப்பாக, பன்மொழி கொண்ட சென்னை மாகாணத்தில், பிராமணரல்லாதோர் இடத்தில், திராவிட மொழிக்குழுக்கள் மற்றும் திராவிட பண்பாட்டுத் தொன்மை ஆகியவை, திராவிட அடையாள எழுச்சிக்கு இட்டு சென்றது.

(1) பிராமணர்கள், பிராமணரல்லாதோர் மீது தங்களது மேன்மையை கோருவது மற்றும் (2) பிராமணர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை ஏகபோகமாக்கியது ஆகிய இரண்டு திராவிட அடையாளத்தை பிராமணரல்லாதோர் அடையாளமாக மாற்றியமைத்தது. மகாராஷ்டிராவில் கூட மகாத்மா ஜோதிபா புலே இதே போன்று ஓர் பிராமணரல்லாதோர் இயக்கத்தைத் துவக்கினார் இவ்வாறு திராவிடம் என்பது தென்னிந்தியாவில் பிராமணரல்லாதோர் என்பதைக் குறிப்பதாயிற்று.

சென்னை மாகாண பிராமணரல்லாதோரின் பிரச்சனையை புதியதாக தேசியத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்பதாகக் குறைபாடு இருந்தது. 1852 ஆம் ஆண்டு கஜீலு லட்சுமி நரசு செட்டி என்பவர் இதனை வெளிப்படுத்தி, ஆங்கிலேய இந்திய கழகத்திலிருந்து வெளியேறி, சென்னை வாழ் மக்கள் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பை தொடங்கினார். சிப்பாய்க் கலகத்திற்கு பிந்தைய காலங்களில் பிராமணரல்லாத தலைவர்கள் அரசியல் சீர்திருத்தங்களைக் காட்டிலும் சமூக சீர்திருத்தத்தின் மீது கவனம் செலுத்தினார்.1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணத்தைச் சார்ந்த பிராமணரல்லாதோருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று எதிர்ப்பு காட்ட துவங்கினர்.

1913 ஆம் ஆண்டு ஆளுனரின் செயற்குழு உறுப்பினர், திரு. சர். அலெக்சாண்டர் ஜோர்டன் கார்டிவ் என்பவர் அளித்த புள்ளியியல் விவரமானது, மக்கள் தொகையில்

**மூன்று சதவீதம் மட்டும் அங்கம் வகிக்கும் பிராமணர்கள் அனைத்து வாய்ப்புகளையும் எடுத்துக் கொண்டார்கள் என்பதை நிரூபித்தார்.**

## பயிற்சி –11

Justice Party

The major political organization of that time, Indian National Congress was dominated by Brahmins had refused to consider the demands of non-brahmin members. Thus the non-brahmin leaders of Madras Presidency began to think of floating a non-brahmin political organization. The prospects of political reforms after the First World War, and the possibilities of representing institutions stimulated their move.

In 1916 Dr.T.M. Nair, Pitti Theagarayar and Dr.C. Natesan founded the South Indian Liberal Federation to promote and safeguard the -socio-economic political interests of the -non-brahmin. This South Indian Liberal Federation (SILF) came to be popularly known as the "Justice Party" named after the English journal Justice. Through their relentless efforts they secured reservation of seats for the non-brahmin in the elections to the legislative council. Under the 1919 Act

The main objectives of the Justice Party (JP)

To create and promote the Educational, Social, Economic, Political and material progress of all communities other than Brahmins of South India.

To work for Non-Brahmins upliftment through Constitutional government.

To make the government truly a representative government.

To create public opinion infavour of Non-Brahmins demand.

**விடை**

**நீதிக் கட்சி**

அக்காலத்தில் இருந்த முதன்மையான அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரசானது பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே பிராமணரல்லாத உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. எனவே சென்னை மாகாணத்தில் உள்ள பிராமணர் அல்லாத தலைவர்கள் பிராமணரல்லாதோர் அரசியல் அமைப்பு ஒன்றினை துவங்க நினைத்தனர். முதலாவது உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவனங்களில் பிரதிநிதியாகும் வாய்ப்பு போன்றவை இவர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தன.

1916 ஆம் ஆண்டு டாக்டர். டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் மற்றும் டாக்டர். சி. நடேசனார் போன்றோர்கள் பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பை நிறுவினர். இவ்வாறு உருவான பின்னர் தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு (SILF) புகழ் பெற்ற நீதிக்கட்சியானது. "நீதிக்கட்சி" என்ற பெயர் ஆங்கில இதழான "நீதி" என்பதன் அடிப்படையில் பெயரிடப்பட்டது. இவர்களின் ஓயாத முயற்சியால் பிராமணரல்லாதோருக்கு மாகாண சட்டமன்ற தேர்தலில் இடஒதுக்கீடு பெற்றுத்தந்தனர்.

## நீதிக் கட்சியின் முக்கிய நோக்கங்கள்

தென்னிந்தியாவின் அனைத்து பிராமணரல்லாதோரின் கல்வி, சமூக, பொருளாதார மற்றும் செல்வ மேம்பாட்டினை உருவாக்கி முன்னேற்றுதல்.

அரசமைப்பிலான அரசாங்கத்தைக் கொண்டு பிராமணரல்லாதோரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல்.

அரசமைப்பிலான உண்மையான பிரதிநிதித்துவ அரசாங்கமாக ஆக்குதல்

பிராமணரல்லாதோரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுக்கருத்தை உருவாக்குதல்.

## பயிற்சி –12

Montagu Chelmsford reforms 1919 introduced dyarchy in the presidencies by which a few departments were earmarked for Indian ministers chosen from the elected members. In the first elections under dyarchy in 1920, the Indian National Congress as a part of the Non-Co-operation Movement boycotted the elections, but many congressmen contested the elections under different banners. The Justice Party won majority of the seats and A.Subbarayalu became the First Chief Minister and after his death, Raja of Panagal became the Second Chief Minister of Madras in 1921.

Contributions of Justice Party

In spite of the fluctuating fortunes in the subsequent elections, the Justice party continued to hold power from 1921 to 1937. They introduced a number of reforms. Through communal Government Order they ensured adequate number of opportunities to every category of non-brahmin communities. They removed discrimination against Sudras and Panchamas in public roads, transports, restaurants and public wells. They regulated the temple affairs through the newly constituted Hindu Religious Endowment Board, earmarked plots of land for the Panchamas (Panchami Land) introduced new township and industrial estates. Special efforts were taken to provide education for the children of depressed classess. For the first time they experimented with “Noon Meal Scheme” in a few schools. Knowledge of Sanskrit as the basic eligibility for medical education was removed which facilitated non-brahmin students gaining entry into medical education.

On an initiative from Dr. Muthulakshmi and others, Devadasi system was abolished in Tami nadu and women were enfranchised. Co-operative societies were promoted. Mirasdari system was abolished, and a number of irrigation schemes were introduced in 1923. Annamalai University (1929) and Andhra University (1926) were founded during their regime. It was the Justic Party which provided the most successful government under the Dyarchy though they were assigned only a few departments.

## விடை

1919 ஆம் ஆண்டு மாண்டேகு –செம்ஸ்போஃர்டு சீர்திருத்தமானது மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்ததன் மூலம் சில துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அமைச்சருக்கு என ஒதுக்கப்பட்டது. இரட்டை ஆட்சியின் கீழ் 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஒத்துழையாமையின் ஒரு பகுதியாக தேர்தலை புறக்கணித்தது. ஆனால் பல்வேறு அடையாளங்களில் காங்கிரசைச் சேர்ந்த பலர் தேர்தலில் போட்டியிட்டனர்.

நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாகாணத்திற்கு ஏ. சுப்பராயலு முதலமைச்சரானார், அவரின் இறப்பிற்கு பிறகு பனகல் ராஜா 1921–ல் முதலமைச்சரானார்.

## நீதிக் கட்சியின் பங்களிப்பு

அடுத்தடுத்த தேர்தல்களில் நல்வாய்ப்புகளில் பல்வேறு ஏற்ற இறக்கம் இருந்த போதிலும் நீதிக் கட்சி 1921 முதல் 1937 வரை தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்தது. அவர்கள் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்கள். வகுப்புவாரி அரசாணை மூலம் ஒவ்வொரு பிராமணரல்லாத பிரிவினருக்கும் அனைத்து துறைகளிலும் போதுமான வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்கள் சூத்திரர்களுக்கு மற்றும் பஞ்சமர்களுக்கு எதிராக இருந்த பொது வழி, போக்குவரத்து, உணவு விடுதிகள் மற்றும் பொது கிணறுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இருந்த பாகுபாடுகளை நீக்கினர். இந்து சமய அறநிலைய வாரியத்தை அமைத்ததின் மூலம் ஆலய விவகாரங்களை ஒழுங்குபடுத்தினர். பஞ்சமர்களுக்கு
நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தனர் (பஞ்சமி நிலம்) புதிய நகரங்களையும்,

தொழிற்பேட்டைகளையும் அறிமுகப்படுத்தினர். ஒடுக்கப்பட்டோரின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்கு சிறப்பு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனால் சில பள்ளிகளில் "மதிய உணவு திட்டத்தை" பரிசோதனை முறையில் கொண்டுவந்தனர். மருத்துவ கல்விக்கு சமஸ்கிருத அறிவு அடிப்படைத் தகுதி என்பது நீக்கப்பட்டு பிராமணரல்லாத மாணவர்கள் மருத்துவக் கல்வியில் நுழைவதற்கு வழி செய்யப்பட்டது. டாக்டர். முத்துலட்சுமி அவர்களின் முயற்சியால் இந்தியாவில் முதல் முறையாக தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதுடன், பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.

கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டன. மிராசுதார் முறை ஒழிக்கப்பட்டதுடன் மற்றும் 1923 ஆம் ஆண்டு நீர்ப் பாசனத்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் இந்த ஆட்சிக்காலத்தில் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1929) மற்றும் ஆந்திரா பல்கலைக் கழகம் (1926) ஆகியவை உருவாக்கப்பட்டன. சில துறைகள் ஒதுக்கப்பட்டாலும் நீதிக் கட்சி மட்டுமே மிகவும் சிறப்பான அரசாங்கத்தை கொடுத்தது.

## பயிற்சி –13

Self Respect Movement

In 1929 the first Self-Respect Conference was held in Chengalpattu. In the crucial elections of 1937 the Congress party, led by C. Rajagopalachari, won majority of seats. The Congress party victory was largely because of the decline of Justice Party. The Congress formed the government and Rajaji became the premier of the Madras province.

Soon after assuming power the Congress government introduced Hindi as a compulsory subject in the schools. Periyar launched anti-Hindi agitation. A large number of students have participated in the agitations organized by Periyar.

During this period, the Communist Party (formally launched in 1925) became active in campaigning for socialist programme and organized labour movements. M.Singaravelu, and his associates were impressed by the social reform programmes of the Self Respect Movement, which in turn extended support to the economic

programme of the communists, and these two movements agreed to work on a common programme (Erode Plan).

Objectives of Self-Respect League

Reforming Dravidian society to make it truly rational.

To teach the truth of ancient Tamil civilization to Dravidians.

Save the Dravidian society from the domination of Aryan culture.

Reforming the Hinduism by eliminating Brahmin influence and superstitious practices.

He wanted to do away with indignities on of Dravidians by creating social awareness among the non-Brahmins in general and the youth In particulars. He advocated Self – Respect marriages, a marriage which was conducted in the absence of Brahmin priesthood, discouraged the people from performing irrational religious ceremonies and not to employ the services of the Brahmins in any of the social events.

Decline of Justice Party

By 1929, the Self-Respect Movement had become a formidable movement in the Madras Presidency. In 1930's the Justice Party began to face decline in the political sphere of the province. There were three major factors responsible for this decline. Firstly, the party lost its support among the Depressed sections of the society and minorities. Secondly the Self-Respect Movement, under Periyar had become more radical. Finally the elitist and pro-British outlook of Justice Party had also contributed significantly for its decline.

**விடை**

**சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள்**

திராவிட சமுதாயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்.

திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டினை அவர்களுக்குக் கற்பித்தல்.

ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட சமூகத்தைக் காப்பாற்றுதல்

மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

பெரியார் பொதுவாக பிராமணரல்லாதவர்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொன்மையான திராவிட பண்பாட்டின் புகழை மீட்டெடுக்க விரும்பினார். பிராமண புரோகிதர்கள் இல்லாத சுயமரியாதைத் திருமணத்தை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்தார். அவர் மத விழாக்களை மக்கள் பின்பற்றுவதை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு சமூக நிகழ்வுகளிலும் பிராமணர்களின் சேவைகளை பயன்படுத்தாமல் இருக்கச் செய்தார்.

## நீதிக் கட்சியின் வீழ்ச்சி

1929–ஆம் ஆண்டு வரை சுயமரியாதை இயக்கமானது சென்னை மாகாணத்தில் ஓர் முன்னோடி இயக்கமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் அதன் புகழ் மங்கத்தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று, இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்தது. இரண்டாவதாக, பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது. இறுதியாக உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவு அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களித்தன.

### பயிற்சி –14

Anti Hindi Agitation

The decline of the Justice Party and Periyar's refusal to enter into electoral politics together with the growing popularity of Mahatma Gandhi, enabled Indian National Congress to win elections in the Madras Presidency in 1937 and Rajagopalachari became the premier.

He introduced total prohibition (ban on liquor) and abolished the Zamindari system, and introduced legislations removing restrictions on temple entry for the depressed classes. Yet his measures leading to closure of many schools and introduction of Hindi as compulsory language in schools provoked the admirers of self respect and Tamil Nationalists like Mariamalai Adigal to organize the 'Anti Hindi Movement' in 1937. Thousands of agitators including E.V.Ramaswamy courted arrest, and a number of agitators died in prison.

Salem Conference, 1944

In 1944, at Salem conference under the leadership of Periyar, a historic resolution was moved to change the name of Justice Party to Dravidar Kazhagam (DK). Periyar organised 'Dravida Nadu' conference and demanded an independent homeland for 'Dravidians'. Further, he pronounced his very famous slogan 'Dravida Nadu for Dravidians' at the conference.

Apart from separate 'Dravida Nadu' demand, the Dravidar Kazhagam wanted to establish casteless society, condemned irrational and demeaning religious rituals, traditions and superstitious in Dravidian society. The Dravidar Kazhagam became very popular in many rural and urban masses, especially among the students. Many non-Brahmin leaders and students have changed their name reflecting Tamil Identity.

Anti-Hindi Agitation 1965

In accordance with the provisions of Article 313 of the Indian Constitution Hindi was made as the official language of the Indian Union on January 26, 1965. In order to protest the decision of the Union Government the Dravida Munnetra Kazhagam decided to observe 26th January, 1965 as a 'Day of Mourning'. Many leaders of the party and its cadres were arrested. Tamil Nadu had witnessed a large scale of Anti-Hindi agitations. Because of the agitations the cause secured considerable amount of support among the student community. On the other hand the Congress party lost its base and support in the state of Tamil Nadu. Meanwhile, the Dravida Munnetra Kazhagam had withdrawn the demand for 'Dravida Nadu' in favour of prejudicial

autonomous and continued to actively participate in the electoral politics of Tamilnadu and became a ruling party in the state.

## விடை

## இந்தி எதிர்ப்பு போராட்டம்

நீதிக் கட்சியின் வீழ்ச்சியும், தேர்தல் அரசியலில் நுழைய பெரியார் மறுத்ததும், வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழும், இந்திய தேசிய காங்கிரசை 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்தலில் வெற்றிபெற செய்தது. ராஜாஜி முதல் அமைச்சரானார்.

அவர் முழுமையான மது விலக்கு (மது விற்கத் தடை) மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை நடைமுறைப்படுத்தினார். மேலும் ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுக்கு இருக்கும் தடையை நீக்குவதற்கு சட்டம் கொண்டுவந்தார். இருந்தபோதிலும், இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்திய நடவடிக்கையானது பல பள்ளிக் கூடங்களை மூடுவதற்கு காரணமானது. இது சுயமரியாதைக்காரர்கள் மற்றும் தேசியவாதிகளான மறைமலை அடிகள் போன்றோரை ஆத்திரமடையச் செய்தது. இதனால் 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒன்று சேர்ந்தனர். பெரியார் உள்ளிட்ட ஆயிரக் கணக்காண போராட்டக்காரர்கள் கைதானார்கள், மேலும் பல பேர் சிறையிலேயே இறந்தனர்.

## 1944 –சேலம் மாநாடு

1944–ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கெனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி.என். அண்ணாதுரை நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (தி.க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் "திராவிட நாடு" மாநாட்டைக் கூட்டி திராவிடர்களுக்குத் தனி "திராவிட நாடு" கோரினார். மேலும்

அவரின் புகழ் பெற்ற வாசகமான "திராவிட நாடு திராவிடர்களுக்கே" எனவும் முழக்கமிட்டார். தனி "திராவிட நாடு" கோரிக்கையைத் தவிர திராவிடர் கழகமானது சாதியற்ற சமூகத்தை ஏற்படுத்துதல், மதச் சடங்குகளைக் கண்டித்தல், பழமை மற்றும் மூடநம்பிக்கைகள் அற்ற சமூகத்தை அமைத்தல் ஆகியவற்றை விரும்பியது.

திராவிடர் கழகமானது கிராம மற்றும் நகர் புறங்களில் குறிப்பாக மாணவர்களிடத்தில் மிகவும் புகழ்பெற்றது, பல பிராமணர் அல்லாத தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தங்களுடைய பெயர்களை தூய தமிழில் மாற்றி கொண்டனர்.

## இந்தி எதிர்ப்புப் போராட்டம் – 1965

1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் உறுப்பு 313–ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை தி.மு.க. துக்க தினமாக அனுசரிக்கத் தீர்மானித்தது. அதன் பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்நாடு பெருமளவிலான இந்தி எதிர்ப்பு போராட்டங்களைச் சந்தித்தது. இந்த கிளர்ச்சியால் தி.மு.க. மாணவர் சமூகத்திடம் இருந்து பெருமளவு ஆதரவை பெற்றது. இதன் மற்றொரு பக்கம் காங்கிரசு கட்சி தமிழ்நாட்டில் தனது ஆதரவையும், தளத்தையும் இழந்தது. இதற்கிடையில் தி.மு.க. "திராவிட நாடு" கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தேர்தல் அரசியலில் ஊக்கத்துடன் பங்கெடுத்தது.

## பயிற்சி –15

Dravidian Movement during second World War and after:

In 1939, the congress protested the government's declaration involving India in the Second World War which led to the resignation of congress ministry. In Madras Presidency Rajaji's ministry had resigned but Periyar raised the demand of Dravida Nadu on the ground that independence prior to socio-cultural equality would be injurious to Tamil interests. In 1949, Dravidar Kazhagam split and Dravida Munnetra Kazhagam was formed.

In 1951, the Supreme Court struck down communal reservations in higher education. Immediately Periyar launched a major agitation for the restoration of communal reservation.

Consequently, the first constitutional amendment Act was passed in the Parliament facilitating reservations for socially and educationally backward classes.

### விடை

### திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்

1939ஆம் ஆண்டு இந்தியா இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேய அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்படுவதை விரும்பாத காங்கிரசு அமைச்சரவை பதவியை துறந்தது. பெரியார் திராவிட நாடு கோரிக்கையை எழுப்பினார். 1944 ஆம் ஆண்டு நீதிக்கட்சி பெரியார் தலைமையிலான சேலம் மாநாட்டில் அதன் பெயரை "திராவிடர் கழகம்" என மாற்றியும், திராவிட நாடு அடைவதே தனது லட்சியம் என்றும் அறிவித்து, சமூக பண்பாட்டு சமத்துவத்திற்கு முன்பாக விடுதலை அடைவது தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினார். 1949 ஆம் ஆண்டில், திராவிட கழகத்தை விட்டு பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டில் உச்ச நீதி மன்றமானது உயர்கல்வியில் சாதிவாரி இடஒதுக்கீட்டை உடைத்து எறிந்தது. உடனடியாக பெரியாரின் திராவிடர் கழகம் மீண்டும் சாதிவாரி இடஒதுக்கீட்டைத் திரும்ப பெற போராட்டத்தை துவக்கியது. திராவிட முன்னேற்ற கழகமும் கூட இந்த போராட்ட இயக்கத்தில் சேர்ந்து கொண்டது. காங்கிரசு தலைவர் காமராஜர் இந்த சிக்கலை மத்தியில் இருக்கும் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதனைத் தொடர்ந்து சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சாதகமாக இடஒதுக்கீடு அளிக்கும் முதலாவது நாடாளுமன்ற சட்டத் திருத்தம் இயற்றப்பட்டது.

## பயிற்சி –16

Rajaji Regime

The politics of Madras State in India witnessed the continuation of struggle between statusquoists and reformists. C. Rajagopalachari (Rajaji) who led the first elected ministry in the Madras, under the Republican Constitution, again reduced the number of schools, attempted to impose Hindi in schools and Modified Scheme of Elementary Education which provided for part time learning of hereditary occupations popularly known as kulakalvi.

Dravidian leaders launched a statewide protest against movement. Even a section of Congress leaders resented Rajaji’s proposals which led to change in Chief ministership.

## விடை

## ராஜாஜி ஆட்சி

சென்னை மாகாண அரசியலானது குடியரசு இந்தியாவில் பழமை மாறா சக்திகளுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போராட்டத்தின் சாட்சியாகவே இருந்தது. சென்னை மாகாணத்தின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையை வழிநடத்திய திரு. சி. ராஜகோபாலாச்சாரி, மீண்டும் குடியரசினுடைய அரசமைப்பின் கீழ் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை

குறைத்தார். பள்ளிகளில் இந்திய மொழியை திணித்தார், புதிய பள்ளிக் கூடங்களில் பகுதி நேரமாக கற்பதற்கு பரம்பரைத் தொழில் எனப்படும் (குலக்கல்வி) புதிய தொடக்க கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ராஜாஜியின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து திராவிடத் தலைவர்கள் மாநிலம் முழுவதும் போராடத் தொடங்கினார். காங்கிரசு தலைவர்களின் ஒரு பகுதியினரும் ராஜாஜியின் திட்டத்தால் கோபம் அடைந்தனர். இதுவே ராஜாஜி பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்தது. அவரைத் தொடர்ந்து காமராஜர் முதலமைச்சரானார்.

## பயிற்சி –17

Kamaraj Era

Kamaraj abolished the Modified Scheme of Elementary Education, increased manifold the number of schools, built a number of dams for improving irrigation, provided more industrial estates and ensured astonishing industrial growth in the state. He made education more accessible to poor and rural children. Kamaraj also introduced the noon-meal scheme for school children.

In 1963, Kamaraj resigned (Kamaraj Plan) his chief ministership to become the President of Indian National Congress and M.Bhaktavatchalam took over the reins of the government. The Food shortage and anti-hindi agitation caused the un-popularity of his ministry.

Dravidian Parties Rule

In the general elections of 1967, the congress party was defeated. The Dravida Munnetra Kazhagam formed the government.

The provision of affordable universal housing for poor, precursor to food security (Rice scheme) and establishment of Slum Clearance Board have substantially improved and received support among the urban poor people also. Significantly, the government renamed the State from Madras to Tamil Nadu in the year 1969. The other major achievements of the party were:

Nationalisation of Bus routes larger than 75 miles.

Waiver of Tuition fee for poor students of all castes in pre-University and pre-technical courses.

Second World Tamil Conference was organised.

Supply of subsidised rice for people of Tamil Nadu.

## விடை

### காமராஜர் காலம்

காமராஜர் தொடக்கக் கல்வித்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்ததுடன் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார். பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்தினார், பல அணைகளைக் கட்டி நீர்பாசன வசதியை உயர்த்தினார். நிறைய தொழிற்பேட்டைகளை அமைத்தார். அதன் மூலம் மாநிலத்தில் வியக்கத்தக்க அளவிற்கு தொழில்வளர்ச்சியை உறுதி செய்தார். ஏழை கிராமபுற குழந்தைகளும் கல்வி பெறச் செய்தார். அவர் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

## திராவிட கட்சிகளின் ஆட்சி

1967ஆம் ஆண்டு பொது தேர்தலில் காங்கிரசு கட்சி தோற்கடிக்கபட்டது. தி.மு.க. வெற்றி பெற்று சி.என்.அண்ணாதுரை முதலமைச்சரானார். அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி, படியரிசி திட்டத்தின் மூலம் உணவு பாதுகாப்பிற்கு முன்னோடியாக இருந்தது மற்றும் குடிசை மாற்றுவாரியம் அமைத்தது போன்றவற்றால் நகர்புற ஏழை மக்களிடம் போதுமான அளவு அண்ணாவிற்கு ஆதரவு பெருகியது. மிகவும் முக்கியமாக 1969 ஆம் ஆண்டு சி.என். அண்ணாதுரையின் தலைமையிலான அரசாங்கம் "மெட்ராஸ்" மாநிலத்தின் பெயரை "தமிழ்நாடு" என பெயர்மாற்றம் செய்தது. அக்கட்சியின் இதர முக்கிய சாதனைகள்.

75மைல் தொலைவிற்கு மேல் உள்ள பேருந்து தடங்களை தேசியமயமாக்கியது. அனைத்து சாதி ஏழை மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு முந்தைய கல்வி மற்றும் தொழிற்கல்விக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்வி கட்டண விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இரண்டாவது உலக தமிழ் மாநாடு நடத்தப்பட்டது. தமிழக ஏழை மக்களுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டது.

## பயிற்சி –18

Dravidian Rule in Post-Independence Tamilnadu

For the past 62 years Dravidian parties have been ruling Tamilnadu. Dravida Munnetra Kazhagam decided to enter electoral politics in 1957 and gave up its "Dravida Nadu" demand consequent to Chinese aggression of Indian territories and to overcome newly amended electoral laws. It won a majority in 1967 elections. Annadurai ruled for a brief period (1967-69), yet he renamed Madras state as Tamilnadu, passed civil marriages act, rejected three language policies of central government and enforced a two languages (English & Tamil) policy in Tamilnadu.

For the first time, he introduced a subsidized rice (one measure one rupee) scheme. His successor M.Karunanidhi continued his legacy. In 1972, M.G.Ramachandran founded his own Dravidian Party (All Indian Anna Dravida Munnetra Kazhagam – AIADMK). He captured power in 1977 and retained the same till his death in 1987. Thereafter, Dravida Munnetra Kazhagam under M.Karunanidhi and Selvi J. Jayalalitha of All Indian Anna Dravida Munnetra Kazhagam led ministries in alternative elections. Besides, these two, there are a few other Dravidian parties like Marumalarchi Dravida Munnetra Kazhagam.

More than, six decades of Dravidian rule contributed remarkably to the development of Tamil. They steadfastly protected the interest of Tamil language, Tamil people and Tamilnadu. A number of welfare schemes were introduced to alleviate the suffering of common people. They ensured food security through subsidized and later free rice schemes, nutritious meal scheme, free education until under graduate level, free electricity for farming, abolition of cycle rickshaws and manual scavenging , cradle baby scheme for the abandoned children, and welfare boards for various unorganized workers, and even for transgender. As a remedy to ruinous caste conflicts, 'Samathuvapuram' and 'Uzhavarsanthai' were created.

Free electricity was provided to huts, slum clearance board met the housing requirements of slum dwellers. The phenomenal increase in industrial activity increased the opportunities for youth; as a result of these developments Tamilnadu registered a high ranking in HDI (Human Development Index). Today, Tamilnadu is in prominent position in promoting automobile industries, electronics, and in pharmaceutical industries. it's new economic zones are attracting huge investments. Tamilnadu's achievements in infrastructural development are acclaimed by all. Roads, harbours, electrification and availability of skilled labour facilitate industrial development.

There has been a manifold increase in the number of schools of different categories. There is a manifold increase in the number of universities. Tamilnadu has exclusive universities for women, engineering and technology, law, medicine, siddha medicine, sports etc. Promotion of Tamil language, through tamil university, ulaga tamil araichi niruvanam, world tamil conference and ulaga tamil semmozhi conference, and script reforms, led to all-round advancement of tamil language.

The Dravidian parties since the days of Annadurai have been championing the cause of secularism and autonomy of the states. The Dravidian parties have also been contributing substantially to national politics. Dravidian political stream continues to be formidable in Tamilnadu.

## விடை

## தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்குப் பிறகு திராவிட ஆட்சி

கடந்த 62 ஆண்டுகளாக தமிழகத்தை திராவிட கட்சிகள் ஆட்சி செய்து வருகின்றன. 1957ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அரசியலில் நுழைய தீர்மானித்தது. இந்திய பகுதிகளை சீனா ஆக்கிரமிப்பு செய்ததின் விளைவாகவும், புதிதாக திருத்தம் செய்யப்பட்ட தேர்தல் விதிகளை கடந்து வரவும், தனது "திராவிட நாடு" கோரிக்கையைக் கைவிட்டது.

1967ஆம் ஆண்டு தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. அண்ணாதுரை சிறிது காலமே ஆட்சி புரிந்தார். (1967–1969), இருந்த போதிலும், சென்னை

மாநிலத்தை தமிழ்நாடு என்றும், திருமணச் சட்டத்தை இயற்றியது, மத்திய அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கையை எதிர்த்தது. தமிழகத்தில் இரு மொழி கொள்கையை (ஆங்கிலம் மற்றும் தமிழ்) நடைமுறைப்படுத்தியது ஆகியவை அவரின் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஆகும்.

சி.என். அண்ணாதுரை முதன்முறையாக, மலிவு விலை அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். (படி அரிசி, ஒரு ரூபாய்) அவருக்கு பின் வந்த திரு. மு. கருணாநிதி அம்மரபினைத் தொடர்ந்தார்.

1972ஆம் ஆண்டு எம்.ஜி. ராமச்சந்திரன் தன்னுடைய திராவிட கட்சியை தொடங்கினார். (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1977ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றினார். இதனை 1987இல் தனது இறப்பு வரை தக்கவைத்துக் கொண்டார். அதன்பிறகு மு.கருணாநிதி தலைமையில் தி.மு.கவும் செல்வி. ஜெ. ஜெயலலிதா தலைமையில் அ.இ.அ.தி.மு.க–வும் அடுத்தடுத்த தேர்தல்களில் மாறிமாறி வெற்றி பெற்று அமைச்சரவையை ஏற்படுத்தினர். மேலும், இவை இரண்டோடு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் போன்ற உடைப்பின் வழி திராவிட கட்சிகளும் சில இருக்கின்றன.

அறுபது வருடங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு திராவிட ஆட்சி பங்களித்துள்ளது. அவர்கள் தமிழ் மொழியின் நலன், தமிழக மக்கள், தமிழ்நாடு ஆகியவற்றின்

நலனை உறுதியுடன் பாதுகாத்தனர். சாதாரண மக்களின் துன்பங்களை போக்குவதற்காக பல்வேறு சமூக நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை மலிவு விலையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தது. பின்னர் இலவச அரிசித்திட்டம், சத்துணவுத் திட்டம், பட்டபடிப்பு வரை இலவச கல்வி, விவசாயத்திற்கு இலவச மின்சாரம், "சைக்கிள் ரிக்ஷா ஒழிப்பு", "கையால் மலம் அள்ளுவது ஒழிப்பு",

கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான "தொட்டில் குழந்தை திட்டம்", அமைப்பு சார பணியாளர்களுக்கு பல்வேறு நலவாரியங்கள், இன்னும் கூறினால் மாற்றுப்பாலினத்தவர் நலன் போன்றவற்றை உறுதி செய்தன. ஒருவரை ஒருவர் அழிக்கும் சாதி சண்டைக்கும் "சமத்துவபுரமும்", "உழவர் சந்தையும்" உருவாக்கப்பட்டன.

குடிசைகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டது. குடிசைவாசிகளின் குடியிருப்புத் தேவைக்கு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்காக வியக்கத்தக்க அளவு தொழில் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டது. இந்த வளர்ச்சியின் விளைவாக தமிழ்நாடு மனித வள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) உயர்ந்த மதிப்பைப் பதிவு செய்தது. இன்று தமிழ்நாடு மோட்டார் வாகனத்தொழில், (தானியங்கி), மின்னணு, மற்றும் மருந்து உற்பத்தி துறைகளில் முன்னணி நிலையில் இருக்கிறது. அதன் புதிய பொருளாதார மண்டலங்கள் பெருமளவு முதலீடுகளை ஈர்த்துள்ளன. தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் சாதனைகள் அனைவராலும் புகழ்ந்து பேசப்படுகிறது. சாலைகள், துறைமுகங்கள், மின்சாரவசதி, திறன் பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது போன்றவைகள் தொழில் வளர்ச்சியை எளிமைப்படுத்தியுள்ளன.

பல்வேறு வகைகளில் பன்மடங்கு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கைகள் உயர்ந்துள்ளன. இங்கு பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரித்துள்ளது. இவற்றுள் தனித்தன்மையான பல்கலைக் கழகங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் பெண்களுக்கென்று தனியாகப் பெண்கள் பல்கலைக் கழகம் உள்ளதுடன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், சட்டம், மருத்துவம், சித்த மருத்துவம், விளையாட்டு போன்றவற்றிற்கும் தனியாகப் பல்கலைக்கழகம் உள்ளன. தமிழ்பல்கலைக்கழகம் மூலம் தமிழ்மொழி மேம்பாடு, தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,

உலகத் தமிழ்மாநாடு, செம்மொழி மாநாடு, எழுத்து சீர்திருத்தம் என தமிழ்மொழியை அனைத்து வகையிலும் முன்னேற்றுவதற்கு நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

திராவிட கட்சிகள், அண்ணாதுரையின் காலத்தில் இருந்து மதச்சார்பற்ற தன்மை மாநில தன்னாட்சி போன்றவற்றிற்காகப் பாடுபட்டிருக்கிறது. திராவிடக் கட்சிகள் தேசிய அரசியலின் நீடித்த தன்மைக்குக் கூட பங்காற்றியிருக்கின்றன. தமிழகத்தில் திராவிட அரசியல் செல்வாக்கு தொடர்ந்து வல்லமை பெற்றதாக இருக்கிறது.

## பயிற்சி –19

Dravidian Ideology

Periyar E.V.Ramasamy is regarded as the best political thinker in Tamilnadu. This is because he is the foremost reformist in our state. Let us see about him in detail in this lesson.

Periyar fought against superstitious beliefs, enslavement of women and social backwardness which existed in Tamilnadu from time immemorial based on his wisdom and self-respect throughout his life. It is because of this, he is fondly called as 'Thanthai Periyar'. Various scholars on Social Justice say that the Dravidian ideology enunciated by Periyar on cultural lines shines all around our country.

Periyar was attracted towards Gandhi's entry into politics and hence joined congress and became actively participating in freedom movement and social reforms. During that period in 1920's Congress was dominated by upper class people. But Periyar took Congress to the down trodden and successfully organized temple entry movements as a true Congress man. Periyar was very much disgruntled by the practice of Varnashrama in Congress party and left it. He joined Justice party and formed the self respect movement later. After this, the contributions and activities of Periyar became inseparable from the politics of India and Tamilnadu in particular.

### விடை

### திராவிடக்கொள்கைவாதம்

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் இ.வெ.ரா.பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர் தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920-களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

## பயிற்சி – 20

In the name of nation, if a group of people exploit other groups that is not the real freedom which a nation fought for, said Periyar alias E.V. Ramasamy. Periyar vociferously criticized against Nation, Race and Nationalism at various levels. All Nation, nationality and nationalism are similarly related concepts. All these

differentiations indicate the "Self Respect" of the entire population of a country. If anybody speaks about nationalism in Tamilnadu, I wonder, that will they think about "welfare or botheration about people" questioned Periyar.

Nationalism as exploitation

There are people who may not bother about Indians, Tamilians and the self-respect of the people. They deceive people to believe in nation and nationalism for their own welfare and betterment. If self-respect is submerged in the name of nation and nationalism that will be the crime against India, stated Periyar.

Nationalism is an unreal feeling. Since National feeling is nothing but a conspiracy framed by rich and power-centered, people who deceive the other people by controlling the negative emotions. It is a false assumption, propagated by these upper rich communities in order to curtail the rights of the poor community.

Nationalism has become a buzz word of addictiveness and emotionalist for the people, he exclaimed.

## விடை

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா.பெரியார் பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பெரியர் கடுமையாக விமர்சித்தார். தேசம், தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

## தேசியவாதம் என்பது சுரண்டலாகும்

இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன்

மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசியவாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

## பயிற்சி – 21

## மொழிக் கொள்கை

On Language

Each and everyone have their own rights to protect their languages. These rights can be protected and provided under Dravida, Socialist Republic Rule. No language can be enforced.

Language should not be misused as weapon for separatism. If people are dependent upon Central rule for all kinds of amenities, there is no outcome in it. If languages are officialised at Central level, will the poor people relieve out of hunger?

Casteless Society

Periyar’s protests and speeches always centre around, “Tamilnadu for Tamils and Dravidian nation for Dravidians.” His ideologies include Common plan, common work plan, Islamic conversion, separate Dravidian nation for which he fought against the dominant communities.

His argument was that the dominant communities misused Tamil, Tamil nationalism, Tamil race for sustaining the power in Tamilnadu. It is with the help of Tamil leaders, they injected Tamil nationalism in the minds of the people for holding the power for

a long time he said. Consequently, Periyar put an end to the demand of separate Tamilnadu and upheld the ideal of casteless society.

Thus, casteless society has become the top most priority for Periyar. Other ideals like separate Dravidian nation, abounding dominant communities, distortion of capitalist class became secondary priorities for Periyar.

This may be the only ambition and goals for Dravida Kazhagam, claimed Periyar. "The caste feeling, thus divided the Dravidian race and Dravidians became slaves for Aryans" stated Periyar in his writings published in the 1950's in Tamilnadu.

## விடை

"அவரவர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாளர்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

## சாதியற்ற சமுதாயம்

பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே' என்று தொடர்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த்தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும்

தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டபோது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத் திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

"திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி; சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி; முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி; சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது."என்று 1950களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

## பயிற்சி –22

An iconoclast and rationalist social reformer

For the average Tamil, Periyar today is an ideology. He stands for a politics that foregrounded social equality, self-respect, and linguistic pride. As a social reformer, he focused on social, cultural and gender inequalities, and his reform agenda questioned matters of faith, gender and tradition. He asked people to be rational in their life choices. He argued that women needed to be independent, not mere child-bearers, and insisted that they be allowed a equal share in employment. The Self Respect Movement he led promoted weddings without rituals, and sanctioned property as well as divorce rights for women. He appealed to people to give up the caste suffix in their names, and do not mention caste. He instituted inter-dining with food cooked by Seheduled caste people in public conferences in the 1930s.

Over the years, Periyar has transcended the political divide as well as the faultlines of religion and caste, and come to be revered as Thanthai Periyar, the father figure of modern Tamil Nadu.

## விடை

## பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்தவாதி

சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக சமத்துவம், சுயமரியாதை மற்றும் மொழியின் பெருமையை முன்னிறுத்தும் அரசியலை வழி நடத்தினார். ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவர் சமூகம், பண்பாடு மற்றும் பாலின சமத்துவமின்மை போன்றவற்றில் கவனம் செலுத்தினார். அவர் மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட வலியுறுத்தினார். பெண்கள் அனைவரும் சுதந்திரமாக இருப்பதுடன் பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்காக எனும் நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை சுயமரியாதை இயக்கம், சடங்குகளற்ற திருமணங்களை ஊக்குவித்ததுடன் பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் விவாகரத்து செய்யும் உரிமைகளும் வழங்க வேண்டும் எனப் போராடினார். அவர் மக்கள் தங்களின் பெயருக்கு பின் உள்ள சாதிப் பெயரை கைவிடுமாறும் அதனைக் குறிப்பிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார். 1930–களில் பட்டியல் இனத்தவரால் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார். காலப்போக்கில் சாதி, மத அரசியல் வேறுபாடுகளைக் கடந்த பெருமதிப்புடன் 'பெரியார்' நவீன தமிழகத்தின் தந்தையென அழைக்கப்படுகிறார்.

# கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்

## சுருக்கி வரைதல்

## TNPSC மாதிரி வினா

செவ்வாய் கிரகத்தில் தற்போது திரவ நீர் இருப்பது தெரியவந்துள்ளது. அங்கு காணப்பட்டவை முதலில் தொலை தூரத் தகவல்கள் என கணித்தார்கள். செவ்வாய் கிரக தென் துருவப் பிரதேசங்களில் காணப்பட்ட இந்தத் திரவ நீருக்கு "தென் துருவ அடுக்கு படிமம்" என்றும் பெயரிடப்பட்டிருந்தது.

இதன் மூலம் இந்த மேற்பரப்பில் காணப்படும் திரவம் போன்ற நீர் உண்மையில் ஏரிகளாக இருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2018ஆம் ஆண்டில் இரண்டு ஆராய்ச்சி குழுக்கள் மார்ஸ் எக்ஸ்பிரஸ் சுற்றுப்பாதையில் இருந்த தரவுகளைப் பயன்படுத்தி ஆச்சரியமான கண்டுபிடிப்பை அறிவித்தனர்.

இந்த சிவப்பு கிரகம் தென் துருவத்திலிருந்து தொலை உணர் கருவியின் தகவல்களை உறுதிப்படுத்துகின்றன. இந்த உறுதியின் மூலம், கிரகத்தின் மேற்பரப்பில் ஒரு திரவ நிலையில் ஏரியின் மேற்பரப்பு இருப்பதாக வெளிப்படுத்துகின்றன.

இருப்பினும், ஹரிசோனா மாநிலப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு மார்ஸ் எக்ஸ்பிரஸ் தரவை தீவிரமான ஆய்வுக்கு உட்படுத்தினர். இந்த பரந்த தொகுப்பின் ஆய்வு தென் துருவத்தைச் சுற்றி, ஒரே மாதிரியான பன்னிரெண்டு அளவு கணக்கான தொலை உணர் தகவல்களைக் கண்டறிந்தது.

"ஏதேனும் ஒரு பொருள் ஊடாகத் தொலை உணர் பயணிக்கும் போது, அதன் ஆற்றலை இழக்கின்றது. எனவே, அதன் ஆழமான பரப்பிலிருந்து மேலே வரும் தகவல்கள் மேற்பரப்பில் இருந்து வரும் தகவல்களைவிட ஒளிர்வு குறைவாக இருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

”நிலத்தடியில் இருந்து வரும் தகவல்கள் வழக்கத்துக்கு மாறாக ஒளிர்வுடன் இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. இந்த ஒளிர்வு தகவலுக்கு, திரவ நீர் தான் காரணம். ஏனென்றால் தொலை உணர்வில் திரவம் கூடுதல் ஒளிர்வுடன் காணப்பட்டது என்று இந்த இரண்டு ஆய்வுகளின் முடிவுகள் தெரிவித்தன” என்றும் கூறினார்.

”இந்த தூரத் தகவல்கள் திரவ நீரா அல்லது வேறு என்னவென்று எங்களால உறுதியாகக் கூற முடியவில்லை. ஆனால், முதலில் கண்டறியப்பட்டதை விட, தற்போது மேலும் பரவலாகக் காணபடுகிறது” என்று ஜெட் ப்ரோ பல்ஷன் ஆய்வகத்திலிருந்து ஜெஃப்ரிப்ளாட் கூறினார்.

செவ்வாய் கிரகத்தின் தென் துருவம் முழுவதும் திரவ நீர் இருக்கலாம் அல்லது இந்த தூரத் தகவல்கள் வேறு எதையோ தெரிவிக்கின்றன என்று ப்ளாட் தெரிவித்தார்.

**விடை**

செவ்வாய் கிரகத்தில் நீர் இருப்பது தெரியவந்துள்ளது. அந்நீரானது தென் துருவப் பிரதேசங்கள் அல்லது பள்ளதாக்குகளில் காணப்படுவதாக நாசா கண்டறிந்துள்ளது. மார்ஸ் எக்ஸ்பிரஸ் சுற்றுப்பாதையில் இருந்த தரவுகள் மற்றும் தொலை உணர் கருவியின் தகவல்கள் மூலம், தென் துருவத்திலிருந்து கிரகத்தின் மேற்பரப்பில் ஒரு திரவ நிலையில் ஏரியின் மேற்பரப்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றன.

ஹரிசோனா மாநிலப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு மார்ஸ் எக்ஸ்பிரஸ் தரவை ஆய்வுக்கு உட்படுத்தி, தென் துருவத்தைச் சுற்றி, ஒரே மாதிரியான பன்னிரெண்டு அளவு கணக்கான தொலை உணர் தகவல்களைக் கண்டறிந்தது.இருப்பினும் அதன் ஆழமான

பரப்பிலிருந்து மேலே வரும் தகவல்கள் மேற்பரப்பில் இருந்து வரும் தகவல்களைவிட ஒளிர்வு குறைவாக இருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் நிலத்தடியில் இருந்து வழக்கத்திற்கு மாறான ஒளிர்வு ஏற்பட திரவ நீரே காரணம் என்றார். ஆனால் ஜெஃப்ரிப்ளாட் இத்தகவல்கள் தவறாக இருக்கலாம் அல்லது வேறு காரணமாக இருக்கலாம் என்றார்.

## கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.

**பயிற்சி - 1**

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர் உடனே ‘அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி’ என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். ‘சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது’ என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் – சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

**பயிற்சி - 2**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், ‘நீயே புருஷ மேரு...’ என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து ‘சித்தாந்த சங்கிரகம்’ என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

“கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்” என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, “என் கண்மணியே, நீ சொல்வது எள்ளளவுஞ் சரியல்ல. கல்வி என்கிற பிரசக்தியே இல்லாதவர்களான சாமானிய பாமர ஜனங்களைப் பார். அவர்களுடைய செய்கைகளுக்கும் மிருகங்களுடைய செய்கைகளுக்கும் என்ன பேதமிருக்கிறது? நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?” என்றார்.

**பயிற்சி - 3**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

ருசிக்காக, சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும்தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருள் செரிமானமாதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும்.

உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும்.

நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தினைப்

பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவநிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களின் தேவை மாறுபடும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

**பயிற்சி - 4**

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. ('வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்') ஆவார்.

இவர் 'ஜகன் மோகினி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த

காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின்மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.

அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று :

"என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி 'உலகானுபவம்... உலகம் பலவிதம்... என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒண்ணுமே புரியாது விழித்தேனே... பாட்டி சொல்லிய வசனங்களைவிடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே! பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள்... நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே!.. என்ன உலக விசித்திரம்!.. என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்."

**பயிற்சி - 5**

தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வழக்கத்தில் உள்ளன.

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள ஆலூர், ஆசூர், படூர், இஞ்சூர், குந்தா, நாகல், தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன. திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் போன்ற பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிட மொழி இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. தமிழ்பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது. சிந்துவெளி நாகரிகத்தை விரிவாக ஆய்வு செய்த சர் ஜான் மார்ஷல் ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

**பயிற்சி - 6**

பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள்(கிரேக்கர்கள்), இந்நாட்டைத் ‘திரிமிளிகே’ என்று அழைத்தனர். காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவன் தமிழ் அரசர்களை ‘திராவிட மன்னர்கள்’ என்றே குறிப்பிட்டுள்ளார். கங்காதேவி என்பவர் தாம் எழுதிய ‘மதுரா விஜயம்’ என்ற நூலில் தமிழ்நாட்டைத் ‘திராவிட தேசம்’ என்றும், தமிழ் மன்னர்களை ‘திரமிள ராஜாக்கள்’ என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்காலந்தொட்டே ‘தமிழ்’ என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள் ஆய்வை மேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் அது ‘நகர நாகரிகம்’ என்பதை உறுதி செய்தார். இது ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்ச நிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். திராவிடர்களே கலை நயத்திற்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டிருந்தனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகமானது ஆரிய நாகரிகத்திற்கு முன்பே வளர்ச்சி அடைந்த ஒரு நகர நாகரிகமாகத் திகழ்ந்தது.

**பயிற்சி - 7**

‘பண்படு’ என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும். பண்படு என்பதற்குச் சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள். பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் டி.கே. சிதம்பரநாதனார். உழவன், பயிர் செழிக்க நிலத்தைப் பண்படுத்துதல்போல, மனிதவாழ்வு செழிக்க உயர்ந்த எண்ணங்களால் மனத்தைச் செம்மைப்படுத்த வேண்டும்.

‘உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே’ என்கிறது தொல்காப்பியம். இங்கு, ‘உயர்ந்தோர்’ என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்பதைப் ‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்’ என்று கலித்தொகை குறிப்பிடுகிறது. இவ்வுலகம், பண்புடையவர்களால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் ‘பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம்’ என்கிறார் வள்ளுவர். இதன்மூலம், மனிதனை மேம்படுத்துகின்ற அன்பு, ஈகை, புகழ், பெரியோரைத் துணைக் கொள்ளல், மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை மக்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது. எனவே, மனிதன் பேசும் மொழி, உணவு, உடை, வாழ்க்கை முறை, செய்யும் தொழில், எண்ணங்கள் ஆகியவை பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகளாகத் திகழ்கின்றன.

தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் வழியாகவும், தாயகப் பிணைப்பின் வழியாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாகப் பேணப்பட்டு, திருத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட கூறுகளைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஓர் இயங்கியல் பண்பாடே ஆகும்.

**பயிற்சி - 8**

பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றியான ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் முக்கியமானவை. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார். இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை மறுத்தார். பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை' என்றார்.

நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்துகொண்டே சென்று அளவற்றதாகிறது.

"சில நேரங்களில் உண்மை, புனைவை விடவும் வியப்பூட்டுவதாக அமைந்துவிடுகிறது. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும். புனைவு இலக்கியம் படைப்பவர்களது கற்பனைகளையெல்லாம் மிஞ்சுவதாகவே கருந்துளைகள் பற்றிய உண்மைகள் உள்ளன. அதனை அறிவியல் உலகம் மிக மெதுவாகவே புரிந்துகொள்ள முயல்கிறது" என்று கூறுகிறார், ஸ்டீபன் ஹாக்கிங். அமெரிக்க அறிவியலாளர் ஜான் வீலர் என்பவர்தாம் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர். சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் செல்கிற எதுவும், ஏன்

ஒளியும்கூடத் தப்பமுடியாது. உள்ளே ஈர்க்கப்படும். இவ்வாறு உள்சென்ற யாவையும் வெளிவரமுடியாததால் இதனைக் கருந்துளை எனலாம் என்று ஜான் வீலர் கருதினார்.

**பயிற்சி - 9**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம். அது தானாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. இந்த அறிவைக்கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது. ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார். அவ்வாறு கற்றுக்கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும்.

செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை; செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்பதே அதன் சிறப்பு. மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது. இவை நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும். நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் தேடும்.

**பயிற்சி - 10**

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகு முன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்துகொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு- அது கிராமத்து உன்னதம்.

# கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்
# பொருள் உணர்திறன்

## TNPSC மாதிரி வினா

தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்கள் பண்பாடு ஆகும். தமிழ் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது தமிழ் கலாச்சாரம். மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புற கலை, தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக் களை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, உடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள் ஆகியவை அறிவியலை வெளிப்படுத்துகிறது. மற்றும் தொழில்நுட்பம், தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும் தமிழர் மரபுகள், வரலாறு விழுமியங்கள், கலைகள் ஊடாகவும் சமூகம், பொருளாதாரம், அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டு கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே ஆகும்.

தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது. மற்றொன்று, உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருத்தக்கூடியது. அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூறிய “புறக்கூறுகள்” பண்பாடு சார்ந்தும், அவற்றின் “அகக்கூறுகள்” உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும்.

பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, முன்னது “அகக்கூறு” பின்னது “புறக்கூறு”. நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது.

பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது. தமிழர் பண்பாடு இதுவல்ல என்று தெளிவாக வரையறுப்பது கடினமாகினும் ஒரு அறிவுசார் மதிப்பீடு செய்ய முடியும். எடுத்துக்காட்டாக யூத சமயமோ, சீக்கிய சமயமோ தமிழர் பண்பாட்டு வட்டத்துக்குள் வரமாட்டா. மாறாக, சைவ சமயத்துக்குத் தமிழர் பண்பாட்டுடன் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு.

கேள்விகள்: 5x2 = 10 மதிப்பெண்கள்

1) சமயத்துடனான தமிழர் பண்பாட்டின் தொடர்புகள் யாவை?

2) தமிழ்ப் பண்பாட்டின் அமைப்பொழுங்கின் அம்சங்கள் யாவை?

3) திருந்திய ஒழுக்கம், திருந்திய வாழ்க்கை எது?

4) தமிழ் கலாச்சாரம் பரவியுள்ள நாடுகள் யாவை?

5) தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் யாவை?

விடை

1. தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும் தமிழர் மரபுகள், வரலாறு விழுமியங்கள், கலைகள் ஊடாகவும் சமூகம், பொருளாதாரம், அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படுகிறது.
2. தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது. மற்றொன்று, உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருத்தக்கூடியது. அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூறிய "புறக்கூறுகள்" பண்பாடு சார்ந்தும், அவற்றின் "அகக்கூறுகள்" உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் ஆகும்.
3. பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, முன்னது "அகக்கூறு" பின்னது "புறக்கூறு" ஆகும்.
4. தமிழ் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது.
5. கலாச்சாரம். மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புற கலை, தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக் களை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, உடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள் ஆகியவை தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் ஆகும்.

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக

**பயிற்சி - 1**

சங்க இலக்கியங்களில், மன்னர்களுக்கும் மக்களுக்கும் உரிய ஒழுக்கங்கள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. நெறிபிறழாத போர்முறை, மக்கள் நிலையறிந்து வரி விதித்தல், நேர்மையாகப் பொருளீட்டல், சான்றோர்களை மதித்தல், அவர்தம் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுதல் முதலியன அரசர்களுக்குரிய மாண்புகளாகக் கருதப்பட்டன. இவற்றில் ஏதேனும் ஒன்றில் நெறிபிறழ்ந்தாலும் சான்றோர்கள், மன்னர்களை இடித்துரைத்து வழிப்படுத்தும் வாய்ப்பும் இருந்தது.

தனிமனித வாழ்வியல் நெறிமுறைகளும் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. இவ்விலக்கியங்களில் ஆண்களுக்குரிய நெறிகளும், பெண்களுக்குரிய நெறிகளும் பிரித்துச் சொல்லப்பட்டுள்ளன. ‘வினையே ஆடவர்க்கு உயிரே’ என்ற குறுந்தொகைத் தொடர், ஆண்களின் நிலையையும் அவர்கள் தங்களின் வாழ்விடங்களுக்குரிய தொழில்களைச் செய்தனர் என்பதையும் விளக்குகின்றது. பெண்களுக்கு உயரிய பண்பாகக் கற்பொழுக்கம் கருதப்பட்டது. மக்கட்பேறு, விருந்தோம்பல், பெரியோரை மதித்தல் முதலியன குடும்ப வாழ்க்கைக்குரிய அடிப்படைப் பண்புகளாக வரையறுக்கப்பட்டன.

பாண்டிய மன்னர்கள் தமிழை வளர்ப்பதற்காகப் புலவர் பலரையும் ஒருங்கிணைத்துத் தமிழ்ச்சங்கங்களை நிறுவினர். இவை, கால அடிப்படையில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. தமிழகத்தில் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள், சங்கம் ஏற்படுத்திக் கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்தார்கள். அச்சங்கங்களைப் போலவே, அதற்கு முந்திய காலத்திலும் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்றும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவை அச்சங்கங்களைச் சார்ந்த புலவர்களால் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதினர்.

பழந்தமிழகத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்றும், மதுரையிலும் கபாடபுரத்திலும் இருந்த முதல் இரண்டு சங்கங்கள் மறைந்தபிறகு, மூன்றாம் தமிழ்ச்சங்கம், மதுரையில் பாண்டியர்களின் ஆதரவோடு அமைக்கப்பட்டது என்றும், எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூன்றாம் தமிழ்ச்சங்ககால நூல்கள் என்றும் கூறுகின்றனர். எனவே, அவற்றைச் சங்க இலக்கியம் என்று குறிப்பிடுகின்றனர்.

மதுரையில், புலவர்கள் கூடித் தமிழை ஆய்ந்து வந்தார்கள் என்பதற்கும் பாண்டிய மன்னர்கள், அவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதற்கும் சங்கப் பாடல்களில் சான்றுகள் உள்ளன. பாண்டியரைப் போலவே, சோழ மன்னர்களும் சேர மன்னர்களும் சிற்றரசர்களும் வள்ளல்களும் புலவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதும் தெரிய வருகிறது. அவர்களின் உதவியும் ஆதரவும் பெற்ற புலவர்கள், தம் உள்ளத்து உணர்வுகளைப் பாடியதோடு மட்டுமல்லாமல் அவர்களின் நாடுகளையும் ஆட்சிச் சிறப்புகளையும் வாயாரப் புகழ்ந்து பாடினார்கள் என்பதும் தெளிவாகிறது. மேலும், சங்கங்களைப் பற்றிய வரலாறு, நக்கீரர் எழுதிய இறையனார் களவியல் உரையிலும் கூறப்பட்டுள்ளது.

வினாக்கள்

1. அரசர்க்கு உரிய மாண்புகள் யாவை?
2. சான்றோர்களின் பணிகள் என்ன?
3. குடும்ப வாழ்வின் பண்புகள் யாவை?
4. முச்சங்கங்கள் இருந்த பகுதிகள் யாவை?
5. முச்சங்கங்கள் குறித்த சான்றுகளை குறிப்பிடுக.

**பயிற்சி - 2**

தமிழர்கள், தம்வாழ்க்கையை 'அகம்' எனவும் 'புறம்' எனவும் இரு கூறாகப் பிரித்தனர். இதனை, அன்பின் வழிப்பட்டது 'அகவாழ்வு' எனவும், வீரத்தின் வெளிப்பாடு 'புறவாழ்வு' எனவும் கூறுவர்.

உருவத்தாலும், அகவையாலும், அறிவாலும் ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்வதே அகவாழ்வாகும். தலைவனும், தலைவியும் தாம்துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்வாகும். இதுவே அகத்திணையாகும். அகத்திணை ஐந்து வகைப்படும். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். பொருந்தாக் காதலைப் பெருந்திணை எனவும், ஒருதலைக் காதலைக் 'கைக்கிளை' எனவும் புற ஒழுக்கத்தை ஏழு திணைகளாகவும் கூறுவர். அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது.

உரிப்பொருளான காதலைக் கற்பனை செய்து பாடும்போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு, பூ, மரம் முதலான கருப்பொருள்களைப் பின்னணியாக அமைத்துப் பாடும் மரபு, நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.

புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை எனப்படும். தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப் பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன. மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது 'பாடாண்திணை' ஆகும். மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் 'பொதுவியல் திணையில்' அடக்கிக் கூறுவர்.

வினாக்கள்

1. அக வாழ்வு என்பது யாது?
2. கருப்பொருள்கள் எனக் குறிப்பிடப்படுவன யாவை?
3. பாடாண்திணை - பொதுவியல் திணை வேறுபடுத்துக.
4. போர் குறித்த புறத்திணைகள் பற்றி எழுதுக.

5. தமிழர்கள் வாழ்க்கை முறையை எவ்வாறு பகுத்தனர்?

**பயிற்சி - 3**

‘விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள ‘விருந்து‘என்னும் சொல் ‘புதியது’ என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தோன்றிய ‘விருந்தினர்’ என்ற சொல்லும் அறிந்தவர், தெரிந்தவராகிய சுற்றத்தார் அல்லது முன்பின் அறியாதவர்கள், வீடு தேடி வருவோரையும் குறிப்பதாகும். இவர்களை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பலாகும். பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு, நம் தமிழர்களையே சாரும். தொல்காப்பியக் காலம் முதல் இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வருகிறது.

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா

மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று

என்னும் குறட்பா இக்கூற்றை விளக்குகிறது. இளங்கோவடிகள் ‘தொல்லோர் சிறப்பின்’ என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால், தமிழரின் தொன்மையான பழக்கம் விருந்தோம்பல் என்பதை அறியலாம்.

விருந்தோம்பும் பண்பு கணவன், மனைவியின் தலையாய கடமை எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெடும்பயணம் மேற்கொள்பவர்களால் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடன்கொண்டு செல்வது என்பது இயலாத செயல். அவ்வாறு உணவின்றிப் பயணம் மேற்கொண்டு வருபவர்களுக்கு வழியிலுள்ள வீடுகளில் உள்ளோர் உணவளிப்பர். சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர், அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவளிப்பர் என்பதை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

விருந்தினர் இரவில் காலம் கழித்து வரினும் மனம் மகிழ்ந்து விருந்தோம்பினர். இரவில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நெய் கலந்த இறைச்சியைச் சமைத்துக் கொடுப்பது அன்றைய வழக்கமாகும். பசி என்று வந்தவர்களை வெளியே நிற்க வைத்துவிட்டுத் தாம் மட்டும் உணவு உண்பதை விரும்ப மாட்டார்கள். இதனையே, விருந்தோம்பல் முறை என்று தமிழர்கள் வகுத்திருந்தனர். விருந்தினரிடம் முகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தமக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசுவைப் போல அன்புகாட்டி நெகிழச் செய்வர்; விருந்தினர் மனம் மகிழும்படி விண்மீன்கள் போன்ற ஒளிவீசும் கிண்ணங்களில் பல வகையான உணவினைப் படைப்பர்.

தமிழர்கள், தமது வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்த பிறகே, தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போன்றே இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பினர்

என்பதை ஔவையார் பாடல் மூலம் அறியலாம். ஆயர்கள், மாடு மேய்க்கப் புறப்படும்போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு, மாட்டின் கழுத்தில் கட்டுவர். காட்டுவழியே செல்லும்போது, அவ்வழியாகப் பசியோடு வருபவர்களுக்குத் தாம் வைத்திருக்கும் உணவினைப் பகிர்ந்து கொடுப்பர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை ‘மடைநூல்’ குறிப்பிடுகிறது. உணவுப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை அந்நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

வினாக்கள்

1. விருந்தோம்பல் என்றால் என்ன?
2. மடை நூலின் சிறப்பு யாது ?
3. உணவு பற்றிய நூல்கள் யாவை?
4. தமிழர்கள் வகுத்திருந்த விருந்தோம்பல் முறை பற்றி எழுதுக.
5. விருந்தினர்கள் குறித்து ஔவையார் குறிப்பிடுவது யாது?

**பயிற்சி - 4**

திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் எனவும் தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும் பிராகுயி முதலானவை வடதிராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர். சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

சான்று : மூன்று - தமிழ். மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி - துளு. திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன. சான்று : அடி – குறில், ஆடி – நெடில்

திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால், வடமொழியில் இவ்வாறு அமையவில்லை. உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன. ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய்-ஆண்பால், மூக்கு - பெண்பால், கண் - பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை. தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன் – மந்தி; களிறு – பிடி)

ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொல் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண், இடம் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டு: வந்தான்- உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை

இவ்வியல்புக்கு மாறாக மலையாள மொழி மட்டுமே அமைந்துள்ளது. அம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பால் காட்டும் விகுதிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு

திராவிடமொழிகள் சில பொதுப்பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவற்றுள் தமிழுக்கென்று சில சிறப்புக் கூறுகளும் தனித்தன்மைகளும் உள்ளன.

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழி களைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந் துணையாக அமைந்துள்ளது. தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

வினாக்கள்

1. ஆண்பால் பெண்பால் பற்றிய திராவிட மொழிகளின் அணுகுமுறை யாது?
2. திராவிடமொழிகளின் பிரிவுகள் யாவை?
3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
4. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?
5. திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்வதன் மூலம் அறியப்படுவது யாது?

**பயிற்சி - 5**

தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணை புரிபவை இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களுமாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை முறைகளைப் பற்றிக் கூறுகிறது. சங்க இலக்கிய நூல்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அக்கால மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

சங்க இலக்கியங்கள் அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என 'அன்பின் ஐந்திணையாகப்' பகுத்துள்ளன. இதன் மூலமாக நிலம், பொழுது ஆகியவை முதற்பொருளாகவும், வழிபடு தெய்வம், வழிபாட்டுமுறைகள், வாழ்க்கைமுறை, விளையும் பொருள்கள் ஆகியவை கருப்பொருளாகவும், காதல் வாழ்வு, அதன் வழியாகத்தோன்றும் பல்வேறு உணர்வு நிலைகள் ஆகியவை உரிப்பொருளாகவும் பாகுபடுத்தி விளக்கப்பட்டுள்ளன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை, சங்ககாலப் புலவராகிய கணியன் பூங்குன்றனாரைச் சாரும். சேர மன்னர்களின் வணிகமுறை, ஆட்சிச்சிறப்பு, போர்த்திறம், கொடைத்திறம் முதலானவற்றைப் பற்றிப் பதிற்றுப்பத்து விரிவாக விளக்குகிறது. இசைப்பாடலாகிய பரிபாடல், பாண்டியர்களின் தலைநகரமாகிய மதுரையின் சிறப்பையும், வையை ஆற்றின் சிறப்பையும், திருமால், முருகன் போன்ற தெய்வங்களை வழிபட்ட முறைகளையும் பாடுகிறது. பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களுக்கு இலக்கணமாக,

“ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்“

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தம்மைப் போன்று வறுமையில் வாடும் பிறரும் வளம் பெற்று வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகின்ற பெருமனம் படைத்தவர்களாகப் புலவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் புலப்படுத்துகின்றன. குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும் நிலவளம், காதலின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. நெடுநல்வாடை காதலையும், வீரத்தையும் ஒருசேரப் பேசுகிறது. மதுரைக்காஞ்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்பைக் கூறுகிறது. அதில் கூறப்பட்டுள்ள நிலையாமை குறித்த கருத்துகள்கூட, பாண்டிய மன்னன், காலத்தால் ஆற்ற வேண்டிய கடமைகளின் நினைவூட்டலாகவே அமைந்துள்ளன. சோழநாடு, தரைவழி வணிகத்தாலும் கடல் வழி வணிகத்தாலும் வளம் பெற்றிருந்ததனை 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' என்று பட்டினப்பாலைச் சொற்றொடர் குறிப்பிட்டுச் சொல்கிறது.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், தமிழர் ஆட்சிமுறை, ஆடல், பாடல், கலைவளம் மற்றும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களின் சிறப்புகள், வணிகச்சிறப்பு, சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், தனிமனித ஒழுக்கம், நீதி வழங்கும் முறைமை ஆகியவை பற்றி விரிவாகப்பேசும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

மணிமேகலை, சமய அறக் கருத்துகளையும் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கின்றது. பல்வேறு குற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலமே குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தமுடியும் என்பது, மணிமேகலையின் மையக் கருத்தாகும். பசியைப் பிணியாக உருவகம் செய்து, அதைப் போக்கவேண்டிய அவசியத்தையும் கூறுகின்ற புரட்சிக்காப்பியம் மணிமேகலையாகும்.

வினாக்கள்

1. அன்பின் ஐந்திணை பற்றி எழுதுக?
2. கருப்பொருள் உரிப்பொருள் பட்டியலிடுக.
3. பதிற்றுப்பத்தின் மூலம் அறியப்படுவன யாவை?
4. சிலப்பதிகாரம் ஓர் வரலாற்று ஆவணம் என்பதை எவ்வாறு நிறுவுவாய்?
5. ஆற்றுப்படைஅல்லாத நூல்கள் மூலம் அறியப்படும் செய்திகளை புலப்படுத்துக.

**பயிற்சி - 6**

தமிழகத்தில் வணிகம் செய்ய வந்த வெளிநாட்டவரான யவனர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், புனிதப்பயணம் மேற்கொண்டவர்கள் போன்றவர்களின் குறிப்புகளில், தமிழகம் பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினை அறிய முடிகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்' என்னும் நூலின் பதிப்புரையில், கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும் பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது.

ரோமாபுரி அரசன் அகஸ்டஸின் சமக்காலத்தவரான ஸ்டிராபோ (Strabo) என்பவர் எழுதிய 'பூகோள நூல்', பிளினி எழுதிய உயிரியல் நூல், தாலமி எழுதிய பூகோள நூல் ஆகியவை பண்டைய தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன.

சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்கும் இடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளூஸ் என்ற நூல் கூறுகின்றது.

கி.மு.(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிரேக்கர்கள், தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் பல தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழியில் இடம் பெற்றிருந்தன. 'அரிசி' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் 'அரிஸா' என்றும், கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச்சொல் 'கார்ப்பியன்' என்றும், இஞ்சிவேர் சின்ஞிபேராஸ் என்றும், பிப்பாலி பெர்ப்பெரியாகவும் உருமாற்றம் அடைந்தன.

சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற துகிம் (மயில்தோகை), ஆல்மக் (அகில் மரங்கள்), பிற மதிப்புயர்ந்த பொருள்களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை. தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாயின. அயல்நாடுகளுக்குப் புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டைநாய்கள் ஆகியவற்றைத் தமிழகம் ஏற்றுமதி செய்தது. அவற்றுள், தமிழகத்து வேட்டைநாய்கள், தரத்தில் மேலானவை எனப் போற்றப்பட்டன.

சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களான தொண்டியைத் 'திண்டிஸ்' என்றும், முசிறியை 'முஸிரிஸ்' என்றும், பொற்காட்டைப் 'பகரி' என்றும், குமரியைக் 'கொமாரி' என்றும் ரோமர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழகத்தின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் 'கொல்சாய்' என்றும், நாகப்பட்டினத்தை 'நிகாமா' என்றும், காவிரிப்பூம்பட்டினத்தைக் 'கமரா' என்றும், புதுச்சேரியைப் 'பொதுகே' என்றும், மரக்காணத்தைச் 'சோபட்மா' என்றும், மசூலிப்பட்டினத்தை 'மசோலியா' என்றும் அந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஹிப்பாகிரேட்டஸ் என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் கி.மு. (பொ.ஆ.மு.) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். இவர் மிளகை 'இந்திய மருந்து' என்றே குறிப்பிட்டுள்ளார். பண்டைய தமிழகத்திலிருந்து மஸ்லின் துணியும், ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்களும் ஏற்றுமதியாயின. தமிழகம் அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவின.

வினாக்கள்

1. தமிழகம் பிற நாடுகளுடன் இருந்த தொடர்பை எவ்வாறு அறியலாம்?
2. தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிய சான்றுகள் பட்டியலிடுக.
3. தமிழகம் ஏற்றுமதி செய்தனவற்றைப் பற்றி எழுதுக.
4. வெளிநாட்டவரின் குறிப்புகளின் பயன்கள் யாவை?
5. தமிழகத் துறைமுகங்களின் பெயர்களை எழுதுக.

**பயிற்சி - 7**

தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மைகொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

வினாக்கள்

1. மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய கட்டுரைகள் யாவை?
2. சீனி வேங்கடசாமி எழுதிய நூல்கள் யாவை?
3. களப்பிரர் பற்றிய சீனி வேங்கடசாமியின் பங்களிப்பு என்ன?
4. சீனி வேங்கடசாமியின் சிறப்புகள் யாவை?
5. தமிழ் ஆய்வு வரலாற்றில் சீனி வேங்கடசாமியின் பங்களிப்பு என்ன?

**பயிற்சி - 8**

“பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள்; நமது நாடு நாடாயிருக்கிறதா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயம் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன; இந்நோய்களால் குருதியோட்டங்குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள். இள ஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இளஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள்” என்று இளமைவிருந்து நூலில் தமிழினைச் செழுமையுறச்செய்ய இளைஞர்களை அழைத்தவர் திரு.வி.க.

திரு.வி.க தம் தந்தையிடம் தொடக்கத்தில் கல்வி பயின்றார். வெஸ்லி பள்ளியில் படித்தபோது, நா. கதிரைவேலர் என்பவரிடம் தமிழ் படித்தார். பிறகு மயிலை தணிகாசலம் என்பவரிடம் தமிழோடு சைவ நூல்களையும் பயின்றார். ‘தமிழ்த்தென்றல்’ என்று அழைக்கப்படும் திரு.வி.க. பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய பல நூல்களை எழுதினார். சிறந்த மேடைப்பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய இவர் தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராகவும் விளங்கினார்; தமிழ் அறிஞர்களுள் அரசியல் இயக்கங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டவராக இருந்தார். தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். இலக்கியப்பயிற்சியும் இசைப்பயிற்சியும் பெற்றவர்.

வினாக்கள்

1. நாடு குறித்து தெரிவித்த கருத்து என்ன?
2. நாட்டில் உண்டாகும் நோய்கள் பற்றி எழுதுக?
3. இளைஞர்களை ஏன் திருவிக அழைத்தார்?
4. திருவிக எழுதிய நூல்கள் யாவை?
5. திருவிக அவர்களின் தமிழ்ப்பணி பற்றி எழுதுக?

**பயிற்சி - 9**

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர் உடனே 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் – சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

**பயிற்சி - 10**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என் கண்மணியே, நீ சொல்வது எள்ளளவுஞ் சரியல்ல. கல்வி என்கிற பிரசக்தியே இல்லாதவர்களான சாமானிய பாமர ஜனங்களைப் பார். அவர்களுடைய செய்கைகளுக்கும் மிருகங்களுடைய செய்கைகளுக்கும் என்ன பேதமிருக்கிறது? நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?" என்றார்.

## கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்

### அலகு- 4
### சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல்

### TNPSC மாதிரி வினா

பொங்கல் – தை மாதம் – போகிப் பண்டிகை – திருநாள் – கதிரவனுக்கு நன்றி – உழவர் – ஏறுதழுவல் – காணும் பொங்கல் – உறவுகள் – சுற்றுலா.

**விடை**

**பொங்கல் திருவிழா**

பொங்கல் விழா, உலகில் வாழும் தமிழர்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பயிர்கள் செழிக்கவும், விளைச்சல் பெருகவும், கதிரவனே முதன்மைக் காரணமாக விளங்குகிறான். எனவே, உழவர் பெருமக்கள் கதிரவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகப் பொங்கல் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர். இப்பண்டிகை போகி, பொங்கல் திருநாள், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் எனக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**போகிப் பண்டிகை**

இப்பண்டிகை, ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. பயனற்ற பழைய பொருள்களையும், மனித மனத்தில் உள்ள தேவையற்ற எண்ணங்களையும் போக்குவதே போகிப்பண்டிகையின் நோக்கமாகும். இப்பண்டிகை நாளன்று வீட்டைச் சுத்தப்படுத்தி, வீட்டின் தலைவாசல் உள்ளிட்ட நிலைக்கதவுகளுக்கு மஞ்சளும் சந்தனமும் பூசுவர். அன்றைய மாலைப் பொழுதில் வாசற்கூரையில் வேப்பிலை, பூளைப்பூ, ஆவாரம்பூ ஆகியவற்றைக் கொண்டு காப்புக் கட்டுவர்.

**பொங்கல் திருநாள்**

உழவர் பெருமக்கள் ஆடி மாதத்தில் விதைத்த பயிர்களைத் தை மாதம் அறுவடை செய்வர். முதல் விளைச்சலை கதிரவனுக்குக் காணிக்கையாகப் படைப்பதே பொங்கல் திருவிழா ஆகும். பொங்கல் அன்று பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்துமே புதியனவாக இருக்க வேண்டும் என்பதற்காகப் புதிய கற்களாலான அடுப்பு, புதிய மண்பானை, புதிய அகப்பை, தூயபசுஞ் சாணத்தாலான வறட்டி போன்றவற்றைப் பயன்படுத்துவார்கள்.

வீட்டு வாசலில் பொங்கலிடும் இடத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிடுவார்கள். அன்றலர்ந்த மலர்களையே வழிபாட்டிற்குப் பயன்படுத்துவார்கள். பொங்கல் வைக்கும் பானையை மஞ்சள், குங்குமம், இஞ்சி, மஞ்சள் கொத்து ஆகியவற்றால் அலங்கரிப்பர். புதிதாக அறுவடை செய்த நெல்லின் பச்சரிசியுடன் வெல்லம், கற்கண்டு, நெய், பால், முந்திரி, திராட்சை முதலியவற்றைக் கொண்டு பொங்கல் இடுவர். தங்கள் விளைநிலங்களில் விளைந்த செங்கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, கருணைக்கிழங்கு போன்றவற்றையும் சேர்த்துக் கதிரவனுக்கு வைத்து வழிபடுவார்கள்.

**மாட்டுப் பொங்கல்**

உழவுக்கும் உழவனுக்கும் உறுதுணையாக இருக்கும் காளைகளுக்கும், பசுக்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. மாட்டுப் பொங்கல் அன்று மாடுகளை அலங்கரித்து அவற்றுக்குப் பொங்கலைக் கொடுத்து மகிழ்வர். இதனைத்தொடர்ந்து, மாலையில் மஞ்சுவிரட்டு எனப்படும் 'ஜல்லிக்கட்டு விழா' நடைபெறும். அப்பொழுது, இளைஞர்கள் காளைகளை அடக்கித் தமது வீரத்தை வெளிப்படுத்துவர்.

பழங்காலத்தில் கால்நடைகளே நமது செல்வத்தின் அடையாளமாகத் திகழ்ந்தன. 'ஆயிரம் பசுவுடைய கோ நாயகர்' என்ற பட்டப் பெயர்களெல்லாம் புழக்கத்தில் இருந்தன. 'ஏரின் பின்னால் தான் உலகமே சுழல்கின்றது' என்கிறார் வள்ளுவர். அந்த ஏர் முனையை முன்னேந்திச் செல்பவை மாடுகளே. இதன் மூலம் மாடுகளே உழவர்களை உயிர்ப்போடு வைத்துள்ளன என்று கூறினாலும் மிகையாகாது.

**காணும் பொங்கல்**

காணும் பொங்கல், பகைமையை மறந்து உறவுகளைப் புதுப்பிக்கும் நாளாகும். அன்றைய தினம் மக்கள் தமது உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பெரியவர்களை வணங்கி, வாழ்த்துபெறும் நாளாகும். இவ்விழா நாளில் பட்டிமன்றங்கள் நடத்தியும், பாரம்பரிய விளையாட்டுகள் விளையாடியும் மகிழ்வார்கள். இவ்வாறு பண்டைய காலம் முதல் இன்று வரை பொங்கல் திருநாள், தமிழர் திருநாள் என்றும், உழவர் திருநாள் என்றும் சிறப்பான முறையில் உலகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

**பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல். (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

**பயிற்சி – 1**

இணையம் – இணைய வரலாறு – இணையச் செயல்பாடு – இணைய இணைப்பு – இணையத்தளம் – உலவி – தேடுபொறி.

**விடை**

**இணையம்**

இணையம் என்பது, உலக அளவில் பல கணினி வலை அமைப்புகளின் கூட்டிணைப்பான பெரும் வலையமைப்பாகும். இது உலகம் முழுவதும் உள்ள கணினிகளை இணைத்து, அவற்றில் உள்ள தகவல்களைப் பரிமாறிக்கொள்ள உதவுகிறது.

**இணைய வரலாறு**

அமெரிக்க இராணுவம் தனது கட்டளைகளையும் தகவல்களையும் பிற நாடுகள் அறியாவண்ணம் பாதுகாக்கவும், பரிமாறிக் கொள்ளவும் எண்ணியது. அதற்காகச் சார்லஸ் ஹெர்ஸ் ஃபீல்டு என்பவரை இயக்குநராகக் கொண்டு 1957இல் ஆர்பா நெட் என்ற அமைப்பை ஏற்படுத்தியது.

இவ்வமைப்பு எம்ஐடி என்ற கல்வி நிறுவனத்துடன் இணைந்து, புவிப் பரப்பில் பிரிந்துகிடக்கும் கணினிகளை இணைத்தது. அதன் அடிப்படையில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளத் தேவையான தொழில்நுட்பம் குறித்து ஆராய்ந்தது. ஆய்வின் முடிவில் தகவல் பரிமாற்றத்திற்காக 1966இல் தரவு மாற்றத் தொழில்நுட்பம் ஒன்றைக் கண்டறிந்தது. இத்தொழில்நுட்பம் இராணுவத்திற்கு மட்டுமல்லாது பல்கலைக் கழகங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

1969இல் அதிகாரப்பூர்வமாகச் செயல்படத் தொடங்கிய ஆர்பா நெட், 1971இல் ஹார்வர்டு பல்கலைக்கழகம், நாஸா உள்ளிட்ட 15 இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அதன்பின் 1974இல் வின்டர்ன் செர்ப், பார்ப் கான் ஆகியோர் விரைவான செய்திப் பரிமாற்றத்திற்கான தொழில்நுட்பத்தைக் கண்டறிந்தனர்.

1982இல் தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்துடன் செய்திப் பரிமாற்றத் தொழில்நுட்பம் (TCP), இணைய நெறிமுறை (IP) என்னும் இரு நெறிமுறைகளை உருவாக்கினர். 1982இல் ஓர் அறைக்குள் இருக்கும் கணினிகளை ஈதர்நெட் என்னும் வலை இடைமுக அட்டைகளைப் பயன்படுத்தி இணைத்தனர். இவ்விணைப்பிற்குக் குறும்பரப்பு வலைப்பின்னல் என்று பெயர்.

**இணையச் செயல்பாடு**

இணையத்தில், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல, குறிப்புகள் எழுதப் பயன்படும் நுட்பமே மீஉரைக் குறிப்பு மொழி. இது, தகவலின் தலைப்பாகவும் தகவல் பகுதியாகவும் பிரிக்கப்பட்டிருக்கும்.

இணையத்தளத்தில் தகவலைப் பெறுவதற்கான நெறிமுறைக்கு ‘‘புரொட்டக்கால்‘‘ என்று பெயர். ஓர் இணையத்தளத்தில் தகவல்கள் எந்தெந்த இடங்களில் எவையெவை இருக்க வேண்டும் என்பதை இந்நெறிமுறைகளைக்கொண்டு முன்பே தீர்மானிக்க இயலும்.

இணையத்தில் உள்ள தகவல்களைப் பெறுவதற்கான முகவரியே சீரான வள இடங்காட்டிகள் ஆகும். இவற்றைப் பயன்படுத்தியே இணைய உலவிகள் தகவல்களைக் கண்டறிந்து கேட்பவர்க்கு விரைந்து வழங்குகின்றன.

**இணைய இணைப்பினைப் பெற தேவையானவை**

கணினி அல்லது திறன்பேசியுடன் இணையத்தை இணைக்க, இணைப்பு வழங்கும் நிறுவனத்தின் மூலம் கணக்கைப் பெற்றுப் பயன்படுத்தலாம். இணையத்தைப் பயன்படுத்த விரிவான தொழில்நுட்ப அறிவோ, ஆங்கிலப் புலமையோ தேவையில்லை. சில அடிப்படைச் செயல்களைத் தெரிந்துகொண்டால் போதும்; நம் மொழியிலேயே எளிதாகப் பயன்படுத்தலாம்.

**இணையத்தளம்**

இணையத்தைப் பல்லூடகப் பகுதி எனலாம். இதில் உலகத்தின் பல சேவையகங்கள் இணைந்துள்ளன. இவை உரை, ஒலி. படங்கள், நகரும் படங்கள் முதலான பல்லூடகத் தகவல்களைச் சேமித்து வைத்து, கேட்போருக்குத் தருகின்றன. இதில் பலகோடிப் பக்கங்கள் உள்ளன. இவை இணையப் பக்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**உலவி**

இணையத்தில் உள்ள பக்கங்களைப் பார்ப்பது உலவுதல் எனப்படும். இதற்கு உலவி என்னும் மென்பொருள் உதவுகிறது. இது செய்தித்தளங்களிலிருந்து பக்கங்களைப் பெற்று, அவற்றைத் திரையில் காட்டுகின்றது.

**தேடுபொறி**

இணையத்திலும் கணினியிலும் நமக்குத் தேவையானவற்றைத் தேடித்தரும் செயலைச் செய்கின்ற ஒரு கணினி நிரலே தேடுபொறி. அது உலகமெங்கும் நிறுவப்பட்டுள்ள வழங்கிகளுக்குச் சென்று, அவற்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளில் நாம் கொடுத்துள்ள குறிப்பின்படி நமக்குத் தேவையான இணையத்தளங்களின் பட்டியல்களைத் தொகுத்துத் தரும்.

**பயிற்சி – 2**

இணையத்தில் தமிழ் – இணையத்தில் ஏறிய முதல் இந்திய மொழி – தமிழ் இணையத்தின் வளர்ச்சி –தமிழ் இணையக் கல்விக்கழகம் – மதுரைத்திட்டம் – தமிழ் விக்கிப்பீடியா.

**விடை**

**இணையத்தில் தமிழ்**

தமிழர்கள் தங்கள் வாழிடங்களை ஐந்திணைகளாக வரையறுத்தனர். இன்று விண்ணும் விண்சார்ந்த இணையமும் ஆறாம் திணையாக உருவெடுத்துள்ளது. தன் வளத்தால் வாழும் செம்மொழியான தமிழ், காலத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் தன்மையால் இன்று இணையத்திலும் கோலோச்சுகிறது.

**இணையத்தில் ஏறிய முதல் இந்திய மொழி**

1995இல் சிங்கப்பூரில் தொடங்கப்பட்ட மலாய், ஆங்கிலம், மாண்டரின், தமிழ் ஆகிய நான்கு தேசிய மொழிக் கவிதைகளுக்கான வலைத்தளத்தில் முதலில் அரங்கேறியது தமிழ். சிங்கப்பூர் நாவ்யாங் பல்கலைக்கழகப் பேராசிரியர் நா. கோவிந்தசாமி சீனக்கணினி வல்லுநர்களோடு இணைந்து ‘தமிழ்நெட்’ என்ற எழுத்துருவினை உருவாக்கி, இணையத்தில் தமிழ் இடம்பெறக் காரணமாய் இருந்தார். அவரால்தான் இணையத்தில் ஏறிய முதல் இந்திய மொழி என்ற பெருமை தமிழுக்குக் கிடைத்தது.

**தமிழ் இணையத்தின் வளர்ச்சி**

1996இன் இறுதியில் உலகெங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்கள் பலரும் தமிழ் எழுத்துருக்களை உருவாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். இணையத்தில் தமிழ்த் தகவல் பரிமாற்றத்திற்கான முதல் உலக மாநாடு 1997ஆம் ஆண்டு ‘தமிழ்நெட் 97’ என்ற பெயரில் சிங்கப்பூரில் நடைபெற்றது. அதில் தமிழ் எழுத்துரு குறித்துக் கணித்தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் கலந்துரையாடினர். 1999இல் நடைபெற்ற இரண்டாவது கணினி மாநாட்டில் கணித்தமிழ்ச் சங்கம் உருவானது.

அவ்வாண்டில் தமிழ்நாடு அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் ஆய்விற்குப்பின், ‘தமிழ் 99‘ விசைப்பலகை உருவாக்கப்பட்டது. பல்வேறு சோதனைகளுக்குப்பின், தமிழக அரசு அதனை ஏற்று அரசாணை வெளியிட்டது.

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் 2001ஆம் ஆண்டு பிப்ரவரி 17இல் நிறுவப்பட்டது. இந்தியாவில் இணையம் வழியே கல்வி வளங்களையும் வாய்ப்புகளையும் வழங்க நிறுவப்பட்ட முதல் அமைப்பாக இது விளங்குகிறது. 1999ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தமிழ் இணைய மாநாட்டின் நிறைவு விழாவில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. முழுநேர இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் செயற்படும் இது, தமிழ் இணையக் கல்விக்கழக ஆட்சிக்குழுவால் வழி நடத்தப்படுகிறது.

**மதுரைத்திட்டம்**

மதுரைத்திட்டம் எவ்வித அரசு, தனியார் உதவியோ, வாணிக நோக்கமோ இன்றி நடைபெறுகின்ற ஒரு தன்னார்வ முயற்சி. 1998ஆம் ஆண்டு தமிழர் திருநாள் அன்று தொடங்கப்பட்ட இத்திட்டம், இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. உலகில் வெவ்வேறு நாடுகளில் வாழும் முந்நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்களும் தமிழார்வலர்களும் ஒன்றுகூடி இத்திட்டத்தைச் செயலாக்கம் செய்து வருகின்றனர்.

அதற்கென உலகின் பல நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர்கள், கூட்டு முயற்சியாக அவரவர் தங்களுக்குக் கிடைக்கும் நேரங்களில் தமிழ் இலக்கியங்களைக் கணினியில் உள்ளிட்டு, பிழை திருத்தி மின்பதிப்புகளாகத் தயாரிக்கின்றனர். பின்னர் இவற்றை மதுரைத் திட்டத்தில் பதிவேற்றம் செய்கின்றனர். தமிழ் இலக்கியங்களை மின்நூல்களாகப் பாதுகாத்துப் பகிர்ந்து கொள்வதில் விருப்பமுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறலாம்.

**தமிழ் விக்கிப்பீடியா**

கட்டற்ற பன்மொழிக் களஞ்சியத் திட்டமான விக்கிப்பீடியாவின் ஒரு பகுதியே தமிழ் விக்கிப்பீடியா. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட விக்கிமீடியா அறக்கட்டளை எனப்படும் வாணிக நோக்கற்ற அமைப்பு இதனை நிருவகித்து வருகிறது. உலகெங்கும் உருவாகும் தமிழின் அறிவுத்தொகுப்பைத் திரட்டி, கட்டணமின்றியும், காப்புரிமைகள் போன்ற கட்டுப்பாடுகள் இன்றியும் அனைவருக்கும் வழங்குவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

**பயிற்சி – 3**

தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பம் – எழுத்துரு – குறியேற்றம் – விசைப்பலகை – தட்டச்சு இடைமுகச் செயலி – கையெழுத்து உணரி – ஒளி வழி எழுத்தறிவான் – பேச்சுரை மாற்றி – தமிழ்ச் சொற்செயலி – சொற்பிழை திருத்தி – சந்திப்பிழை திருத்தி – தமிழ்ச்சொல் சுட்டி – இலக்கணப்பிழை திருத்தி – மின் அகராதி – இயந்திர மொழிபெயர்ப்பு.

**விடை**

**தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பம்**

தமிழைக் கணினிக்குக் கொண்டுசெல்லும் பொருட்டுப் பல பயன்பாட்டு உள்ளீட்டுக் கருவிகளும் மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தித் தமிழை உள்ளீடு செய்வதற்குக் கீழ்க்காணும் தொழில்நுட்பங்கள் அடிப்படையாய் அமைகின்றன.

**எழுத்துரு**

ஆதிகாலத்தில் கையால் எழுத்துகளை எழுதிய மனிதன் அச்சுப்பொறி வந்தபிறகு அச்சிலும் தட்டச்சிலும் பதிக்கப்படும் எழுத்துகளுக்குரிய உருக்களை வடித்தான். கணினியில் எழுத்துகளை உள்ளீடு செய்ய எழுத்து வரிவடிவங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு வடிக்கப்பட்டு உருவாக்கப்படும் ஒரு மொழியின் எழுத்து வரிவடிவம் 'எழுத்துரு' (Font) எனப்படும்.

**குறியேற்றம்**

உருவாக்கப்பட்ட எழுத்துருக்களைக் கணினியில் பயன்படுத்த வேண்டுமானால், அம்மொழியின் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வோர் எண்ம மதிப்பைக் கொடுக்க வேண்டும். ஏனெனில், கணினி 0,1 ஆகிய இரும (Binary) எண்களைத்தான் புரிந்து கொள்ளும். இவ்வாறு எழுத்துகளுக்கு எண்ம மதிப்பை வழங்குதலே 'குறியேற்றம்' (Encoding) எனப்படுகிறது.

**விசைப்பலகை**

விசைப்பலகை அல்லது தட்டச்சுப்பலகை கணினியில் தகவல்களை உள்ளீடு செய்ய உதவும் ஓர் உள்ளீட்டுக் கருவியாகும். விசைப்பலகை எழுத்துகள், எண்கள், குறிகள், கட்டளைகள் ஆகிய விசைகளைக் கொண்டிருக்கும். தேவைக்கேற்ப இந்த விசைகளைத் தட்டுவதன்மூலம் கணினிக்குக் கட்டளைகளையும் உள்ளீடுகளையும் வழங்கலாம்.

**தட்டச்சு இடைமுகச் செயலி**

தற்போது கணினியில் எளிமையாகத் தமிழைத் தட்டச்சு செய்ய, பல இடைமுகச் செயலிகள் பயன்பாட்டில் உள்ளன. ரோமன் விசைப்பலகை கொண்டு இடைமுகச் செயலிகள் வழியாகத் தமிழ் எழுத்துகளை நாம் உள்ளீடு செய்யலாம். அவற்றுள் சில இடைமுகச் செயலிகளைக் கீழ்க்காணும் இணையத்தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். ஆங்கிலம் தெரிந்தால்தான் கணினியைப் பயன்படுத்த முடியும் என்ற நிலையை இந்த இடைமுகச் செயலிகள் மாற்றியுள்ளன.

**கையெழுத்து உணரி**

கையெழுத்து உணரி என்பது நம் கையெழுத்தை மின்வரிகளாக மாற்றும் தொழில்நுட்பமாகும். இந்த மென்பொருளைக் கொண்டு கையால் எழுதினால் அவற்றை உடனடியாக மின்வரிகளாகப் பெறமுடியும். இவ்வசதியைப் பயன்படுத்த விசைப்பலகைக்குப் பதிலாக உங்கள் விரல்களைக் கொண்டோ எழுதுகுச்சி கொண்டோ சுட்டியை அழுத்திப் பிடித்து எழுதும் முறையிலோ நேரடியாகத் திரையில் எழுதலாம்.

**ஒளி வழி எழுத்தறிவான**

வருடியால் நகலெடுக்கப்பட்ட தட்டச்சு, கையெழுத்து ஆவணங்களையும் புகைப்படத்திலுள்ள வரி ஆவணங்களையும் ஒளி வழி எழுத்தறிவான் மூலமாக மின்வரிகளாக மாற்றலாம். கூகுள் வழங்கும் ஒளி வழி எழுத்தறிவான் சிறப்பாகச் செயல்படுகிறது. மின்னூல் ஆக்கத்திற்கும் கையெழுத்துப் படிகளை மின்வரிகளாக மாற்றுவதற்கும் இம்மென்பொருள் உதவுகின்றது.

**பேச்சுரை மாற்றி**

இந்த மென்பொருள் தமிழில் நாம் பேசுவதை மின்எழுத்துகளாக மாற்றித் தரும். கூகுள் நிறுவனம் இந்தக் குரல்வழி உள்ளிடும் வசதியை ஜி போர்டு என்னும் செயலி மூலம் வழங்குகிறது. யாருடைய பேச்சையும் எழுத்து வடிவமாக்க இம்மென்பொருள் உதவுகின்றது.

**தமிழ்ச் சொற்செயலி**

தமிழ்மொழியைக் கணினியில் உள்ளீடு செய்யும்போது ஏற்படும் சொற்பிழை, எழுத்துப்பிழை, சந்திப்பிழை, இலக்கணப்பிழை போன்றவற்றைக் கணினி புரிந்துகொண்டு, அவற்றில் உள்ள பிழைகளைச் சரிசெய்து தருவதற்கான மென்பொருளையே தமிழ் சொற்செயலி என்கிறோம். மென்தமிழ், பொன்மொழி போன்ற சொற்செயலிகள் இதற்குப் பயன்படுகின்றன.

**சொற்பிழை திருத்தி**

தட்டச்சில் ஒரு சொல்லை உள்ளிட்டவுடன் அதில் ஏதேனும் எழுத்துப் பிழை இருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவதோடு அதற்குச் சரியான பரிந்துரையைக் கொடுப்பதும் தமிழ்ச் சொற்பிழை திருத்தியின் பணியாகும்.

**சந்திப்பிழை திருத்தி**

தட்டச்சு செய்யும்போது இரண்டு சொற்களுக்கு இடையில் ஏற்படும் சந்திப் பிழைகளைச் சரிசெய்யும் மென்பொருளுக்குச் சந்திப்பிழை திருத்தி என்று பெயர். இது விடுபட்ட ஒற்றுகளை இடுவதுடன், தவறாக இடப்பட்ட ஒற்றுகளையும் சரிசெய்யும்.

**தமிழ்ச்சொல் சுட்டி**

கணினியில் தமிழைப் பயன்படுத்தும்போது தமிழ்ச் சொற்களுடன் பிறமொழிச் சொற்கள் கலந்து அப்படியே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை நீக்கித் தனித்தமிழில் எழுதுவதற்குத் துணை செய்யும் வகையில் பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களை மாற்றித்தரும் மென்பொருள் தமிழ்ச்சொல் சுட்டி என்பதாகும்.

**இலக்கணப்பிழை திருத்தி**

கணினியில் தமிழைப் பயன்படுத்தும்போது ஏற்படும் ஒருமை-பன்மை மயக்கம், உயர்திணை-அஃறிணை மயக்கம், சொற்றொடர் பிழை போன்றவற்றைக் கண்டறிந்து, திருத்தித் தருவதை இலக்கணப்பிழை திருத்தி என்கிறோம்.

**மின் அகராதி**

மின்னணு அகராதி என்பது எண்ம வடிவத்தில் தரவுகளைக் கொண்ட அகராதியாகும். பல்வேறுபட்ட மின்னணு சாதனங்களின் மூலம் இவ்வகராதிகளை நாம் அணுகலாம். கணினிகள், திறன்பேசிகள், இணையப்பயன்பாடுகள், நிறுவப்பட்ட மென்பொருள்கள், திறன்பேசிச்செயலிகள், இணையச்செயலிகள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் மின்னணு அகராதிகள் கிடைக்கின்றன.

**இயந்திர மொழிபெயர்ப்பு**

ஒரு செய்தியை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மென்பொருள்மூலம் மொழிபெயர்க்கும் முறை இயந்திர மொழிபெயர்ப்பாகும். கூகுள் மொழிபெயர்ப்பி என்ற இணையவழி மொழிபெயர்ப்பு மென்பொருள் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் பயன்பட்டு வருகின்றது.

**பயிற்சி – 4**

இணைய ஊடகம் – மின்னஞ்சல் – வலைப்பூ – விக்கிப்பீடியாவில் எழுதுதல் – சமூக ஊடகங்கள் –முகநூல் – கீச்சகம் – புலனம்/கட்செவி –இசுகை –இணையப்பாதுகாப்பு.

**விடை**

இன்றைய இணையவெளியில் மின்னஞ்சல், வலைப்பூ, இணைய இதழ்கள், முகநூல், கீச்சகம், புலனம், இசுகை போன்ற எண்ணற்ற தகவல் பரிமாற்ற ஊடகங்கள் மக்கள் பயன்பாட்டிற்கெனக் கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்திக் கல்வி, சமூகம் சார்ந்த செயல்பாடுகளில் நாம் ஆக்கப்பூர்வமாக ஈடுபடலாம்.

**மின்னஞ்சல்**

கணினிகளுக்கிடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல் சேவையாகும். இணையத்தில் மின்னணுத் தொடர்புக் கருவிகளைக்கொண்டு செய்திகள், படங்கள், காணொலிகள், கோப்புகள் முதலானவற்றைச் சிலநொடிகளில் பரிமாறிக் கொள்ளலாம். கூகுள், யாகூ, ரெடிஃப்மெயில், வேர்டுபிரஸ் போன்ற உலகின் பெரும்பான்மையான மின்னஞ்சல் நிறுவனங்கள் இச்சேவையைக் கட்டணமின்றி வழங்குகின்றன.

இத்தகைய நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் நாம் மின்னஞ்சல் பயனர் கணக்கைத் தொடங்கவேண்டும். அதற்கான படிவத்தில் நம் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். அதன் மூலம் மின்னஞ்சல் முகவரி ஒன்றையும் கடவுச்சொல் ஒன்றையும் நாம் பெறலாம். தற்போது பல இணையத்தளங்கள் பயனரின் நம்பகத் தன்மையை மின்னஞ்சல் முகவரியைக் கொண்டே உறுதி செய்கின்றன. இதனால் இணையத்தின் சேவையை முழுமையாகப் பயன்படுத்த மின்னஞ்சல் முகவரி தேவைப்படுகிறது.

**வலைப்பூ**

இணையவெளியில் வழங்கப்படும் நமக்கான கட்டணமில்லா ஊடகக்களமே வலைப்பூ. ஒரு குறிப்பிட்ட தனிநபரோ குழுவோ தாம் விரும்பும் வகையில் செய்திகளைத் திரட்டி, படைப்புகளைத் தாமே எழுதி, பிறவகைகளில் சேகரித்துப் பதிவு செய்யும் ஊடகமே வலைப்பூ. இதில் ஒலிஒளி வசதிகளைப் பயன்படுத்துவது கூடுதல் சிறப்பு.

**விக்கிப்பீடியாவில் எழுதுதல்**

தமிழ் விக்கிப்பீடியாவில் நம் பயனர் கணக்கின்வழியே சென்று கட்டுரைகளை எழுதலாம். அதில் எழுதும்போது ஒரு கட்டற்ற தகவல் கலைக்களஞ்சியம் அது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். அதில் புனைவு இலக்கியங்கள், தனிப்பட்ட ஆளுமைகள் குறித்த கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள் போன்றவற்றை எழுதமுடியாது. தகவல் கட்டுரைகளை எழுதவோ, ஏற்கெனவே உள்ள கட்டுரைகளைச் சான்றுகளின் அடிப்படையில் திருத்தவோ முடியும்.

**சமூக ஊடகங்கள்**

சமூக ஊடகங்கள் நட்புக்கெனத் தொடங்கிய நிலைமாறி, இன்று பொது நோக்கத்திற்காக இணைந்து செயலாற்றும் களங்களாக உயர்ந்துள்ளன. அவை அவசரக் காலங்களில் மக்களை விரைவாக ஒருங்கிணைக்கக்கூடிய வலிமையான கருவிகளாக உள்ளன. அவற்றுள் முகநூல், புலனம், கீச்சகம் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

**முகநூல்**

இணையத்தில் உலகளாவிய நண்பர்கள் குழுவை உருவாக்கித் தம்முடைய தகவல்கள், காணொலிகள், புகைப்படங்கள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளும் சமூக ஊடகமே முகநூல். இதில் விருப்பங்களையும் பின்னூட்டங்களையும் உடனுக்குடன் பெறமுடியும். இதில் மாணவர் குழுக்களை அமைத்து, கல்விச் செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்தலாம். தமிழ் அறிஞர்களை மாணவர்களுடன் கலந்துரையாட

வைக்கலாம். தமிழ் மொழி, கலை, இலக்கியம் சார்ந்த நண்பர்கள் குழுக்களுடன் இணைந்து நம்முடைய கருத்துகளைப் பகிரலாம்.

**கீச்சகம்**

செல்பேசியில் குறுந்தகவல் அனுப்புவதுபோல் இணையத்தின்வழி குறுந்தகவல் அனுப்பப் பயன்படும் சமூக ஊடகமே கீச்சகம். இதில் சொற்கள், படங்கள், சிறுகாணொளிகளைப் பதிவிடலாம். நம்மை யார் பின்தொடர்கிறார்கள், நாம் யாரைப் பின்தொடர்கிறோம் என்ற அடிப்படையில் கீச்சகம் அமைகிறது.

**புலனம்/கட்செவி**

திறன்பேசியில் தனிப்பட்ட முறையிலும் நண்பர்கள் குழுக்களை உருவாக்கியும் தங்களுக்குள் தகவல்கள், காணொலிகள், புகைப் படங்கள் போன்ற வற்றைப் பகிர்ந்து கொள்ளும் சமூக ஊடகச் செயலியே புலனம். இன்று பெருமளவில் எளிதாகத் தகவல் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் ஊடகமாக இது விளங்குகிறது. கல்வி நிறுவனங்கள் பாடவாரியாகக் குழுக்கள் அமைத்துக் கல்விச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம்.

**இசுகை**

உலகின் எந்தவோர் இடத்தில் உள்ளவருடனும் இணையத்தின்வழிக் கட்டணமின்றிப் பார்க்கவும் பேசவும் வழிசெய்யும் ஊடகமே இசுகை. இதில் ஒருவர் மற்றொருவருடனோ, பலருடனோ சொற்கள், ஒலி, காணொலி வழியாகத் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல், முகநூல், கீச்சகம் போன்று இதற்கும் கணக்குத் தொடங்கவேண்டும்.

**இணையப்பாதுகாப்பு**

இணையம் சார்ந்த அனைத்துப் பரிமாற்றங்களையும் நமக்கான தனிப்பட்ட கணினி, திறன்பேசி ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளுதல் நலம். நமது அனைத்துப் பயனர் கணக்குகளின் கடவுச்சொற்களை யாருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. பாதுகாப்பற்ற இணையத்தளங்களில் பதிவேற்றவோ, பதிவிறக்கவோ கூடாது. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரும் தகவல்களைத் தவிர, பிறவற்றைக் மிகக்கவனமாகக் கையாளவேண்டும்.

**பயிற்சி – 5**

செல்பேசி – செல்பேசி வரலாறு – முதல் செல்பேசி – செல்பேசி தலைமுறைகள் – திறன்பேசி – முதல் திறன்பேசி – வன்பொருள் – மென்பொருள் – செயலி.

**விடை**

**செல்பேசி**

உலக மக்கள் தொகையில் இன்று பெரும்பாலானோர்களால் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பக் கருவி என்னும் பெருமையைச் செல்பேசி பெற்றுள்ளது. கல்வி, வணிகம், வேளாண்மை, ஊடகம் போன்ற வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இன்று செல்பேசி இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.

**செல்பேசி வரலாறு**

அலெக்சாண்டர் கிரஹாம்பெல் 1876 ஆம் ஆண்டு ''தொலைபேசி'' என்ற கருவியை உருவாக்கினார். அதனைத் தொடர்ந்து கம்பிவழி ஒலியைக் கடத்தும் தொலைபேசி பற்பல வளர்ச்சிகளைக் கண்டது. ஆனாலும் அக்கருவியை விரும்பும் இடத்திற்கு ஒருவர் தம்முடன் எடுத்துச் செல்ல இயலாதிருந்தது. இந்நிலையை மாற்றி, தாம் செல்லும் இடத்திற்கு எல்லாம் எடுத்துச் செல்லக்கூடிய கம்பியில்லா அலைவரிசை வழியாகப் பேசும் ''மொபைல்ஃபோன்'' [Mobile Phone] என்றழைக்கப்பட்ட ''செல்பேசி''யை மோட்டோரோலா நிறுவனம் 1973 ஆம் ஆண்டு உருவாக்கியது.

**முதல் செல்பேசி**

மோட்டோரோலாவின் ஆய்வாளர் மார்ட்டின் கார்ல் கூப்பர் என்பவர் 1973 ஆம் ஆண்டு, ஏப்ரல் 3ஆம் நாள் நியூயார்க் நகரில் மோட்டோரோலா நிறுவனத்திலிருந்து நியூஜெர்சியில் உள்ள பெல் ஆய்வு நிறுவனத்தின் தலைமையகத்தில் பணிபுரிந்த தமது போட்டியாளரான ஜோயல் எஸ். ஏங்கெல் என்பவரை முதன்முதலில் செல்பேசி மூலம் அழைத்துப் பேசினார். இதுவே முதல் செல்பேசி உரையாடலாக அறியப்படுகிறது.

**செல்பேசி தலைமுறைகள்**

1990-களில் இரண்டாம் தலைமுறை 'செல்பேசிகள்' 2 ஜி வலையமைப்புடன் வெளிவந்தன. 2 ஜி வலையமைப்பு, தொடர்முறைப் பரப்புகைக்குப் பதிலாக எண்மமுறைப் பரப்புகைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியது. இது மிகு பாதுகாப்பு, விரைவான வலைப்பின்னல் போன்ற சிறப்புத் திறன்களைக்கொண்டது. 2 ஜி தொழில்நுட்பம் குறுஞ்செய்தித் தொடர்புக்கு வழிவகுத்தது. 1993 ஆம் ஆண்டு பின்லாந்தில், உலகின் முதல் குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் மக்கள், தகவல் தொழில்நுட்பப் புரட்சியை வரவேற்றனர். அவர்கள் செல்பேசி கொண்டு பேசுவது மட்டுமல்லாமல் அதில் பல செயல்பாடுகளையும் செய்ய விரும்பினர். அதற்கு 3ஜி தொழில்நுட்பம் கைகொடுத்தது. செல்பேசிகளும் திறன் பேசிகளாய் மாற்றம் பெறத் தொடங்கின.

**திறன்பேசி**

திறன்பேசி என்பது தொடுதிரையுடன் கூடிய கையடக்க அலைபேசி. திறன்பேசி, இணையத் தேடல் வசதியுடன் கணினியின் திறன்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. திறன்பேசியின் அளவும் அதன் நகர்வியக்கமும் கணினியிலிருந்து அதை வேறுபடுத்துகிறது. இது தகவல் தொடர்புக் கருவி என்னும் நிலைகடந்து கற்றல், தேடல் இயந்திரமாகவும் பொழுதுபோக்குக் கருவியாகவும் விளங்குகிறது.

1992 ஆம் ஆண்டே தொடுதிரையுடன் பயனருக்கு உதவும் பல பயன்பாடுகளைக் கொண்ட திறன்பேசி உருவாக்கப்பட்டுவிட்டது. ஆனால், அப்பொழுது ''திறன்பேசி'' என்ற சொல்தான் உருவாகவில்லை. அதாவது, ஸ்மார்ட்ஃபோன் என்று குறிப்பிடும் வழக்கம் பின்னரே தோன்றியது.

**முதல் திறன்பேசி**

ஐபிஎம் நிறுவனம், 'சைமன் பர்சனல் கம்யூனிக்கேட்டர்' என்ற பெயரில், 1992 ஆம் ஆண்டு, நவம்பர் 23 அன்று முதல் திறன்பேசியை அறிமுகப்படுத்தியது. இதுவே 'முதல் திறன்பேசி'யாக அடையாளம் காணப்படுகிறது.

செல்பேசியுடன் எண்மமுறை தன்னுதவிக் கருவிகளை இணைத்து, ஐபிஎம் உருவாக்கிய சைமன் என்ற இக்கருவிக்கு பயனாளர்களிடையில் நல்ல வரவேற்பு கிடைத்தது. அதில் நாட்காட்டி, கடிகாரம், முகவரித் தொகுப்பு, கணிப்பான் போன்றவையும் அமைக்கப்பட்டிருந்தன.

**வன்பொருள்**

செல்பேசியின் செயலகமான மையச் செயலகம், செல்பேசியின் செயல்பாட்டிற்கு மின்சாரம் வழங்கும் மின்கலம், விசைப்பலகை, திறன்பேசிகளில் தொடு திரை, பயனர் தொடர்புகள், உள்ளீடு செய்தல் மற்றும் பலவற்றைக் காட்டும் திரை, ஒலியை வழங்கும் ஒலிப்பான், செறிவு அட்டை போன்றவை அனைத்துச் செல்பேசிகளிலும் காணப்படுகின்றன.

**மென்பொருள்**

இயக்க முறைமை எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இந்த மென்பொருளானது வன்பொருள், பயன்பாட்டு மென்பொருள் மற்றும் பயனர்களுக்கு இடையே பாலமாக இருக்கும் ஓர் இடைமுகமாகும். திறன்பேசிகளுக்கு ஆண்ட்ராய்டு, பிளாக்பெர்ரி இயக்க முறைமை, வெப் ஓஎஸ், ஐஓஎஸ், சிம்பியன், விண்டோஸ் இயக்க முறைமை மற்றும் படா உட்பட பல வகையான இயக்க முறைமைகள் (OS) உள்ளன. இவற்றுள் ஆப்பிள் ஐஓஎஸ், ஆண்ட்ராய்டு ஆகியவை மிகவும் பரவலாக அறியப்பட்ட இயக்கமுறைமைகள் ஆகும்.

**செயலி**

செல்பேசி, திறன்பேசி போன்ற கருவிகளில் இயங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பயன்பாட்டு மென்பொருளே செயலி. இப்போது குறைந்த விலையிலேயே அதிக திறன் கொண்ட திறன்பேசிகள் கிடைக்கின்றன. அவற்றில் பலவகையான செயலிகளை நிறுவிக்கொண்டால் மட்டுமே, அவற்றை நாம் பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியும்.

**பயிற்சி – 6**

மொழித்தொழில்நுட்பக் கருவிகள் – இயற்கை மொழிச் செயலாக்கம் –ஒலியனியல் கருவிகள் – உருபனியல் கருவிகள் – உருபனியல் பகுப்பாய்வி –உருபனியல் உருவாக்கி – தொடரியல் கருவிகள் – தொடரியல் பகுப்பாய்வி – பொருண்மையியல் கருவிகள் – பயன்பாட்டுக் கருவிகள் – தகவல் பிரித்தெடுத்தல் – பனுவல் (ஆவணச்) சுருக்கம் –எந்திர மொழிபெயர்ப்பு –வினா விடையறியும் கருவி –உணர்வுப் பகுப்பாய்வி –உரையாடு இயலி.

**விடை**

**மொழிச் செயலாக்கக் கருவிகள்**

மொழியை அறிவியல் நோக்கில் ஆய்வதே மொழியியல் மொழியியலும் கணினித் தொழில்நுட்பமும் இணைந்த செயல்பாடு கணினி மொழியியல். விதிகளின் அடிப்படையில் இயற்கை மொழிக்கூறுகளைச் செயற்கையாகக் கணினிக்குத் தகுந்தவாறு மாற்றித் தருவதற்கான கோட்பாடுகளையும் செயல்பாடுகளையும் கொடுப்பதே கணினி மொழியியலின் முக்கிய பங்காகும்.

**இயற்கை மொழிச் செயலாக்கத்தின் நோக்கம்**

தனக்கு இடப்பட்ட நிரல்களைக்கொண்டு ஒரு பணியைத் தானாகவே செய்துமுடிக்கும் கருவியை உருவாக்குவதே இயற்கைமொழிச் செயலாக்கத்தின் நோக்கம். மனிதருக்கு இணையாகப் படிப்பதற்கும், எழுதுவதற்கும், பேசுவதற்கும் செயலாற்றக்கூடிய கணினி நிரல் மாதிரிகளை உருவாக்குதலே இதன் முதன்மை நோக்கம். இது போன்ற கணினி நிரல் மாதிரிகள் மனிதர்களுக்கும் கணினிக்கும் இடையே இருக்கின்ற இடைவெளியை அகற்ற வழிவகுக்கின்றன.

ஒலியனியல் கருவிகள்

ஒலிகளின் பிறப்பாக்கம், அவை வருமிடங்கள், கேட்டுணர்தல் போன்றவற்றைப் பற்றியது ஒலியனியல். ஒரு மொழியின் பேச்சொலிகள் குறித்த செயலாக்கம் என்றும் கூறலாம். இயற்கைமொழிச் செயலாக்கத்தின் அடிப்படையில் பேச்சு உணரிகளையும் எழுத்து உணரிகளையும் உருவாக்குவதற்கு ஒலியனியல் கருவிகள் பயன்படுகின்றன.

**தொடரியல் கருவிகள்**

தொடர் இலக்கணப்படி சொற்கள் ஒன்றையொன்று சார்ந்து தொடர்களாகின்றன. எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே திணை, பால், எண், இடம் ஆகியவற்றில் இயைபு இருக்க வேண்டும். அதுபோலவே தொடர்களில் சொற்கள் முன்பின் அமைவதும் இலக்கண முறைப்படியே அமைய வேண்டும். அவ்வாறு அமைந்த தொடர்களின் சொற்களைப் பிரித்து, அவை எவ்வகைத் தொடர் என்பதை இனம் காணுவது தொடரியல் கருவிகளின் செயலாகும்.

**தொடரியல் பகுப்பாய்வி**

தொடரியல் செயலாக்கத்தைக் கணினிவழி செய்யும் கருவியே தொடரியல் பகுப்பாய்வி. அனைத்துச் சொற்களுக்கும் மொழியியல் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும் இலக்கணக் குறிப்பைக் கொண்டு இக்கருவி செயல்படும். அதாவது அனைத்துவகை பெயர், வினை, இடைச்சொற்கள், எச்சங்கள், அடைமொழிகள், சொல்லுருபுகள், வினாச்சொற்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்டு பகுக்கப்பட்டிருக்கும்.

**பொருண்மையியல் கருவிகள்**

மொழியில் சொற்கள் தனித்து நின்றோ, தொடரில் இயைந்தோ வெவ்வேறு விதமான பொருளை விளக்குவது பொருண்மையியல் ஆகும். மனித மூளை ஒரு சொல்லின், தொடரின் பொருண்மையை நேரடியாகவோ சூழல் அடிப்படையிலோ மூளையின் தருக்கரீதியான அறிவடிப்படையிலோ புரிந்துகொள்ளும்.

**பயன்பாட்டுக் கருவிகள்**

இயற்கைமொழிச் செயலாக்கத்தின் வழியாக உருவாக்கப்பட்ட மொழிச் செயலாக்கக் கருவிகளைக் கொண்டு பல பயன்பாட்டுக் கருவிகளை உருவாக்கலாம்.

**தகவல் பெறுவி**

குறிப்பிட்ட ஓர் இலக்கணம், இலக்கியம், தலைப்பு அல்லது கருத்து தொடர்பான தகவல்களைத் திரட்டித் தரும் மென்பொருள் கருவிக்குத் தகவல் பெறுவி என்று பெயர்.

**தகவல் பிரித்தெடுத்தல்**

குறிப்பிட்ட ஒரு துறைசார்ந்த சொற்களையோ செய்திகளையோ குறிப்பிட்ட ஓர் ஆவணத்திலிருந்து கணினி மூலம் தானாகவே பிரித்து எடுக்க உதவும் மொழிக்கருவிக்குத் தகவல் பிரித்தெடுக்கும் கருவி என்று பெயர். இதுவும் ஒரு வகையான தகவல் மீட்பு முறையாகும். இது முறைப்படுத்தப்படாத ஆவணங்களில் இருந்தும் தகவல்களைப் பிரித்தெடுத்துத் தரும். குறிப்பாக இக்கருவி குற்றவியல், சுற்றுலாவியல், மருத்துவத்துறை போன்ற துறைசார்ந்த செய்திகளைப் பிரித்தெடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

**பனுவல் (ஆவணச்) சுருக்கம்**

ஒரு நூலையோ, ஆவணத்தையோ முழுமையாகப் படிக்க முடியாதவர்கள் அந்தப் படைப்பு எத்தன்மைமிக்கது என்பதை அதன் சுருக்கத்தையோ முன்னுரையையோ பார்த்தபிறகு முடிவு செய்வர். அதை மனித உழைப்பால் உருவாக்குவர். இந்தப் பணியைக் கணினியின் துணைகொண்டு செய்வது பனுவல் (ஆவணச்) சுருக்கம் எனப்படும்.

**எந்திர மொழிபெயர்ப்பு**

இரு இயற்கை மொழிகளுக்கிடையே பேச்சையோ, பனுவலையோ கணினி மூலம் மொழிபெயர்ப்பது எந்திர மொழிபெயர்ப்பு. இது கணினி மொழியியலின் ஒரு பிரிவாகும். மூல மொழியின் பொருளைக் கணினி மொழிக்கு மாற்றி, பின்னர் இலக்கு மொழியில் அதனை மீண்டும் பெயர்ப்பதே எந்திர மொழிபெயர்ப்பு.

**வினா விடையறியும் கருவி**

வினா விடையறியும் கருவி என்பது தமிழ் மொழி போன்ற இயற்கை மொழியில் கேட்கப்படும் கேள்விகளைப் புரிந்து கொண்டு, கோரிய வினாவிற்குச் சரியான தகவலுடன் பதிலளிக்கும் தானியங்கிக் கருவியாகும். இந்தக் கருவி உள்ளீடாகக் கேட்கப்பட்ட கேள்விக்குத் தேவைப்படும் தகவலைத் தீர்மானிக்கும். இதனால் தேவையான தகவலைக் கண்டுபிடித்து, அதைப் பிரித்தெடுத்து, பின்னர் ஒரு பதிலை உருவாக்கி அதைக் கேள்வியின் தேவைகளுக்கு ஏற்பச் சமர்ப்பிக்கவும் முடியும்.

**உணர்வுப் பகுப்பாய்வி**

உணர்வுப் பகுப்பாய்வு என்பது ஓர் எழுத்தையோ, கலைப் படைப்பையோ, வணிகப் பொருளையோ பற்றிய கருத்துகளைத் தீர்மானிப்பது. ஒரு தலைப்பையோ ஆவணத்தையோ ஒட்டுமொத்தமாக ‘நேர்மறை அல்லது ‘எதிர்மறை என்று கணிக்கிறோம். மூன்றாவதாக ‘நடுநிலை என்றும் கணிக்கிறோம். இவற்றைக் கணிக்க உணர்வுப் பகுப்பாய்வு உறுதுணை புரிகின்றது. இவை தவிர உயர்நிலை உணர்வுப் பகுப்பாய்வில் ‘‘கோபம்’’ ‘‘சோகம்’’ ‘‘மகிழ்ச்சி’’ போன்ற வகைப்பாடுகளையும் செய்ய இயலும்.

**உரையாடு இயலி**

மனிதர்கள் ஒருவருடன் மற்றொருவர் இயல்பாக உரையாடுவதைப் போன்று, கணினியும் மனிதனும் உரையாடுவதைச் செயல்படுத்தும் ஒரு மென்பொருளே உரையாடு இயலி என்றழைக்கப்படுகிறது. எழுத்தின்

மூலமாகவோ, பேச்சின் மூலமாகவோ கணினிக்கு நாம் கட்டளைகளை இட, கணினி தன் செயற்கை அறிவால் அதனைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நமக்குப் பதிலளிக்கும்.

**பயிற்சி – 7**

இயந்திரங்கள் – ஒளிப்படி இயந்திரம் –தொலைநகல் இயந்திரம் – தானியங்கிப் பண இயந்திரம்– அட்டை தேய்ப்பி இயந்திரம் –தமிழக அரசின் நியாயவிலைக் கடை – திறனட்டைக் கருவி – ஆளறிசோதனைக் கருவி – இணைய வணிகம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு – இணையப் பயன்பாடு.

**விடை**

**இயந்திரங்கள்**

இயந்திரங்கள் இல்லாத மனித வாழ்க்கையைக் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு இன்று தொழில்நுட்பம் நம்மைச் சூழ்ந்துள்ளது. இணையவழிப் பயன்பாடு வாழ்வை எளிதாக்கி, நேரத்தையும் உழைப்பையும் வீணாக்காமல் தடுக்கிறது. இதன்வழி, பல நன்மைகளும் சில தீமைகளுமாக மாற்றங்களும் முன்னேற்றங்களும் நம்மை முன்னோக்கிப் பயணிக்கச் செய்கின்றன. எதிர்கால நலன் ஒன்றையே கருத்தில்கொண்டு இயந்திரங்களையும் இணையத்தையும் முறையாகப் பயன்படுத்தி வாழ்வில் ஏற்றம் பெறுவோம்.

**ஒளிப்படி இயந்திரம்**

கல்வி, வணிகம், அரசு, தனியார் அலுவலகங்கள் என அனைத்துத் துறைகளிலும் நகல் எடுக்கப் பயன்படுகின்ற முக்கியமான இயந்திரம் இது. அனைவரும் இதனை ஜெராக்ஸ் என்று பொதுவாகக் கூறுவது வழக்கத்தில் உள்ள சொல். நியூயார்க்கைச் சேர்ந்த காப்புரிமைச் சட்ட வல்லுநரும் பகுதிநேர ஆய்வாளருமான செஸ்டர் கார்ல்சன் தம் தொழிலுக்காக நிறையக் காகிதங்களைப் படி எடுக்க வேண்டியிருந்தது. அந்தப் பணிச்சுமையே அவரை இப்புதிய கண்டுபிடிப்பை நோக்கித் தள்ளியது. மின்னணுப் புகைப்பட ஆய்வுகளுக்குத் தமது சமையலறையையே அவர் பயன்படுத்திக்கொண்டார். கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக்கொண்டு, 1938இல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தார்.

**தொலைநகல் இயந்திரம்**

தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகிறது.

**தானியங்கிப் பண இயந்திரம்**

உழைத்துச் சேர்த்த பணத்தைப் பெட்டியில் பூட்டி வைக்கும் பழக்கம் இன்று இல்லை. அரசின் உதவித்தொகை, ஊக்கத்தொகை, பணியாளரின் ஊதியம் போன்றவற்றை வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தும் மின்னணுப் பரிமாற்றமுறை நடைமுறைக்கு வந்துவிட்டது. அதனை எடுக்க வங்கிக்குச் செல்லவேண்டியதில்லை. தானியங்கிப் பண இயந்திரம் மூலமே பணம் எடுக்கலாம்; செலுத்தலாம்.

**அட்டை தேய்ப்பி இயந்திரம்**

கையில் பணமே இல்லாமல் கடைக்குச் சென்று பொருள் வாங்கவும் மற்ற வணிகப் பரிமாற்றங்களுக்கும் இந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது. இது, கட்டணம் செலுத்தும் கருவி என்றும் விற்பனைக் கருவி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தில் வங்கி அட்டையின் காந்தப்பட்டை இருக்கும் பகுதியைத் தேய்க்கும்போது வாடிக்கையாளரின் விவரங்கள், இணையத் தொடர்பின் மூலம் வங்கிக் கணினிக்குச் செல்கிறது. கணினியால் அட்டை ஆராயப்பட்டுக் கடவுச் சொல்லைச் சரிபார்த்தபின் பணப்பரிமாற்றத்திற்கு வங்கி ஒப்புதல் அளிக்கிறது.

**தமிழக அரசின் நியாயவிலைக் கடை – திறனட்டைக் கருவி**

தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் திறன் அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. குடும்பத்தில் உள்ளவர்களின் ஆதார் எண்கள், அலைபேசி எண்கள், முகவரி உள்ளிட்ட விவரங்களைச் சேர்த்துத் திறன்

அட்டைகள் வழங்கப்படுகின்றன. குடும்ப உறுப்பினர் நியாயவிலைக் கடைக்குச் செல்கையில் அவர்களது திறன் அட்டை அங்கிருக்கும் விற்பனைக் கருவியில் வருடப்படுகிறது. அங்கு விற்பனை செய்யப்படும் பண்டங்களும் விலை விவரங்களும் பற்றிய குறிப்புகள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தியாக வந்துவிடுகின்றன.

**ஆளறிசோதனைக் கருவி**

ஆளறிசோதனைக் கருவி மனிதனின் கைரேகை, முகம், விழித்திரை ஆகியவற்றில் ஒன்றையோ அனைத்தையுமோ அடையாளமாகப் பதிவு செய்யவும் பதிவு செய்த அடையாளம் மூலம் மறுபடி ஆளை அறியவும் பயன்படுகிறது. நடுவண் அரசின் ஆதார் அடையாள அட்டையைப் பெறுவதற்கு நம்முடைய ஒளிப்படத்தையும் விழித்திரையையும் இரு கைகளின் பத்து விரல் ரேகைகளையும் பதிவு செய்கிறோம்

**இணைய வணிகம்**

1991இல் இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது. இன்று இணைய நிறுவனங்கள் விற்காத பொருள்கள் எதுவும் உலகில் இல்லை. கரும்பு முதல் கணினி வரை இணையவழியில் விற்கப்படுகின்றன. இணைய வணிகம் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு

இதன் இணையத்தளத்தில் பதிவு செய்வது, மிகவும் எளிதானது. பயணம் செய்ய வேண்டிய நாளில் ஊர்களுக்குச் செல்லும் தொடர்வண்டிகளையும் அவற்றின் நேரங்களையும் பயணம் செய்ய விரும்பும் வகுப்புகளையும் (பெட்டி வகைகள்) அதற்குண்டான தொகையையும் காண்பிக்கிறது. வங்கி அட்டைகளின் உதவியுடன் தொகையைச் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளலாம். மின்னஞ்சலில் பயணச்சீட்டு வந்துவிடுகிறது. நமது அலைபேசிக்குக் குறுஞ்செய்தியும் வந்துவிடுகிறது. பயணத்தின்போது குறுஞ்செய்தியையும் நமது அடையாள அட்டையையும் காண்பித்தாலே போதும். பயணம் தேவையில்லையெனில், பயணப் பதிவை நீக்கம் செய்வதையும் இந்தத் தளத்திலேயே செய்து கொள்ளலாம்.

**இணையப் பயன்பாடு**

தற்காலத்தில் பேருந்து முன்பதிவு, வானூர்தி முன்பதிவு, தங்கும் விடுதிகள் முன்பதிவு ஆகியவற்றை இணையம் மூலமாக மேற்கொள்ளப் பல முகமைகள் உள்ளன. இது பலருக்கு வேலைவாய்ப்பையும் தருகிறது. பெருநகரங்களில் திரையரங்குகளின் இருக்கைகள் முன்பதிவு செய்வதுகூட இணையம் மூலம் நடைபெறுகின்றது.

அரசுக்குச் செலுத்தவேண்டிய சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியன இணையவழியில் செலுத்தப்படுகின்றன. அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் உரிய படிவங்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அவற்றை நிரப்பி இணையம் மூலமாகவே விண்ணப்பிக்கலாம். பிறப்புச் சான்றிதழ், வருமானவரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை அரசால் மக்களுக்கு இணையம் மூலம் வழங்கப்படுகின்றன. அரசின் மின்னணுச் சேவை மையங்களின் உதவியை நாடியும் மேற்கண்ட சேவைகளைப் பெறலாம்.

**பயிற்சி – 8**

வானியல் அறிவியல் துறையில் தமிழர்களின் பங்கு – சிவன் –விக்ரம் சாராபாய் –அப்துல்கலாம் –வளர்மதி – அருணன் சுப்பையா –மயில்சாமி அண்ணாதுரை.

**விடை**

**வானியல் அறிவியல் துறையில் தமிழர்களின் பங்கு**

இருபதாம் நூற்றாண்டில் இந்திய வானியல் அறிவியல் துறையில் தமிழர்களின் பங்கு மகத்தானது! அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி போன்றோர் வரிசையில் மற்றுமொரு வைரம், தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் சிவன்.

**சிவன்**

இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர், இந்தப் பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர் என்னும் சிறப்புகளுக்கு உரியவர். 2015ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். 1983ஆம் ஆண்டு, முதன்முதலில் பி.எஸ்.எல்.வி திட்டத்தில் சேர்ந்தார். சித்தாரா செயலியைப் பயன்படுத்தி செயற்கை கோள்களை ஏவினார்.

**விக்ரம் சாராபாய்**

இவர் 'இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்; ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர். செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். இவரின் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டுவருகிறது. இங்கு, வானூர்தியியல் வான்பயண மின்னணுவியல் கூட்டமைப் பொருள்கள் கணினி – தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஆராய்ச்சிகளும் வடிவமைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவருடைய முயற்சியால்தான் இஸ்ரோ தொடங்கப்பட்டது.

**அப்துல்கலாம்**

இவர், இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர்; தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர்; ஏவுகணை, ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் இவர், 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று போற்றப்படுகின்றார்; பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார்; இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியைத் தமிழ்வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**வளர்மதி**

அரியலூரில் பிறந்த இவர், 2015இல் தமிழ்நாடு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர். இஸ்ரோவில் 1984ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். 2012இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இவர், இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் ஆவார்.

**அருணன் சுப்பையா**

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளரும் திட்ட இயக்குநரும் ஆவார். திருநெல்வேலி மாவட்டத்தின் ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இயந்திரப் பொறியியலில் பட்டம்

பெற்று, 1984இல் திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம்சாராபாய் விண்வெளி மையத்தில் பணியில் சேர்ந்து, தற்போது பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணிபுரிகிறார். 2013இல் மங்கள்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநராக இருக்கின்றார்.

**மயில்சாமி அண்ணாதுரை**

'இளைய கலாம்' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், கோதவாடி என்னும் சிற்றூரில் பிறந்தவர். மேல்நிலை வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் தமிழ்வழியில் படித்தவர். இதுவரை 5 முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளார். 1982ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் சேர்ந்த இவர் தற்போது இயக்குநராகப் பணிபுரிகிறார். நம் நாடு நிலவுக்கு முதன் முதலில் அனுப்பிய ஆய்வுக்கலம் சந்திரயான்-1 திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர். சந்திரயான்-2 திட்டத்திலும் பணியாற்றிவருகிறார். சர்.சி.வி. இராமன் நினைவு அறிவியல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். தமது அறிவியல் அனுபவங்களை, கையருகே நிலா என்னும் நூலாக எழுதியுள்ளார்.

**பயிற்சி – 9**

செயற்கை நுண்ணறிவு – மெய்நிகர் உதவியாளர் – ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவு – வாடிக்கையாளர் சேவை – எதிர்காலம் – பொதுவான கூறுகள் – கல்வியறிவு – முன்னேற்றம்

**விடை**

**செயற்கை நுண்ணறிவு**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு (Computer Program) எனலாம். அது தானாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. இந்த அறிவைக்கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது. ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார். அவ்வாறு கற்றுக்கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும்.

**மெய்நிகர் உதவியாளர்**

திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது. இவை நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும். நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் (browser) தேடும். நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும்! எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும்.

எதிர்காலத்தில் உங்கள் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் இதுபோன்ற மெய்நிகர் உதவியாளர் உங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கும்; ''டாக்டர்! திரும்பவும் ஐயாவுக்கு மூச்சுத் திணறல்! டெரிஃப்லின் ஊசி போட்டுவிடட்டுமா?'' – என்று கேட்கும். இந்த உதவியாளர்களை 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்' என்று பாரதியார் மெச்சுவதுபோல் மெச்சிக்கொள்ளலாம்!

**ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவு**

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். இது படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக்கொள்கிறது. திறன்பேசிகளில் உள்ள ஒளிப்படக் கருவியில், எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது.

காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுகிறது. இதன் மூலம் நேரம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

**வாடிக்கையாளர் சேவை**

இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி, 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியிருக்கிறது. ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும். வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் சேவைகளை அது இணையம் மூலம் அளிக்கிறது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்திய வங்கிகள் ஆயத்தமாகிவருவதற்கு இந்த 'இலா' ஒரு சோறு பதம்!

**எதிர்காலம்**

புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன. விடுதிகளில்,

வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும் – மேலும், நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்துதருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, உடன் வந்திருக்கும் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றைச் செய்யும்.

எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்கவேண்டியிருக்கும். இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்துகள் குறையும்; போக்குவரத்து நெரிசல் இருக்காது. அதன்மூலம் பயண நேரம் குறையும்; எரிபொருள் மிச்சப்படும்.

**செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்**

செயற்கை நுண்ணறிவு நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்திக்கொண்டிருக்கின்றது. இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டு அச்சப்பட்டவர்களின் அலறல்களை நாம் எதிர்கொள்வதே முதல் அறைகூவல். ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பு அறிமுகமாகும்போதும் பழைய வேலைவாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன. ஆகவே, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் அளிக்கும் வியக்கத்தக்க நன்மைகளைப் புரிந்துகொள்ளவும் வரவேற்கவும் நாம் அணியமாக வேண்டும்.

மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றவும் உடல்நலத்தைப் பேணவும் கொடிய நோய்களைத் தொடக்கநிலையிலேயே கண்டறியவும் மருத்துவம் செய்யும் முறைகளைப் பட்டறிவு மிக்க மருத்துவரைப் போலப் பரிந்துரை செய்யவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்துவருகின்றன.

**கல்வியறிவு**

ஒருகாலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. இப்போது கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும் (Digital Literacy) மின்னணுச் சந்தைப்படுத்துதலையும் (Digital Marketing) அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடையவும் உதவுகிறது. ஆனால் எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்த உதவும்.

**முன்னேற்றம்**

மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றன. அதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக்கொள்வார்கள். இப்போது உலகில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பயன்பாட்டில் இருக்கின்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், எதிர்காலத்தில் உலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.

**பயிற்சி – 10**

அறவுணர்வும் தமிழர் மரபும் – தனித்து உண்ணார் – அல்லில் ஆயினும் இன்மையிலும் விருந்தோம்பல் – நிலத்திற்கேற்ற விருந்து – விருந்தை எதிர்கொள்ளும் தன்மை – உற்றாரோடு நின்ற விருந்து – விருந்தோம்பல் இன்றும்.

**விடை**

**விருந்தோம்பல்**

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**அறவுணர்வும் தமிழர் மரபும்**

திருவள்ளுவர் இல்லறவியலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே' அமைத்திருக்கிறார்; இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை ''மோப்பக் குழையும் அனிச்சம்'' என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

**தனித்து உண்ணார்**

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

''உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே''என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

**அல்லில் ஆயினும்**

விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதை

''அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்'' என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

**இன்மையிலும் விருந்தோம்பல்**

வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி.

**நிலத்திற்கேற்ற விருந்து**

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.

**விருந்தை எதிர்கொள்ளும் தன்மை**

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்தது.

**உற்றாரோடு நின்ற விருந்து**

சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்ட காலத்தில், ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர். படிப்படியாக உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

**விருந்தோம்பல் இன்றும்**

புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர். இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை; அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. இருப்பினும் திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.

திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர். அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர். அந்த இல்லவிழா நாள்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன. பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை ‘திருமண ஏற்பாட்டாளர்’களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.

பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறைகளில் பின்பற்றப்படுகின்றது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

**பயிற்சி – 11**

நிகழ்கலை – கரகாட்டம் – மயிலாட்டம் – காவடியாட்டம் – ஒயிலாட்டம் – தேவராட்டம், சேர்வையாட்டம் – பொய்க்கால் குதிரையாட்டம் – தப்பு ஆட்டம் – புலி ஆட்டம் – தெருக்கூத்து – தோற்பாவைக் கூத்து.

**விடை**

**நிகழ்கலை**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

**கரகாட்டம்**

கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி செய்கின்றனர். தலையில் செம்பு நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில் மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர். கண்ணாடியாலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில், கிளி பொம்மை பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர். இதற்கு நையாண்டி மேள இசையும் நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் கரகாட்டத்தில் சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு. கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனைபேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை.

**மயிலாட்டம்**

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக்காட்டுவர்.

**காவடியாட்டம்**

கா–என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர். காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். இலங்கை, மலேசியா உட்பட, புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

**ஒயிலாட்டம்**

ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம். உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறிமாறி, மனத்தை ஈர்க்கும். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

ஒயிலாட்டத்தை இருவரிசையாக நின்றும் ஆடுகின்றனர். ஒருவருக்கொருவர் இடம்விட்டு விலகிநின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கில் உள்ளது. ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு. இந்த ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**தேவராட்டம், சேர்வையாட்டம்**

தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.

தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை, சேர்வையாட்டம். ஆட்டக்கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுகின்றனர். இதனை இசைச்சார்புக் கலையாகவும் வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

**பொய்க்கால் குதிரையாட்டம்**

''போலச்செய்தல்'' பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரைவடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

கலைஞர்கள் தங்கள் கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணியைக் கட்டிக் கொள்கின்றனர். காலில் சலங்கை அணிந்தும் அரசன் அரசி உடையணிந்தும் கிரீடம் அணிந்தும் ஆடுகின்றனர். குதிரைமேல் ஏறிப் பயணம் செய்வது போன்று கடிவாளத்தை ஆட்டியும் காலை உயர்த்தியும் நான்கு புறமும் ஓடியும் ஆடுகின்றனர்.

பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை. நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன. இது இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றது.

**தப்பு ஆட்டம்**

'தப்பு' என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி. கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது. 'தப் தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

**புலி ஆட்டம்**

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலிவேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர். புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும்

எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப்பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

**தெருக்கூத்து**

நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. இப்பெயர், அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.

திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது. களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது; பின்னர்க் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது. இதில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர். திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.

**தோற்பாவைக் கூத்து**

தோலில் செய்த வெட்டு வரைபடங்களை, விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்துக்காட்டி, உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து. தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை என்னும் பெயர் பெற்றது. இதில் இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன. கூத்து நிகழ்த்தும் திரைச்சீலையின் நீளம், அகலம் ஆகியன பாவையின் அமைப்பையும் எண்ணிக்கையையும் பொறுத்து வேறுபடுகின்றன. இந்நிகழ்ச்சியில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியனவற்றோடு ஒளியும் முதன்மை பெறுகின்றது.

**பயிற்சி – 12**

சங்க இலக்கியத்தில் அறம் – அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை – அரசியல் அறம் – அறங்கூறவையம் – போர் அறம் – கொடை – உதவி – வாய்மை.

**விடை**

**சங்க இலக்கியத்தில் அறம்**

சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள் இயல்பானவை.'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார். அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

**அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை**

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

**அரசியல் அறம்**

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.' அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**அறங்கூறவையம்**

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

**போர் அறம்**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**கொடை**

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள்''இல்லோர் ஒக்கல் தலைவன்'',

‘‘பசிப்பிணி மருத்துவன்’’ என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார். வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.

**உதவி**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் ‘உதவியாண்மை’ என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம்.

**வாய்மை**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, ‘‘பொய்யாச் செந்நா’’, ‘‘பொய்படுபறியா வயங்கு செந்நா’’ என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

’பிழையா நன்மொழி’ என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் ‘பொய் மொழிக் கொடுஞ்சொல்’ என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தமுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

**பயிற்சி – 13**

ஏறு தழுவுதல் – இலக்கியசான்றுகள் – தொல்சான்றுகள் – பண்பாட்டு அடையாளம் –ஏறு தழுவுதலும் தமிழர் அறமும்.

**விடை**

**ஏறு தழுவுதல்**

பண்பாட்டுத் தொன்மையும் இலக்கிய வளமையும் வாய்ந்தது தமிழர் வரலாறு. இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்ககாலத் தமிழர்கள். இதற்குச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஏறு தழுவுதல் நிகழ்வாகும்.

**இலக்கியங்களில் ஏறு தழுவுதல்**

சங்க இலக்கியமான கலித்தொகையில், ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைநில ஆயர்கள் பங்கேற்கும் இந்நிகழ்வு, அவர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது.

எழுந்தது துகள்,

ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்பு,

கலங்கினர் பலர்

என்று முல்லைக்கலியில் ஏறு தழுவுதல் களம் குறித்த அடிகள், காட்சியை நம் கண்முன்னே நிறுத்துகின்றன. காளைகளின் பாய்ச்சல் பற்றியும் கலித்தொகை கூறுகிறது.

**தொல்சான்றுகள்**

ஏறு தழுவுதல் குறித்த பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட எருது பொருதார் கல் ஒன்று உள்ளது. கோவுரிச் சங்கன் கருவந்துறையிலே எருது விளையாடிப் பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்டகல்லு என்பது அந்நடுகல் பொறிப்பு. கருவந்துறை என்னும் ஊரில் எருதோடு போராடி இறந்துபட்டவனாகிய சங்கன் என்பவனுக்கு அவனுடைய மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் என்பது இதன் பொருள்.

கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவதுபோன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகிறது. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவு என்ற இடத்தில் திமிலுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.

**பண்பாட்டு அடையாளம்**

ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள் ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள் என்று அழைக்கப்பட்டன. தமிழக உழவர்கள் தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவ்விழாவன்று மாடுகளைக் குளிப்பாட்டிப் பல

வண்ணங்களில் பொட்டிட்டு, மூக்கணாங் கயிறு, கழுத்துக் கயிறு, பிடி கயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ, துண்டோ கழுத்தில் கட்டுவர். பின்னர், பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டிவிடுவர்.

இதன் தொடர்ச்சியாக, வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்துகிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.

ஏறு தழுவுதல், தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அது மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று, ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது. சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது. அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களை, துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கமும் இருந்தது. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்புச் சொந்தமாகும்.

**ஏறு தழுவுதலும் தமிழர் அறமும்**

மேலைநாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில், ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

சில நாட்டு விளையாட்டுகளில் காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை கொல்லப்படுதலும் உண்டு. மேலைநாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

**பயிற்சி - 14**

சிற்பக்கலை – பல்லவர் காலச் சிற்பங்கள் – பாண்டியர் காலச் சிற்பங்கள் –விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள் – நாயக்கர் காலச் சிற்பங்கள் –பௌத்த–சமணச் சிற்பங்கள் –இன்றைய சிற்பக்கலை.

**விடை**

**சிற்பக்கலை**

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். இத்தகு சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது.

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் ‘‘கற்கவிஞர்கள்’’ என்று சிறப்பிக்கின்றனர்.

**பல்லவர் காலச் சிற்பங்கள்**

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வ உருவங்களும் பிற சிற்பங்களும் கோவிலின் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

**பாண்டியர் காலச் சிற்பங்கள்**

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

**சோழர்காலச் சிற்பங்கள்**

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

**விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள்**

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் எழுப்பப்பட்டன. அக்கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இவர்கள் தெலுங்கு, கன்னடப்பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக் கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது. ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன. குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தனர். வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்களை மண்டபத் தூண்களில் அமைத்தனர். அத்துடன் பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் இவர்கள் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

**நாயக்கர் காலச் சிற்பங்கள்**

நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். அம்மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காணமுடியும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன் குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

**பௌத்த-சமணச் சிற்பங்கள்**

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அது போலவே மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**இன்றைய சிற்பக்கலை**

தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்), கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. வெண்கலம் முதலான உலோகங்களாலும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன. இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக்கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்திமிகு சிற்பங்கள் முதலான வை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன.

**பயிற்சி – 15**

தமிழர் குடும்ப முறை – குடும்பம் – வாழிடம் – மணந்தகம் – தாய்வழிக் குடும்பம் – தந்தைவழிக் குடும்பம் – தனிக்குடும்பம் – விரிந்த குடும்பம்.

**விடை**

**தமிழர் குடும்ப முறை**

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது; குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்கு மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்ததில்லை.

**குடும்பம்**

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன – நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல. இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை. குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் பயின்று வருகிறது.

சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. 'குடம்பை' என்ற சொல், இருபது இடங்களில் பயின்று வருகிறது. 'குடும்பு' எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.

**வாழிடம்**

சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ளன. இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனவும் வழங்கப்பெற்றுள்ளன.

**மணந்தகம்**

உயிரிகளைப்போன்றே குடும்பமும் தோன்றுகிறது; வளர்கிறது; பல கட்டங்களைக் கடக்கிறது. அதன் வாழ்க்கைச்சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே. மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

**தாய்வழிக் குடும்பம்**

சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை இருந்துள்ளது. திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது.

தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண்குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும்

பெண்களுக்குச் சென்று சேர்ந்தன. தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

**தந்தைவழிக் குடும்பம்**

மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின்வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகிவிட்டதையும் காணமுடிகிறது.

ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் வாழ வேண்டும். மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள்.

**தனிக்குடும்பம்**

தனிக்குடும்ப வகை, சமூகப் படிமலர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட ஒன்று. இஃது இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது என்பது ஒரு வாதம். ஆனால் பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருப்பதையும் இனவரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இஃது ஒரு தொல்வடிவமாகவே இருந்து வருகிறது என்பது இன்னொரு வாதமாகும்.

**விரிந்த குடும்பம்**

சங்ககாலக் குடும்ப அமைப்பில் முதல்நிலை உறவினர்களை மட்டும் ஓரளவு இனம் காண முடிகிறது. நற்றாய் ஒருபுறம் இருந்தாலும் செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர். சமூகத் தாயாக விளங்கிய செவிலித்தாய் முறை பண்டைய இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சியாகச் சங்ககாலத்தில் வருவதை அறிய முடிகிறது. சங்க காலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்.

இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் எனச் சங்ககால மக்கள் எண்ணினார்கள். விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தினைத் தொல்காப்பியமும் பதிவு செய்கிறது.

**பயிற்சி – 16**

திருவிழாக்கள் – ஐந்திணை விழாக்கள் – குறிஞ்சி நில விழா – முல்லை நில விழா – மருத நில விழா (இந்திர விழா) – நெய்தல் விழா – பாலை நில விழா – நடுகல் வழிபாடு – பத்தினி வழிபாடு– பாவை நோன்பு.

**விடை**

**திருவிழாக்கள்**

திருவிழா என்பது, மக்கள் ஒன்றுகூடிக் கொண்டாடும் நிகழ்வே ஆகும். திருவிழாக்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடப்பட்டாலும் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே முதல் நோக்கமாகும். இவ்விழாக்களை இயற்கை சார்ந்தவை, இனம் சார்ந்தவை, சமயம் சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

**ஐந்திணை விழாக்கள்**

சங்ககாலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் வழிபடு தெய்வங்களும் திருவிழாக்களும் சிறப்பான முறையில் அமைந்திருந்தன என அறிகிறோம்.

**குறிஞ்சி நில விழா**

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் ஆகும். குறிஞ்சி நிலக் கடவுள் சேயோன், முருகன், வேலன் எனப் பல பெயர்களில் அறியப்படுகிறார். இந்நிலப்பகுதியில் வேலன்வெறியாட்டு விழா நடைபெற்ற செய்தியினைத் திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் வழி அறிகின்றோம். குறிஞ்சி நிலப் பெண்களின் நோயினைத் தீர்ப்பதற்காகப் பராய்க்கடனாக நிகழ்த்தப்பட்டது. வேலன்வெறியாட்டின் பொழுது குறிஞ்சி நிலத்தவர் பல வகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்துகொண்டு, கையில் வேலை ஏந்தி தன்மீது முருகக் கடவுள் ஏறியது போல ஆடுவர். இவ்விழா நடைபெறும் இடம் ‘வெறியாடுகளம்’ எனப்படும்; அங்குச் சேவல் கொடி நடப்பட்டிருக்கும். பல வகையான நறுமணப்புகைகள் எழுப்பப்படும். பலவகையான இசைக்கருவிகள் இசைக்கப்படும் என இவ்விழாவைப் பற்றிப் பரிபாடல் கூறுகின்றது. இவ்விழாவின் போது, குறிஞ்சி நில மக்கள் தொண்டகப்பறை இசைக்க நடனமாடுவர். இதுவே, ‘குன்றக் குரவைக் கூத்து’ எனப்பட்டது.

**முல்லை நில விழா**

காடும் காடு சார்ந்த நிலப்பகுதியும் முல்லை நிலம் ஆகும். முல்லை நிலக்கடவுள் ‘மாயோன்’ ஆவார். இந்நில மக்களின் முக்கியத் தொழில் கால்நடை வளர்ப்பு ஆகும். முல்லைநில மக்கள் பால் சுரக்கும் மரமான வேப்ப மரத்தைத் தாய்த் தெய்வமாக உருவகித்து வழிபட்டதை அகநானூறு கூறியுள்ளது. இந்நிலப் பகுதியின் உடைமையான கால்நடைகளை எயினர்களிடமிருந்தும் வேடர்களிடமிருந்தும் வழிதவறாமலும் காப்பவர் கருப்பசாமி; இருண்ட கானகத்திற்கு உரியவர், கரிய நிறம் உடையவர் என்ற பொருளில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டது. இவர் மாயோன் எனவும் அழைக்கப்பட்டார். இதையே ‘மாயோன் மேய காடுறை உலகம்’ என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஆயர் குல மக்களுக்கும் ஆநிரைகளுக்கும் துன்பம் நேராமல் காக்கும்படி திருமாலைக் (மாயோனை) குரவைக் கூத்தாடி வழிபட்டனர். இவ்வழிபாடே ‘ஆய்ச்சியர் குரவை’ ஆகும்.

**மருத நில விழா (இந்திர விழா)**

மருத நிலத்தில் கொண்டாடப்படும் மிகப்பெரிய விழா ‘இந்திரவிழா’. பசி, பிணி, பகை போக்குவதற்காக இந்திரனை மக்கள் வழிபட்டனர். இவ்விழா சாந்திப் பெருவிழா, தீவகச்சாந்தி என்றும் அழைக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழாவூரெடுத்த காதையிலும் மணிமேகலையில் விழாவறை காதையிலும் இந்திரவிழா நடைபெற்றமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழா 28 நாள்கள் நடைபெற்றது. சமயக்கணக்கர், காலம்

கணிப்போர், சான்றோர்கள், ஐம்பெரும் குழுவினர், எண்பேராயத்தினர் ஆகியோர் ஒன்றுகூடி இந்திரவிழா நடக்கும் நாளை முடிவு செய்வர்.

நால்வகைப் படையினரும் சூழ்ந்து வர 'இந்திரவிழா' நடைபெறும் செய்தியினை முரசு அறைந்து மக்களுக்கு அறிவிப்பர். மக்கள் வீதிகளிலும் கோயில்களிலும் பூரண கும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவை விளக்குகளும் வைத்தனர். வாழை, கரும்பு, கமுகு, வஞ்சிக்கொடி, பூங்கொடி முதலானவற்றைக் கொண்டு நகரை அலங்கரித்தனர். வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணல் பரப்பினர். பூதசதுக்கம் முதலான தெய்வங்களுக்குச் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகளைச் செய்தனர். விழா நாளில் பொது இடங்களில் சான்றோர் நல்லுரை ஆற்றினர். பட்டிமண்டபங்கள் நகரின் பல இடங்களில் ஆங்காங்கே நடைபெற்றன. இவ்வாறு புகார் நகரில் இந்திர விழா நடைபெற்ற செய்தியினைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

**நெய்தல் விழா**

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். இந்நிலத்துக்கு உரிய கடவுள் 'வருணன்'. இந்நில மக்களால் கொண்டாடப்படும் விழா, முந்நீர் விழா, நாவாய் விழா என சங்கஇலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் இவ்விழாவினைக் கொண்டாடிய செய்தியினையும், கரிகாலனின் முன்னோர் நாவாய்த் திருவிழா கொண்டாடிய செய்தியினையும் புறநானூற்று உரையின் மூலம் அறிய முடிகிறது.

வருணன் – மேகம், மழை, கடல், ஆறு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டமையால் இவர் நீர்க்கடவுளாக அறியப்பட்டார். இவரை, உலகம் முழுவதும் பரந்து இருப்பவர், உலகத்தையே ஆள்பவர் என்றும் கூறுவர். நெய்தல் நில மக்கள் முத்துகளையும், வலம்புரிச் சங்குகளையும் காணிக்கையாகச் செலுத்தி, தங்கள் கடல் தெய்வத்தை வழிபட்டனர்.

**பாலை நில விழா**

குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலம் பாலை எனப்பட்டது. கொற்றம் என்றால் வெற்றி. இந்நிலமக்கள், வெற்றியைத் தருபவள் என்ற பொருளில் 'கொற்றவை' என்னும் பெண்தெய்வத்தை வழிபட்டனர்.

சிலப்பதிகாரத்தில் சாலினி என்ற தெய்வம் ஏறப்பட்ட பெண்ணிற்குக் கொற்றவையின் கோலம் புனையப்பட்டது. இவ்வாறு கொற்றவையைப் போல அலங்கரிக்கப்பட்ட சாலினியை, மான்மீது அமரச்செய்து உலாவரச் செய்தனர். அவ்வாறு உலா வரும்போது பல்வேறு காணிக்கைப் பொருள்களுடன் பெண்கள் பின்தொடர்ந்தனர். வழிப்பறியின் போது கொட்டும் பறை; சூறையாடும்போது ஊதப்படும் கொம்பு, புல்லாங்குழல் போன்றவை அச்சமயத்தில் இசைக்கப்பட்டன. இவ்வாறு பாலை நில மக்கள் தங்கள் நிலக்கடவுளான கொற்றவைக்கு விழா எடுத்தனர்.

**நடுகல் வழிபாடு**

தமிழர் பண்பாட்டின் உயரிய விழுமியமான வீரத்தை அடிப்படையாகக் கொண்டதே நடுகல் வழிபாடு. இவ்வழிபாட்டு முறையைப் பற்றி அறிய சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. போர்க்களத்தில் விழுப்புண்பட்டு வீரமரணம் அடைந்த வீரனது உடலை அடக்கம் செய்யும் முன், அவன் பயன்படுத்திய போர்க்கருவிகளையும் பொருள்களையும் புதை குழியிலிட்டு அடக்கம் செய்தனர். பிறகு அவ்விடத்தில் ஒரு கல்லை நட்டனர். இது 'நடுகல்' எனப்பட்டது. அக்கல்லின் மீது அவ்வீரனது உருவம், பெயர், வீரம், புகழ், தியாகம் போன்றவற்றைப் பொறித்தனர். மேலும், அவனது வீரத்தைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் விழா எடுத்து வழிபட்டனர். தற்போதும் கிராமங்கள்தோறும் மக்கள் வழிபடும் காவல் தெய்வங்களை இந்நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாகக் கருதலாம்.

**பத்தினி வழிபாடு**

சிலப்பதிகாரத்தின் காப்பியத் தலைவி, பொய்யான குற்றச்சாட்டின் மூலம் தனது கணவன் கோவலன் கொலைத்தண்டனைக்கு உட்பட்டதை அறிந்து சினமுற்றாள். பாண்டிய அரசன் நெடுஞ்செழியனிடம் வாதிட்டு,

தன்கணவன் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டினாள். அரசனின் பிழையால் சீற்றம் அடைந்த கண்ணகி, தன் கற்பின் வலிமையால் மதுரை நகரையே எரித்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. ‘‘கண்ணகி சோழ நாட்டில் பிறந்தாள், பாண்டிய நாட்டில் வீரத்தை நிலை நாட்டினாள், சேரநாட்டில் பத்தினித் தெய்வமாகப் போற்றப்பட்டு வழிபடப்படுகிறாள்’’.

**பாவை நோன்பு**

மார்கழி மாதத்தில் பெண்கள் பாவை நோன்பு நோற்பர். இது ‘மார்கழி நோன்பு’ என்றழைக்கப்படும். பாவை நோன்புக் காலத்தில் ஆண்டாள் இயற்றிய ‘திருப்பாவை’யையும், மாணிக்கவாசகர் அருளிய ‘திருவெம்பாவை’யையும் பாடி இறைவனை வழிபடுவர்.

கன்னிப்பெண்கள், நல்ல கணவன் கிடைக்க வேண்டுமெனவும். மணமான பெண்கள் தங்கள் கணவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டுமெனவும் விரதம் மேற்கொள்வார்கள். இந்நோன்பு பழங்காலந்தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் மழை பெய்து நாடு செழிக்கவும், மக்கள் வளமுடன் நோய் நொடியின்றி வாழவும், பசு மற்றும் கால்நடைகள் சிறக்கவும் வேண்டி, ஆண்டாளும் மாணிக்கவாசகப் பெருமானும் பாடிய பாடல்களைப் பாடுவார்கள்.

பாவை நோன்பு இருப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, உணவு உண்ணாமல், மலர் சூடாமல், தம்மை அழகுபடுத்திக் கொள்ளாமல், இறைவனை நினைத்து நோன்பு இருந்து, தங்களால் இயன்றளவு தானமும் தருமமும் செய்து அறவழியில் நிற்பர் எனப் பாவை நோன்பு குறித்து திருப்பாவை இரண்டாம் பாடல் கூறுகிறது.

**பயிற்சி – 17**

திருவிழாக்கள் – ஐந்திணை விழாக்கள் – குறிஞ்சி நில விழா – முல்லை நில விழா – மருத நில விழா (இந்திர விழா) – நெய்தல் விழா – பாலை நில விழா – நடுகல் வழிபாடு – பத்தினி வழிபாடு– பாவை நோன்பு.

**விடை**

**சித்திரைத் திருவிழா**

சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் தமிழகத்தின் மிகப்பெரிய திருவிழா மதுரை சித்திரைத் திருவிழா. சைவ சமய விழாவான மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணமும், வைணவ சமய விழாவான கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் ஒன்றாக நடைபெறுவது. திருமலை நாயக்கர் காலத்தில் இவ்விரு சமய விழாக்களும் ஒன்றாக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டன. சித்திரை மாதம் வளர்பிறை ஐந்தாம் நாள் இவ்விழா தொடங்கித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறுகிறது.

**ஆடிப் பெருக்கு**

ஆடி மாதத்தில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழையினால் ஆறுகளில் புதுப்புனல் பொங்கி வரும். இதனையே 'ஆடிப்பெருக்கு' என்று கூறுவர். காவிரி பாயும் பகுதிகளில் வாழும் மக்கள் காவிரியாற்றை அன்னையாகவும் தெய்வமாகவும் நினைத்து வழிபடுவர்.

**ஆடிப் பெருக்கு விழா**

அதற்காக வற்றாத நதிகளைத் தங்கள் கடவுளாகப் போற்றி மகிழ்ந்து, வழிபட்டு உழவு வேலையைத் தொடங்குவார்கள். இதன் அடிப்படையிலேயே 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்ற பழமொழி உருவானது. இப்பகுதிகளில், ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று ''ஆடிப் பெருக்கு'' கொண்டாடப்படுகிறது.

**மகா மகத்திருவிழா**

மாசி மாதத்தில் குரு, சிம்ம ராசியில் இருக்கும் போது, மக நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்து வரும் நாளே மாசிமகம் ஆகும். நவக்கிரகங்களில் குரு ஓர் இராசியில் இருந்து மற்றோர் இராசிக்கு இடம்பெயர ஒரு வருடம் ஆகிறது. இதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் குரு பெயர்ச்சி விழாவும், மாசிமக விழாவும் நடைபெறுகிறது. இதுபோலவே, பன்னிரண்டு இராசிகளையும் குரு கடந்து வர பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும். ஆகவேதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசிமகம், 'மகாமகம்' என்று அழைக்கப்படுகிறது. அன்றைய தினம் புனித இடங்களில் நீராடுவது மிகவும் சிறப்பானதாகும். எனவே, கும்பகோணம் மகாமகக் குளத்தில் தீர்த்தவாரி அன்று பக்தர்கள் புனித நீராடுகிறார்கள். மேலும், வடநாட்டில் நடைபெறும் 'கும்பமேளா'வைப் போன்று இதனை, 'தென்னகத்தின் கும்பமேளா' என்றும் அழைப்பர்.

**சைவத் திருவிழாக்கள்**

சிவனை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் சைவர்களாவர். சிவனை வழிபடும் திருவிழாக்கள் சைவத் திருவிழாக்கள் ஆகும்.

**மகாசிவராத்திரி**

'மகாசிவராத்திரி' விழா ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்து சிவனை வழிபடுவர். அன்று நடைபெறும் நான்கு கால பூஜைகளில் சிவபுராணங்களைப் பாட வேண்டும். மேலும், ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் சிவராத்திரிகளில் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே 'மகா சிவராத்திரியாகும்'.

**விநாயகர் சதுர்த்தி**

ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை ஆலயங்களிலும் ஆலயமில்லாத இடங்களிலும், வீடுகளிலும் கொண்டாடுவர்.

ஆலயமில்லாத இடங்களிலும் தற்காலிகமாகக் களிமண்ணால் விநாயகர் உருவம் செய்து வழிபடுவர். இவ்விழாவை வடஇந்தியாவில் 'கணேஷ்சதுர்த்தி' என்ற பெயரில் கொண்டாடுகின்றனர்.

**தீபத்திருவிழா**

கார்த்திகை மாதம் முழுநிலவு நாளில் வீடுகளிலும் கோயில்களிலும் விளக்கு ஏற்றி வழிபடுவார்கள். இதுவே, கார்த்திகைத் திருவிழாவாகும். இவ்விழா தொன்றுதொட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றி இறைவனை ஒளி வடிவில் வழிபடுவர். மேலும், மற்ற சிவத்தலங்களிலும் முருகன் ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கைப் பொருள்களைப் பெரும் ஆற்றலாகக் கருதி மக்கள் வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியாகவே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

**ஆதிரைத் திருவிழா**

திருவாதிரை என்பது, ஆண்டுதோறும் மார்கழி மாத முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இவ்விழாவினைப் பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்திலும், சம்பந்தர், நாவுக்கரசர் தேவாரத்திலும் பாடியுள்ளனர். சிதம்பரம், மதுரை, திருவாலங்காடு, உத்திரகோசமங்கை, திருக்கழுக்குன்றம், திருமுல்லைவாயில் போன்ற புகழ்பெற்ற சிவத்தலங்களில் திருவாதிரை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருவாதிரையன்று சிவபெருமானுக்குக் 'களி'யைப் படைத்துப் பக்தர்களுக்கும் வழங்குவர். இதனால், 'திருவாதிரைக் களி' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. மேலும், சிதம்பரம் கோயிலில் இறைவனை ஆடல் கோலத்தில் கண்டு வழிபடுவர்.

**வைணவத் திருவிழாக்கள்**

திருமாலை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் வைணவர்களாவர். திருமாலை வழிபடும் திருவிழாக்கள் வைணவத் திருவிழாக்கள் ஆகும்.

**வைகுண்ட ஏகாதசி**

மார்கழி மாதம் வளர்பிறை பதினோராம் நாள் 'வைகுண்ட ஏகாதசி' ஆகும். இது வைணவர்கள் மற்றும் திருமாலை வழிபடுபவர்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி அன்று விரதம் இருப்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் ஏகாதசி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**திருவோணம்**

திருமாலின் பிறந்தநாளான ஆவணி மாதம் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழா திருவோணம் ஆகும். இது, திருமாலுக்கு உகந்த நாளாகக் கருதப்படுவதால் அந்நாளில் மக்கள் பல கோயில்களுக்கும் சென்று திருமாலை வழிபடுவர்.

இந்நாளில், மகாபலி மன்னர் வருவதாகக் கருதி மக்கள் வீதிகளிலும் வீட்டின் முற்றத்திலும் பல வண்ணப்பூக்களால் பெரிய கோலங்களைப் போட்டு அவரை வரவேற்பர். இதை ''அத்தப்பூ'' என்றழைப்பர்.

இவ்விழாவைப் பற்றிய செய்திகள் மதுரைக்காஞ்சியிலும், தேவாரத்திலும், நாலாயிரத் திவ்வியபிரபந்தத்திலும் இடம் பெற்றுள்ளன.

**தீபாவளி**

ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதம் தேய்பிறை நாளில் அமாவாசைக்கு முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகையே தீபாவளியாகும். தீபாவளி என்றால் (தீபம் + ஆவளி) 'தீபங்களின் வரிசை' என்பது பொருள். இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் திருநாளே தீபாவளித் திருநாளாகும். முன்பொரு காலத்தில் நரகாசுரன் தேவர்களையும் மக்களையும் கொடுமை செய்ததாகவும். அவனது கொடுமையை மக்களும் தேவர்களும் பொறுக்க முடியாமல் திருமாலிடம் முறையிட்டதாகவும், திருமால் சக்கராயுதத்தால் நரகாசுரனை வதம் செய்து மக்களையும் தேவர்களையும் காத்ததாகவும் கூறுவர். நரகாசுரன் தான் இறக்கும் தருவாயில் தனது நினைவு நாளை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதாகவும் கூறுவர். அந்நாளே, தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா, தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இத்திருநாளன்று மக்கள் அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, வீடு முழுவதும் விளக்கேற்றிப் பூஜை செய்து, பட்டாசுகள் வெடித்துப் புத்தாடை அணிந்து, இனிப்புகள் வழங்கிக் கொண்டாடுகின்றனர். வட இந்தியாவில் இத்திருநாளைத் தீபஒளித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

**நவராத்திரி விழா**

வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைத் தரும் முப்பெரும் கடவுளாக முறையே மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகியோரைப் போற்றி வணங்கும் விழாவே நவராத்திரி திருவிழாவாகும். நவராத்திரி என்பதற்கு 'ஒன்பது இரவுகள்' என்பது பொருளாகும். இவ்விழா புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பது நாள்களும் கொண்டாடப்படுகிறது. ஒன்பதாவது நாள் நடக்கும் வழிபாடு கலைமகளுக்கு உரியதாகக் கருதி புத்தகங்கள், இசைக்கருவிகள் மற்றும் பல தொழில் சார்ந்த கருவிகளையும் வைத்து வழிபடுவர். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற கருத்தில் மக்கள் தமது தொழிலைப் போற்றிக் கொண்டாடுவதே இவ்விழாவின் நோக்கமாகும். பத்தாம் நாள் விழாவாக ''விஜயதசமி'' கொண்டாடப்படுகிறது. விஜயதசமி என்றால் 'வெற்றியைத் தருகின்ற நாள்' என்பது பொருள். அன்று குழந்தைகளுக்குக் கல்வியைத் தொடங்கினால் வாழ்வு சிறக்கும் என்பது நம்பிக்கையாகும். வடநாட்டிலும், தென்னாட்டிலும் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**அம்மன் திருவிழா**

அம்மன் வழிபாடானது, ஊர்தோறும் நடைபெறும் முக்கிய வழிபாடாகும். மாரி என்றால் மழை என்று பொருள். கோடைக்காலத்தில் வெப்பத்தின் காரணமாக மக்களுக்கு அம்மை போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இந்நோய்கள் வராமல் தடுப்பதற்காக மழைதர வேண்டி மாரியம்மனுக்கு விழா எடுத்து வழிபடுகின்றனர்.

**தீமிதி திருவிழா**

பல நோய்களுக்கு மருந்தாக உள்ள வேப்பமரமே மாரியம்மனுக்கான 'தல விருட்சமாகும்'. இவ்விழா, காப்புக்கட்டுதல் தொடங்கி ஏழு நாள்முதல், பதினைந்து நாள்வரை நடைபெறும். பூவோடு எடுத்தல், பூவாரி கொட்டுதல், அலகு குத்துதல், சாட்டை அடித்தல், மொட்டை அடித்தல், மாவிளக்கு எடுத்தல், தீமிதித்தல் போன்றவை மாரியம்மன் திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் ஆகும். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பண்ணாரியம்மன் கோயில் தீமிதித் திருவிழா குறிப்பிடத்தக்கதாகும். இவ்விழா, மஞ்சள் நீராட்டுதலுடன்

நிறைவடையும். இவ்விழா, கிராமங்கள்தோறும் உள்ள மக்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஆடிப்பூரம்**

அம்மனுக்கு உகந்த திருநாள்களில் ஆடிமாதம் பூர நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் ஆடிப்பூரத்திருநாள் மிகவும் சிறப்புடையது. சிவத் தலங்களில் அம்மனுக்கும், திருவில்லிப்புத்தூரில் ஆண்டாளுக்கும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இந்நாளில், அம்மனுக்கு வளையல்களால் அலங்காரம் செய்து ஆடிக்கூழ் படைத்து இவ்விழாவை மக்கள் கொண்டாடுகின்றனர்.

**நாட்டார் திருவிழாக்கள்**

நாட்டார் தெய்வங்கள் கிராம மக்களால் வணங்கப்படுபவை ஆகும். இவை சிறுதெய்வங்கள், கிராம தேவதைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நாட்டார் தெய்வ வழிபாடுகள் கிராம மக்களின் பண்பாட்டுடனும் பழக்க வழக்கங்களுடனும் ஒன்றிணைந்தவையாக உள்ளன. பொன்னியம்மன், போத்திராஜா, அண்ணமார், அய்யனார், காத்தவராயன், நாடியம்மன், கருப்பசாமி, சுடலைமாடன், இசக்கியம்மன் போன்ற பல்வேறு நாட்டார் தெய்வங்களை மக்கள் தங்கள் முன்னோர்களாகவே கருதுவர். இவ்விழாக்கள் மூலம் இன்றும் நாட்டுப்புறக்கலைகள் உயிர்த்திருக்க இவ்விழாக்கள் பேருதவி புரிகின்றன.

**கந்த விரத விழாக்கள்**

தமிழ்க் கடவுளான முருகனை வணங்கும் விழாவே கந்த விரத விழா ஆகும். ஐப்பசி மாதம் வளர்பிறை ஆறாம் நாள் சஷ்டியே ''கந்த சஷ்டி'' விழாவாகும். முருகப் பெருமான் அரக்கனை ஒடுக்கப் போர் புரிந்த நிகழ்வையே கந்த சஷ்டி என்கிறோம். வைகாசி மாதம் முழுநிலவு நாளில் வைகாசி விசாகம் கொண்டாடப்படுகிறது. முருகன் ஆலயங்களில் இவ்விழா நடைபெறுகிறது.

பங்குனி உத்திரம் என்பது, பங்குனி மாதத்தில் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இது முருகனின் திருமணநாளாகக் கருதப்படுகிறது. ஆடி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தை முருகனுக்குரிய நாளாகக் கருதி வழிபடுவர். இந்நாளன்று, அறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணியில் ஆடிக்கிருத்திகை விழா சிறப்பாகக் கொண்டாப்படுகின்றது.

**பயிற்சி – 18**

கட்டடக் கலை – மரக்கட்டடங்கள் –செங்கல் கட்டடங்கள் – குடைவரைக் கோயில்கள் – கற்றளிகள் – திராவிடக் கட்டடக்கலை –விமானம் –கோபுரம்.

**விடை**

**கட்டடக் கலை**

தமிழகத்தில் உள்ள வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் போன்றவை தமிழகக் கட்டட கலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இவற்றுள் கோயில்களே காலத்தைக் கடந்து தமிழரின் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன. சங்ககாலம் தொட்டே முறையாகக் கட்டடங்களை அழகுற அமைப்பதற்கான 'மனை நூல்கள்' இருந்தன. இதனை 'நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்' என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

**மரக்கட்டடங்கள்**

பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன. இதற்குச் சான்றாகச் சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சபாநாயகர் மண்டபத்தை இன்றும் காணலாம். மரக்கட்டடங்கள் இயற்கையினால் அழிந்துவிடும் தன்மை உடையன. இதன் மேற்பகுதி விரைவில் பழுதாகிவிடும். அதனால் இவை செம்பு, வெள்ளி, பொன் தகடுகளால் வேயப்பட்டன. மரக்கட்டடங்களோடு களிமண் கட்டடங்களும் தோன்றின. களிமண் கட்டடங்களின் மேற்கூரைகள் மரத்தால் வேயப்பட்டு இருந்தன. பின்னர், மரக்கட்டடங்களும் களிமண் கட்டடங்களும் சுடுமண்ணால் கட்டப்பட்ட உயர்ந்த கட்டடங்களாக மாறின.

**செங்கல் கட்டடங்கள்**

சங்க காலத்தில் இருந்தே சுட்ட செங்கற்களால் ஆன கட்டடங்களைத் தமிழகத்தில் காணலாம். செங்கற் கோயில்கள் மரக் கோயில்களைவிட உறுதியாகவும் நீடித்த தன்மை உடையனவாகவும் விளங்கின. கி.பி.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோயில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாகவே இருந்தன. இவை மன்னர்களால் அவ்வப்போது செப்பனிடப்பட்டன.

**குடைவரைக் கோயில்கள்**

பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை குடைவரைக் கோயில்கள் ஆகும். இவை கருவறை, முன் மண்டபம், தூண்கள் என்ற அமைப்பைக் கொண்டிருந்தன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் கி.பி.(பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன், முதல் குடைவரைக் கோயிலை அமைத்தான். முற்காலப் பாண்டியர்கள் அமைத்த முதல் குடைவரைக் கோயில் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் ஆகும். குடைவரைக் கோயில்கள் நீண்ட மண்டபம் போன்ற அமைப்பைப் பெற்றிருந்தன. எனவே 'மண்டபக் கோயில்கள்' என்றும் பாறைகளைக் குடைந்து அமைத்ததால் 'பாறைக் கோயில்கள்' என்றும் அழைக்கப்பட்டன.

ஒரே கல்லினால் ஆன ஒற்றைக்கற் கோயில்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இவற்றை அமைக்க, பாறைகளை மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மாமல்லபுரத்தின் மகிசாசுரமர்த்தினி கோயிலின் முன் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாமல் உள்ள ஒற்றைக்கல் கோயில் இதற்குச் சான்றாகும்.

**கற்றளிகள்**

கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டடங்களுக்குக் 'கற்றளிகள்' என்று பெயர். கி.பி ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனமலை ஆகிய ஊர்களில் காணப்படும் கற்றளிகள் காலத்தால் முந்தியவை. கி.பி.

(பொ.ஆ.) எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கட்டடங்களில், பெரும்பான்மை கற்றளிகளாகவே இருந்தன. பிற்காலச் சோழர்கள் செங்கற்களால் ஆன பழைய கோயில்களைக் கற்றளிகளாக மாற்றினர்.

**திராவிடக் கட்டடக்கலை**

இந்தியக் கோயில் கட்டடக்கலை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று வகைப்படும். சிகரத்தின் அமைப்பானது நான்கு பக்கங்களைக் கொண்டு சதுரமாக அமைந்திருந்தால் அந்த விமானம் 'நாகரம்' எனப்படும். இதுவே, வட இந்திய கட்டடக்கலையாகும். சிகரம் வட்டவடிவமாக இருப்பின் அந்த விமானம் 'வேசரம்' எனப்படும். இவை, இந்தியாவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள பௌத்த சமயக் கட்டடக் கலையாகும். சிகரமானது எட்டுப்பட்டை அமைப்புடன் இருந்தால் அந்த விமானம் 'திராவிடம்' எனப்படும். திராவிடம் என்பது தென்னிந்தியக் கோயில் கட்டடக் கலை ஆகும். வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே குமரி வரை திராவிடக்கலை பரவியுள்ளது.

மேலும், இக்கட்டடக்கலை இலங்கை, பர்மா, மலேசியா, கம்போடியா போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது. தமிழகக் கட்டடக் கலையை பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர, நாயக்கர் ஆகியோரின் காலக்கட்டத்தவை எனத் தனித்தனியாக வகைப்படுத்தலாம்.

**விமானம்**

இந்துக் கோயில்களில் கர்ப்பக்கிரகம் என்னும் கருவறையின் மீது அமைக்கப்படும் பிரமிடு போன்ற கட்டடக்கலையை விமானம் என்பர். விமானத்தைப் பொதுவாக 'ஷடங்க விமானம்' என்பர். ஷடங்க விமானம் என்பது, ஆறு உறுப்புகளைக் குறிக்கும். அவை மனித உடலின் உறுப்புகளுடன் ஒப்புமையுடையவையாகும்.

**கோபுரம்**

கோயில் உறுப்புகளில் மிக முக்கியமானதும் அழகுடையதுமாக விளங்குவது கோபுரம். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பர். இக்கோபுரம் சுற்றுப்புறச் சுவரில் ஊடறுத்துச் செல்லும் நுழைவாயிலின் மேல் கட்டப்பட்டதாகும். கோபுரத்தின் உச்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இடம்பெற்றிருக்கும்.

கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில் தொடங்கி, விஜயநகர மன்னர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்தது எனலாம். இராஜசிம்மன் காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயிலில்தான் முதன்முதலாகச் சிறுகோபுரம் அமைக்கப்பட்டது. பல்லவர்களும், சோழர்களும் விமானத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். விஜயநகர மற்றும் நாயக்கர் காலத்தில் விமானங்களைச் சிறியனவாகவும், கோபுரங்களைப் பெரியனவாகவும் அமைத்தனர். கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில்தான் மிக உயர்ந்த கோபுரங்களை அமைக்கத் தொடங்கினார். இவர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற இடங்களில் பெரிய கோபுரங்களை அமைத்தார். பிற்காலத்தில் இவை 'இராஜ கோபுரம்' என்று அழைக்கப்பட்டன.

**பயிற்சி – 19**

பல்லவர் காலக் கட்டடக்கலை – பாண்டியர் காலக் கோயில்கள் – வெட்டுவான் கோயில் – கழுகுமலை – சோழர்காலக் கோயில்கள் – தஞ்சைப் பெரிய கோயில் – கங்கை கொண்ட சோழபுரம் – விஜயநகரப் பேரரசர் காலம் மற்றும் நாயக்கர் காலம் – மதுரை நாயக்கர் மஹால்.

**விடை**

**பல்லவர் காலக் கட்டடக்கலை**

பல்லவர்கள், காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு தமிழகத்தை முந்நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் மரம், சுதை, உலோகம், செங்கல் போன்ற கட்டுமானப் பொருள்கள் இன்றிக் காலத்தால் அழிக்க இயலாத குடைவரைக் கோயில்களை உருவாக்கினர்.

மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், வல்லம், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய பகுதிகளில் பழைமையான பல்லவர் காலத்துக் கோயில்கள் உள்ளன. இவற்றில் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் மிகவும் தொன்மையானவை. மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. 'சாளுவன் குப்பத்தில்' உள்ள குகைக்கோயிலில் வெளிமுகப்பு முழுவதும் யாளியின் முகம் செதுக்கப்பட்டுள்ளது. இது குகைக்கோயில்களின் அமைப்பிலேயே வியக்கத்தகு வடிவை உடையது. இப்பகுதி, தற்காலத்தில் 'புலிக்குகை' என்று அழைக்கப்படுகிறது.

பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் அமைத்ததோடு அன்றிக் கட்டுமானக் கோயில்களையும் எழுப்பியுள்ளனர். இவற்றுள், அழகும் தொன்மையும் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் கோயில். இது ராஜசிம்மனால் கட்டப்பட்டது.

**பாண்டியர் காலக் கோயில்கள்**

பல்லவர்கள், தமிழகத்தின் வட பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில், தென் பகுதியைப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். செழியன்சேந்தன் காலம் முதல் வீரபாண்டியன் காலம்வரை அவர்கள் தோற்றுவித்த குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்றளிகள், கட்டடக் கோயில்கள் ஆகியன பாண்டியர்கள் காலக் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

தமிழகத்தில் பாண்டியர்களின் குடைவரைக் கோயில்கள் சிற்பங்கள் மிகுந்து அழகுடன் காணப்படுகின்றன. பிள்ளையார்பட்டி, மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குன்றக்குடி, திருமயம், குடுமியான்மலை, சித்தன்னவாசல், மகிபாலன்பட்டி, பிரான்மலை, அழகிய பாண்டியபுரம், மூவரைவென்றான் போன்ற ஊர்களில் பாண்டியர்கள் காலக் குடைவரைக் கோயில்களைக் காணலாம்.

**வெட்டுவான் கோயில் – கழுகுமலை**

கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயில்' பாண்டியரது ஒற்றைக் கற்றளிக்குச் சான்றாகும். இது மலையின் மேலிருந்து கீழ்நோக்கிக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இது 'தென்னகத்து எல்லோரா' என்று அழைக்கப்படுகிறது. திருப்பத்தூர் திருக்கற்றளிநாதர் கோயில் பாண்டியர் காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

**சோழர்காலக் கோயில்கள்**

தமிழகக் கட்டடக்கலை வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம் பொற்காலமாகும். விஜயாலயசோழன் முதல் மூன்றாம் இராஜராஜசோழன் வரையிலான மன்னர்கள், அழகு வாய்ந்த எண்ணற்ற கோயில்களை எழுப்பினர். செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களை எல்லாம் கருங்கற்களாலான கோயில்களாக மாற்றி அமைத்தனர். விஜயாலயசோழனால் கட்டப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலைக் கோயில் தனித்தன்மை வாய்ந்தது. இக்கோயிலின் வெளிச்சுவர் சதுர வடிவிலும் உட்சுவர் வட்ட வடிவிலும் உள்ளது.

'ஆதித்தசோழன்' காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டினார். இக்கோயில்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. 'பராந்தகசோழன்' எழுப்பிய பிரம்மபுரீசுவரர் கோயில், எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் ஆகியன சோழர் காலக் கட்டடக்கலையின் எழிலையும் எளிமையையும் விளக்குவன. சோழர் காலக் கட்டடக் கலையில் 'செம்பியன்மாதேவியின்' பங்கு குறிப்பிடத்தக்கது. இவர் பாடல் பெற்ற பல தலங்களைக் கற்றளிகளாக மாற்றியமைத்துப் பெரும் பொருள்களை வழங்கினார்.

**தஞ்சைப் பெரிய கோயில்**

இராஜராஜசோழன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில் 'தென்னகத்தின் மேரு' என அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றது. இக்கோயிலே தமிழகக் கட்டடக் கலையின் மணிமகுடமாக விளங்குகின்றது. தஞ்சையின் சுற்று வட்டாரப் பகுதிகளில் கருங்கற்களே இல்லாத நிலையில் முற்றிலும் கருங்கற்களைக் கொண்டே 216 அடி உயரமும் 13 அடுக்குகளையும் கொண்ட விமானத்தை அமைத்து 'இராஜராஜேசுவரம்' எனப் பெயரிட்டார் இராஜராஜன். இதன் முதல் வாசல் 'கேரளாந்தகன் திருவாசல்' என்றும், இரண்டாம் வாசல் 'இராஜராஜன் திருவாசல்' என்றும் அழைக்கப்படுகின்றன.

இக்கோயிலின் உச்சியில் உள்ள எண்கோண வடிவிலான சிகரம் 80 டன் எடை கொண்டது. இதனை, 1987ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.

**கங்கை கொண்ட சோழபுரம்**

இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை அமைத்தார். இது 170 அடி உயரம் கொண்டது. இக்கோயில் சிற்பக் களஞ்சியமாக விளங்குகின்றது.

**விஜயநகரப் பேரரசர் காலம் மற்றும் நாயக்கர் காலம்**

விஜயநகரப் பேரரசின் காலத்தில் தமிழகக் கட்டடக்கலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் தொடர்ச்சியாகவே விஜயநகரப் பேரரசுக் காலக் கட்டடக்கலை விளங்குகிறது. ஆனால் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் இக்காலக் கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகளாகும். இக்கோயில்களில், விமானங்கள் சிறியதாகவும், கோபுரங்கள் உயரமாகவும் உள்ளன. திருவண்ணாமலை, மதுரை, இராமேசுவரம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் கோபுரங்கள் இக்காலத்தவையாகும்.

**மதுரை நாயக்கர் மஹால்**

நூறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்புதல் இவர்களின் தனிச் சிறப்பு. திருமலை நாயக்கர் மகால், இராமேசுவரம் இராமநாதசாமி கோயில் ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் புது மண்டபம், திருச்சி மலைமீது கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் ஆகியன இவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமிழர் கட்டடக்கலையின் நெடிய வரலாறு தமிழர் தம் பழைமையையும் வளமையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

**பயிற்சி – 20**

சிற்பக்கலை – சங்ககாலம் – சிற்பங்கள் – பிரதிமைகள் – பல்லவர் காலம் – மாமல்லபுரம் – சோழர் காலம் – தஞ்சாவூர் நந்தி – செப்புத் திருமேனிகள் – விஜயநகர மற்றும் நாயக்கர் காலம்.

**விடை**

**சங்ககாலம்**

நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'நடுகல்' என்பது, போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயரும் பெருமையும் எழுதி நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும். இது 'வீரக்கல்' அல்லது 'நினைவுக்கல்' என்றும் அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் முறையாக வளர்ந்தது. தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது. விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது கதிரை எடுப்பு, உருவாரம் எனப்படும். கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் என்றும் அழைக்கப்படும்.

சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பரிபாடல் மூலம் அறியலாம் கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமண் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சுதைச்சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது. சிற்பக் கலைஞர்களை 'மண்ணீட்டாளர்' என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேகலையின் மூலம் அறியலாம். கி.பி.(பொ.ஆ.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.(பொ.ஆ.) பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன. தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிகை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர். பின்னரே புத்தர் திரு உருவங்களை வணங்கும் முறை தோன்றியது. சமண சமயத்தில் அருகப்பெருமானின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

**சிற்பங்கள்**

இயற்கை உருவங்களையும் கற்பனை உருவங்களையும் வடிப்பது சிற்பக்கலை எனப்படும். கல், சுதை (சுண்ணாம்புக் காரை), மரம், மெழுகு, அரக்கு, தந்தம், உலோகம் ஆகியவற்றால் சிற்பங்கள் வடிக்கப்படுகின்றன. இவற்றைப் புடைப்புச்சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர். கல், மரம், சுவர், பலகை போன்றவற்றில் புடைப்பாக உருவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்படும் சிற்பம் புடைப்புச்சிற்பம் எனப்படும். ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழுவடிவமாக வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும்.

தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டது. தொடக்ககாலச் சிற்பங்கள் மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்டவை. இப்பொழுதும் அத்தகைய சிற்பங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக சுந்தர வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கடவுள் உருவங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாக உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டவதூதப் பெருமாள் முதலிய உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டவை. கல்லினால் சிற்பம் அமைக்கும் முறை பல்லவர் காலத்திலும், உலோகத்தினால் சிற்பம் அமைக்கும் முறை பிற்காலச் சோழர் காலத்திலும் பின்பற்றப்பட்டன.

**பிரதிமைகள்**

தனிப்பட்ட ஒருவரின் உருவஅமைப்பை உள்ளது உள்ளவாறே அமைப்பது பிரதிமைகள் எனப்படும். பிரதிமை உருவங்களில் பழைமையானது பல்லவ அரசர் உருவங்கள் ஆகும். உலோகங்களினால் பிரதிமைகள் அமைக்கும் வழக்கம் சோழர் காலத்தில் தோன்றியது.

**பல்லவர் காலம்**

பல்லவர் காலம், கோயில் சிற்பக்கலையின் தொடக்க காலம் எனலாம். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்களில் உள்ள துவாரபாலகர்கள் என்று அழைக்கப்படும் வாயிற்காவலர்களின் உருவங்கள் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன. இவையே தமிழகத்தில் காணப்படும் முதல் கற்சிற்பங்களாகும். இவர் காலத்தில் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் மட்டுமே கற்களால் உருவாக்கப்பட்டவை. கருவறையில் உள்ள சிற்பங்கள் மரத்தாலோ சுதையாலோ செய்யப்பட்டிருந்தன. பல்லவர் காலத்தில் கடவுள் போலவே அரசன் அரசி உருவங்களையும் உயரமாகச் செதுக்கும் வழக்கம் இருந்தது.

**மாமல்லபுரம்**

மாமல்லபுரத்தில் கோவர்த்தன மலை மண்டபத்தின் அருகில் 96 அடி அகலமும் 43 அடி உயரமும் கொண்ட பாறை உள்ளது. இப்பாறையின் இடையில் இயற்கையாகவே கீழ் நோக்கிய பள்ளம் காணப்படுகிறது. சிற்பிகள் இந்த இயற்கையான வடிவமைப்பைப் பயன்படுத்தித் தம் கற்பனையையும் கலந்து 'பகீரதன் தவம்' என்ற சிற்பத்தொகுதியாக வடிவமைத்துள்ளனர். கங்கை பூமிக்கு வர பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவமிருக்கும் காட்சியும், அந்தத் தவத்தின் பயனாகக் கங்கை பூமிக்கு வரும் நிகழ்வையும் அப்பாறைப் பகுதியில் வடிவமைத்துள்ளனர். இவர்கள் காலத்தில் புராணச்செய்திகளைச் சிற்பங்களாக வடிவமைத்துள்ளனர். நாமக்கல்லில் உள்ள மலைக்கோட்டையின் இருபுறமும் மகேந்திரவர்மன் காலத்துக் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. மலையின் கிழக்குப் பகுதியில் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலும், மேற்குப் பகுதியில் நரசிம்மப் பெருமாள் கோயிலும் உள்ளன. ஒரே மலையில் இரண்டு குடைவரைக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பு அம்சமாகும். இதன் சிற்பங்கள் நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடியவை. இங்கு திருமாலின் பத்து அவதாரங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் காலத்து ஒற்றைக்கல் இரதங்கள், கோயில் சிற்பங்கள் போன்றவை தனித்துவமானவையாக உள்ளன.

**சோழர் காலம்**

பல்லவர் காலச் சிற்பங்களின் வளர்ச்சியுற்ற நிலையே சோழர் காலச் சிற்பங்களாக இருந்தன. பல்லவர் காலத்தில் தாழ்ந்த புடைப்புச்சிற்பங்களாக அமைக்கப்பட்டிருந்தவை, சோழர் காலத்தில் உயர்ந்த புடைப்புச்சிற்பங்களாகவும் முழு உருவச்சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இச்சிற்பக்கலை உயர்ந்த நிலையை அடைந்தது. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் மட்டுமன்றி கஜுராகோ, உதயபுரி, புவனேஷ்வர் ஆகிய பகுதிகளிலும் சிற்பக்கலை வளர்ந்த நிலையில் இருந்தது. உயரமான மகுடங்கள், மெல்லிய நெடிய உடலமைப்பு போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் சிறப்பாகும். பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் அணிகலன்களும் அலங்காரங்களும் மிகுந்து காணப்பட்டன. மேலும், வட்டமான முக அமைப்பும் சற்று தடித்தும் குட்டையானதுமான உடல் அமைப்புகளுடனும் சிற்பங்கள் காணப்பட்டன.

**தஞ்சாவூர் நந்தி**

இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பிரகதீசுவரர் கோயிலின் தெற்கு நோக்கிய வாயிலின் கீழ்ப்புறம் புத்தரின் சிற்பமும் இக்கோயிலின் விமானத்தின் வலப்பக்கம் சமணர் உருவங்களும் உள்ளன. இக்கோயிலின் நந்தி சிற்பம் இந்தியாவில் உள்ள நந்திச் சிற்பங்களில் இரண்டாவது பெரிய சிற்பமாகும். இதன் உயரம் 12 அடி, நீளம் 19.5 அடி, அகலம் 8.25 அடியாகும். இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் கோயிலில் நாயன்மார்களின் வாழ்க்கையைக் குறிக்கும் 90 சிற்பங்கள் உள்ளன.

**செப்புத் திருமேனிகள்**

தமிழர்கள் உலகத்திற்கு வழங்கிய நன்கொடை, செப்புத்திருமேனிகள். சங்க காலத்திலும் உலோகச் சிற்பங்கள் இருந்திருக்கலாம் என்ற செய்தியை மதுரைக்காஞ்சி, குறுந்தொகை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். இருப்பினும் சோழர் காலமே உலோகச் சிற்பங்கள் அல்லது செப்புத்திருமேனிகளின் பொற்காலம்.

விஜயாலயன், பராந்தகன், செம்பியன் மாதேவி, முதலாம் இராஜராஜன் ஆகியோரது காலத்தில் செப்புத்திருமேனிகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சோழர் காலச் செப்புத் திருமேனிகளுள் நடராஜர் சிலை உலகப்புகழ் வாய்ந்தது. சோழ அரசர்களும் அவர்களது குடும்பத்தாரும் கோயில்களுக்குச் செப்புத் திருமேனிகளைக் கொடையாகக் கொடுத்த செய்திகளைக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணலாம். பிற்காலப் பாண்டியர்களின் சிற்பக்கலை என்பது, சோழர் காலச் சிற்பக்கலையின் தொடர்ச்சியாகவே இருந்தது. இவர்கள் கோயில்களின் வெளிப்புறச் சுவர்களையும் சிற்பங்களையும் செம்மைப் படுத்துவதிலும் கவனம் செலுத்தினர்.

**விஜயநகர மற்றும் நாயக்கர் காலம்**

விஜயநகர மன்னர்கள் கட்டடக்கலையில் கொண்டிருந்த ஆர்வம் சிற்பக்கலையிலும் வெளிப்பட்டது. கோபுரங்களிலும், கோயில் விமானங்களிலும் ஏராளமான சிற்பங்களை அமைத்தனர். உயர்ந்த தூண்களையுடைய மண்டபங்கள் அமைத்தல், மண்டபங்களின் தூண்களில் யாளி, குதிரை, மனித உருவங்கள், புராணத் தொன்மங்களை விளக்கும் சிற்பங்கள் போன்றவை விஜயநகர நாயக்கர் காலச்சிற்பங்களின் தனித்தன்மை. இவர்கள் காலச் சிற்பங்கள் இரும்பில் வார்த்தது போன்ற உறுதி உடையவை. விசயநகரச் சிற்பங்கள் மூக்குக் கூர்மையானதாகவும் வயிறு வட்டமானதாகவும் இருக்கும். மனித உருவச் சிற்பங்களில் அணிகலன்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகே கோயில்களில் சிற்பங்கள் அதிக அளவில் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது. வேட்டையாடுதல், கோலாட்டம், பாம்பாட்டி நடனம் போன்ற சிற்பங்களைக் கோயில்களில் இடம்பெறச் செய்தல் இவர்கள் கால வழக்கமாக இருந்தது. இத்தகைய சிற்பங்களை மதுரை மீனாட்சியம்மன் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் போன்ற இடங்களில் காணலாம். தற்காலத்தில் மெழுகு, மணல், கண்ணாடி போன்றவற்றினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

**பயிற்சி – 21**

ஓவியக்கலை – பாறை ஓவியங்கள் – சித்தன்னவாசல் – குகை ஓவியம் – சுவர் ஓவியங்கள் – துகிலோவியம் – தஞ்சாவூர் ஓவியங்கள்.

**விடை**

**ஓவியக்கலை**

'ஒவ்வு' என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதே ஓவியம். ஒவ்வு என்பதற்கு ஒன்றைப் பற்று அல்லது ஒன்றைப் போலவே இருத்தல் என்று பொருள். இச்சொல்லிலிருந்து தோன்றிய ஓவு, ஒவ்வு போன்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கின்றன. தான்கண்ட காட்சியை அப்படியே வரைவது காட்சி ஓவியம், மனத்தில் கற்பனை செய்ததை வரைதல் கற்பனை ஓவியம் ஆகும். தொல் பழங்கால மனிதர் சொற்களை அறியும் முன்பே தம் எண்ணங்களைக் காட்சிகளாக உணர்த்தக் கற்றுக்கொண்டனர். தமக்கு மகிழ்வளித்த வேட்டைக் காட்சிகளையும் பிறவற்றையும் ஓவியங்களாகக் குகைகளில் தீட்டியுள்ளனர். பச்சிலைச்சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகியனவற்றைக் கொண்டு அவ்வோவியங்களுக்கு வண்ணம் தீட்டினர்.

ஓவியத்தை வட்டிகைச் செய்தி, சித்திரச் செய்தி என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பழங்காலத்தில் சுவர் ஓவியங்களே பெரிதும் காணப்பட்டன. அதனால்தான் ''சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை'', சுவரை வைத்தல்லவா சித்திரம் வரைய வேண்டும் என்ற பழமொழிகள் தோன்றின. வளைந்தகோடு, கோணக்கோடு, நேர்க்கோடு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்கள் எழுதப்பட்டன. இவ்வாறான கோட்டோவியங்களுக்குப் 'புனையா ஓவியம்' என்று பெயர். இதனை 'வரி வடிவ ஓவியம்' என்றும் அழைப்பர். மடலேறுதலின் பொழுது பனை ஓலையில் வரைந்த கோடுகளால் ஆன ஓவியம் வரிவடிவ ஓவியமாகும். நெடுநல்வாடையில் முதன்முதலாக வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி கிடைக்கின்றது. புனையா ஓவியத்தில் பலவித வண்ணங்களைப் புனைந்து அமைக்கும் ஓவியம், 'முழுஓவியம்' எனப்படும். ஓவியம் வரைவோரை ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவியவல்லோன், ஓவியப்புலவன் என்றும் அழைப்பர்.

காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலிய பகுதிகளில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் புடைப்பு ஓவியங்களைக் கொண்டு தொன்மைக்கால மக்களின் ஓவியத் திறனை உணரலாம். கீழடியில் நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன.

மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் பிரதிமை என அழைக்கப்படுகின்றன. தெய்வ வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் படிமை எனப்படுகின்றன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், பெரிய வீடுகள் போன்றவற்றின் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டன. மேலும் வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கருப்பு வண்ணத்தால் கோட்டோவியங்கள் வரையப்பட்டன. இவற்றின் மேல் பல வண்ணங்கள் தீட்டும் வழக்கம் இருந்தது. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டது. நடுகல்லில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கும் முன்பே ஓவியமாக வரைந்து கொள்வர். அவ்வோவியத்தைப் பார்த்துக் கல்லில் செதுக்குவர். எழுத்து என்ற சொல்லுக்கு 'ஓவியம்' என்றே பொருள் கொள்வர்

பண்டைய தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காகத் தங்கள் அரண்மனைகளிலும் கோயில்களிலும் 'ஓவியமாடம்' என்ற தனிப்பகுதியை அமைத்தனர். இச்செய்தியினை இலக்கியங்கள் மூலம் அறியலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார். சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் கலைகள் தழைத்து ஓங்கின. பனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்கள் பல்லவர் காலக் கலைத் திறனைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. தஞ்சையில் வரையப்பட்டுள்ள சிவபெருமான், நாட்டியமாடும் பெண்கள், சேரமான் பெருமாள் நாயனார், இராஜராஜன், கருவூர்த்தேவர் ஓவியங்கள் சோழர் காலத்தவை ஆகும். விஜயநகர நாயக்கர் காலத்து ஓவியங்களைத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணமுடிகின்றது.

**பாறை ஓவியங்கள்**

தமிழகத்தில் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்கள், இந்நிலப்பகுதியின் தொன்மையைக் குறிக்கும் சான்றுகளாக அமைகின்றன. இவை மக்களின் கலைஈடுபாடு, சமூக வாழ்க்கை போன்றவற்றை அறிந்துகொள்ள உறுதுணையாக உள்ளன. மலைப்பாறைகளைக் குடைந்து அமைத்த குகைச்சுவர்களின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. இக்குகைகளின் சுவர்கள் கரடு முரடாக இருந்தபடியால் உமி, சாணம், களிமண் முதலான பொருள்களைக் கொண்டு பதப்படுத்திய சுதையைச் சுவர்களின் மேல் பூசினார்கள். பின்னர் அச்சுதைப் பூச்சின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத்தான். அக்குகைக்கோயில் சுவர்களில் சித்திரங்களை எழுதுவித்தான். அவனே ஓவியக் கலையைப் பயின்றவன் என்பதை ''சித்திரக்காரப்புலி'' என்ற அவன் பட்டப்பெயரின் மூலம் அறியலாம். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மல்லபாடியில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட பாறைஓவியம் முக்கியமான ஒரு கண்டுபிடிப்பாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல இடங்களில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**சித்தன்னவாசல் குகை ஓவியம்**

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலில் அமைந்துள்ள குகை ஓவியங்கள் புகழ் வாய்ந்தவை. இவை கி.பி.(பொ.ஆ.) 7 மற்றும் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் காலத்து ஓவியங்கள். இவ்வோவியங்கள் மூலிகைகளால் ஆன வண்ணங்களைக் கொண்டவை. சித்தன்னவாசலின் ஏழடிப்பட்டம் பகுதியின் மேல்கூரைப் பகுதியிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

**சுவர் ஓவியங்கள்**

இலக்கியங்கள், சுவர் ஓவியங்களைப் பற்றிப் பெரிதும் பேசுகின்றன. உதயணனின் பள்ளியறைச் சுவர் ஓவியம் பற்றியும், கோப்பெருந்தேவியின் பள்ளியறைச் சுவர் ஓவியங்கள் பற்றியும் இலக்கியங்களில் காணலாம். பாண்டியன் நன்மாறன், தனது சித்திர மாடத்தில் இருந்த பொழுது உயிர் துறந்தமையால் ''பாண்டியன் சித்திர மாடத்துத்துஞ்சிய நன்மாறன்'' என அழைக்கப்பட்டதைப் புறநானூற்றில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார். நக்கீரரும் தமது நெடுநல்வாடையில் பாண்டியனின் சித்திரமாடத்தைப் பற்றிக் கூறுகிறார். திருப்பரங்குன்ற கோயில் மண்டபத்தில் ''எழு தொழில் அம்பலம்'' என்ற பெயரில் ஓவியச்சாலை இருந்த செய்தியினைப் பரிபாடலின் மூலம் அறியலாம். இரதி, காமன், பூனை வடிவம் கொண்ட இந்திரன், அகலிகை, கௌதம முனிவர் முதலான ஓவியங்கள் இங்குக் காணப்பட்ட செய்தியினை இலக்கியங்களில் காணலாம். இந்த ''எழு தொழில் அம்பலம்'' பிற்காலத்தில் அழிந்தது. உதயணனின் பள்ளியறைச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த காட்சியைப் பெருங்கதையில் காணலாம். திருச்சி மாவட்டத்தின் திருவெறும்பூர் கோயிலில் காணப்பட்ட சித்திரக்கூடம் பற்றிச் செப்பேடுகள் கூறுகின்றன.

இவை மட்டுமன்றிச் செல்வந்தர் வீட்டின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. புத்த தவச்சாலைகள் மற்றும் கோவலனின் தந்தை மாசாத்துவான் தவமியற்றிய சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த செய்தியினை மணிமேகலை கூறுகின்றது.

**துகிலோவியம்**

'படம்' என்ற சொல் 'படாம்' என்ற சொல்லில் இருந்து தோன்றியது. படாம் என்பதற்குத் துணி என்று பொருள். பழங்காலத்தில் துணிகளில் ஓவியங்களை வரைந்தார்கள். அவற்றிற்குச் சித்திரப்படாம், சித்திரத்திரை என்று பெயர். சித்திரம் எழுதும் கோலுக்குத் துகிலிகை என்று பெயர். மணிமேகலையில், சீத்தலைச் சாத்தனார் காவிரிப்பூம்பட்டினத்து உவவனம் என்னும் சோலையின் காட்சி சித்திரப்படாம் போன்று அழகுடன் காணப்பட்டது என்கிறார். தக்க நாட்டிலே ஆங்காங்கே தாமரைப் பூக்களும் தாமரை இலைகளும் அடர்ந்த குளங்களும் காணப்படும் காட்சியினைத் திருத்தக்கதேவர் வருணிக்கும் பொழுது, துணியில் எழுதிய தாமரைக்குளத்தின் காட்சியைப் போலக் காணப்படுகிறது என்கிறார். இளங்கோவடிகள் ஓவியம் வரையப்பட்ட துணியை 'ஓவியஎழினி'

என்கிறார். பலகைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. அவ்வாறு ஓவியம் வரையப்பட்ட பலகை ‘வட்டிகைப்பலகை’ எனப்பட்டது.

**தஞ்சாவூர் ஓவியங்கள்**

சோழர் காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் தோற்றம் பெற்றன. மராட்டிய மன்னன் சரபோஜியின் காலத்தில் தஞ்சாவூரில் இது வளரச்சி பெற்றது. இவ்வோவியங்கள் தமிழகத்தின் புவிசார் குறியீடுகளில் ஒன்றாகும். இவ்வகை ஓவியங்கள் பெரிய மரச்சட்டத்தின் நடுவே அமைந்திருக்கும். இச்சட்டமும் ஓவியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது. கடவுளின் உருவங்கள் கித்தானின் பெரும் பகுதியை நிறைத்திருக்கும். மற்ற உருவங்கள் சிறிதாக அதன் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும். இதில் காணப்படும் ஓவியங்களின் உருவங்கள் உருண்டையாகவும் பருமனான அமைப்புடனும் காணப்படுகின்றன. இதன் உருவ அமைப்புகளில் பெண்தன்மை மிகுந்து நளினத்துடன் காணப்படும்.

இவ்வோவியங்கள் நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை ஆகிய வண்ணங்களில் மைய ஓவியம் அமைந்திருக்கும். கரும்பச்சை, சிவப்பு, அடர்நீலம் போன்ற வண்ணங்களைப் பின்புலமாகக் கொண்டு காணப்படும். அடர்த்தியான கோடுகள் ஓவியத்தைத் தெளிவாகக் காட்டும் விதமாக அமைந்திருக்கும். இவ்வுருவக்கோடுகள் வண்ணங்களுக்கான எல்லையாகவும் அமையும்.

**பயிற்சி - 22**

இசைக் கலை – இசை நூல்கள் – இசைக் கலைஞர்கள் – சங்க இலக்கியமும் இசையும் – சிலம்பும் இசையும் – பக்தி இயக்கமும் இசையும்.

**விடை**

**இசைக் கலை**

இயற்றப்பட்ட செய்யுளை உரிய ஓசையோடு இசைப்பதால் இதற்கு இசை என்று பெயர். எனவே, இசை என்னும் சொல் காரணப்பெயர் ஆகும். இவ்விசைக்கு அடிப்படையானவை ஓசை என்று கூறுவர்.

'ஏழிசையேழ் நரம்பின் ஓசையை' என்ற திருப்பதிகத்தொடர் மூலம் இசை ஏழு என்பதையும் இவை தனித்தனி நரம்புகளில் இசைக்கப்பட்டன என்பதையும் அறியலாம். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு இசைகள் ஆகும். ஏழிசைகளுள் தாரம் என்னும் இசையே, இசை வளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

மிடற்றினால் குரலும் நாவினால் துத்தமும் அண்ணத்தால் கைக்கிளையும் சிரத்தால் உழையும் நெற்றியால் இளியும் நெஞ்சால் விளரியும் மூக்கால் தாரமும் தோன்றுவதாக இசை இலக்கண நூல்கள் கூறுகின்றன. இவ்விசைகள் படிப்படியாக மேல் உயர்ந்து செல்லும் இசைநிரலை 'ஆரோசை' எனவும் தாழ்ந்து செல்லும் இசைநிரலை 'அமரோசை' எனவும் சேக்கிழார் கூறுகிறார். ஆரோசை, அமரோசை ஆகியவற்றை இக்காலத்தில் ஆரோகணம், அவரோகணம் என்பர்.

**இசைக்கருவிகள்**

இசைக்கு உரிய கருவிகளைத் தோல்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என வகைப்படுத்துவர்.

பண்டைய நாளில் வாழ்ந்த இசைக் கலைஞர்கள் குழலையும் யாழையும் கொண்டே ஏழிசைத் திறங்களை இசைத்துள்ளனர். இவை தனிச் சிறப்புடையனவாகக் கருதப்பட்டதைக் 'குழலினிது யாழினிது என்ப' என்ற வள்ளுவரின் தொடர் மூலம் அறியலாம்.

இசைக் கலைஞர்கள் துளைக்கருவிகளில் தொன்மையானது குழலே ஆகும். இது புல் வகையாகிய மூங்கிலில் செய்யப்பட்டதால் வேய்ங்குழல் என்றும் புல்லாங்குழல் என்றும் அழைக்கப்பட்டது.

முற்காலத்தில் மூங்கிலிலும் சந்தனம், கருங்காலி, செங்காலி ஆகிய மரங்களிலும் வெண்கலத்திலும் செய்யப்பட்டது. 'வேய்ங்குழல்' முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக் கருவியாக விளங்கியது.

வில் நாணின் ஓசையைக் கேட்டு, அதன் இசை நுட்பத்தை உணர்ந்து, நாணின் நீளத்தைக் கூட்டியும் குறைத்தும் பல்வேறு இசை ஒலிகளை உருவாக்கினர். இவ்வாறு இசைகளைத் தரும் வில் பலவற்றை ஒன்றாக இணைத்து அமைக்கப்பட்ட நரம்புக்கருவியே, 'வில்யாழ்' ஆகும்.

ஆநிரைகளை மேய்க்கும் ஒருவன் குமிழமரக் கொம்புகளை வில்லாக வளைத்து அதில் மரல்நாரினை நரம்பாகக் கட்டி வில்யாழ் அமைத்துக் குறிஞ்சிப் பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இந்த வில்யாழை அடிப்படையாகக் கொண்டு பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் ஆகியவையும் பெருங்கலம் என்னும் ஆதியாழும் அமைக்கப்பெற்றன.

தொல்காப்பியர் கூறும் தோல் இசைக் கருவிகளில் ஒன்று பறை. இது தோல் இசைக் கருவிகளின் தாயாகவும் கருதப்படுகிறது.

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சிறுபறை, பெரும்பறை, நாழிகைப்பறை எனத்தோல் கருவிகள் முப்பது உள்ளதாக அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறது. இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட தோல் கருவி மத்தளம் ஆகும்.

இசைக்கும்போது மத்தளத்தை முதற்கருவியாகக் கொள்வர். இடையிடையே வாசிக்கச் சலிகை என்னும் கருவியைப் பயன்படுத்துவர். அதனால், இக்கருவியை இடைக்கருவி என்றும் சொல்வர்.

முதலாம் இராஜராஜசோழன் கட்டிய இராசராசேச்சுரக் கோயிலில் உடுக்கை வாசிப்பவரும், கெட்டிமேளம் வாசிப்பவரும் இருந்தனர் எனத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**இசை நூல்கள்**

இறையனார் களவியல் உரை மூலம் முதுநாரை, முதுகுருகு ஆகிய நூல்கள் இருந்தன என்பதை அறியமுடிகிறது. இந்நூலின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் முதலான நூல்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இசை நுணுக்கம் என்னும் நூல் சயந்தன் என்னும் பாண்டிய இளவரசனால் இயற்றப்பட்டது என்று கூறியுள்ளார்.

யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தில், குலோத்துங்கன் இசைநூல் என்ற நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இசை தொடர்பான பல நூல்களின் பெயர் கிடைத்த போதும் அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' என்னும் நூல் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. ப.சுந்தரேசனார் என்பவர் இந்நூலை உரையோடு வெளியிட்டுள்ளார்.

**இசைக் கலைஞர்கள்**

பாணர், பாடினி ஆகியோர் வாய்ப்பாட்டிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்களாக விளங்கினர். பாணர் என்பவர், ஆண் இசைக்கலைஞர்; பாடினி என்பவள், பெண் இசைக்கலைஞர் ஆவர்; இவ்விசைக் கலைஞர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என வகைப்படுத்தப்பட்டனர்.

துளைக்கருவி வாசிப்போர், தோல்கருவி வாசிப்போர், நரம்புக்கருவி இசைப்போர், கண்டத்தால் பாடுவோர் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதைச் சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்த காதை கூறுகிறது.

இசைப்பாணர்கள் வாய்ப்பாட்டுப் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். யாழ் என்னும் இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர்களை 'யாழ்ப்பாணர்' என அழைத்தனர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. மண்டை எனப்படும் ஓட்டினைக் கையில் ஏந்திப் பாடியவர்கள், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர்.

இக்கலைஞர்கள் திருவிழாக்களிலும் அவைக்களத்திலும் பாடிப் பிறரை மகிழ்வித்தனர். தலைமக்களுக்கு இடையே தூதுவர்களாகவும் இருந்துள்ளனர்.

**சங்க இலக்கியமும் இசையும்**

சங்ககாலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு இசைக்குப் பெயர்கள் சொல்லப்பட்டன. குறிஞ்சி நிலத்திற்குக் குறிஞ்சிப்பண், முல்லை நிலத்திற்குச் சாதாரி, பாலைக்குப் பஞ்சுரப்பண், நெய்தலுக்குச் செவ்வழிப்பண், மருதத்திற்கு மருதப்பண் என ஐவகைப் பண்கள் இசைக்கப்பட்டன.

மலைச்சாரல் பகுதியில் விளைந்திருந்த தினைப்பயிரை உண்ணவந்த காட்டு யானை, அப்பயிரைக் காவல் காத்த பெண் இசைத்த குறிஞ்சிப்பண்ணைக் கேட்டுப் பயிரை உண்ணாமல் இசையில் மெய் மறந்து நின்றதை அகநானூறு கூறுகின்றது.

போரில் புண்பட்ட வீரரைப் பேய்களிடமிருந்து காப்பாற்ற காஞ்சிப்பண் பாடப்பட்டதாகப் புறநானூறு கூறுகிறது. யாழ் என்னும் இசைக் கருவிகளால் கலைஞர்கள் மருதப்பண்ணைப் பாடிப் பொழுது விடிந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. மேலும் அது ஆகுளி, முழவு என்னும் கருவிகளைக் கொண்டு செவ்வழிப்பண்ணை மாலைநேரத்தில் இசைத்தனர் என்பதையும் சுட்டுகிறது. இச்செவ்வழிப் பண்ணைக் கேட்டுத் தலைவனைப் பிரிந்த தலைவி மிகவும் வருத்தம் கொண்டாள் என்ற செய்தியும் உண்டு.

நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பண்களைத் தவிர காமரம், நைவளம் போன்ற பண்களும் சங்க காலத்தில் இருந்துள்ளன. வண்டின் ஓசைபோல் இருப்பது காமரம் என்று அழைக்கப்பட்டமைக்கான குறிப்புகளும் கிடைக்கின்றன.

பரிபாடலில் வெறியாட்டப்பாடல், வள்ளைப்பாடல் முதலிய இசைப்பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடலை இசைப்பதற்குரிய பண்ணும் இசை வகுத்த இசைக் கருவிகள் போன்ற தகவல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**சிலம்பும் இசையும்**

இசை ஆசிரியன், மத்தளம் இசைக்கும் தண்ணுமை ஆசிரியன், வேய்ங்குழல் ஊதுவோன், யாழ் ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை நின்றார்கள் எனச் சிலம்பு கூறுகிறது.

இசையின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நடை, வாரம், கூடை, திரள் என இசை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, மந்த நடையாகத் தாழ்ந்து செல்லும் முறையில் இசைக்கப்படுவது முதல்நடை. முடுகிச் செல்லும் விரைந்த நடை உடையது திரள். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இசை நடையை உடையது வாரம். சொற் செறிவும் இசைச் செறிவும் உடையது கூடை ஆகும்.

அரங்கேற்றுக்காதை, ஆய்ச்சியர்குரவை, கானல்வரி, வேனிற்காதை, கடலாடுகாதை, புறஞ்சேரியிறுத்தகாதை முதலிய பகுதிகள் இசைக்குறிப்புகள் நிரம்பியவை. மேலும் யாழ் அமைப்பு, யாழ் இசையின் அமைப்பு முதலியனவும் கூறப்பட்டுள்ளன. மேலும், பெருங்கதை போன்ற காப்பியங்களிலும் இசை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

**பக்தி இயக்கமும் இசையும்**

செய்யுளைப் பண் அமைப்போடு, படைப்பாளனே படைப்பது ஒருவகை. செய்யுளை எழுதிப் பின் வேறொருவர் பண்ணிசைப்பது மற்றொரு வகை. தேவாரம் முதல்வகையைச் சேர்ந்தது என்பர். மாணிக்கவாசகர் தேவாரங்களைப் 'பண் சுமந்த பாடல்' என்று கூறுகிறார். எனவே, இறைவனின் அருளைச் சொற்களாக்கி இசைப்படுத்தியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் எனலாம்.

ஆநிரைகளை மேய்க்கும் பணியை மேற்கொண்ட பொழுது காலையில் மேய்ச்சலுக்குப் போவதும் மாலையில் வீடு திரும்புவதும் வழக்கம். ஒருநாள் மாலைநேரம் வந்தவுடன் ஆநிரைகளும் எருமைகளும் வந்துவிட்டன. ஓர் எருமை மட்டும் காணவில்லை. தேடிப் பார்க்கிறார். கண்ணுக்குப் புலப்படவில்லை. எனினும், அவ்வெருமையின் கனைப்பொலி மட்டும் கேட்கிறது. கனைப்பொலியைக் கேட்ட அவர், தன்கையில் இருந்த வேய்ங்குழலை எடுத்து ஊதி இசையை எழுப்பினார். அவ்விசையைக் கேட்ட அந்த எருமை இசை எழுப்பப்பட்ட இடத்திற்கு வந்து, மற்ற மாடுகளோடு சேர்ந்து வீடு அடைந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

திருநாவுக்கரசர் திருவதிகை என்னும் ஊருக்குச் சென்று இறைத்தொண்டு புரிந்து வந்தார். அவ்வூரில் உள்ள சிவபெருமானை வணங்கச் சுந்தரர் ஒருமுறை செல்கிறார். திருநாவுக்கரசர் வந்துசென்ற அவ்வூரைத் தாம் காலால் மிதிக்கக்கூடாது என எண்ணிய சுந்தரர் ஊருக்குள் போகாமல் ஊருக்கு வெளியே உள்ள 'சித்தவடமடத்தில்' தங்கி உறங்குகிறார். அப்போது சுந்தரர் தலைமீது சிவபெருமான் தன் பாதங்களை வைத்து அருள்புரிந்தார். சிவனின் இந்த அருளை எண்ணித் 'தம்மானையறியாத' என்னும் பதிகத்தைப் பாடினார் என்பது வரலாறு. இப்பதிகம் கொல்லிக் கௌவாணம் என்னும் பண்ணில் அமைந்ததாகும்.

பின்னொரு தருணத்தில் திருவாரூரில் உள்ள சிவபெருமானைப் பற்றிப் பாடிய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும். கொல்லிக் கௌவாணம், கொல்லிப்பண் ஆகிய இவ்விரு பண்களும் நள்ளிரவில் பாடப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார். இவை பழங்காலத்தில் வழங்கப்பட்டிருந்த பண்களோடு தொடர்புடையன.

இப்பாடல்களும் இவற்றின் பண் அமைப்புகளும் மறையும் நிலையில் இருந்தன. அப்போது திருமுறைகண்டசோழன் யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினியைக் கொண்டு அப்பாடல்களின் பழைய பண்

அமைப்புகளுக்குப் புத்துயிர் அளித்தான். சில புதிய பண்களும் தோற்றுவிக்கப்பட்டன. இச்செய்தியைத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. இப்பண்களைக் கோவிலில் பாட ஓதுவார் என்னும் இசைக் கலைஞர்களையும் நியமித்தவனும் இம்மன்னனே. இவ்வோதுவார்களின் பணி இன்றும் தொடர்கிறது.

முதலாம் மகேந்திரவர்மன் இசை, நாடகம், ஓவியம் முதலிய கலைகளில் வல்லவனாக இருந்துள்ளான். இம்மன்னனால் பொறிக்கப்பட்ட குடுமியான்மலைக் கல்வெட்டின் முடிவில் 'எட்டிற்கும் ஏழிற்கும் இவையுரிய' என்ற தொடர் உள்ளது. இத்தொடர் 'சங்கீரணம்' என்னும் இசையைப் பற்றிக் குறிப்பதாகும். தேவாரங்களில் காணப்படாத 'சாளரபாணி' என்ற பண் திருவிசைப்பாவில் உள்ளது.

ஆனால், தேவாரங்களுக்குப் பண் வகுக்கப்பட்ட காலத்தில் நிலவிய இசையும் சேக்கிழார் காலத்தில் நிலவிய இசையும் 'சாரங்கதேவர்' குறிக்கும் தேவாரப் பண்களின் இசையும் இடைக்காலத்தில் தோன்றிய 'இசைமரபு' என்கிறார் வெள்ளைவாரணர்.

கீர்த்தனைகள் என்ற இசைப்பாடல் வடிவம் பிற்காலத்தில் தோன்றின. கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் முதலியோரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

பண்டைய காலந்தொட்டே தமிழர்களின் வாழ்வியலோடு கலந்து இசைக்கலை வளர்ந்து வந்துள்ளது. சங்க காலத்துப் பாணர்களும், பாடினிகளும், விறலியரும் இசையை வளர்த்து வந்துள்ளனர். ஐவகை நிலப்பிரிவிற்கு யாழ், பண், பறை முதலியன அமைந்திருந்தன. சங்கம் மருவிய காலத்துத் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள். களப்பிரர்கள் சமண சமயத்தைத் தழுவினர். அற இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றின. இவை பெரும்பான்மையும் வெண்பா யாப்பிலேயே அமைந்தன. ஆனால் சங்க காலத்தில் வெண்பா யாப்பு வழக்கில் இல்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலியவற்றில் இசைக்கருவிகள் பற்றிச் செய்திகள் காணக்கிடைக்கின்றன. சோழர்காலக் காப்பியங்களும் நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்களும் தமிழோடு இசையையும் சுமந்து வந்து நால்வர் இசை மரபை உருவாக்கியது. இன்று பண்ணோடு இசைக்கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**பயிற்சி – 23**

நடனக்கலை – ஆடல் வகைகள் – முத்திரைகள் – நடன நூல்கள் – குரவைக்கூத்து – பல்லவர் காலம் – சோழர் காலம் – பிற்காலம் – பரத நாட்டியம்.

**விடை**

**நடனக்கலை**

நடனக்கலை, ஆடல்கலை, கூத்துக்கலை என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சில கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. அவை, வேலன் ஆடும் வெறிக்கூத்து, வீரர்கள் ஆடும் கருங்கூத்து, பெண்கள் ஆடும் வள்ளிக் கூத்து, இளைய வீரனின் வெற்றியைப் பாராட்டி இருபாலரும் ஆடும் கழனிலைக் கூத்து போன்றவையாகும்.

சங்க காலத்தில் கூத்துக்கலையை வளர்த்தவர்கள் கூத்தர்கள் எனப்பட்டனர். கூத்தர் இனப் பெண்கள் விறலி, ஆடுமகள், ஆடுகளமகள் என்றும் கூத்தர் இன ஆண்கள் கூத்தன், ஆடுமகன், ஆடுகளமகன் என்றும் அழைக்கப்பட்டனர். பண்டைய அரசர்கள் கூத்தர்களைப் பாராட்டிப் பரிசளித்தனர். அரசர்கள் விறலியர்க்குப் பரிசளித்த செய்தியினைச் கோவூர்க்கிழார், மாங்குடி மருதனார் போன்ற புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறும் நாடக மகளிர் என்னும் தொடர் நடன மகளிர், கூத்த மகளிர், விறலியர் என்னும் பொருளையே அளிப்பதாக மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.

நடனம் கற்கும் பெண் தனது 7 ஆம் வயது முதல் 12 ஆம் வயது வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடனக்கலைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நடனக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் தலைக்கோல் ஆசான் என்று அழைக்கப்பட்டார். இவர், வேத்தியல், பொதுவியல் என இருவகைக் கூத்துகளிலும் சிறந்தவராக இருத்தல் வேண்டும்.

அடியார்க்குநல்லார் கருத்துப்படி கூத்து நான்கு வகைப்படும். அவை, சொக்கம், மெய்க்கூத்து, அபிநயம், நாடகம் என்பன. இதில் சொக்கம் என்பது இசையுடன் கூடிய தூய நடனம். மெய்க்கூத்து என்பது இசையுடன் கூடிய அகம் சார்ந்த நடனம். அபிநயம் என்பது இசையுடன் கலந்த பாடலுக்கு ஏற்ற நடனம். நாடகம் என்பது இசையுடன் கதை தழுவி வரும் பாட்டிற்கான நடனம். ஆடல் என்பது எல்லா வகைக் கூத்துகளையும் குறிக்கும் என்கிறார் அடியார்க்குநல்லார்.

**ஆடல் வகைகள்**

சிலப்பதிகாரத்தில் மாதவி பதினோரு வகை ஆடல்களை ஆடினாள். அவையாவன; 1. அல்லியம் 2. கொடுகொட்டி 3. குடைக்கூத்து 4. குடக்கூத்து 5. பாண்டரங்கம் 6. மல்லியம் 7. துடி 8. கடையம் 9. பேடு 10. மரக்கால் 11. பாவை என இவை தெய்வங்களால் ஆடப்பெறுவதால் 'தெய்வவிருத்தி' என்றும் அழைக்கப்படுகின்றன.

**முத்திரைகள்**

அகக்கூத்து, புறக்கூத்து எனக் கூத்து இரண்டு வகைப்படும். இருவகைக் கூத்துகளுமே ஆடல் என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். நடனத்தின் பொழுது ஒரு கையினால் காட்டப்படும் முத்திரைகளும், இரு கைகளினால் காட்டப்படும் முத்திரைகளும் கூறப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை எனப் பகுக்கப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல் இரண்டும் புறக்கூத்தில் காட்டப்படுவன. எழிற்கை, தொழிற்கை இரண்டும் அகக்கூத்தில் காட்டப்படுவன. இவற்றில் பிண்டி ஒரு கையால் காட்டப்படும் முத்திரை. இது 24 வகையாக அமையும். பிணையல் இரண்டு கைகளாலும் காட்டப்படுவது. இது 13 வகையாக உள்ளது.

**நடன நூல்கள்**

நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து', 'வந்த முறையின் வழிமுறை வழாமல்' என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து சிலப்பதிகாரக் காலத்திற்கு முன் நாட்டிய நூல்கள் இருந்தமை தெளிவாகின்றது. பதினோரு வகையான ஆடல்களும் அவற்றின் உறுப்புகளும் பாடல்களும் யாப்பருங்கலம் நூலின் உரையில் கூறப்பட்டுள்ளன. பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்தநூல் ஆகியன கூத்து பற்றிய நூல்கள் ஆகும். இவற்றில் பரதமும் அகத்தியமும் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்தன. இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை.

**குரவைக்கூத்து**

மகளிரால் ஆடப்படுவது குரவைக்கூத்து. ஏழு முதல் ஒன்பது பேர் வட்டமாக நின்று கைகோத்து ஆடுவது. இது குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என இரு வகைப்படும். குன்றக்குரவை என்பது குறிஞ்சி நிலத்தில் வாழும் மகளிர் முருகனுக்காக ஆடும் ஆடல். ஆய்ச்சியர் குரவை முல்லை நிலத்தில் வாழும் மகளிர் திருமாலுக்காக ஆடும் ஆடல்.

**பல்லவர் காலம்**

பல்லவர் காலத்தில் நடனக்கலை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற தனது நூலில் சிவபெருமானின் தாண்டவங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ராஜசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படும் பதாகை நடனம், லதாவிருச்சிக நடனம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியன சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் கூத்தன் கூத்தியர் உருவங்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தவரான சுந்தரர், நடன மாதரான பரவை நாச்சியாரை மணந்துகொண்ட செய்தியை இலக்கியங்களில் காணலாம். தில்லையில் உள்ள சிவபெருமான், 'கூத்தப்பெருமான்' என நாயன்மார்களால் பாடப்பட்டார். பல்லவர் காலத்தில் நடனமாதர் மாணிக்கத்தார், கணிகையர் எனப்பட்டனர். அக்காலத்தில் காஞ்சிபுரம் முக்தீச்சுரர் கோயிலில் மட்டும் 42 நடன மாதர் இருந்தனர் என்ற செய்தியினை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. பல்லவர் காலத்தில் நடனம் வகித்த இடத்தை இவற்றின் மூலம் அறியமுடிகின்றது.

**சோழர் காலம்**

சோழர் காலம் கலைகளின் வளர்ச்சியால் பொற்காலமாகத் திகழ்ந்தது. சைவ வைணவ சமயங்கள் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றன. கோயில்கள் பெரும்பான்மை கற்கோயில்களாக மாற்றப்பட்டன. கோயில்களில் நடனம் உட்பட அனைத்துக் கலைகளும் வளர்க்கப்பட்டன. கோயில் கருவறைகளின் அடிப்பகுதியில்கூட, நடன வகைகள் செதுக்கப்பட்டிருந்தன. இதற்கு சிதம்பரம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், திருவண்ணாமலை ஆகிய கோயில்கள் சான்று. இவர்கள் காலச் சிற்பங்களில் கூத்தியர் மட்டும் தனித்து நடனம் ஆடும்படியான சிற்பங்களைப் பெரிதும் காணலாம்.

தஞ்சாவூர்ப் பெரிய கோயில் கருவறையின் புறச்சுவரில் நடன மாதர்களின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியத்தில் நடனப் பெண்களின் கூந்தல் ஒப்பனை, உடை, இசைக்கருவிகள், முகப்பொலிவு, உருவ அமைப்பு ஆகியன நடனப் பெண்கள் பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றன. இராஜராஜ சோழன், தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடல் நிகழ்த்துவதற்காகப் பதியிலார் எனப்படும் நடனத்தில் சிறந்த பெண்களை நாடெங்கிலும் இருந்து தேர்ந்தெடுத்து வரச் செய்தான். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளித்தான். இச்செய்தியினைத் தஞ்சைக் கல்வெட்டில் காணலாம். திருவிடை மருதூருக்கு அருகில் உள்ள காமரசவள்ளி என்னும் ஊரில், சிறப்பாகச் சாக்கைக் கூத்தாடும் ஒருவருக்கு 'சாக்கை மாராயன்' என இராசேந்திரன் பட்டம் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**பிற்காலம்**

நாயக்கர் காலத்தில் கர்நாடக இசைவடிவம் தமிழகத்தில் வளரத் தொடங்கியது. இக்காலத்தில் வடமொழி நடன நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன.

மகாபாரத சூடாமணி, அபிநயதர்ப்பணம், அபிநயதர்ப்பண விலாசம், பரவராக தாளம், சுத்தானந்தப் பிரகாசம், ஆதிமூல பாரதம், பரத சாத்திரம், பரத சேனாபதியம் முதலிய மொழிபெயர்க்கப்பட்ட நடன நூல்களை மா. இராசாணிக்கனார் பட்டியலிடுகின்றார்.

**பரத நாட்டியம்**

தமிழர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வரும் கலை பரதநாட்டியம். இசைப்பாட்டிற்கேற்ப அபிநயம் காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்படுவது. இதற்குக் கைக்குறியீடுகள் இன்றியமையாதன. இவை, இளங்கோவடிகள் கூறுவதைப் போன்றே ஒரு கை முத்திரை, இருகை முத்திரை என இரண்டு வகைப்படுகின்றது. ஒருகை முத்திரை இணையா வினைக்கை என்றும், பிண்டிக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இருகை முத்திரை இணைக்கை, இரட்டைக்கை, பிணைக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இம்முத்திரைகள் பரதத்திற்கு உயிர் போன்றவை. இம்முத்திரைகளைப் புரிந்துகொள்ளாமல் பரதத்தைச் சுவைத்து இன்புறுவது கடினமாகும். இவ்வாறு காலந்தோறும் தமிழகத்தில் நடனக்கலை தழைத்து வந்துள்ளது.

மனித இனம் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்தே தங்களின் உணர்வுகளை நடனத்துடன் வெளிப்படுத்தி உள்ளனர். முற்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த நடனக்கலை பற்றிய செய்திகளை இலக்கியம், சிற்பம், ஓவியங்கள் மூலம் அறியலாம். தமிழர்களின் தொன்மைக் கலையான பரதம் பல வகையான முத்திரைகளையும் பாவங்களையும் உள்ளடக்கியது. இஃது உலகின் அதிக மக்களால் விரும்பிப் போற்றப்படும் கலையாகவும் உள்ளது.

**பயிற்சி – 24**

தமிழக விளையாட்டுகள் – வீர விளையாட்டுகள் – ஏறுதழுவுதல் – சிலம்பாட்டம் – சடுகுடு – இளவட்டக்கல் –உரிமரம் ஏறுதல்.

**விடை**

**தமிழக விளையாட்டுகள்**

தமிழக விளையாட்டுகள் அனைத்துமே இரண்டு குழுவாகப் பிரிந்து விளையாடும் பொதுத் தன்மையைப் பெற்று இருக்கும். விளையாட்டின் வெற்றி தோல்வியின் காரணமாக யாரும் பிறருக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது. விளையாட்டில் பிறருக்கு ஏற்படும் துன்பத்தையும், எதிர் அணியாக இருப்பினும் தம் துன்பம் போல் கருதுதல் வேண்டும். இது தமிழக விளையாட்டுகளுக்கான பொது விதியாகும்.

பிள்ளைத்தமிழ், குழந்தைகளுக்கான பத்துப் பருவங்களைக் கூறுகின்றது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படுகிறது. முதல் ஏழு பருவங்கள், ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. இறுதி மூன்று பருவங்கள் விளையாட்டுகள் பற்றிக் கூறுகின்றது. சிற்றில், ஊசல் என்பன பெண்கள் விளையாடும் விளையாட்டுகள் ஆகும். சிறார்கள் சிறு வீடு கட்டி விளையாடுவது சிற்றில்; தெருவில் பறையடித்து விளையாடுவது சிறுபறை; சிறு தேர் செய்து விளையாடுவது சிறுதேர் ஆகும். பெண்கள் இல்லத்தில் அமர்ந்து விளையாடும் விளையாட்டுகள் மட்டுமே பெண்பாற் பிள்ளைத் தமிழில் கூறப்பட்டுள்ளன. அம்மானை என்பது, சிறுமிகள் வட்டமாக அமர்ந்து பாடல் பாடி விளையாடுவது. கழங்கு என்பது, சிறுமிகள் கல் வைத்து விளையாடும் விளையாட்டாகும். ஊசல் என்பது, சிறுமிகள் பாடல் பாடிக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதாகும்.

பிள்ளைத் தமிழ் கூறுவதைப் போலவே தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளையும் ஆண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாட்டு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெரும்பாலும் ஆண்கள் விளையாடுவன வீர விளையாட்டுகளாகவே உள்ளன.

**வீர விளையாட்டுகள்**

விளையாட்டு என்பதை உவகைச் சுவையில் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். எனவே, விளையாட்டு என்பது, மகிழ்ச்சியைத் தரும் செயல் ஆகும். வீர விளையாட்டு, உயிரை ஈடாக வைத்து ஆடப்படுகிறது. நாட்டுப்புற வீரவிளையாட்டாக ஏறுதழுவல், சிலம்பாட்டம், சடுகுடு, இளவட்டக்கல், உரிமரம் ஏறுதல் எனப் பல விளையாட்டுகளைச் சுட்டலாம்.

இவ்வகை விளையாட்டுகள் மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் என இரண்டாகப் பிரிப்பர். முதல் வகைக்கு ஏறுதழுவலையும் பாரிவேட்டையும் சான்றாகச் சுட்டலாம். சிலம்பாட்டம், புலிவேடம் முதலியவை இரண்டாம் வகைக்குச் சான்றுகளாகும். மன எழுச்சி, குறிக்கோளை அடைதல், தன்னிலை நிறுத்துதல், குழு மனப்பாங்கு, நட்புறவு, உடல் நலம் பேணுதல் போன்ற பண்புகளை விளையாட்டுகள் வளர்க்கின்றன. அவற்றை நம் முன்னோர்கள் உணர்ந்து வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகளாக நம் வீர விளையாட்டுகள் உள்ளன.

**ஏறுதழுவுதல்**

மஞ்சுவிரட்டு அல்லது ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதனால் இவ்விளையாட்டு, பண்டைக் காலம் முதல் உள்ளது என்பதை அறியலாம். வீரத்தை வெளிப்படுத்தும் இவ்விளையாட்டுகளுள் இது முதன்மையாகக் கருதப்படுகிறது. காளையின் கொட்டேறி என்னும் திமிலைப் பிடித்து அடக்குவது சங்க கால முறை. கொம்பைப் பிடித்து முறுக்கி அடக்குவதும் உண்டு. நாணயங்கள் அடங்கிய பையைக் காளையின் கொம்பில் வைத்துக்

கட்டிவிடும் பழக்கம் பிற்காலத்தில் தோன்றியது. நாணயத்தைச் சல்லி என்று கூறுவர். அதனால் இவ்விளையாட்டைச் சல்லிக்கட்டு என்றும் அழைப்பர்.

வாடி வாசல், திட்டி வாசல் முதலான பகுதிகளைக் கொண்ட இவ்விளையாட்டு வேலி மஞ்சுவிரட்டு, வாடிவாசல் மஞ்சுவிரட்டு, வடம் மஞ்சுவிரட்டு என வட்டாரத்திற்கு ஏற்றாற்போல் நடத்தப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் இவ்விளையாட்டைக் கருதுகின்றனர். அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள், மழையின்மை முதலிய குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு விடுகிறோம் என்ற வேண்டுதலின் அடிப்படையிலும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.

இவ்விளையாட்டில் கலந்துகொள்ளும் காளையைச் சல்லிமாடு என்றழைப்பர். இக்காளையைக் கன்றுப் பருவத்திலிருந்தே சிறு துண்டினைக் காட்டிப் பாய்ச்சலுக்குப் பழக்குவர். இச்செயல் ‘உர்ரி காட்டுதல்’ என்று அழைக்கப்படுகிறது. ஏறுதழுவல் விளையாட்டுக்குக் காளையைப் பலவகைகளில் ஒப்பனை செய்வர். கால், கழுத்து முதலிய பகுதிகளில் சலங்கைகள் கட்டப்படும். நெற்றியில் காசுமாலையும் கொம்பில் சிறுவளையமும் அணியப்படும். திமில் பகுதியில் வண்ணப் பொட்டு இட்டும் ஒப்பனை செய்யப்படும். இவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட காளையின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் சல்லிக்கட்டுத் துணியை மீட்பவரே வெற்றி பெற்றவராவர்.

**சிலம்பாட்டம்**

தமிழர்களுடைய நாட்டுப்புறக் கலைகளில் சிலம்பாட்டமும் ஒன்றாகும். சிலம்பு என்னும் சொல் பலபொருள் குறித்த ஒரு சொல்லாக உள்ளது. இங்கு இச்சொல் கம்புகளைக் குறித்து நிற்கிறது. கம்புகளை அடித்து ஒலியெழுப்பும் விளையாட்டுக்குச் சிலம்பு எனப் பெயர். கம்புகளின் ஒலியைத் தவிர இரும்பு ஆயுதங்களின் ஒலியும் இவ்வாட்டத்தின்போது எழுப்பப்படும்.

நேர்த்தியாகக் கம்புகளைச் சுழற்றினால்தான் எதிரியை வீழ்த்த இயலும் என்பதால் போர் முறைகளுக்கு உரிய சில விதி முறைகளும் சிலம்பாட்டத்தில் இடம்பெற்றுள்ளன. உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டது சிலம்பாட்டம். நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தின் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது.

கம்பை வேகமாகச் சுழற்றுவதிலும் முன்பின் திரும்பி ஆடுவதிலும் கலை நயத்தைப் புகுத்தி உருவெடுக்கிறது இச்சிலம்பாட்டம். இவ்வாட்டத்தில் பலவிதமான சுவடுமுறைகள் கையாளப்படுகின்றன. உடலிலுள்ள வர்ம நாடிகளை நோக்கி அடிக்கும் சுவடுமுறைக்கு தட்டுவர்மச் சுவடு என்று பெயர்.

இதில் அடிச்சுப்பிரிவு, பூட்டுப்பிரிவு ஆகிய விளையாட்டு முறைகளும் உள்ளன. ஒருவர் இடம் பார்த்து அடிப்பதும், அவ்வடியை இன்னொருவர் தடுப்பதும் அடிச்சுப்பிரிவு ஆகும். ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிப்பதும் அப்பூட்டிலிருந்து பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் பூட்டுப்பிரிவாகும்.

குமரி மாவட்டத்தில் சிலம்பாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களில் சிலம்பாட்டம் ஆடி மகிழ்வர். அப்பகுதியில் சிலம்படி ஆசான்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். தமிழரின் வீரத்திற்கும் நுட்பமான செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது இச்சிலம்பாட்டம் ஆகும்.

**சடுகுடு**

பசுவைக் கவர்ந்து வருவதும், கவர்ந்து வந்த பசுக்களை மீட்டு வருவதுமான வெட்சி, கரந்தை ஆகிய திணைகளில் வரும் போர் முறையின் தொடர்ச்சியாகச் சடுகுடுவைக் குறிப்பர். இவ்விளையாட்டு, பாண்டிய நாட்டில் குட்டி என்றும் சோழ நாட்டில் பளிச்சப்பிளான், பலீன் சடுகுடு என்றும் தென் சோழ நாட்டில் சடுகுடு என்றும் அழைக்கப்படுகிறது.

மூச்சுப் பிடித்துக் கொண்டு பாடிச் சென்று மீள்வதும், பாடி வருபவரைப் பலரும் சூழ்ந்து பிடிப்பதும் பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் இவ்விளையாட்டின் திறம் ஆகும். மூச்சுப்பிடிப்பதைப் பாட்டம் என்று அழைப்பர். பாடிச் செல்பவரைக் கொம்பு சுற்றிப் பாடுபவன் என்று சொல்வது உண்டு. பாடிச் செல்லும்போது தனி வீரமும், பிடிக்கும்போது கூட்டு வீரமும் உடையது இவ்விளையாட்டு. கபடி என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது.

பிடிபட்டவரை விலக்காமலே பிடிபட்டவரின் எண்ணிக்கையை மட்டும் ஆட்ட இறுதியில் கணக்கில் கொள்ளும் ஆட்டத்தைச் சஞ்சீவி ஆட்டம் என்றும் பிடிபட்டவரைக் கடைசிவரை சேர்க்காமல் ஆட்டத்தை முடித்துக்கொள்வதை ஆடாது ஒழியும் ஆட்டம் என்றும், கூறுவர்.

இவ்விளையாட்டில் இடைக்கோடு மட்டும் போட்டு விளையாடும் பழக்கம் பாண்டிய நாட்டில் உள்ளது. பின்கோடு, பக்கக்கோடு, நடுகோடு முதலான அரங்க அமைப்பில் விளையாடும் பழக்கம் கொங்கு நாட்டில் காணப்படுகிறது.

**இளவட்டக்கல்**

பண்டைய மனிதன் குகைகளில் வாழ்ந்தபோது கல்லைத் தூக்குதல், நகர்த்துதல் முதலிய பழக்கங்கள் நாளடைவில் வாழ்க்கையோடு இணைந்த பழக்கங்களாக மாறியிருக்கலாம். பின் நாகரிக வளர்ச்சியில் உடல்திறனை வெளிப்படுத்தும் விளையாட்டாக அவை மாறியிருக்கலாம் என்பர். இவ்விளையாட்டு, தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக ஆடப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் வீரத்தை வெளிப்படுத்தும் ஆட்டமாக மாறியிருக்கிறது. திருவிழாக்களின்போது ஊர்ப்பொது இடத்தில் இது நடத்தப்படும்.

இவ்விளையாட்டில் கலந்துகொள்பவர் இளவட்டக் கல்லைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துப் பின் கீழே போட வேண்டும். அப்படிச் செய்பவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர். இப்போட்டிக்குக் கிராமத்துப் பெரியவர்கள் நடுவராக இருப்பர். மணமகனாக வருபவருக்குப் பொன், பொருள் போன்ற ஆடம்பரப் பொருள்களைவிட உடல் திறன் இன்றியமையாதது என்பதை இவ்விளையாட்டு வெளிப்படுத்துகிறது எனலாம்.

**உரிமரம் ஏறுதல்**

பட்டை உரிக்கப்பட்ட மரத்தையே உரிமரம் என்பர். இவ்வுரிமரத்தில் ஏறி விளையாடுவதே உரிமரம் ஏறுதல் என்று அழைக்கப்படுகிறது. இவ்விளையாட்டுக்கு எல்லா மரங்களையும் பயன்படுத்துவது இல்லை. கைப்பிடிக்கு அடங்காது பருத்திருக்கும் உதியமரத்தை மட்டுமே பயன்படுத்துவர். பட்டை உரிக்கப்பட்ட மரம் வழுவழுப்பாக இருக்கும். ஏற்கெனவே வழுவழுப்பாக இருக்கும் அம்மரத்தில் விளக்கெண்ணெய் தடவப்பட்டு மேலும் வழுவழுப்பானதாக மாற்றப்படும். இவ்வாறு மாற்றப்பட்ட மரத்தின் உச்சியில் பரிசுப் பொருளையும் கட்டி நட்டுவிடுவர். இம்மரத்தில் ஏறி உச்சியில் இருக்கும் பரிசுப் பொருளைக் கைப்பற்றுபவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.

செங்குத்தான பாறைகள்மீது ஏறுதல், வழுக்குப் பாறைமேல் ஏறுதல் முதலிய பயிற்சிகளை உடையவர்கள், மலைவாழ் மக்கள் ஆவர். இவர்கள் சமவெளிப் பகுதியில் வாழ நேர்ந்தபோது இப்பயிற்சிகள் அவசியமில்லாமல் போகவே விழாக்காலங்களில் உடல்திறனை வெளிப்படுத்தும் வீர விளையாட்டாக இது மாறியது. இவ்விளையாட்டு மதுரை மாவட்டத்தில் பரவலாக விளையாடப்படுகிறது. தற்போது பெரிய இரும்புக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்
# திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்

# 1. மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்

## திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்

திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை.

## திருக்குறளும் மதச் சார்பின்மையும்:

அனைத்து மதங்களையும் மதித்து நடப்பதே மதச்சார்பின்மை. மதம் சார்ந்த நூல்கள் ஒரு மதத்தின் கடவுளின் பெயரால், மனிதர்களுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பிக்கும். ஆனால் திருக்குறள் கடவுளின் பெயரால் மனிதனுக்கு நல்லொழுக்கத்தையும் வாழ்வியல் நெறிகளையும் போதிக்கிறது.

## திருக்குறளும் கடவுள் வாழ்த்தும்:

எழுத்துகளுக்கு எல்லாம் 'அ' கரம் முதலாக இருப்பது போல், உலகிலுள்ள அனைத்தும் கடவுளை முதன்மையாகக் கொண்டுள்ளன.

அகல முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
என்கிறார் வள்ளுவர்.

## திருக்குறளும் பொதுப்பெயர்களும்:

திருவள்ளுவர் குறிப்பிட்ட பெயர்கள் அனைத்தும் ஆறு, மலை, குன்று, வேந்தன், கடவுள் ஆகிய பொதுப்பெயர்களே. இந்நூலில் தமிழ் என்ற சொல்கூட இடம் பெறவில்லை. ஒரு நூலானது காலத்தைக் கடந்து நிற்க வேண்டுமாயின், அதில் வலுவான ஒரு கதாபாத்திரம் இருக்க வேண்டும். அப்படி எதுவும் திருக்குறளில் இல்லை.

## திருக்குறளும் அறமும்:

மனிதன் முதலில் செய்ய வேண்டியது அறம். அந்த அறத்தின் வழியே சேர்த்தப் பொருளைக் கொண்டு இல்வாழ்க்கை நடத்த வேண்டும். இதனையே அறம், பொருள், இன்பம் என வகைப்படுத்தியுள்ளார். எந்த மதத்தையும் சாராமல் இக்கருத்துக்களை நிலைநிறுத்தி உள்ளார் வள்ளுவர்.

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்
என்கிறார் வள்ளுவர்.

## திருக்குறளும் கடவுளும்:

திருக்குறளின் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில்கூட கடவுள் என்ற சொல் இடம் பெறவில்லை. வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், ஆதிபகவன், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி அந்தணன், இருள் சேர் இருவினையும் சேரா இறைவன், தனக்குவமை இல்லாதவன், எண்குணத்தான் என்றே கடவுளைக் குறிப்பிட்டுள்ளார்.

## திருக்குறளும் பொதுத்தன்மையும்:

எல்லா மக்களும் பிறப்பால் சமமே. அவரவர் செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே வேறுபட்டுள்ளனர் என்று பொதுமைத்தன்மையை அக்காலத்தில் வெளிப்படுத்தியவர்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்யாதொழில் வேற்றுமை யான்
என்கிறார் வள்ளுவர்.

## திருக்குறளும் கடவுள் கொள்கையும்:

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்ற குறள்படி, பற்று இல்லாதவர்களை வணங்க வேண்டும். எந்த பற்றும் இல்லாத விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்ட சான்றோர் ஆன இறைவனை பற்ற வேண்டும் என்கிறார் வள்ளுவர். 'மலர்மிசை ஏகினான்' மற்றும் 'வேண்டுதல் வேண்டாமை இலானடி' என்றே திருக்குறளிலும் இக்கருத்தினையே வலியுறுத்தியுள்ளார்.

## திருக்குறளும் இறைவனும்:

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான்

என்ற குறளில் உலகத்தை படைத்தவன் உலகில் ஏற்றத் தாழ்வுடன் சிலர் இரந்து உயிர் வாழுமாறு ஏற்பட்டிருந்தால், இறைவனும் இவரைப் போல எங்கும் அலைந்து கெடுவான் என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

திரு.வி.க. கூற்றின்படி, திருக்குறள்
ஒரு மதத்தார்க்கோ
ஒரு வகுப்பார்க்கோ
ஒரு நிறத்தார்க்கோ
ஒரு நாட்டார்க்கோ உரியதன்று.

தமிழின் முதன்மை நூலாக விளங்கும் திருக்குறள் ஒரு மதச்சார்பற்ற நூல் என்பதை அந்நூலிலுள்ள குறட்பாக்கள் மூலம் அறியலாம்.

## 2. அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை

திருக்குறள் ஒரு அறநூலாகும். இந்நூல் மதச்சார்பற்ற தன்மை உடையது. உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளமையால் உலகப் பொதுமறை எனப்படுகிறது.

### திருக்குறள் சுட்டும் அன்பு:

அன்பு ஒன்றே வாழ்வியலுக்கான அறமாகும். ‘அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்’ என்றும் ‘அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு’ என்றும் அன்பின் உயர்தன்மையை குறிப்பிட்டு உள்ளார்.

> அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு

என்ற குறள் மூலம் அன்பின் வழி இயங்கும் உடலே உயர்நிலை பெறும். அன்பு இல்லாதவர் உடல் வெறும் தோலால் போர்த்திய உடம்பு என்கிறார் வள்ளுவர்.

### திருக்குறள் சுட்டும் அறிவு:

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்ற குறளில் எவர் சொன்னாலும் அக்கருத்தின் உண்மையைக் காண்பதே அறிவு என்கிறார் வள்ளுவர். அறிவு அழிவு வராமல் காக்கும் கருவி. ‘சென்ற இடத்தால் செலவிடா’ என்கிறார் வள்ளுவர்.

### திருக்குறள் சுட்டும் ஒழுக்கம்:

ஒழுக்கம் எலோர்க்கும் மேன்மையைத் தரும். ஒழுக்கம் இல்லாதவன் வாழ்வில் உயர்வு இல்லை. ‘உலகத்தோடு ஒட்ட ஒழுகல்’ என்கிறார் வள்ளுவர்.

> ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி

என ஒழுக்கத்தின் மேன்மையை வாழ்வியலுக்கான நெறியாக சுட்டியுள்ளார்.

### திருக்குறள் சுட்டும் பண்பு:

பண்புடையவர்களால் மட்டுமே இவ்வுலகம் இயங்குகிறது. அரம் போறும் கூர்மையான அறிவை பெற்று இருப்பினும் பண்பு இல்லாதவனை மரம் என்கிறார் வள்ளுவர்.

## திருக்குறள் சுட்டும் நட்பு:

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற குறளில் வாழ்வியலுக்கான அடிப்படையில் ஒன்று நட்பு என்கிறார். நல்ல நட்பு இன்பத்தை அளிக்கும். குற்றமற்ற நட்பை விடாது கைக்கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

## திருக்குறள் சுட்டும் உழைப்பு:

'முயற்சி திருவினையாக்கும்' எனக் குறிப்பிடுவதிலிருந்து உழைப்பின் அவசியத்தை குறிப்பிட்டுள்ளார். 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றும், 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றும் குறிப்பிட்டுள்ளமையால் வாழ்வியலுக்கான ஒரு நெறியாக முயற்சியை குறிப்பிட்டுள்ளார்.

## திருக்குறள் சுட்டும் கல்வி:

கற்கத் தகுதியான நூல்களை கற்று அதன்படி நடக்க வேண்டும். எண்ணும் எழுத்தும் இவ்வுலகில் வாழும் மக்களுக்கு இரு கண்கள் என்கிறார் வள்ளுவர்.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றவை யவை

என்ற குறள்வழி, ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்கிறார் வள்ளுவர்.

## திருக்குறள் சுட்டும் வாழ்வியல்:

பல்வேறு குறட்பாக்களில் விருந்தோம்பல், இல்வாழ்க்கை, மக்கட்பேறு என்பன போன்ற வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தியுள்ளார்.

பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் அன்றாட வாழ்வியலுடன் தொடர்புடைய நெறிகள் பல இடம் பெற்றுள்ளதை மேற்கண்ட குறட்பாக்கள் மூலம் அறியலாம்.

## குறிப்பு:

திருக்குறளின் இன்னபிற அதிகாரங்களையும் பயன்படுத்தி கட்டுரையை எழுதலாம்.

## 3. மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்

உலகப் பொதுமறையான திருக்குறள் உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளன. மனித சமுதாயம் சிறப்புற்று விளங்க திருக்குறளில் பல்வேறு கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஏழு அடிகளில் மனித சமுதாயத்திற்கு அறக்கருத்துக்களை வழங்கியுள்ள நூலாகும்.

### மானுடம்:

மானுடம் என்பது மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறைகளைப் பற்றி கூறுவதாகும். விலங்கிலிருந்து வேறுபட்டு மனிதன் வாழ வேண்டிய நெறிமுறையே மானுடமாகும்.

### திருக்குறளும் மானுடமும்:

### அன்புடைமை

அன்பு இல்லாத உடல் தோல் போர்த்திய வெறும் எலும்பு என்கிறார் வள்ளுவர். அன்பு இல்லாதவர் எல்லாப் பொருட்களையும் தனது என்பர். அன்பு உடையவர் தம்உடம்பும் பிறர்க்கே என்பர். இதனை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
என்ற குறள் வழி உணரலாம்.

### இன்னா செய்யாமை

பிற உயிரின் துன்பத்தை தனது துன்பம்போல எண்ணாதவர் பெற்றுள்ள அறிவால் எந்தப் பயனும் இல்லை என்கிறார் வள்ளுவர். நமக்குத் துன்பம் செய்தவருக்கும் நன்மை செய்வது அவரை நாணும்படி செய்யும் என்பதை

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்
என்ற குறள் வழி அறியலாம்.

### அருளுடைமை

நல்ல வழியினால் ஆராய்ந்து அருள் செய்வதே உயிருக்கு உறுத்துணை. பிற உயிர்களை காப்பவர்களுக்கு தன் உயிர் குறித்த அச்சம் தேவையில்லை. ‘அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை’ என்றும் ‘வலியார்முன் தன்னை நினைக்கத்தான்’ என்றும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாய்மை

ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக் கூடாது. வாய்மை எனப்படுவது பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பதாகும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்
என்கிறார் வள்ளுவர்.

## அழுக்காறாமை

ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாத குணத்தை பெற்று வாழ வேண்டும். 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்' என மானுடத் தத்துவத்தை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

## புறங்கூறாமை

ஒருவர் இல்லாதபோது அவர் பற்றி புறங்கூறுதல் கூடாது. பிறருடைய குற்றங்களைப் போல், நம் குற்றங்களையும் காண்பவருக்கு எந்த துன்பமும் ஏற்படாது என்கிறார் வள்ளுவர்.

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு
என்ற குறள் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

## வெஃகாமை

பிறர் பொருள் மீது ஆசை கொள்ளக் கூடாது. ஒருவனது செல்வ வளம் குறையாமல் இருக்க பிறர் பொருளை கைப்பற்ற நினைக்கக் கூடாது என்கிறார் வள்ளுவர்.

## கொல்லாமை

அறம் என்பதே பிற உயிரைக் கொல்லாமல் இருப்பதே. கொலை புரிவது தாழ்வான செயல். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதன் மூலம் உணவைப் பங்கிட்டு பல உயிர்களைக் காப்பாற்றுதல் அறநூல்கள் குறிப்பிடும் அறங்களைவிடச் சிறப்பானது என்கிறார் வள்ளுவர்.

பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் மானுடம் தொடர்புடைய நெறிகள் பல இடம் பெற்றுள்ளதை மேற்கண்ட குறட்பாக்கள் மூலம் அறியலாம்.

**குறிப்பு:**

திருக்குறளின் இன்னபிற அதிகாரங்களையும் பயன்படுத்தி கட்டுரையை எழுதலாம்.

# 4. திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதநேயம் முதலானவை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் பல்வேறு மாறாத விழுமியங்கள் இடம் பெற்றுள்ளன. அறநூலான திருக்குறளில் சமத்துவம் மற்றும் மனிதநேய கருத்துக்கள் மிகுதியாக உள்ளன.

## திருக்குறள் சுட்டும் சமத்துவம்

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்ற குறள் வழி வள்ளுவர் தொழில் அடிப்படையில் மட்டுமே வேறுபாடு உள்ளது என்றும், பிறப்பின் அடிப்படையில் எந்த ஒரு வேறுபாடும் இல்லை என்றும் வெளிப்படுத்தியுள்ளார்

## திருக்குறள் சுட்டும் அன்பு

அன்பினை அடைத்து வைக்கும் தாழ் பால் கிடையாது. அன்பு இல்லாதவர் எல்லாவற்றையும் தமது என்பர். அன்பு உடையார் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர். ‘அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை’ என்றும் ‘அன்பின் வழியது உயிர்நிலை’ என்றும் வள்ளுவர் மனிதநேயத்தை தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

## திருக்குறள் சுட்டும் அருள்

அருள் செல்வமே சிறந்த செல்வம். அருளுடன் வாழ்பவர்களுக்கு எந்தத் துன்பமும் இல்லை. பிற உயிர்களிடத்தில் கருணை காட்டாதவற்கு மேல் உலகத்து வாழ்க்கை கிடைக்காது. ஆகவே மக்கள் நலம் பெற்று வாழ அருள் என்னும் மனிதநேயம் அவசியம் என வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## திருக்குறள் சுட்டும் ஒப்புறவு

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற குறள்வழி ஒருவன் பல வகையில் தன் முயற்சியால் ஈட்டிய பொருள் அனைத்தையும் பிறருக்கு உதவி செய்வதற்கே என்கிறார் வள்ளுவர். பிறருக்கு உதவாதனது செல்வம் ஊரின் நடுவில் உள்ள பழங்கள் பழுத்ததற்கு ஒப்பாகும் என ஒப்புரவு செய்யாதவனை வள்ளுவர் சாடுகிறார்.

## திருக்குறள் சுட்டும் ஈகை

இல்லாதவருக்கு தருவதே ஈகை. ஏதும் இல்லாத ஏழை மக்களின் பசியை போக்க வேண்டும். 'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்' என்றும் 'ஈதல் இயையாக்கடை' என்றும் ஈகையின் அவசியத்தை மனிதநேயத்துடன் வள்ளுவர் வெளிப்படுத்தியுள்ளார்.

## திருக்குறள் சுட்டும் செய்நன்றி

'செய்யாமல் செய்த உதவிக்கு' என்றும் 'பயன்தூக்கார் செய்த உதவி' என்றும் வள்ளுவர் மாறாத விழுமியங்களை குறள்வழி வெளிப்படுத்தியுள்ளார்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறள் மூலம் எந்த ஒரு அறத்தையும் அழித்தவருக்கு தப்பிக்க வழி உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு தப்பிக்க எந்த ஒரு வழியும் இல்லை என வெளிப்படுத்தியுள்ளார

## திருக்குறள் சுட்டும் அடக்கமுடைமை

அடக்கம் ஒருவனை உயர்த்தும், அடங்காமை நரகத்தில் ஆழ்த்திவிடும். 'யாகா வாராயினும் நாகாக்க' என்றும் 'தீயினால் சுட்டபுண் உள்ளாறும்' என்றும் வாழ்வியல் விழுமியங்களை வெளிப்படுத்தி உள்ளது சிறப்புமிக்கது.

## திருக்குறள் சுட்டும் புகழ்

வறியார்க்கு உதவுவதன் மூலம் புகழ் பெற வேண்டும். அதனை தவிர உயிர்க்கு ஊதியம் என்பது இல்லை என மனிதநேயத்தை வள்ளுவர்,

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

என்ற குறள் வழி குறிப்பிட்டுள்ளார்.

## திருக்குறள் இனியவை கூறல்

முகமலர்ச்சியுடன் இன்சொல் உடையவனாய் இருப்பது, பொருள் கொடுப்பதைவிட சிறந்தது.இன்சொல் ஒருவனுக்கு அணிகலனாகும்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய் கவர்ந்தற்று

என்ற குறள்வழி இனிய சொற்கள் இருக்கும் பொழுது அதனை தவிர்ப்பது கனியிருக்க அதனை உண்ணாமல் காயை உண்பதற்குச் சமம் என வள்ளுவர் சுட்டியுள்ளார் .

### திருக்குறள் சுட்டும் புறங்கூறாமை

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

என்ற குறளின் மூலம் பிறருடைய குற்றங்களை போல, தம்முடைய குற்றங்களையும் கண்டறிந்து நீக்குபவர்க்கு துன்பம் ஏற்படாது என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளது சிறப்பாகும்.

திருக்குறளில் கொல்லாமை, நற்பண்பு, பொறுமை, இன்னா செய்யாமை, பெருமை போன்ற அதிகாரங்களிலும் மாறாத விழுமியங்கள் காணப்படுகின்றன. மேற்கண்ட திருக்குறள்கள் மூலம் மாறாக விழுமியங்கள் பலவற்றை திருவள்ளுவர் குறிப்பிட்டு உள்ளதை அறியலாம்.

## 5. சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு.

## சமூக நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

பதினெண்கீழ்க்கணக்கு நூலான திருக்குறளில் பல்வேறு சமூக நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது சிறப்பானதாகும். சமூக நிகழ்வு குறிப்பிடும் இடங்களில் அறக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

### திருக்குறள் சுட்டும் ஒழுக்கம்

‘ஒழுக்கம் விழுப்பம் தரலான்’ என்றும் ‘நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்’ என்றும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

என்ற குறள்வழி உலகத்தோடு பொருந்தி வாழ்பவர் பல நூல்களைக் கற்றும் அறிவிலாதார் என சமூக வாழ்வியலை வெளிப்படுத்தியுள்ளார்.

### திருக்குறள் சுட்டும் கூடா ஒழுக்கம்

தன் நெஞ்சம் தான் அறிந்து செய்யும் குற்றம் உடையவரின் தவக்கோலத்தில் எந்த பயனும் இல்லை. பற்றுகளை துறந்து விட்டதாக பொய் கூறும் நபருடன் சேர்வது பல வகை துன்பங்களைத் தரும் என சமூக வாழ்வியலை வள்ளுவர் வெளிப்படுத்தியுள்ளார்.

### திருக்குறள் சுட்டும் கல்லாமை

கற்றவரின் முன்னிலையில் எதுவும் பேசாமல் அமைதியாக இருப்பதன் மூலம் கல்லாதவரும் நல்லவர் ஆகிறார்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்

என்பதிலிருந்து விளக்கமான அறிவு நூல்களை கற்காதவர் மக்களாயினும் விலங்கு போன்றவரே என்பதை அறியலாம் .

### திருக்குறள் சுட்டும் தீவினையச்சம்

மறந்தும்கூட பிறருக்கு தீவினைகளைச் செய்பவனை துன்பம் சூழும். நமக்குத் தீமை செய்தவனுக்கும் நன்மை செய்பவரே மேலானவர். ஒருவன் தன்னுடைய நலனை விரும்பினால் பிறருக்கு ஒருபோதும் தீமை செய்யாமல் இருத்தல் வேண்டும் என வள்ளுவர் சமூக நிகழ்வை வெளிப்படுத்தியுள்ளார்.

திருக்குறளில் கயமை, சூது, கள் உண்ணாமை, புலால் மறுத்தல், சிற்றினஞ்சேராமை, பெண்வழிச்சேறல் போன்ற அதிகாரங்களிலும் சமூக நிகழ்வுகள்குறித்த செய்திகள் காணப்படுகின்றன. பல்வேறு குறள்களில் சமூக நிகழ்வுகளின் பொருத்தப்பாட்டை வள்ளுவர் வெளிப்படுத்தி உள்ளதை அறியலாம்.

# அரசியல் நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

திருவள்ளுவர் தம் நூலின் முதல் பகுதியாகிய அறத்துப் பாலில் அறத்தின் சிறப்பைத் திடமாக எடுத்துரைத்துக் கற்பவரின் நெஞ்சில் பதியுமாறு செய்கிறார்: இங்கே நெறி தவறாத ஓர் அறவோராக விளங்கி, உணர்ச்சி வயப்படாமல், கற்பனைக்கு இடம் தராமல், நடுநிலையில் நின்று தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டாம் பகுதியாகிய பொருட்பாலில் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் நடைமுறைகளையும் அலசி ஆராயும் ஓர் அனுபவம் நிறைந்த அறிஞராகத் திகழ்கிறார்: பல காலத்தும் பல துறைகளிலும் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை எல்லாம் தம் சிந்தனைத் திறத்தால் தெளிவாக உணர்ந்து வகைப்படுத்திக் கூறுகிறார். மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் படைப்புத் திறன் மிக்க ஒரு கவிஞராக நின்று குறள் மணிகளை இயற்றியுள்ளார்; தாம் மறைந்திருந்து, நாடகப் போக்கில் காதலனையும் காதலியையும் பேசச் செய்துள்ளார்.

### பொருட்பாலின் ஏழு பகுதிகள்

“அரசியல் ஐந்து; அமைச்சியல் ஈரைந்து;

உருவவல் இரண்டு; ஒன்று ஒண்கூழ் – இருவியல்

திண்படை; நட்புப் பழனேழ்; குடி பதின்மூன்று

எண்பொருள் ஏழாம் இவை.”

என்பது போக்கியார் என்னும் புலவர் பெயரால் அமைந்த பழைய வெண்பா. இதன் படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது; அரசியல் 25,அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக பொருட்பாலின் எழுபது அதிகாரங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

“படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”

என வரும் பொருட்பாலின் முதல் குறட்பாவிலேயே இந்த வேறுபாட்டிற்கான அடிப்படையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக் குறட்பாவில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறு அங்கங்களையும் உடைய ஆட்சித் தலைவனைப் பற்றித் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாக வேறுபாடு செய்வது திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

## அரசனது இயல்பு கூறும் இருபத்தைந்து அதிகாரங்கள்

பொருட்பாலின் முதலில் அரசனது இயல்பு கூறும் அரசியலை மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களில் கூறியுள்ளார் திருவள்ளுவர். 'இறைமாட்சி' (அதிகாரம் 39) தொடங்கி 'இடுக்கண் அழியாமை' (அதிகாரம் 63) வரையிலான இருபத்தைந்து அதிகாரங்களில் 'அரசர்', 'வேந்தர்', 'நிலன் ஆண்டவர்', 'மன்னவர்' முதலான பெயர்களால் நாற்பத்தாறு முறை அவர் ஆட்சித் தலைவனைச் சுட்டிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

## குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரைகள்

அரசனைப் பற்றியும், அரசியல் அமைப்பினைப் பற்றியும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொன் போல் போற்றத்தக்கனவாக விளங்குகின்றன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம். எனினும், அந்தக் காலத்தில் அவர் அரசனுக்குச் சொன்னவைகளாக அமைந்த அறிவுரைகள், இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் நன்மொழிகளாக உள்ளன. திருவள்ளுவர், அரசு எப்படி இருக்க வேண்டும் என்று முடியாட்சி எங்கும் பரவியிருந்த காலத்திலேயே அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டுகின்ற அரசு எந்தக் காலத்திற்கும், எந்த அமைப்பிற்கும் பொருத்தமாகக் காணப்படுகிற நிலையினை நாம் காண்கின்றோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் எந்தக் காலத்திற்கும் எந்த அமைப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பினைப் பெற்று விளங்குகின்றன.

**மக்கள் நல அரசு :**

சுருங்கக் கூறின், திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பு ஒரு 'மக்கள் நல அரசு' அடிப்படையில் அமைந்தது எனலாம்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற குறட்பாவில், 'அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அரசனாகப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே ஒருவன் அரசனாகச் சிறக்க முடியாது' என்னும் கருத்தியலைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றியுள்ளார் திருவள்ளுவர். ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையைச் சரிவரச் செய்தால் – குடிமக்களைக் காப்பாற்றினான் என்றால் – அவன், 'இறை என்று வைக்கப்படும்' – 'முறை செய்து காப்பாற்றும்' அவனை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள் என்கிறார் அவர். மன்னனைக் கடவுளாக நினைத்த ஒரு காலக்கட்டத்தில், 'நீ ஒன்றும் கடவுள் அல்ல,

நல்ல வண்ணம் நடந்தால், நீதி நெறி வழுவாமல் காப்பாற்றினால் உன்னை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள்' என்று வள்ளுவர் கூறியிருப்பது, ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இக்கருத்து, முடியாட்சிக் காலத்திற்கு மட்டுமன்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதே.

திருவள்ளுவரின் கண்ணோட்டத்தில் 'அறம் வழுவாது, தீமைகளை நீக்கி, மறம் வழுவாது, மானம் காப்பது அரசு' ஆகும்.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு"

என்னும் குறட்பா இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கது.

'மன்னர் எவ்வழி; மக்கள் அவ்வழி'. நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான். அவன் ஒருவன் தீய வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோல் ஆகிவிடும். அவன் தலைவனாக இருப்பதால், அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனிவாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுதல் எளிது. ஆகவே, அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மானம் வேண்டும் என்று கூறும் போதும், தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடாமல், 'மறன் இழுக்கா மானம்' என வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறிப்பிட்டு, நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## செங்கோன்மை

'செங்கோன்மை' அதிகாரத்திலும் நல்லாட்சி பற்றி எக்காலத்திற்கும் பொருந்தி வருகின்ற அடிப்படையான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன; அது போல், குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை – நல்லாட்சியை – எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்கிறார்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி"

என்ற குறட்பாவில் 'மன்னவன் கோல்' என்னும் முடியாட்சிக் காலத்திற்கான தொடரின் இடத்தில், 'நல்லாட்சி' என்ற பொதுவான இன்றைய மக்களாட்சிக்கு ஏற்ற தொடரைப் பொருத்திக் கொள்ளும் வகையில் பாடியிருப்பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

“குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு”

என்னும் குறட்பாவும் திருவள்ளுவரின் காலம் கடந்து நிற்கும் பொதுமை நோக்கினைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. ‘குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி நிற்குமாம் உலகம்’.

இக் கருத்தினையே ‘கொடுங்கோன்மை’ அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்றில் எதிர்மறை வாய்பாட்டால் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர். கொடுமையைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் துன்புற்றுக் குடிமக்கள் அழும் கண்ணீருக்கு மிகுந்த ஆற்றல் உண்டு; அதுவே ஆற்றல் மிக்க படையாகி முறை செய்யாத மன்னனுடைய அரசையே அடியோடு அழித்துவிடும்.

“அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.”

இங்கே அல்லற்பட்டு ஆற்றாது குடிமக்கள் அழும் ‘கண்ணீரை’, கொடுங்கோல் அரசையே அடியோடு தேய்த்து அழித்துவிடும் ‘படையாக’ உருவகம் செய்திருக்கும் திருவள்ளுவரின் சிந்தனை புதியது; இதுவரை யாரும் கூறாதது. ஹிட்லர், முசோலினி, ஜார் மன்னர் முதலான உலகின் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் திருவள்ளுவர் இக்குறட்பாவில் அடித்திருக்கும் சாவுமணி வலிமையானது

## வருவாயைப் பெருக்குவதற்கான நான்கு வழிவகைகள்

ஒரு மன்னன் தனது அரசின் வருவாயைப் பெருக்கும் துறையிலும் வரவு-செலவுத் திட்டத்திலும் வல்லவனாக விளங்க வேண்டும். இவ்வகையில் திருவள்ளுவர் ‘இறைமாட்சி’ அதிகாரத்தில் கூறியுள்ள ஓர் அடிப்படையான அரசியல் சிந்தனை வருமாறு:

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.”

முதலாவதாக, ஒரு மன்னன் பொருள் வரும் வழிவகைகளைப் பெருக்க வேண்டும்; இதனை ‘இயற்றல்’ என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அடுத்து, அரசுக்குப் பல வழிகளிலே வந்த வருவாயைத் திரட்டி ஒன்றுசேர்க்க வேண்டும்; இதனை ‘ஈட்டல்’ என்கிறார் வள்ளுவர். மூன்றாவதாக ஒன்று சேர்த்த பொருளை அழிவு நேராமல் காக்க வேண்டும்; இது ‘காத்தல்’ ஆகும். மிக இன்றியமையாத நான்காவது படிநிலை, இயற்றியும் ஈட்டியும் காத்தும்

வைத்துள்ளவற்றைச் செலவிடுவதற்கு உரிய துறைகள் இவை இவை, அவற்றிற்கான தொகைகள் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்தல் ஆகும். இதுவே 'வகுத்தல்' எனப்படும். இங்ஙனம் இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு வழிமுறைகளில் அரசின் வருவாயைச் சேர்த்து, பகிர்ந்து, திட்டமிட்டு, பயன்படுத்திக் கொள்வது ஒரு தேர்ந்த மன்னனின் தலையாய கடமை ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இக்கருத்து இன்று அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமதர்மம் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். ஓர் அரசு தனது வருவாயை எவ்வாறு எல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும் என்ற முற்போக்கான கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நறுக்குத் தறித்தாற் போல் 'இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல்' என நான்கே நான்கு சொற்களில் வடித்துத் தந்துள்ள பாங்கினை இங்கே நம்மால் காண முடிகின்றது.

அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால்தான் அவர் அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய 'கல்வி' முதலாக 'இடுக்கண் அறியாமை' வரையிலான பண்பு நலன்களை 'வாழும் உயிர்க்கு' என்றும் 'மாந்தர்க்கு' என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில் அறநெறியே முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது, அவரது அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது. வேறு சொற்களில் கூறுவது என்றால், முடியாட்சிக் காலத்தைச் சார்ந்த திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சிக் காலத்திற்கும் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

# பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் காலத்தால் அழியாத, அறநூலான திருக்குறளில் காணக் கிடைக்கின்றன. திருவள்ளுவரின் காலம் குறித்து பல்வேறு கருத்துகள் அறிஞர்கள் மத்தியில் நிலவினாலும் பொதுவாக மூன்றாம் நூற்றாண்டின் சங்க காலத்தையே அவரின் காலமாகக் கருதலாம். திருவள்ளுவரின் கருத்துக்கள் நடைமுறைக்கு ஏற்றவைகளாகவே இன்றும் கருதப்படுகின்றன.

வள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் திருக்குறளின் இரண்டாம் பகுதியான பொருட்பாலில் மிகுதியாகக் காணப்படுகின்றன. பொருட்பால் செல்வத்தோடு தொடர்புடையது. வாழ்வின் அடிப்படைகளை அறிந்தவர் வள்ளுவர். அவர் மழையை வாழ்வின் பெரும் ஆதாரமாகக் கருதினார். மழை தான் உணவு தருகிறது. மழைதான் பொருளாதார வாழ்வில் அடிப்படையை உருவாக்குவதாக நம்பினார். வாழ்வின் அடிப்படை பொருளாதார தேவையான வேளாண்மை மழையைச் சார்ந்திருக்கிறது அழிவையும் தரும், அழிவிலிருந்து மீண்டும் தழைத்தோங்கவும் செய்யும்.

**உற்பத்திக் காரணிகள்**

உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், அமைப்பு, காலம், தொழில்நுட்பம் ஆகியவை குறித்து பல கருத்துகளை வள்ளுவர் எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற”

என்கிறார் திருவள்ளுவர்

**வேளாண்மை**

வள்ளுவர் வேளாண்மையை, அடிப்படைப் பொருளாதார நடவடிக்கை என்கிறார். உலகத்தின் அச்சாணியாக வேளாண்மை இருக்கிறது. பொருளாதார ரீதியாக பிற துறைகளின் செழுமை வேளாண்மை துறையின் செழுமையைச் சார்ந்தது. உழவுத்தொழில் புரிபவன் மட்டுமே தலையாய மனிதன்.

“உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்”

உழவுத்தொழிலே மற்ற தொழில்களைவிட உயர்ந்ததாக வள்ளுவர் கருதுகிறார்.

### பொது நிதி

திருவள்ளுவர் பொதுநிதி பற்றி பொது வருவாய், பொதுச் செலவு, நிதி நிர்வாகம் ஆகிய தலைப்புகளில் விரிவாக எழுதியிருக்கிறார். 1. வருவாய் உருவாக்குதல் 2.வருவாயை சேகரித்தல் 3. வருவாய் நிர்வாகம் 4. பொதுச் செலவு பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

### பொதுச் செலவு

வள்ளுவர் சமநிதிநிலை அறிக்கையைப் பரிந்துரை செய்கிறார். "ஒரு நாடு அதன் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில், அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை" என்கிறார். நிதிநிலைக் கொள்கை வகுக்கும்போது செய்ய வேண்டியதாக அவர் சொல்வது "எப்போதும் உபரி நிதிநிலை இருக்கட்டும், சிலநேரங்களில் சம நிதி நிலை இருக்கலாம், ஆனால் ஒரு போதும் பற்றாக்குறை நிதிநிலை மட்டும் கூடாது". பொதுச் செலவை கீழ்க்காணும் மூன்று இனங்களுக்கு செலவிடுமாறு வலியுறுத்துகிறர் வள்ளுவர், 1.பாதுகாப்பு 2.பொதுப்பணிகள் 3.சமூகப்பணிகள்.

### வெளிநாட்டு உதவி

வள்ளுவர் வெளிநாட்டு உதவி பெறுதலை ஆதரிக்கவில்லை. குறள் 739-ல் வெளி உதவி கோரும் நாடுகள் நாடுகளே அல்ல என்கிறார். வேறுவகையில் சொல்வதனால் அவர் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தையே வலியுறுத்தினார்.

### வறுமை மற்றும் பிச்சையெடுத்தல் (இரத்தல்)

பசிக்கொடுமையிலிருந்து பெறும் விடுதலையே ஒவ்வொரு மனிதனும் பெறக்கூடிய அடிப்படை சுதந்திரம் என்றும் அனைத்து குடிமகனும் இதனை அனுபவிக்க வேண்டும் என்றும் வள்ளுவர் கருதினார். வறுமையே அனைத்து தீமைகளுக்கும் வேராய் இருந்து எக்காலத்தும் தீராத துன்பங்களைத் தருவதாகவும் கருதினார். ஆனால் இந்தியாவில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் எண்ணிக்கையில் பிச்சையெடுப்பவர்கள், வசிப்பிடமின்றி சாலையோரம் வாசிப்பவர்கள் மற்றும் குப்பை எடுப்பவர்கள் அதிகமாக உள்ளனர்.

### செல்வம்

செல்வம் வாழ்வதற்கான வழியே அன்றி அதுவே இலக்கல்ல என்று வள்ளுவர் கருதினார். செல்வம் சிறந்த மதிக்கத்தகுந்த வழிகளிலேயே ஈட்டப்பட வேண்டும் என்கிறார். செல்வத்தைப் பதுக்கி வைப்பது பயனற்றுப் போகும் என்றகிறார். அவரைப் பொறுத்த வரையில் தொழில்தான் உண்மையான செல்வம், மேலும் உழைப்பு தான் மிகப் பெரும் வளம்.

**நலம்பேணு ம் அரசு**

திருவள்ளுவர் நலம்பேணும் அரசு எது என்பதைக் குறித்து விளக்கியுள்ளார். ஒரு நலம்பேணும் அரசில் வறுமை, எழுத்தறிவின்மை மற்றும் நோய்கள் போன்றவை இருக்காது என்கிறார்.

# 6. திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்.

உயிர், உலகம், இறைவன் பற்றிய கருத்துகளை ஆராய்வதும், அவை பற்றி விரிவாக விளக்க முனைவதும் தத்துவவியலின்அடிப்படையாகும். தத்துவவியல், உலகத்திற்கும் மனிதனுக்குமான தொடர்பை விளக்குகிறது. கடவுளுக்கும் மனிதனுக்குமான தொடர்பையும், உலகத்திற்கும் சமுதாயத்திற்குமான தொடர்பையும் அறிந்துகொள்ளத் தத்துவவியல் உதவுகிறது. எனவே, மனிதனை நெறிப்படுத்தும் அறவியலுக்கும், மனிதத்தேடல்களை ஊக்குவிக்கும் தத்துவவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது எனலாம்.

### கடவுள் வாழ்த்து

எழுத்துக்களுக்கு எல்லாம் முதன்மையானது 'அ' கரம். அதுபோல உலகில் உள்ள அனைத்தும் கடவுளை முதன்மையாக கொண்டுள்ளன. இதனையே,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
என தனது முதல் திருக்குறளில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

### வான்சிறப்பு

மழை உரிய காலத்தில் பெய்யாது போனால் உலக உயிர்கள் அனைத்தும் பசியால் துன்புறும். 'கெடுப்பதுவும் கெட்டார்க்குச் சார்வாய் மற்று' என்ற குறள்வழி உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழை தான், உரிய காலத்தில் பெய்து கொடுப்பதும் மழை தான் என்கிறார் வள்ளுவர்.

### மெய்யுணர்தல்

உண்மைப் பொருள் இல்லாத அவற்றின் மீதுள்ள பற்றினால் சிறப்புற பல வகை பிறப்புகள் உண்டாகும்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்

நாமம் கெடக்கெடும் நோய்

இதன் மூலம் வகுப்பு வெறுப்பு, அறியாமை, வெறுப்பு ஆகிய குற்றங்களின் பெயர்களைக் கூட உன் உள்ளத்திலிருந்து நீக்கினாள் பிறவித் துன்பம் கெடும் என்கிறார் வள்ளுவர்.

**நீத்தார் பெருமை**

ஒழுக்கநெறியில் நிலையாக நின்று பற்று விட்டவர்களின் பெருமை சிறந்தது. செய்வதற்கு அரியதானவற்றைச் செய்பவர் பெரியோர், செய்வதற்கு அரிதானவற்றை செய்யாதவர் சிறியோர் என்கிறார் வள்ளுவர்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

**ஊழ்**

ஊழால் சோர்வில்லாத முயற்சி உண்டாகும். பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழால் சோம்பல் தோன்றும். நல்வினை விளையும் போது அவற்றை நல்ல உணவாக ஏற்பவர்கள் தீவினை வரும்போது கலங்குவது ஏன் என தத்துவத்தை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

**துறவு**

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலம்

என்ற குறள்வழி ஒருவன் எந்தப் பொருளிலிருந்து பற்று அற்றவன் ஆகின்றானோ, அவன் அந்த அந்தப் பொருளால் துன்பம் அடைவதில்லை என்கிறார். பிறவித் துன்பத்திலிருந்து விடுபட பொருள்களின் மீதான பற்றினை விடல் வேண்டும். பொருள்களின் மீது பற்று உள்ளவர்களை துன்பமும் பற்றிக்கொள்ளும்.

**நிலையாமை**

நிலைத்து நிற்காத பொருள்களை நிலையானவை என எண்ணுபவர் தாழ்வு நிலையை அடைவர் நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்ற நிலையாமையை உடையது தான் இந்த உலகம் என்பதை 'நெரு நெல் உளனொருவன் இன்றில்லை' என்ற குறள் வழி வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் .

**வினைத் தூய்மை**

செய்யும் செயலின் தூய்மையே ஒருவன் விரும்பும் எல்லாவற்றையும் தரும். தூய்மையற்ற செயல்களை ஒருவன் செய்யாமல் இருத்தல் வேண்டும்.

வஞ்சனையான வழியில் பொருள்களை சேர்த்தல், பச்சை மண்ணால் ஆன கலனில் நீரை வைப்பது போன்றது என தத்துவங்களை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**கல்வி**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்ற குறள் வழி கல்வி ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் பயனைத் தரும் என தத்துவத்தை கூறியுள்ளார்.

**பிறப்பு தத்துவம்**

தம் துன்பத்தைப் போக்கியவரின் நட்பினை ஏழு பிறப்பிலும் மறக்கக்கூடாது. நல்ல பண்புகளை உடைய மக்கட்பேறு கொண்டவருக்கு துன்பங்கள் எழுபிறப்பிலும் வராது என பிறப்பு தத்துவங்களை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**இறப்பு தத்துவம்**

உறங்குவது போன்றது இறப்பு, உறங்கி மீண்டும் விழிப்பது போன்றது பிறப்பு என்கிறார் வள்ளுவர்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்

செய்பொருள் காண்பது அறிவு

என்கிறார் வள்ளுவர். மேற்கண்ட திருக்குறள்கள் மூலம் வள்ளுவரின் தத்துவக் கோட்பாடுகளை அறியலாம்.

# கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்
# கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்து)

# கடிதம் வரைதல்

ஒரு அலுவலர் மற்றொரு அலுவலருக்கு எழுதும் கடிதம். இதன்மூலம் ஆணைகள் பிறப்பிக்கப் படும். செய்திகளை தெரிவிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

## அலுவலக கடிதம் எழுதுவதற்கான விதிமுறைகள்

- அனுப்புநர், பெறுநர் இடம்பெறவேண்டும்.
- அனுப்புநர், பெறுநர் போன்றவற்றின் அருகில் எந்தவித நிறுத்தற்குறியீடுகள் இடம்பெறக்கூடாது.
- முகவரி இடம்பெறும் இடத்தில் உரிய நிறுத்தற்குறிகள் அவசியம் இடம்பெறவேண்டும்.
- பதவியை குறிப்பிடும்பொழுது திரு / திருமதி இடம்பெறக்கூடாது.
- குறிப்பிட்ட நபரின் பெயர் குறிப்பிடப்பட்டால் மட்டுமே திரு / திருமதி இடம்பெறவேண்டும்.
- பொருளுக்கு முன் ஐயா / அம்மையீர் குறிப்பிடுதல் வேண்டும்.
- பொருள் எனக் குறிப்பிடப்படும் இடத்தில் முக்காற்புள்ளி ( : ) இடம்பெறவேண்டும்.
- பொருளுக்கு அடுத்து பார்வை இடம்பெறவேண்டும். பார்வை எனக் குறிப்பிடப்படும் இடத்தில் முக்காற்புள்ளி ( ; ) இடம்பெறவேண்டும்.
- பார்வைக்கு அடுத்து வணக்கம் இடம்பெறவேண்டும்.
- கடிதம் முடியும் அடுத்த வரியில் நன்றி என இடப்பக்கம் எழுதவேண்டும்.
- கடிதம் முடியும் அடுத்தவரியின் வலப்பக்கத்தில் கையொப்பம் உதவியுடன் இடம்பெறவேண்டும்.
- கடிதத்தின் அடுத்தவரியின் இடப்பக்கத்தில் இடம் நாள் என இடம்பெறவேண்டும்.
- அலுவல் சார்ந்த கடிதத்தின் இறுதியில் நகல் இணைப்பு இடம்பெறவேண்டும்.

# 1. அரசு முதன்மை செயலாளர் வெளியிடும் ஆணை கடிதம்

நாள்: 06-06-2022
பிலவ வருடம், வைகாசி 23
திருவள்ளுவர் ஆண்டு, 2023.

அனுப்புநர்

அரசு முதன்மைச் செயலாளர்,
தமிழ்நாடு.

பெறுநர்

திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்,
சென்னை-600006.

ஐயா/ அம்மையீர்,

பொருள் :
தொற்றா நோய்களுக்கு சிகிச்சை அளிக்க மக்களை தேடி மருத்துவம் திட்டம் செயல்படுத்துதல் சார்பாக.

தமிழ்நாட்டில் தொற்றா நோய்கள் 70% வரை பரவலாக உள்ளது. மேலும் இதனால் ஏற்படும் இறப்பு விகிதமும் அதிகமாக உள்ளது. சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனைகளில் வழங்கப்படும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகளை, பயனாளிகளின் இல்லங்களுக்குச் சென்று அளிக்கும் வகையில் 'மக்களை தேடி மருத்துவம் திட்டம்' மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரியில் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் செவிலியர்கள், பெண் சுகாதார தன்னார்வலர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கான பரிசோதனை மற்றும் மருந்துகளை இல்லங்களுக்குச் சென்று களப்பணியாளர்கள் வழங்கிட வேண்டும் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு தேசிய நல வாழ்வு குடும்பத்தின் இயக்குனர் இத்திட்டத்தை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குனரகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குனரகம், மருத்துவ கல்வி இயக்குனரகத்துடன் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நன்றி.

இடம் : சென்னை அரசு முதன்மை செயலாளர்,
நாள் : 06-06-2022. தமிழ்நாடு.

நகல் இணைப்பு
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -600009.
முதன்மைச் செயலாளர், மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை 9.

## 2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் வெளியிடும் ஆணைக் கடிதம்.

நாள்: 06-06-2022
பிலவ வருடம், வைகாசி 23
திருவள்ளுவர் ஆண்டு, 2023.

விடுநர்

பள்ளிக்கல்வி ஆணையர்,
தமிழ்நாடு.

பெறுநர்

அனைத்து இயக்குனர்கள், சென்னை-600006.
அனைத்து இணை இயக்குனர்கள், சென்னை-600006.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள் : மாணவர்களின் கற்றல் இடைவெளியை நீக்குவதற்கு இல்லம் தேடி கல்வி திட்டம் செயல்படுத்துதல் சார்ந்து

பெருந்தொற்று காலத்திற்குப் பின் ஏற்படும் கற்றல் இழப்பை சரிசெய்ய, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இல்லம் தேடி கல்வி திட்டம் அக்டோபர் 2021 இல் தொடங்கப்பட்டது. ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இழப்புகளை ஈடு செய்வது மற்றும் மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பது என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

இதற்காக தன்னார்வலர்களை தேர்வு செய்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ் தினமும் ஒன்றரை மணி நேரம் மாலை ஐந்து மணி முதல் ஆறு முப்பது வரை மணி வரை மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெற வேண்டும்.

மேலும் இத்திட்டத்தை அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்துமாறும் முறையாக கண்காணிக்குமாறும் அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி

பள்ளிக்கல்வி ஆணையர்,
தமிழ்நாடு.

நகல் இணைப்பு

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -600009.
பள்ளிக்கல்வி செயலாளர், சென்னை -600009.

## 3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் வெளியிடும் ஆணைக் கடிதம்.

நாள்: 06-06-2022
பிலவ வருடம், வைகாசி 23
திருவள்ளுவர் ஆண்டு, 2023.

விடுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ்நாடு.

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்துத் துறைத் தலைவர்கள்

ஐயா / அம்மையீர்,

பொருள் :
ஆட்சிமொழி முனைப்புத் திட்டத்தை விரிவுப்படுத்தும் பொருட்டு, தலைமைச் செயலகத் துறைகளிலும் அரசுசார்பு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கூட்டுறவு இணையங்கள் போன்ற அனைத்திலும் தமிழ்த் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துதல் சார்ந்து.

தமிழ்நாட்டில் தமிழ் தான் ஆட்சி மொழி என்று 1957ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆட்சி மொழித் திட்டத்தை செயல்படுத்த பல்வேறு அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளன. அரசு அலுவலர்களும் பணியாளர்களும் தமிழில் மட்டுமே ஒப்பமிட வேண்டும். அலுவலக பதிவுகள் அனைத்தும் தமிழில் பின்பற்ற வேண்டும். அலுவலகங்கள் அனைத்திலும் சீர்திருத்த எழுத்துக்களையே பயன்படுத்தவேண்டும். பெயர்ப்பலகைகளில் தமிழ் எழுத்துக்களின் அளவு குறித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் ஆட்சிமொழி முனைப்பு திட்டத்தை விரிவுபடுத்த அரசாணை உட்பட அனைத்திலும் பிலவ வருடம் முதல் அட்சய வருடம் வரை உள்ள அறுபது ஆண்டுகளின் பெயர்களை பயன்படுத்தவேண்டும். தமிழ் ஆண்டு திங்கள், நாள், திருவள்ளுவர் ஆண்டை அரசு அலுவலகம், கழகம், வாரியங்களில் பயன்படுத்த அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அனைத்து துறை தலைவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

நன்றி

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ்நாடு.

நகல் இணைப்பு

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -600009.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், சென்னை -600009.

தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட ஆணை கடித மாதிரி - 1

## 4. தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட ஆணை கடித மாதிரி - 1

**பொருட்சுருக்கம்**

**தமிழ் வளர்ச்சி – அரசு அலுவலகங்களில் பெயர்ப்பலகைகள் அமைத்தல் – எழுத்து உருவங்களின் அமைப்பு குறித்து ஆணை வெளியிடப்படுகிறது.**

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

அரசாணை (நிலை) எண் 349 நாள் : 14.10.1987

திருவள்ளுவராண்டு 2018
பிரபவ புரட்டாசி 28

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 1541, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 29.07.1982.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண் இ5/502/83, நாள்: 07.08.1984.

ஆணை

ஆட்சிமொழிக் குழுச் செயலாளரின் 19.09.1967ஆம் நாள் சுற்றறிக்கை எண் 5131/67இல், அரசு அலுவலகங்களில் அவற்றின் பெயர்ப் பலகைகள் அனைத்தும் நல்ல தமிழிலும் அதனடியில் ஆங்கிலத்திலும் எழுதிப் பொருத்தப்பெற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 29.07.1982ஆம் நாளிட்ட அரசாணை எண் 1541இல், கடைகள் மற்றும் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டுமெனவும், இதர மொழிகளையும் பெயர்ப் பலகைகளில் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தால், முதலில் தமிழிலும் அதன் கீழ் இரண்டாவதாக ஆங்கிலத்திலும் அதனைத் தொடர்ந்து இதர மொழிகளிலும் முறையே 5:3:2 என்ற விகிதத்தில் அமையலாமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே பத்தி 1இல் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் அரசின் துறைத் தலைமை மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பெயர்ப்பலகைகள் அளவுகளில் வேறுபட்டாலும், அதில் எழுதப்படும் எழுத்துக்களின் அளவு தமிழிலும் ஆங்கிலத்திலும் முறையே 5:3 என்ற விகிதத்தில் அமையலாமெனவும் மற்றும் அரசு துறைத் தலைமை மற்றும் மாவட்ட

அலுவலகங்களைத் தவிர்த்து பிற அலுவலகங்களில் பெயர்ப் பலகைகளைத் தமிழில் மட்டும் அமைத்தல் போதுமானது எனவும், மேலே பார்வை 2இல் கண்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, அவ்வாறே அரசின் துறைத் தலைமை மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பெயர்ப் பலகைகள், அளவுகளில் வேறுபட்டாலும் அவற்றிலுள்ள எழுத்துக்களின் அளவு தமிழிலும் ஆங்கிலத்திலும் முறையே 5:3 என்ற விகிதத்தில் அமைய வேண்டுமெனவும் அரசு துறைத் தலைமை மற்றும் மாவட்ட அலுவலகங்களைத் தவிர பிற அலுவலகங்களில் பெயர்ப் பலகைகள் தமிழில் மட்டும் அமைத்தல் போதுமானதெனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரசுச் செயலாளர்

## 5. தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட ஆணை கடித மாதிரி - 2

**<u>சுருக்கம்</u>**

**பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 – கோவிட்-19 – ஜல்லிக்கட்டு 2022 நடத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.**

<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை</u>

அரசாணை (நிலை) எண். 27 நாள் : 10.01.2022

பிலவ வருடம், மார்கழி 26

திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.795, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை, நாள்: 26.12.2020.
2. அரசாணை (நிலை) எண்.25, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை, நாள்: 07.01.2022.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களின் கடித எண்.292/கா.ப.3/2022, நாள்: 08.01.2022.

********

ஆணை:

1. கோவிட்-19 நோய்த்தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் 10.01.2022 வரை பல்வேறு கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு நீட்டிப்பு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் நடத்தப்பட்டுவரும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மக்கள் பெருமளவில் மகிழ்ச்சியோடு பங்குபெற்று வருகின்றனர். ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி என்பது காளைகள் மற்றும் மாடுபிடிப்பவர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் பார்வையாளர்களாக பங்கேற்கும் நிகழ்ச்சியாகும்.

3. திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜல்லிக்கட்டு போட்டியினை நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடன், தற்போது கொரோனா தொற்று காரணமாக எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியினை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நடத்த அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

<u>கோவிட்-19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்:</u>

1) ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களும் பெரும் பங்கு வகிப்பதால், ஒரு காளையுடன் சுமார் 5 முதல் 6 நபர்கள் வருவது வழக்கம். இதனை கட்டுப்படுத்தி ஒரு காளையுடன் ஒரு உரிமையாளர் மற்றும் காளையுடன் நன்கு பழக்கமுள்ள ஒரு உதவியாளர், இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT-PCT Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். காளையின் உரிமையாளர் மற்றும் அவரது உதவியாளருக்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்படும். மேலும், அடையாள அட்டை இல்லாத நபர்களுக்கு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதி இல்லை.

2) காளைகளை பதிவு செய்யும் பொழுது அக்காளையின் உரிமையாளர் மற்றும் உடன்வரும் உதவியாளர் ஆகியோரும் பதிவு செய்தல் வேண்டும். ஜல்லிக்கட்டில் பங்குபெறும் காளைகளின் பதிவு, நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 3 நாட்களுக்கு முன்பே முடிக்கப்பட வேண்டும்.

3) ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.

4) எருது விடும் நிகழ்ச்சியில் 150 வீரர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.

5) ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 3 நாட்கள் முன்பாக பதிவு செய்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். மேலும் அடையாள

அட்டை இல்லாத வீரர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6) ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT-PCR Test) என்பதற்கான சான்று பெறப்பட்டவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

7) தமிழ்நாடு அரசினால் வெளிடப்படும் கொரோனா தடுப்பு நடைமுறைகளை பின்பற்றி பார்வையாளர்கள், திறந்த வெளி அரங்கின் அளவிற்கேற்ப சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில், அதிகபட்சமாக 150 பார்வையாளர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட இருக்கை எண்ணிக்கையில் 50 சதவிகிதத்திற்கு மிகாமல் இவற்றில் எது குறைவோ அந்த எண்ணிக்கையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பார்வையாளர்கள் இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT-PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

8) ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை மேற்பார்வை செய்யும் அனைத்துத் துறை அலுவலர்களும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும் இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT-PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.

9) அனைத்து துறை அலுவலர்களும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும், பார்வையாளர்களும் மற்றும் ஊடகத் துறை சார்ந்தவர்களும் அரசினால் அறிவுறுத்தப்பட்ட நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

10) வெளியூரில் வசிப்பவர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை தொலைக்காட்சி மற்றும் இணைய வழியாக காண அறிவுறுத்தப்படுகிறது.

11) ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்த அரசின் முன் அனுமதி பெற்று பிராணிகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நெறிமுறைகள்) விதிகள், 2017, அரசினால் வெளியிடப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றுடன் அரசினால் விதிக்கப்படும் கொரோனா தடுப்பு கட்டுப்பாடுகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை 5.

இயக்குநர், பேரிடர் மேலாண்மை, அபாய குறைப்பு முகமை, சென்னை 5.

கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை 9.

முதன்மைச் செயலாளர், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை 9.

இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை 18.

காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை 4.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9.

சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர்,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் அமைச்சர் அலுவலகம், சென்னை 9.

முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச் செயலாளர் அலுவலகம், சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

# 6. தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட ஆணை கடித மாதிரி - 3

சுருக்கம்

பொதுப் பணிகள் – 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் – மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பினை செயல்படுத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் –ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

மனிதவள மேலாண்மை (எஸ்) துறை

அரசாணை (நிலை) எண். 82

நாள் : 16.08.2021

பிலவ, ஆடி – 31

திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்க :

1. 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம்.
2. அரசாணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்: 30.09.2010.
3. அரசாணை (நிலை) எண்.40, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்: 30.04.2014.
4. 020ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் திருத்தச் சட்டம்.

********

ஆணை:

1 . தமிழ்நாடு அரசுப் பணி நியமனங்களில், தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு

தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் இயற்றப்பட்டது. நேரடி நியமனத்திற்கான காலிப் பணியிடங்களில், நூற்றுக்கு இருபது விழுக்காடு பணியிடங்களை தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு அச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது.

2. அதன் பின்னர், குறிப்பிட்ட பதவிக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள பணி விதிகளில், நேரடி நியமன முறைக்காக வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் மட்டுமே மேற்குறிப்பிட்ட 20 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர்கள் என்ற வகையில், பார்வை நான்கில் காணும் திருத்தச் சட்டத்தின் மூலமாக உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அச்சட்டத்திருத்தத்தில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

(i) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியானது 10ஆம் வகுப்பாக இருப்பின், 10-ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வியில் பயின்றிருக்க வேண்டும்.

(ii) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியானது மேல்நிலை வகுப்பாக (12-ஆம் வகுப்பு) இருப்பின், 10-ஆம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பினை தமிழ் வழிக் கல்வியில் பயின்றிருக்க வேண்டும்.

(iii) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியானது பட்டயப் படிப்பாக (Diploma) இருப்பின், 10-ஆம் வகுப்பு மற்றும் பட்டயப் படிப்பினை தமிழ் வழி கல்வியில் பயின்றிருக்க வேண்டும். அல்லது, மேல்நிலை வகுப்பிற்குப் பின் பட்டயப் படிப்பினை முடித்திருந்தால், 10-ஆம் வகுப்பு, மேல்நிலை வகுப்பு மற்றும் பட்டயப் படிப்பினை தமிழ் வழி கல்வியில் பயின்றிருக்க வேண்டும்.

(iv) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியானது பட்டப் படிப்பாக இருப்பின், 10-ஆம் வகுப்பு, மேல்நிலை வகுப்பு மற்றும் பட்டப் படிப்பினை தமிழ்வழி கல்வியில் பயின்றிருக்க வேண்டும்.

(v) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியானது முதுகலைப் பட்டப் படிப்பாக இருப்பின், 10-ஆம் வகுப்பு, மேல்நிலை வகுப்பு, பட்டப் படிப்பு மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பினை தமிழ் வழி கல்வியில் பயின்றிருக்க வேண்டும்.

3 . இந்நிலையில் மேற்படி சட்டங்களை செயல்படுத்துவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் 22.03.2021 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில், 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் ஆகியவை சட்டப்படி செல்லத்தக்கவை என மாண்பமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன், அச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆணைகளையும் பிறப்பித்துள்ளது.

4. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய மேற்படி தீர்ப்பினை செயல்படுத்துவது குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை பெற்று அரசு விரிவாக ஆய்வு செய்து, அதன்படி, 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட முடிவு மேற்கொண்டு அவ்வாறே ஆணையிடுகிறது.

(i) ஒன்றாம் வகுப்பு முதல், தொடர்புடைய பணி விதிகளில் நேரடி நியமன முறைக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரையில் (10/12-ஆம் வகுப்புகள், பட்டயம், இளங்கலை / முதுகலைப் பட்டங்கள்) முழுவதுமாக தமிழ்வழியில் கல்வி பயின்றவர்கள் மட்டுமே, 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர்.

(ii) இதர மொழிகளை பயிற்று மொழியாக (Medium of Instruction) கொண்டு பயின்று, தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்கள், இம்முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

(iii) 1 முதல் 9-ஆம் வகுப்பு வரை பள்ளிக்கு செல்லாமல் நேரடியாக 10-ஆம் வகுப்பு தேர்வினை எழுதி தேர்ச்சி பெற்ற தனித் தேர்வர்கள்

மற்றும் பிற மாநிலங்களில், தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்று மொழியாக கொண்டு பயின்று, பின்பு இம்மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இம்முன்னுரிமைக்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

(iv) கல்வித் தகுதி சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) மற்றும் மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றின் மூலம் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை சம்பந்தப்பட்ட தெரிவு முகமைகள் / நியமன அலுவலர்கள் (Recruiting Agencies / Appointing Authorities) உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(v) விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும், தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சம்பந்தப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகள் மூலம் பணியாளர் தெரிவு முகமைகள்/நியமன அலுவலர்கள் (Recruiting Agencies/Appointing Authorities) உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(vi) தேர்வர்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை உறுதி செய்ய இயலாத நிலையில், தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை, இணைப்புகள் I மற்றும் II-ல் உள்ள படிவங்களில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

(vii) பள்ளிகள் மூடப்பட்ட நிகழ்வுகளில், சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் / உரிய அலுவலரிடமிருந்து தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை தேர்வர்கள் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(viii) தொடக்க நிலை (5-ஆம் வகுப்பு), உயர்நிலை (10-ஆம் வகுப்பு), மேல்நிலை வகுப்பு (12-ஆம் வகுப்பு), பட்டயம் (Diploma), இளங்கலை பட்டம் மற்றும் முதுகலை பட்டம் ஆகிய கல்வித் தகுதி சான்றிதழ்கள் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களில் (Transfer Certificate) மாணவர்களின் பயிற்று மொழி (தமிழ் / ஆங்கிலம் / இதர மொழிகள்) கட்டாயம் குறிப்பிடப்படும். தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளால் வெளியிடப்படும்.

(ix) தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களில், மாணவர்களின் பெயர், பயின்ற பள்ளி / கல்லூரி / கல்வி நிறுவனங்களின் பெயர், முகவரி, வகுப்புகள், சான்றிதழ் வழங்கிய அதிகாரி ஆகிய விவரங்கள் அடங்கிய விரைவு தகவல் குறியீட்டினை (QR code) இடம்பெறச் செய்வதுடன், அச்சான்றிதழை இசேவை மையங்கள் மூலம் வழங்குவதற்கு பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகள் உரிய ஆணைகளை வெளியிடும்.

(x) தமிழ் இலக்கியத்தில் கல்வித் தகுதி பெற்றவர்களை மட்டுமே பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் பாடத்திற்கான ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் மற்றும் தமிழ் பாடத்திலும், மாறுபட்ட வேறு ஒரு பாடத்திலும் (Cross Major Subject Degrees in Tamil) பட்டம் பெற்றவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமனம் செய்யக் கூடாது என்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகள் நடவடிக்கை மேற்கொள்ளும்.

(xi) மேற்படி சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள 20 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீடானது, நேரடி பணி நியமனத்திற்கான ஒவ்வொரு தெரிவு நிலையிலும் (முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் இதர நிலைகள்) பதவி வாரியாக பின்பற்றப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / அரசு முதன்மைச் செயயலாளர்கள் / அரசு செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை - 600 009.

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 600 009.

செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009.

அனைத்து துறைத்தலைவர்கள், (தலைமைச் செயலக துறை வழியாக)

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை/மதுரை கிளை.

செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003

தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், கல்லூரி சாலை, சென்னை - 600 006

தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை - 600 018.

தலைவர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை - 600 002

இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, சென்னை - 600 032.

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமம், சென்னை - 600 015.

நிதி (பொ.நி.மா.க) துறை, சென்னை - 600 009.

தேசிய தகவல் மையம், சென்னை - 600 009 (மேற்படி அரசாணையை தமிழக அரசு வலைத்தளம் http://www.tn.gov.in வெளியிடகேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>நகல்</u>

முதலமைச்சரின் செயலாளர்-III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.

தலைமச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை - 600 009

மனிதவள மேலாண்மைத் துறை செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை - 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

# கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள்

# தமிழ் மொழி அறிவு

## (அ). கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக

**TNPSC மாதிரி வினா**

1. நாகரிகம்
2. மானம்
3. விளையாட்டு
4. விருந்தோம்பல்

**விடைகள்**

1. பண்டையத் தமிழர்கள் நாகரீகத்தில் சிறந்து விளங்கி உள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.
2. தமிழர்கள் மானம் பெரிதென வாழ்ந்ததை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.
3. தமிழர்களின் வீர விளையாட்டுக்களில் முதன்மையானது ஏறு தழுவுதல் ஆகும்.
4. தமிழர்கள் விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் அளிப்பதை தமது கடமையாகக் கொண்டிருந்தனர்.

**முதல்வினை மற்றும் துணைவினை**

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். |
| | என்னிடம் பணம் இருக்கிறது. | அப்பா வந்திருக்கிறார். |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள். | நீ என்னை அழ வைக்காதே. |
| | அவன்  வானொலியில் பாட்டு வைத்தான். | அவர் ஒருவரைப் பாட வைத்தார். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| | நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை. | நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன். |
| போ | அவன் எங்கே போகிறான்? | மழை பெய்யப் போகிறது. |
| | நான் கடைக்குப் போனேன். | நான் பயந்துபோனேன். |
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா. | அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர். |
| | எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. | வானம் இருண்டு வருகிறது. |
| விடு | யாரையும் உள்ளே விடாதே. | அடுத்த மாதம் நான் போய்விடுவேன். |
| | மழைவிட்டதும் போகலாம். | அப்பா இனி வந்துவிடுவார். |

| | | |
|---|---|---|
| தள்ளு | அவன் என்னைக் கீழே தள்ளினான். | அவர் கதைகதையாக எழுதித்தள்ளுகிறார். |
| | காய்கறிவண்டியைத் தள்ளிச் சென்றார். | அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான். |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே. | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். |
| | தலையில் தொப்பியைப் போடு. | விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போடவேண்டும். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன். | பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான். |
| | அவன் உயிரைக் கொடுத்து வேலை செய்கிறான். | பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள். | ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார். |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல். | படித்தபடி நடந்துகாட்ட வேண்டும். |

## (ஆ), பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க

**TNPSC மாதிரி வினா**

1. கலை - களை
2. அழை - அலை
3. வலை - வளை
4. கரி - கறி

**விடைகள்**

1. சோழர்காலக் கோயில்களில் கலைநயத்துடன் சிற்பங்கள் பல களையுடன் அமைந்துள்ளது.
2. கடல் அலையில் விளையாடிய தன் மகனை கரைக்குத் திரும்புமாறு அன்னை அழைத்தாள்.
3. மீனவர்கள் வலையை பயன்படுத்தி பிடித்த மீன்களை இழுத்து வளைத்து பிடித்தார்கள்.
4. காய்கறிகளை பாகன் தன் கரிக்கு உணவாக அளித்தான்.

**<u>எடுத்துக்காட்டுகள்:</u>**

1. விலை, விளை, விழை

கார் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

2. களம், கலம்.

போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில்நீர் தரப்பட்டது.

3. வலம், வளம்.

ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

4. விரிந்தது – விரித்தது

மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரித்தது.

5. சிலை – சீலை

சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருக்கிறார்கள்.

6. இயற்கை - செயற்கை

பாதை தெரியாத இயற்கைக் காடுகளில் பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன.

7. உலை, உளை, உழை

மன உளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.

## (இ). பிரித்தெழுதுக

**TNPSC மாதிரி வினா மற்றும் விடைகள்**

1. ஐம்பெருங்காப்பியம் = ஐந்து +பெருமை+காப்பியம்
2. திருவாலங்காடு=திரு+ஆலம்+காடு
3. சங்கத் தமிழ்= சங்கம்+தமிழ்
4. நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்=நான்கு+ஆயிரம்+திவ்யம்+பிரபந்தம்

**புணர்ச்சி விதிகள்**

சொற்புணர்ச்சியின்போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர். மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்துகொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

**பிரித்து எழுதுவதற்கான புண ர்ச்சி விதிகள்**

**அ) உடம்படுமெய்ப் புண ர்ச்சி**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துகளாய் இருந்தால், உச்சரிப்பின்போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும். எனவே, உடன்படாத அவ்விரு மொழிகளையும் சேர்த்துப் புணர்க்க வரும் மெய், உடம்படுமெய் ஆகும். பதினெட்டு மெய்களுள் ய், வ் ஆகிய இரு மெய்கள் மட்டும் உடம்படுமெய்களாக வரும்.

| | | |
|---|---|---|
| காட்சியழகு | - | காட்சி + ய் + அழகு ( இகர ஈறு ) |
| தீயணைப்பான் | - | தீ + ய் + அணைப்பான் ( ஈகார ஈறு ) |
| கலையறிவு | - | கலை + ய் + அறிவு (ஐகார ஈறு ) |
| மாவிலை | - | மா + வ் + இலை ( ஆகார ஈறு ) |
| பூவழகு | - | பூ + வ் + அழகு ( ஊகார ஈறு ) |
| சேயிழை | - | சே + ய் + இழை |
| சேவடி | - | சே + வ் + அடி |

**இ ஈ ஐவழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும் உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்**

## ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

i) குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

மாசற்றார் - மாசு + அற்றார்

மாசு(ச்+உ) + அற்றார் - 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

மாச் + அற்றார் - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்**

ii) ட், ற் என்னும் இரு மெய்களோடு ஊர்ந்துவரும் நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும்போது ஒற்று இரட்டித்துப் புணரும்.

| | | |
|---|---|---|
| வீடு + தோட்டம் | - வீட்டு + தோட்டம் | - வீட்டுத்தோட்டம் |
| காடு + மரம் | - காட்டு மரம் | |
| முரடு + காளை | - முரட்டு + காளை | - முரட்டுக்காளை |
| பகடு + வாழ்க்கை | - பகட்டுவாழ்க்கை | |
| சோறு + பானை | - சோற்று + பானை | - சோற்றுப்பானை |
| ஆறு + நீர் | - ஆற்றுநீர் | |
| வயிறு + பசி | - வயிற்று + பசி | - வயிற்றுப்பசி |
| கயிறு + வண்டி | - கயிற்றுவண்டி | |

**நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.**

## இ) முற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதியில் உள்ள முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலவே தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

வரவறிந்தான் - வரவு + அறிந்தான்

வரவு (வ் +உ) + அறிந்தான் - 'முற்றும் அற்று ஒரோவழி' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

வரவ் + அறிந்தான் - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வரவறிந்தான்' எனப் புணர்ந்தது.

**முற்றும் அற்று ஒரோவழி**

ஈ) இயல்பீறு, விதியீறு - புணர்ச்சி

இயல்பீறாகவோ விதியீறாகவோ வரும் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உயிரெழுத்துடன், க ச த ப என்னும் வல்லின மெய்களை முதலில்கொண்ட வருமொழிச்சொல் சேரும்போது அவற்றிடையே வல்லொற்று மிகுந்து புணரும்.

**இயல்பீறு என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம்**

**பள்ளி + தோழன் - பள்ளித்தோழன்**

**விதியீறு என்பது புணர்ந்தபின் நிற்கும் சொல்லின் வடிவம்**

**நிலம்+ தலைவர் - நில + தலைவர் ( விதியீறு ) - நிலத்தலைவர்**

திரைப்படம் - திரை + படம்

திரை + ப் + படம் - 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும் 'என்னும் விதிப்படி' திரைப்படம்' எனப் புணர்ந்தது.

மரக்கலம் - மரம் + கலம் - மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்னும் விதியின்படி

மர + கலம் - 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்னும் விதிப்படி 'மரக்கலம்' எனப் புணர்ந்தது.

**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**க ச த ப மிகும்.**

**உ) பூப்பெயர்ப் புணர்ச்சி**

பூ என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியின் முதலில் வல்லின மெய்யெழுத்துகள் வரும்போது வல்லினமெய் மிகுந்து புணர்வது மட்டுமன்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு. எனினும், மெல்லின மெய் மிகுதலே பெருவழக்காக உள்ளது.

பூ + கொடி - பூக்கொடி, பூங்கொடி பூ + சோலை - பூச்சோலை, பூஞ்சோலை

பூ + தொட்டி - பூத்தொட்டி, பூந்தொட்டி பூ + பந்து - பூப்பந்து, பூம்பந்து

**பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும்**

**ஊ) மெய்யீற்றுப் புணர்ச்சி**

நிலைமொழியீற்றின் இறுதி எழுத்து, மெய்யெழுத்தாக நிற்க வருமொழியின் முதலாக வரும் உயிரெழுத்துடனும் மெய்யெழுத்துடனும் சேரும் புணர்ச்சியை மெய்யீற்றுப் புணர்ச்சி என்பர்.

வாயொலி - வாய் + ஒலி - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வாயொலி' எனப் புணர்ந்தது.

மண் + மகள் - மண்மகள் என்பதில் நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் மெய்யெழுத்தாக நிற்க இயல்பாகப் புணர்ந்தது.

**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

**எ) தனிக்குறில்முன் ஒற்று – புணர்ச்சி**

நிலைமொழி தனிக்குறில் சார்ந்த மெய்யெழுத்தாக நின்று, வருமொழியின் முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.

கல் + அதர் - கல்லதர் - தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

கல்ல் + அதர் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி

கல்லதர் எனப் புணர்ந்தது.

**தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

**ஏ) மகர ஈற்றுப் புணர்ச்சி**

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்.

மகரமெய் கெட்டுப் புணரும்

மகரமெய் கெட்டு இன மெல்லெழுத்துத் தோன்றிப் புணரும்.

மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.

பாடம் + வேளை - பாடவேளை - மகரமெய் கெட்டுப் புணர்ந்தது.

பழம் + தோல் - பழ + தோல் - பழத்தோல்

- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

காலம் + கடந்தவன் - காலங்கடந்தவன்

- வருமொழி முதலெழுத்துக்கேற்ப மகரமெய் திரிந்து புணர்ந்தது.

**மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்**
**வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்**

## ஐ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

பண்புப்பெயர்ச்சொல் நிலைமொழிச் சொல்லாக நின்று வருமொழிச்சொல்லுடன் புணரும்போது பின்வரும் மாற்றங்களை அடையும்.

1. நிலைமொழியின் இறுதியில் உள்ள மை கெட்டுப் புணரும்.

பெருவழி - பெருமை + வழி - 'ஈறுபோதல்' விதிப்படி 'மை' விகுதி கெட்டுப் பெருவழி எனப் புணர்ந்தது.

2. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாகத் திரியும்.

பெரியன் - பெருமை + அன்

பெரு + அன் - ஈறுபோதல்

பெரி + அன் - இடை உகரம் இய்யாதல்

பெரி + ய் + அன் - உடம்படுமெய் 'ய்' இடையில் தோன்றும்

பெரியன் - (ய்+அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

3. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள குறில் எழுத்து நெடில் எழுத்தாய் மாறும்.

மூதூர் - முதுமை + ஊர்

முது + ஊர் - ஈறுபோதல்

மூது + ஊர் - ஆதிநீடல்

மூத் + ஊர் - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

மூதூர் - (த்+ஊ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

4. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள அகரம் ஐகாரமாக மாறும்.

பைந்தமிழ் - பசுமை + தமிழ்

பசு + தமிழ் - ஈறுபோதல்

பைசு + தமிழ் - அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தமிழ் - இனையவும் 'சு' கெட்டது

பைந்தமிழ் - (ந்) இனமிகல் என்னும் விதிப்படி.

5. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.

நெட்டிலை - நெடுமை + இலை

நெடு + இலை - ஈறுபோதல்

நெட்டு + இலை - தன்னொற்றிரட்டல்

நெட்ட் + இலை - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

நெட்டிலை - (ட்+இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

6. ஈறுபோதல் விதியின்படி மை கெட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் 'முன் நின்ற மெய் திரிதல்' விதியின்படி புணரும்.

செந்தமிழ் - செம்மை + தமிழ்

செம் + தமிழ் - ஈறுபோதல்

செம் + தமிழ் - (ம்-ந்) முன் நின்ற மெய் திரிதல்

7. ஈறுபோதல் விதியின்படி மை விகுதி கெட்டு, நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாய் இருந்து வருமொழி வல்லின மெய்யாக இருப்பின் 'இனமிகல்' விதியின்படி புணரும்.

கருங்கடல் - கருமை + கடல்

கரு + கடல் - ஈறுபோதல்

கரு + கடல் - (ங்) இனமிகல்

8. மை விகுதி கெட்டு நிற்கும் நிலைமொழியின் இறுதி எழுத்து மேற்சொன்ன எவ்விதியிலும் பொருந்தாதிருப்பின் இனையவும் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

பைந்தளிர் - பசுமை + தளிர்

பசு + தளிர் - ஈறுபோதல்

பைசு + தளிர் - அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தளிர் - இனையவும்

பை + தளிர் - (ந்) இனமிகல்

**ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்**
**ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்**

**தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்**
**இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே**

**(ஈ), எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

ஒரு செயலை செய்வதற்கு உடன்பட நிலையை எதிர்மறை வாக்கியம் ஆகும்.

**எதிர்மறை சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| தன்மை | ஒருமை | - | நான் அல்லேன். |
| | பன்மை | - | நாம் அல்லோம் |
| முன்னிலை | ஒருமை | - | நீ அல்லை |
| | பன்மை | - | நீவீர் அல்லீர் |
| படர்க்கை | ஆண்பால் | - | அவன் அல்லன். |
| | பெண்பால் | - | அவள்அல்லள். |
| | பலர்பால் | - | அவர் அல்லர். |
| | ஒன்றன்பால் | - | அஃது அன்று. |
| | பலவின் பால் | - | அவை அல்ல. |

**TNPSC மாதிரி வினா**

1. மதியம் கடுமையாக மழை பெய்தது.
2. நான் நேற்று தேர்வு எழுதினேன்.
3. குழாயில் நீர் வரவில்லை.
4. வகுப்பறை மிகவும் சுத்தமாக இருந்தது.

**விடைகள்**

1. மதியம் கடுமையாக மழை பெய்யவில்லை.
2. நான் நேற்று தேர்வு எழுதவில்லை.
3. குழாயில் நீர் வந்தது.
4. வகுப்பறை மிகவும் அசுத்தமாக இருந்தது.

## (உ). பிழை நீக்கி எழுதுக

### TNPSC மாதிரி வினா

1. திருவள்ளுவர் திருக்குரலை இயற்றினார்.
2. இயழ், இசை, நாடகம் ஆகியவை முத்தமிழ் ஆகும்.
3. இறையாண்மை என்பது மன்னனுக்கோ அல்லது அரசுக்கோ உரியது அல்ல.
4. நாகரிகம் என்பது சமூக வாழ்க்கை முறை அல்லது வலர்ச்சியான மேம்பட்ட நிலை.

### விடைகள்

1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
2. இயல், இசை, நாடகம் ஆகியவை முத்தமிழ் ஆகும்.
3. இறையாண்மை என்பது மன்னனுக்கோ அல்லது அரசுக்கோ உரியது அன்று.
4. நாகரிகம் என்பது சமூக வாழ்க்கை முறை அல்லது வளர்ச்சியான மேம்பட்ட நிலை.

### விகுதி

| | | | |
|---|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் | |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் | |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் | |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று | |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ | |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் | |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் | |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ | |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் | |

| | | | |
|---|---|---|---|
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் | |
| வந்து, தேடி | உ, இ - வினையெச்ச விகுதிகள் | உ, இ | |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் | |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு... | |

## பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்துவழக்குத் தொடர்களை எழுதி வருக.

(எ.கா.) பேச்சுமொழி : அம்மா பசிக்கிது. எனக்குச் சோறு வேணும்.

எழுத்துமொழி : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.

2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களையும் எழுதுக.

(எ.கா.) சொல்லு - சொல் வந்தியா – வந்தாயா?

நில்லு - நில் சாப்ட்டியா - சாப்பிட்டாயா?

## வல்லினம் மிகும் இடங்கள்

வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர்.

| | | |
|---|---|---|
| .1 | அச்சட்டை<br>இந்தக்காலம்<br>எத்திசை?<br>எந்தப்பணம்? | அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். |
| .2 | கதவைத்திற<br>தகவல்களைத்திரட்டு<br>காட்சியைப்பார் | ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| .3 | முதியவருக்குக்கொடு<br>மெட்டுக்குப்பாட்டு<br>ஊருக்குச்செல் | கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| .4 | எனக்கேட்டார்<br>வருவதாகக்கூறு | என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும். |

**எடுத்துக்காட்டு. பலகை**

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| இனிக் காண்போம்<br>தனிச் சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும். |
| எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும். |
| தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும். |
| கேட்டுக் கொண்டான்<br>விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் | (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| கிழக்குப் பகுதி<br>வடக்குப் பக்கம் | திசைப் பெயர்களின்பின் வலிமிகும். |
| மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் | இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். |

| | |
|---|---|
| தாமரைப்பாதம் | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| சாலப்பேசினார்<br>தவச்சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| நிலாச் சோறு<br>கனாக் கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். |
| வாழ்க்கைப் படகு<br>உலகப்பந்து | சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். |

**வல்லினம் மிகா இடங்கள்**

நாம் பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

| | |
|---|---|
| ஒரு புத்தகம், மூன்று கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது. |
| தாய்தந்தை, இரவுபகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| அன்று சொன்னார்.<br>என்று தருவார்.<br>அவராவது தருவதாவது<br>யாரடா சொல்.<br>ஏனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற கவிஞர் யார்? | அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| அவ்வளவு பெரியது.<br>அத்தனை சிறியது.<br>அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள்.<br>அப்போதைய பேச்சு.<br>அப்படிப்பட்ட காட்சி.<br>நேற்றைய சண்டை. | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அத்தகைய, இத்தகைய, எத்தகைய, அப்போதைய, இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |

| | |
|---|---|
| என்னோடு சேர்.<br>மரத்திலிருந்து பறி.<br>குரங்கினது குட்டி. | மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| தமிழ் படி. (ஐ)<br>கை தட்டு. (ஆல்)<br>வீடு சென்றாள். (கு)<br>கரை பாய்ந்தான். (இருந்து) | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது. |
| தலைவி கூற்று.<br>தொண்டர் படை | நிலைமொழி உயர்திணையாய் அமையும் தொடரில் வல்லினம் மிகாது. |
| உறு பொருள்<br>நனி தின்றான்.<br>கடி காவல் | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| பார் பார்<br>சலசல | அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது. |
| கருத்துகள்<br>பொருள்கள்<br>வாழ்த்துகள் | கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. (மிகும் என்பர் சிலர்) |
| பைகள், கைகள் | ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. |

| | |
|---|---|
| அது செய்<br>இது காண் | அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்?<br>எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரை தாண்டியது.<br>கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ.<br>எனது சட்டை. | மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது. |

| | |
|---|---|
| தந்தையே பாருங்கள்.<br>மகளே தா. | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| வந்த சிரிப்பு<br>பார்த்த பையன் | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான்.<br>கூடு கட்டு | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி கூறினார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| வாழ்க தமிழ்<br>வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை,<br>திருவளர்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |

**மரபுத் தொடர்கள்**

தமிழ் மொழிக்கு என சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

**பறவைகளின் ஒலி மரபு**

ஆந்தை அலறும் குயில் கூவும் மயில் அகவும்

காகம் கரையும் கோழி கொக்கரிக்கும் கிளி பேசும்

சேவல் கூவும் புறா குனுகும் கூகை குழறும்

தொகைமரபு

மக்கள் கூட்டம் ஆநிரை ஆட்டுமந்தை

வினை மரபு

சோறு உண் தண்ணீர் குடி பூக்கொய்

முறுக்குத்தின் பால் பருகு இலைபறி

சுவர் எழுப்பு கூடை கூடை பானை வனை

**எழுத்துப்பிழை தவிர்க்க**

எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுதமுடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம். குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பதும் எழுத்துகள் வரும்முறையில் தெளிவற்றிருப்பதும் பிழைகள் மலியக் காரணமாய் அமைகின்றன. எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக்கொள்வதைக் கடமையாகக்கொள்ள வேண்டும். ந, ண, ன / ற, ர / ல, ள, ழ இவற்றின் வேறுபாடு அறிந்து வாய்விட்டு ஒலித்துப் பழகுவது சாலச் சிறந்தது. இவ்வெழுத்துகளுக்கான சில அடிப்படை இலக்கணத்தையும் கசடறக் கற்றல் இன்றியமையாத கற்றல் பணியாகும்.

மேலுள்ள எட்டு எழுத்துகளில் நகரம் மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும். றகர மெய் சொல்லின் இறுதியில் வராது. மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

- தமிழில் சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை. வரின் தமிழில்லை. க்ரீடம், ப்ரியா - வடமொழி; க்ளிஷே - ஆங்கிலம்
- வல்லின மெய்யோடு சொல் முடியாது. அப்படி முடிந்தால் தமிழ்ச் சொல்லன்று என்றுணர்க. பார்க், பன்ச், பட், போத், டப்) போன்றவை தமிழில்லை.
- வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை. காட்ச்சி, முயற்ச்சி என்றெழுதுவது பிழை.
- க், ச், த், ப் ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா. காக்கை, பச்சை, பத்து, உப்பு.
- ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளுமே வரும். பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம், காற்று, கற்க, கற்சிலை, கற்பவை
- ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா. டமாரம், றப்பர் - தமிழ் இல்லை.
- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும் (அஃது, எஃகு, கஃசு).
- மெல்லின எழுத்துகளில் ண, ன சொல்லின் தொடக்கமாக வாரா.
- தனிச்சொல்லின் இடையில் வல்லினத்துக்குமுன் அவ்வல்லின மெய்யோ அவற்றின் இன மெல்லினமெய்யோ வரும். பிற மெய்கள் வருவதில்லை (தக்கை, தங்கை, பச்சை, இஞ்சி, பண்டு, பட்டம், பத்து, பந்து, தப்பு, பாம்பு, கற்று, கன்று).
- ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள்வினைமுற்று / கள் விகுதி / வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும் (தேய்க, நாய்கள், தாய்சேய், ஊர்க, ஊர்கள், ஊர்சூழ், செல்க, கால்கள், செல்கணம், வாழ்க, வாழ்தல், தோள்கள்).
- ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருவதில்லை. (கண்டு என்று வரும், கன்டு என்று வருவதில்லை. மன்றம் என்று வரும் மண்றம் என்று வருவதில்லை.)

- ஞ், ந், வ் என்னும் எழுத்துகளில் முடியக்கூடிய சொற்கள் அரிதாக உள்ளன (உரிஞ், வெரிந், பொருந், தெவ்).
- ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும் (பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை).
- தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.
- தனிக்குறிலையடுத்து ரகர ஒற்று வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுதவேண்டும். (நிர்வாகம் - நிருவாகம்; கர்மம் - கருமம், கன்மம்)
- ரகரத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகர வரிசை எழுத்துகளும் வாரா.
- உயிர் வரின் ஒரு, இரு முறையே ஓர், ஈர் என்று மாறும்.
- உயிர் வரின் அது, இது, எது முறையே அஃது, இஃது, எஃது என்பதாக மாறும்.
- லகர ளகர விதிகள் சில
- வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு. கல் + சிலை = கற்சிலை, கடல் + கரை = கடற்கரை.
- லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு. பல் + முகம் = பன்முகம்.
- ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. மக்கள் + பேறு = மக்கட்பேறு.
- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு. நாள் + மீன் = நாண்மீன்.
- வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும். சொல் + துணை = சொற்றுணை.
- வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும். பல் + நூல் = பன்னூல்.
- அல்வழியில், தனிக்குறிலை அடுத்து லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும். அல் + திணை = அஃறிணை; பல் + துளி = பஃறுளி.

இயக்குநர் என்பதே சரி. இயக்குனர் என்று எழுதுவது தவறு. இயக்கு, ஓட்டு, அனுப்பு, பெறு முதலான வினைகள் பெயரிடைநிலையான ந் என்பதைப் பெற்று (ந்+அர்=நர்), ஓட்டுநர், அனுப்புநர், பெறுநர் என்று பெயர்ச்சொற்களாகின்றன. உறுப்பினர், குழுவினர், ஊரினர் முதலானவை (உறுப்பு, குழு, ஊர்) பெயர்ச்சொற்கள். அதனால், அவை இன் என்னும் சாரியையைப் பெற்று முடிந்துள்ளன.

**பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்**

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்துகொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.
- கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## சொற்றொடர்ப்பிழை

- கோவலன் மதுரைக்குச் சென்றது.
- பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றது.
- குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
- அவன் வெண்மதியிடம் பேசினாய்.
- சென்னையிலிருந்து நேற்று வருகிறான்.

அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்பனவற்றைத் திணை, பால் எண், இடம் அறிந்து ஆளுதல் வேண்டும். (அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், நாய் அன்று, நாய்கள் அல்ல)

அது என்னும் வேற்றுமை உருபு அஃறிணைக்கு உரியது. வரும் சொல் உயர்திணையாயின் அது என்னும் உருபினைப் பயன்படுத்துதல் கூடாது. எனது வீடு, அரசரது மாளிகை என்று எழுதலாம். ஆனால், எனது மனைவி, அரசரது மகன் என்றெழுதுதல் பிழை (மனைவி, மகன் - உயர்திணை).

தொடர் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அமைக்கப்படவேண்டும். இரண்டாவது குழந்தையிடம் கேள்வி கேட்டான் / குழந்தையிடம் இரண்டாவது கேள்வி கேட்டான். முதலிரண்டு சொற்கள் இடம் மாறியதால் தொடருக்கான பொருள் மாறுகிறது. அவன் அருகில் இருந்தான் / அவன் அருகாமையில் இருந்தான். அருகில் என்பதற்கு எதிர்ச்சொல் அருகாமை. இவ்வேறுபாடு தெரியாவிடின் தொடரின் பொருள் மாறிவிடும்.

பேருந்து மோதி மிதிவண்டியில் சென்றவர் காயம் என்னும் தொடரும் பிழையானது. பேருந்து மோதியா மிதிவண்டியில் சென்றார்? மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதி காயம் என்று எழுதவேண்டும்.

**பொதுவான பிழைகள்**

சுடுதண்ணீர்என்று எழுதுவதும் பிழையே. தண்ணீர் - குளிர்ந்த நீர். சூடும் குளிருமாக நீர் எப்படி இருக்கமுடியும்? நடுசென்டரில் நின்றான் - நடு என்பது தமிழ். சென்டர் என்பது ஆங்கிலம். இரண்டிற்கும் ஒரே பொருள். நடுவில் நின்றான் என்று எழுதினாலே போதும்.

ஒரு வரியின் இறுதியிலுள்ள சொல்லைப் பிரித்து எழுதுவதாக இருந்தால் பொருள் கெடாதபடி பிரிக்கவேண்டும். நம்பியார் கூடச் சென்றார் என்பதற்கும், நம்பி யார் கூடச் சென்றார் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு.

வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

**பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்**

- ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.
- சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.
- மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும். (யானை - கன்று; குதிரை - கனைக்கும்)
- இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.
- எழுதியதை மீளப் படித்துப் பார்த்துப் பிழையிருப்பின் திருத்துதலும் கடமையாகும்.